# தொல்காப்பியம்

## உரைவளம்

# பொருளதிகாரம்

## பொருளியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொகுப்பும் குறிப்பும்

ஆ. சிவலிங்கனார்

# தொல்காப்பியம்-பொருளதிகாரம்

(உரைவளம்)

# பொருளியல்

தொகுப்பும் குறிப்பும்

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டி.டி.டி.ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113

தொல்காப்பிய உரைவள-வெளியீட்டுத் திட்டம்
வெளியீடு–23

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | Tolkāppiyam-Poruḷiyal |
| Author | : | *A. Sivalinganar* |
| Publisher & Copy right | : | International Institute of Tamil Studies, C.I.T. Campus Taramani, Madras-600 113 |
| Publication No. | : | 180 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 15-2-1994 |
| Edition | : | First |
| Paper used | : | Tamil Nadu Paper 16 Kg |
| Size of the book | : | 21 × 14 cms |
| Printing types used | : | 10, 12 Point |
| No. of copies | : | 1200 |
| No. of Pages | : | XVI + 192 |
| Price | : | Rs. **32**/- (Rupees Thirty two Only) |
| Printers | : | Pavai Printers Pvt. Ltd. Madras-14, Phone: 832441. |
| Artist | : | Sathya |
| Subject | : | Grammar |
| Summary | : | Compilation of the Commentaries on Tolkāppiyam Poruḷiyal |

**டாக்டர் அன்னி தாமசு**
இயக்குநர்-பொறுப்பு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-113

# முன்னுரை

தமிழரின் தொன்மை இலக்கணமாம் தொல்காப்பியத்தின் உரைகளனைத்தையும் திரட்டி, இயல்வாரியாகத் தொகுதிகளாக்கி வெளியிட வேண்டும் என்பது உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திட்டமாக அமைந்தது. அச்சீரிய பணியை நிறுவனத்தின் அப்போதைய இயக்குநர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள், இலக்கணச் செம்மல் அறிஞர் ஆ. சிவலிங்கனாரவர்களிடம் ஒப்படைத்தார். இத்தொல்காப்பியத் திட்டப்பணியைச் சிரமேற் கொண்ட அன்னாரின் உழைப்பால் சிறப்புப்பாயிரம், எழுத்ததிகாரத்தின் ஒன்பது இயல்கள், சொல்லதிகாரத்தின் ஒன்பது இயல்கள் என்பன விரைந்து வெளியாயின. பணிநிறைவு நிலையில் முழுமையாக்கித் தரப்பெற்ற பொருளதிகார இயல்கள் அண்மை ஆண்டுகளில் வெளிவந்து கொண்டிருப்பது இலக்கண ஆர்வலர்க்கு நிறைவளிப்பதாகும்.

இத்திட்டத்தின் 23-வது நூலாக அமையும் இத் தொகுதி, தொல்காப்பியப் பொருளியல் நூற்பாக்களை,பேராசிரியர் இலக்குவனார் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் தந்து, ஒத்த செய்தி பிற்கால இலக்கண நூல்களிலமையின் அதனையும் அளித்து, இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரைகளையும் தொகுப்பாசிரியரின் சிறப்புக் குறிப்புரையையும் கொண்டு, பாங்குற அமைகின்றது.

நூலை அழகுற அச்சிட்ட பாவை அச்சகத்தார்க்கும், மெய்ப்புத்திருத்தும் பணியில் உதவிய முனைவர் டி. மகாலட்சுமி அவர்கட்கும், நூல் அச்சாகியகாலை, 'பொருட் சுருக்கம்' மற்றும் நூலின் முன்பின் பகுதிகளை ஆக்கி உதவிய நிறுவன ஆய்வாளர் திரு. தி.மு. கந்தசாமி, எம்.ஏ., எம்ஃபில் அவர்கட்கும் எம் நன்றி.

சென்னை-113
15-2-1994

**அன்னி தாமசு**

## சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | — | அகநானூறு |
| ஆ.மொ. | — | ஆங்கில மொழிபெயர்ப்பு |
| இ.வி. | — | இலக்கண விளக்கம் |
| இ.ள். | — | இதன் பொருள் |
| இளம். | — | இளம்பூரணம் |
| இறை | — | இறையனார் அகப்பொருள் |
| உ.வே.சா. | — | உ.வே. சாமிநாதைய்யர் |
| ஐங்குறு. | — | ஐங்குறு நூறு |
| கலி. | — | கலித்தொகை |
| கலி. குறி. | — | குறிஞ்சிக் கலி |
| கார். நாற். | — | கார் நாற்பது |
| குறள். | — | திருக்குறள் |
| குறிஞ். | — | குறிஞ்சிப் பாட்டு |
| குறுந். | — | குறுந்தொகை |
| சிவ. | — | சிவலிங்கனார் |
| சூ. | — | சூத்திரம் |
| தண்டி. | — | தண்டியலங்காரம் |
| திணை. நூற். | — | திணைமாலை நூற்றைம்பது |
| தொ.பொ. பொருளி | — | தொல்காப்பியம் பொருளதிகாரம் பொருளியல் |
| நச்சர்., நச். | — | நச்சினார்க்கினியர் |
| நம்பி. | — | நம்பியகப் பொருள் |
| நற். | — | நற்றிணை |
| நாலடி. | — | நாலடியார் |
| பதி. | — | பதிப்பு |
| பதிற்றுப். | — | பதிற்றுப் பத்து |
| பி.இ.நூ. | — | பிற்கால இலக்கண நூல்கள் |
| புறம். | — | புறநானூறு |
| முத்தொள் | — | முத்தொள்ளாயிரம் |

## சூத்திர நுவல் பொருள்


1. தொடர் மொழியில் பொருள் உணர்த்துகின்றது 1

2. ஒரு சால் காமப் பொருண்மை பற்றி நிகழும் கூற்று 9

3. காமம் இடையீடுபட்டுழிக் கனாக் காண்டல் 26

4. உடன் போக்கு நிகழ்ந்த காலத்தில் கனவு தாய்க்கும் உண்டு 29

5. பால் கெழுகிளவி நால்வர்க்கும் (தலைவி, தோழி, நற்றாய், செவிலி) உரியது 30

6. உயிர், நாண், மடன் நால்வர்க்கும் உரியது 34

7. தலைமகளுக்குரியதோர் திறம் உணர்த்துகின்றது 36

8. தலைவி தன் நாண் காக்குமாறு கூறுகின்றது 39

9. தலைவியின் மன இயல்பை உணர்த்துகின்றது 42

10. தலைவி மடன் காக்கும் இடத்தையும் காக்காத இடத்தையும் கூறுகின்றது. 45

11. தோழி அறத்தொடு நிற்கும் காலம் உணர்த்துகின்றது. 48

12. தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் பாங்கை உணர்த்துகின்றது 52

13. செவிலியும் நற்றாயும் குறிப்பால் தலைவியொழுக்கம் உணருமாறு கூறுகின்றது 59

14. பெண்டிர்க்குரியதோர் இயல்புணர்த்துகின்றது. 61

15. தோழி கூற்றில் கூறப்பட்ட சில கூற்றுக்குப் பயன் உணர்த்துகின்றது 62

16. தலைமகளுக்கும் தோழிக்கும் உரிய இயல்பு 68

17. தலைமகனுக்குரிய மரபை உணர்த்துகின்றது. 72

18. சொல் வேறுபட்டு பொருளுணர்த்தும் பாங்கைக் கூறுகின்றது 75

19. களவுக் காலத்தில் தலைமகளுக்குரியதோர் இயல்பு 78

20. தலைமகளுக்குரிய இயல்பு 81

21. அகமும் புறமுமாகிய ஒழுகலாறு பற்றிய செய்யுட்கு இன்றியமையாததோர் இயல்புணர்த்துகின்றது 83

22. உலக வழக்கைச் செய்யுளில் கூறும் முறைமையை உணர்த்துகின்றது. 85

23. செய்யுட்குரியதோர் பொருள் மரபு உணர்த்துகின்றது 89

24. அகத்திணை யொழுகலாற்றில் இடம்பெற்று வழங்கும் முறைப் பெயரொன்றின் இயல்புணர்த்துகின்றது 91

25. தோழி தலைவியுறுப்பினைத் தன்னுறுப்பாகக் கூறப் பெறுமென வழுவமைக்கின்றது. 94

26. இருவகை வழக்கினும் சொல்லுக்குப் பொருள் கொள்ளும் திறன் உணர்த்துகின்றது. 97

27. இன்பம் என்பது பற்றி விளக்குகின்றது 100

28. பரத்தையிற் பிரிவிற்கு உரியாரை உணர்த்துதல் 102

29. களவின்கண் தலைமகட்குரியதோர் மரபு உணர்த்துகின்றது 104

30. தலைமகட்கும் தோழிக்கு முரியதோர் திறன் உணர்த்துகின்றது. 107

31. கற்புக் காலத்துத் தலைமகட்குரியதோர் மரபு உணர்த்துகின்றது. 111

32. தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் புகழுமிடம் கூறுகின்றது. 113

33. இறைச்சியின் இலக்கணம் உணர்த்துகின்றது 116

34. இறைச்சியில் வேறு ஒரு பொருள் உணர்த்தும் பாங்கு 119

35. தலைமகள் பிரிவால் வருந்திய வருத்தத்தைக் குறிப்பால் உணர்த்தும் பாங்கு 124

| | | |
|---|---|---|
| 36. | தலைமகட்குரியதோர் இயல்புணர்த்துதல் | 125 |
| 37. | தலைவியின் ஊடல் உள்ளடக்கம் கூறுகின்றது | 128 |
| 38. | தலைவி தலைவனின் பரத்தைமையை அறியும் வழியொன்று கூறுகின்றது. | 129 |
| 39. | தலைமகட்குரியதோர் மரபுணர்த்துகின்றது. | 131 |
| 40. | தலைவி பருவம் கண்டு ஆற்றாமையால் கூறும் கிளவியாமாறு கூறுகின்றது | 134 |
| 41. | களவுக் காலத்தில் தோழிக்குரியதோர் திறன் உணர்த்துகின்றது. | 141 |
| 42. | தலைமகனுக்கும் தலைமகளுக்கும் உரியதோர் மரபு உணர்த்துகின்றது. | 146 |
| 43. | தோழிக்குரியதோர் மரபு வழுக்காத்தலைக் கூறுகின்றது | 153 |
| 44. | தோழி உயர் மொழிக் கிளவி கூறுமாறு கூறுகின்றது | 155 |
| 45. | வாயில்கிளவி வெளிப்படையாக அமைதல் குறித்து | 157 |
| 46. | உள்ளுறையாகும் முறையை உணர்த்துகின்றது | 160 |
| 47. | தலைவன் ஏற்குமாறு உள்ளுறைப் பொருளைக் கூறுதல் | 173 |
| 48. | உள்ளுறையில் அடங்கும் பிற பொருண்மைகள் | 175 |
| 49. | உள்ளுறையில் பிற பொருண்மைகள் | 177 |
| 50. | எழுத்து—சொல் மரபு உணர்த்துகின்றது | 181 |
| 51. | காட்டலாகாப் பொருளைக் கூறுகின்றது | 185 |
| 52. | பிற காட்டலாகாப் பொருளைக் கூறுகின்றது. | 189 |

# பொருட் சுருக்கம்

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. தமிழ் இலக்கணவரிசை யில் முதலானதும் தமிழில் கிடைத்துள்ள பழைய நூல்களில் முன்னதுமாகிய தொல்காப்பியம் இதனை மூன்று வகையாகப் பாகுபடுத்தி அதிகாரங்களாக்கித் தருகின்றது. அவை எழுத்து, சொல், பொருள் என்பன. மூன்றாவதான பொருளதிகாரம் 'பொருளை'ப் பேசுவதுடன், யாப்பு என்ற நிலையில் 'செய்யுளி யலை'யும் அணி என்ற நிலையில் 'உவமவியலையும்' அமைத்துள் ளது. எனவே தமிழ் இலக்கணப் பரப்பை முழுமையாகத் தொல் காப்பியம் உள்ளடக்கியுள்ளது எனல் போதரும்.

பொருள் என்ற நிலையில் தொல்காப்பியம் அகத்தையும் புறத்தையும் சுட்டுகின்றது. அகத்தை அகத்திணையியல், கள வியல், கற்பியல் என்ற மூன்று இயல்களிலும் புறத்தை புறத் திணையியலிலும் பேசுகின்றது. அகம் புறம் என்ற இரண்டு பொருண்மைகளில் பேசவிடுத்த செய்திகளான எஞ்சியதைத் தொல்காப்பியம் பொருளியலில் பேசுகின்றது. அதனால் இந்த இயலை 'ஒழிபியல்' என்றும் வழங்குவர் என்பர் இளம்பூரணர் (ப.2). ஒழிபியல் என்ற இளம்பூரணர் கூற்று ஏற்புடையதன்று என்று சிவலிங்கனார் (ப.6) விளக்குகின்றார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பொருளியல் ஐந்தாவது இயலாக அமைந்துள்ளது. முதலியல் அகம் பற்றிய பொதுச் செய்தியையும் இரண்டாவது இயல் புறம் பற்றிய செய்தியையும் மூன்றாவது இயல் கரணத்திற்கு முன்புள்ள களவு வாழ்க்கை யையும் நான்காவது இயல் கரணத்திற்குப் பின்புள்ள கற்பு வாழ்க்கையையும் அமைத்துள்ளன. அவற்றைத் தொடர்ந்த இயலாக இப்பொருளியல் அமைந்துள்ளது.

தொல்காப்பியத்தின் இயல் வைப்பு முறையிலிருந்து பொரு ளியல் அகத்திற்கும் புறத்திற்கும்பொதுவான செய்தியை உள் ளடக்கிய இயலாக இருக்கக் கூடும் என்ற எண்ணம் தோன்று கிறது. மேலும் இளம்பூரணர் கூற்றைக் கொண்டு நோக்குகையில் அந்த எண்ணம் வலுவடைகின்றது. தொல்காப்பியம் முழுமை

யாகக் கிடைக்கப்படவில்லை என்பது இளம்பூரணரின் 'எஞ்சி யோர்க்கு மெஞ்சுதல் இலவே' என்ற நூற்பாவின் உரை வழி (தொல்காப்பிய உரைவளம் பொருளதிகார அகத்திணையியல், ப. 362) அறிய முடிகின்றது. அதேபோன்று தொல்காப்பியப் பொருளியலில் புறம் தொடர்பான நூற்பாக்கள் இளம்பூரணர் காலத்தில் இருந்திருக்கக் கூடும். ஆனால் இளம்பூரணர் காலத் திற்குப் பிறகு கிடைக்காமல் போயிருக்கக் கூடும்.

பொருளியல் என்பது குறித்து நச்சினார்க்கினியர் கூறுகை யில் ''பொருளதிகாரத்தில் முன்னர்க் கூறிய பொருளிற் பிறழ்ந் திசைப்பனவும் பொருளாகக் கொள்ளப்படும் எனவும் அமைத்து இவ்வாறு சொல்லுணர்த்தும் பொருளும் தொடர்மொழியுணர்த் தும் பொருளும் ஒருங்கே கூறலிற் பொருளியல்'' என்றார்

தொல்காப்பியப் பொருளியல் ஐந்து வகையான பொருண் மைகளைக் கொண்டது. அவை:

1. அகத்திணை மாந்தர்களின் பண்புகள்
   (தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய்)
2. அணி
   (இறைச்சி, உள்ளுறை)
3. காட்டலாகாப் பொருள்
4. மரபுகள்
5. வழுவமைதிகள்

என்பன.

### அகத்திணை மாந்தர்களின் பண்புகள்

அகம் என்பது ஒத்த பண்பு கொண்ட ஒருவனும் ஒருத்தியும் தம்முள் கொள்ளும் அன்பு முறையாகும். அது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகியவற்றின் அடிப்படையில் அமை வது. அது தனித்த ஒருவருக்கு என்று சுட்டிக் கூறாத தன்மை யைக் கொண்டது. உலக மக்கள் யாவர்க்கும் பொதுவானது (அகத்திணையியல் 57). இந்த பண்புடைய தலைவன், தலைவி தொடர்பு முறையில் இடம் பெறுகின்ற மாந்தர்களை அகத் திணை மாந்தர் என்பர். அந்த வகையில் தலைவன் தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என்ற ஐவரின் பண்புகள் இங்கு இடம் பெற்றுள்ளன.

### தலைவன்

களவுக் காலத்தில் தலைவியை முதன் முதலாகக் காணும் போது இவள் தெய்வ மகளோ என்று ஐயுற்று தலைவனுக்குக் கூற்று நிகழும். களவுக் காலத்தில் தலைவியைக் காணச் செல்லு கையிலும் சென்று திரும்புகையிலும் தேர், யானை குதிரை என்ற ஊர்திகளைப் பயன்படுத்தும் இயல்புடையவன் (17). தலைவி யைத் தமரினின்று பெறுதற்கரிய காலத்தில் தலைவன் அன்பும் அறனும் இன்பமும் என்பவற்றை நினைக்காமல் வரைவிடை வைத்து பொருள்வயிற் பிரிவான்; அல்லது நாணத்தை விட்டு தமரிடம் முதியோரை விட்டு மகள் கேட்கலாம். சினம், பேதை மை, நிம்பிரி, நல்குரவு என்ற மெய்ப்பாடுகள் தலைவனுக்கு ஆகாது என்று விலக்கப்பட்டன (49). மேற்சுட்டிய நான்கு மெய்ப்பாடுகளும் யாதேனும் ஒரு பொருளைச் சிறப்பிக்கும் வகையில் வருதல் கூடும் (51) என்ற நிலையில் தலைவன் பண்பு கள் வெளிப்படுகின்றன.

### தலைவி

தலைவனைக் களவுக் காலத்தில் முதன் முதலாகக் காணுகை யில் 'இவன் மாரனோ குமரனோ' என்ற ஐயக் கூற்று தலைவிக்கு நிகழ்வதில்லை. தலைவிக்கு செறிவு (அடக்கம்), நிறைவு (அமைதி), செம்மை (மனம் கோடாமை), செப்பு (எடுத்துரைத்தல்), அறிவு, அருமை, அச்சம் என்ற குணங்கள் உண்டு(14). தலைவன் தனது பரத்தைமையை மறைக்கும் போது தலைவி மடனின்றி தான் அறிந்ததாகப் பேசுவாள் (15). தலைவிக்குரிய நாணத்தால் 'தலைவன் ஊர்க்குப் போவோம்' என்று கூறினாலும் போக மாட்டாள். தலைவன் தன்னை விட்டுப் பிரிவானோ என்றும், அம்பலும் அலரும் களவு வாழ்க்கையை வெளிப்படுத்தி விடுமோ என்றும் அஞ்சுவது உண்டு. ஊடல் காலத்தில் தலைவனைவிட உயர்ந்தவளாக நடந்து கொள்வாள். தலைவன் வருவதாகக்கூறிச் சென்ற பருவம் தொடங்கும் போதே அப்பருவம் முடிந்துவிட்டது போலப் பேசுவதும் உண்டு. அவ்வாறு பேசுவது தலைவியின் மடன், வருத்தம், மருட்கை போன்ற காரணங்களால் ஏற்படுவ துண்டு என்ற வகையில் தலைவியின் பண்புகள் வெளிப்படு கின்றன.

### தோழி

தோழிக்கு நாணம், மடன், செறிவு, நிறைவு, செம்மை, அறிவு அருமை என்ற பண்புகளுண்டு (6, 14) களவுக் காலத்தில்

தலைவன் இரந்து குறையுறும் போது அவனை நீக்கி நிறுத்தல் வேண்டிய வாய்மை கூறுதலும், பொய்மை கூறுதலும், நயத்தல் கூறுதலும், படைத்து மொழிதலும் தோழிக்கு உண்டு. தலைவனுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைத் தோழி போக்குவாள். தலைவனை உயர்த்திக் கூறும் பண்பும் தோழிக்கு உண்டு. தலைவி அறத்தொடு நிற்றாலன்றி தோழி தானாக அறத்தொடு நிற்காள்(11). எளித்தல், ஏத்தல், வேட்கையுரைத்தல், கூறுதல், உசாதல், ஏதீடு, தலைப்பாடு, உண்மை செப்பும் கிளவி என்ற ஏழு வகையாக அறத்தொடு நிற்பாள்(12). என்ற வகையில் தோழியின் பண்புகள் வெளிப்படுகின்றன.

### செவிலி

தலைவியோ தோழியோ அறத்தொடு நிற்பதற்கு முன்னமேயே தலைவியின் களவு வாழ்க்கையைக் குறிப்பால் உணரும் திறமையுடையவள் செவிலி. செவிலிக்குப் பால்கெழு கிளவி (பேசாதவற்றைப் பேசுவது போல் கருதிக் கூறுதல் முதலாயின) உண்டு.

### நற்றாய்

தலைவி தலைவனோடு உடன் போக்கை மேற்கொண்டபின் அது பற்றிக் கனவு கண்டதாகக் கூறும் கூற்று நற்றாய்க்கு உண்டு (4). பால்கெழு கிளவியும் நற்றாய்க்கும் உண்டு (5).

மேற்கண்ட முறையில் அகத்திணை மாந்தர்களின் பண்புகள் வெளிப்படுகின்றன.

### இறைச்சி

உள்ளுறையின் வகைகளில் ஒன்றான உடனுறை உள்ளுறையை இறைச்சி என்பர்.

1. இறைச்சி உரிப்பொருளின் புறமாகிய நாடு, ஊர், துறை என்னும் கருப்பொருளின் அடைமொழியாய் வரும்

2. இறைச்சியில் பிறிதொரு பொருள் தோன்றும். அது பொருட்பகுதியை நன்கு ஆய்வோர்க்குப் புலனாகும். (33, 34)

என்ற இலக்கணத்தைக் கொண்டது. இறைச்சியான உள்ளுறை உவமத்தைப் போலப் பிறிதொரு பொருளோடு ஒத்து வந்து

அதற்குப் பின்னர் மற்றும் ஓர் பொருள் அவாவப்பட்டதாக அமையும்.

(எ.டு.)

'ஒன்றேன் அல்லென் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரும் நாடனொடு
ஒன்றேன் தோழி ஒன்றினானே'

என்ற செய்யுளில் 'இரண்டு களிறு போரிட்டு ஒரு வேங்கை மரத்தை மிதிக்க அதனால் அம்மரம் சாய்ந்து, ஏறிக் கொய்ய வேண்டாமல் நின்றவாறே பூக்கொய்யும் அளவிற்குப் பூக்களைப் பூத்தது' என்று கூறுவது 'வரவை உடன்படுவோரும் மறுப் போரும் ஆகிய இருவரும் சொற் போரிட அதனால் தலைவன் அவமதிக்கப்பட்டு முன்பெல்லாம் களவில் அரியனாய் இருந்த தலைவன் இப்போது எளிதில் அருள் செய்வான் ஆயினான்' என்ற பிறிது பொருளுடன் ஒத்து வந்து, ஆகவே யான் உடன் போக்கை மேற்கொண்டேன், என்ற ஒன்றை அவாவி நின்றது. ஆதலின் இது இறைச்சியாயிற்று.

**உள்ளுறை**

ஒருவர் கூறுகின்ற சொற்குரிய வழக்கமான பொருளேயன்றி வேறும் ஒரு பொருள் அதனுள்ளே உறையுமாறு கூறுவது உள்ளுறை எனப்படும். அவை ஐந்து வகைப்படும் (46). அவை: உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்பன. இவையன்றி மேலும் இன்பத்திடத்து உளதான உள்ளுறை, (47) மங்கல மொழி, அவையல் மொழி, மாறில் ஆண்மை சொல்லிய மொழி (48) என்ற நான்கையும் இணைத்துக் கூறியுள்ளார்.

**உடனுறை**

இதனை இறைச்சி என்ற மறு பெயரால் வழங்குவர். இது இறைச்சி என்ற தலைப்பின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

**உவமம்**

இதனைத் தொல்காப்பியம் அகத்திணையியலில் விளக்கு கின்றது. (அகத்திணையியல் 51).

1. தெய்வம் ஒழித்த ஏனைய கருப் பொருள்களைக் கொண்டு அமையும்.

2. புலவன் ஒரு பொருளை உள்ளத்தில் கருதிக் கொண்டு அப்பொருளோடு தொடர்புடைய பிற பொருளோடு ஒத்து முடிவதாக எண்ணி உரைப்பது உள்ளுறை என்ற இலக்கணத்தைக் கொண்டு அமையும்.

(எ.டு.)

வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவி
குறைபடுதேன் வேட்டும் குறுகும்-நிறைமதுச் சேர்ந்து
உண்டாகும் தன்முகத்தே செவ்வி உடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு.

தாமரையைப் பிரிந்த வண்டு காவிப்பூவின் தேனை விரும்பிச் செல்லும் என்று கூறப்படுகின்றது. இது புலவன் நினைத்த கருத்துக்கு ஒத்த உவமமாகும். இவ்வுவமத்திற்குள்ளே ''தலைவியை பிரிந்த தலைவன் பரத்தையரின் நலம் விரும்பிச் சென்றான்'' என்னும் புலவனின் கருத்து உறைகின்றது. எனவே இது உள்ளுறை உவமம்.

**சுட்டு**

வாயாற் சொற்களைக் கொண்டு கூறாமல் கையால் சுட்டிக் காட்டுவது கொண்டு பிறிதொரு பொருள் உணர்த்துவது சுட்டு உள்ளுறையாகும்.

(எ.டு.)

தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது. (குறள். 1279)

தொடியையும் தோளையும் அடியையும் சுட்டிக் காட்டியதனால் ''பூப்பறிப்போமாயின் தொடிகழலும் தோள் மெலியும் அடி நோகும்'' என்ற பிறிதொரு பொருள் தோன்றுகின்றது.

**நகை**

நகையால் ஒரு பொருள் உணரப்படுவது நகை உள்ளுறையாகும்.

(எ.டு.)

அசையியற் குண்டாண்டோ ரேஎர் யான்நோக்கப்
பசையினள் பைய நகும் (குறள். 1098)

''தலைவன் தலைவியை நோக்க அவள் மெல்ல நகைத்தாள். தளர்ச்சியுற்ற தலைவனுக்கு அந்நகையால் ஓர் எழுச்சி உண்டாயிற்று'' என்று கூறப்படுகின்றது. தலைவியின் நகையால் அவனது உள்ள வேட்கை உடனுறைவதாயிற்று.

**சிறப்பு**

''இதற்குச் சிறந்தது இது'' என்று கூறுவதனால் இச்சிறப்பான அறத்தை நீ செய்ய வேண்டும் எனப் பிறிதொரு கருத்துத் தோன்றுவது சிறப்பு உள்ளுறையாகும்.

**இன்பத்து உள்ளுறை**

இன்பம் நுகரும் காலத்து நிகழும் செயலில் பிறிதொரு பொருள் தோன்றுவது இன்பத்து உள்ளுறையாகும்.

(எ.டு.)

ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவ தெவன்கொ லறியேன் என்னும் (கலி. 4)

''இன்ப நுகர்ச்சியில் தலைவன் தலைவியின் நுதலைத் தடவினான். அங்ஙனம் தடவுதலில் உள்ள பொருள் பிரிவு கருதியதாகலாம்'' என்று பிறிதொரு பொருள் உணரப்பட்டது.

**மங்கல மொழி**

செத்தாரைத் துஞ்சினார் என்றல் போன்றது.

**அவையல் மொழி**

கண் கழுவி வருதும் என்றல் போன்ற இடக்கரடக்கல்.

**ஆண்மையிற் சொல்லிய மொழி**

ஒருவனைச் சிங்கம் என்றல் போன்ற உவம ஆகுபெயர்.

மேற்சுட்டியது போன்று இறைச்சியையும் உள்ளுறையையும் தொல்காப்பியப் பொருளியல் விளக்குகின்றது.

**காட்டலாகாப் பொருள்கள்**

காட்டலாகாப் பொருள்களாகப் பன்னிரண்டைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. அவை: 1. ஒப்பு, 2. உரு, 3. வெறுப்பு, 4. கற்பு, 5. ஏர், 6. எழில், 7. சாயல், 8. நாண், 9. மடன்,

10. நோய், 11. வேட்கை, 12. நுகர்வு என்பன (51). ஆவயின் வரும் கிளவி எல்லாம் என்பதனால் இளம்பூரணர் அன்பு, அழுக்காறு, பொறை, அறிவு என்ற நான்கையும் உடன் கூறுகின்றார். ஒளி, அளி, காய்தல், அன்பு, அழுக்காறு, பொறை, நிறை, அறிவு என்ற எட்டையும் நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

1. **ஒப்பு** என்பது தலைவன் தலைவியரது மெய் வேறுபாடு பற்றிப் பொறியான் உணரப்படும் ஒப்புமை போலாது, தந்தையை ஒக்கும் மகன் என்பது போல மனத்தான் மட்டும் உணரப்படும் ஒப்பாகும். 2. **உரு** என்பது உட்கு:பயிலாத பொருளைக் கண்டவழி வருவதோர் மன நிகழ்ச்சி. 3. **வெறுப்பு** என்பது மனச் செறிவு: அஃதாவது அடக்கம். 4. **கற்பு** என்பது மகளிர்க்கு மாந்தர் மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி. 5. **ஏர்** என்பது தளிரின் கண் தோன்றுவதோர் பொலிவுபோல எல்லா உறுப்பினும் ஒப்பக் கிடந்து கண்டார்க்கு இன்பத்தைத் தருவதோர் நிற வேறுபாடு. 6. **எழில்** என்பது மிக்கும் குறைந்தும் நீடியும் குறுகியும் மெலிதாகியும் வலிதாகியும் உள்ள உறுப்புக்கள் அவ்வளவில் குறையாமல் அமைத்தவழி வருவதோர் அழகு. 7. **சாயல்** என்பது நாயும் பன்றியும் போலாது மானும் மயிலும் போல்வதோர் மென்மைத் தன்மை. 8. **நாண்** என்பது பெரியோரது ஒழுக்கத்துக்கு மாறாயின செய்ய ஒருப்படாது செய்யாமைக்கு ஒருப்படும் மன நிகழ்ச்சி. 9. **மடன்** என்பது உய்த்துணர்ந்து நோக்காது கேட்டவற்றான் உணரும் மகளிர்க்கு உள்ள இயல்பு. 10. **நோய்** என்பது மனத்துன்பம். 11. **வேட்கை** என்பது யாதானும் ஒன்றைப் பெறல் வேண்டுமெனச் செல்லும் மன நிகழ்ச்சி. 12. **நுகர்வு** என்பது மெய் முதலாகிய ஐம்பொறியான் நுகர்ந்த இன்பத்தை, மற்றொருகால் மனத்தால் நினைத்து நுகரும் நுகர்ச்சி என்ற பன்னிரண்டு காட்டலாகப் பொருள்களைக் காட்டுகின்றார்.

**மரபுகள்**

1. காமம் இடையீடுபட்டபோது உறுப்பும் உணர்வும் உடையது போல நெஞ்சோடு பேசுவதும், சொல்லாதவற்றைச் சொல்வது போலவும் செய்யாதவற்றைச் செய்வது போலவும் கருதிப் பேசுவதும் பிறர் துன்பத்தைத் தமது துன்பம் போல் கருதிப் பேசுவதும் தலைவனுக்கும் தலைவிக்கும் உண்டு. (2)

2. இவர்கள் கனவு கண்டதாகக் கூறுவதும் உண்டு. (4)

3. வழக்கிற்கு ஏற்றனவே செய்யுளில் பாடப் பெறும்(21).

4. அறத்திற்கு மாறுபட்ட செயலால் இன்பம் வருமாயினும் அது வழக்காக ஏற்கப்படாது (22).

5. ஒரு பக்கத்திற்குக் கூறிய இலக்கணம் ஏனைப் பக்கத்திற்கும் வருவதை வழக்காக ஏற்கலாம். காமக் கிழத்திக்குக் கூறப்பட்ட ஊடலைப் பரத்தைக்கும் உரியதாக ஓதலாம். (26)

6. இன்பம் என்பது மனம் பொருந்தியவிடத்து உண்டாவதாகும். மனம் பொருந்தாதவிடத்து இன்பம் உண்டாவதில்லை. (27)

7. தாயை அன்னை என்றலும் தமையனை என்னை என்றலும் முறைப் பொருள் குறித்த சொற்கள். ஆனால் தலைவி தலைவனை நோக்கி என்னை என்பதும் தோழி தலைவியை நோக்கி அன்னை என்றலும் முறைப் பொருள் குறிப்பன வல்ல. (50)

**வழுவமைதி**

1. உண்டற்றொழிற்கு உரிமையில்லாத பொருளை உண்டது போல் கூறுதல் மரபு வழுவமைதியாகும்.

(எ.டு.)

பசலையால் உணப்பட்டு

2. எல்லா என்பது ஆண், பெண் என்ற இரு பாற்கும் உரித்தாக வரும் பொதுச் சொல். ஒரு சொல் ஒரு பால் பற்றி நில்லாது இரு பாற்கும் பொதுவாக வந்தால் வழுவமைதி.

3. தாயத்தால் வந்ததும் பிறர் ஈந்தமையால் வந்ததும் தொழில் செய்ததால் வந்ததும் பகைவரை வென்றதால் வந்ததும் ஆகிய செல்வத்தை எம்முடையது என்று உரிமை பாராட்டிக் கூறிக் கொள்வது மரபு (25). ஆனால் இந்நான்கு வழியாலும் வராமல் ஒன்றை எம்முடையது என்று உரிமை பாராட்டிக் கூறிக் கொள்வதும் உண்டு. அது மரபு வழுவமைதியாகும். அதாவது தலைவியின் தோளைத் தோழி என்தோள் என்று கூறிக் கொள்வது போல்வனவாம்.

# தொல்காப்பியம்-பொருளதிகாரம்

## உரைவளம்

---

### பொருளியல்

#### பொருள்

**193. *இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே**
**அசைதிரிந் திசையா[1] என்மனார் புலவர். (1)**

**ஆங்கில மொழிபெயர்ப்பு**

**இலக்குவனார்.**

Though the word gives the meaning other than what is traditionally meant by it, that meaning also belongs to it. But the form of the word will remain the same without any change in its syllable-say the poets.

**இளம்பூரணர்**

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், பொருளியல் என்னும் பெயர்த்து; பொருளியல்பு உணர்த்தினமையாற் பெற்ற பெயர். என்னை பொருளியல்பு உணர்த்தியவாறுஎனின், மேற் சொல்லப்பட்ட ஓத்துக்களினும் இனிச்சொல்லும் ஓத்துக்களினும் வரும் பொருளினது தன்மை யுணர்த்துதலிற் பொருளியல் உணர்த்திற்றாம்.

---

* சூத்திரத்தின் முன்னர் உள்ள எண் பொருளதிகாரத் தொடர் எண்; பின்னர் உள்ள எண் பொருளியல் தொடர் எண்.

1. அசைதிரிந்தியலா—நச்சினார்க்கினியர் பாடம்.

இதனை 'ஒழிபியல்' எனினும் இழுக்காகாது; அகப்பொருள் புறப்பொருள் என்பன இரண்டு பொருண்மையினும் எஞ்சி நின்றன கூறினமையின் ×.

''இசைதிரிந்.........புலவர்.''

என்பது சூத்திரம்.

இதன் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ எனின், தொடர் மொழிக்கட் பொருள் இயையுமாறு உணர்த்திற்று.

(இ-ள்) இசைதிரிந்து ஒலிப்பினும் பொருள் இயையும்; அவ்வழி அச்சொற்கு அங்கமாகிய அசை திரிந்தொலியா என்றவாறு.

என்றது சொல்லொடுசொல் தொடர்புபடும் வாய்பாட்டால் தொடராது பிறிதோர் வாய்பாட்டால் தொடுப்பினும் பொருட் டொடர்பு உண்டாயிற் பொருள் இயையும் வழி அசைச் சொற்கள் திரியாது நின்ற நிலையே பொருள்படுமா றாயிற்று.+

**உதாரணம்**

''கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்
மார்பி னஃதே மையில் நுண்ஞாண்
நுதல திமையா நாட்டம் இகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலும் உண்டத் தோலா தோற்கே
ஊர்ந்த தேறே சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்ன மேனி அவ்வான்
இலங்குபிறை அன்ன விலங்கு—வால் வையெயிற்று
எரியகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா அமரரு முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே.''

(அகம். கடவுள் வாழ்த்து)

---

× புறத்திணைக்கு ஒழிபு கூறப்படாமையின் இது பொருந் தாது.

+ இதற்குச் சிவலிங்கனார் உரையில் விளக்கம் பார்க்க.

இதற்குக் கொன்றையாலமைந்த தாரினனாய் மாலை யனாய்க் கண்ணியனாய் நுண் ஞாண் மார்பினனாய் இமையா நாட்டத்து நுதலினனாய்க் கணிச்சியு மழுவு மூவாய் வேலும் ஏந்திய கையினனாய் யாவர்க்குந்தோலா தோனுமாய் ஏற்றி னையு மூர்ந்து உமையாளையுஞ் சேர்ந்து செவ்வானன்ன மேனி யையும் பிறைபோன்ற எயிற்றினையும் எரிபோன்ற சடை யினையும் திங்களோடு சுடருஞ் சென்னியையும் உடையனாய் மூவாவமரர் முதலிய யாவரு மறியாத் தொன்முறை மரபின னாய்ப் புலியதளையும் உடுத்த யாழ் கெழு மணிமிடற்றந் தண்ணது சிவானுபூதியிற் பேருவகந் தங்கிற்று எனப் பொருள் உரைக்குங் காலத்து, அதன்கண் இடைக்கிடந்த சொற்கள் முன்னொடுபின் வாய்பாடுகள் சேராதன்றே;[1] அவ்வழி அவ்வாய் பாட்டாற் போந்த பொருளுரைப்பச் சேர்ந்தவாறும் இசை திரித்து இசைத்தவாறும் அவை தத்தம் நிலையிற் குலையாமை நின்று பொருள்பட்டவாறுங் கண்டு கொள்க.

> ''ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
> ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.'' (குறள். 662)

இதுவும் இரண்டென்னுந் தொகைக்கு 'ஊறொராமை' எனப் பொருள் உரைக்க வேண்டும்.[2]

## நச்சினார்க்கினியர்

இவ்வோத்துப் பொருளிலக்கணம் உணர்த்தினமையிற் பொருளியலென்னும் பெயர்த்தாயிற்று. ஏனை ஒத்துக்களும் பொருளதிலக்கணமன்றே உணர்த்தின, இதற்கிது பெயராய வாறென்னையெனின், சொல்லதிகாரத்திற் கூறிய சொற்களை மரபியலின் இருதிணை ஐம்பாலியனெறி வழாமைத்திரிபில் சொல்லென்பராதலின் அவை ஈண்டுத் தம் பொருளை வேறு பட்டிசைப்பினும் பொருளாமெனவும் இப்பொருளதிகாரத்து முன்னர்க்கூறிய பொருள்களிற் பிறழ்ந்திசைப்பனவும் பொருளா மெனவும் அமைத்துச் சொல்லுணர்த்தும் பொருளுந் தொடர் மொழியுணர்த்தும் பொருளும் ஒருங்கே கூறலிற் பொருளியலென் றார். இச்சூத்திரம் இவ்வோத்தின்கண் அமைக்கின்ற வழுவமைதி களெல்லாஞ் சொற்பொருளின் வழுவமைதியும் பொருளின் வழு வமைதியுமென இருவகைய என்கின்றது.

---

1. சேரா வன்றே என்றிருப்பின் நன்று.
2. ஒல்காமை என்பதற்கேற்ப ஊறு ஒராமை எனத்திரித்தல் வேண்டும்.

(இ-ள்) இசை திரிந்து இசைப்பினும்-சொற்கள் தத்தம் பொருளுணர்த்தாது வேறுபட்டிசைப்பினும் அசைதிரிந்து இயலா இசைப்பினும்-இவ்வதிகாரத்துள் யாத்தபொருள்கள் நாடக வழக்கும் உலகியல் வழக்குமாகிய புலனெறி வழக்கிற்றிரிந்து இயன்றிசைப்பினும் மன்பொருள் இயையும் என்மனர் புலவர். அவை மிகவும் பொருளேயாய்ப் பொருந்துமென்று தொல்லாசிரியர் கூறுவர் என்றவாறு. அதனால் யானும் அவ்வாறு கூறுவலென்றார்.

சொல்லாவது எழுத்தினான் ஆக்கப்பட்டுப் பொருளறிவுறுக்கும் ஓசையாதலின் அதனை 'இசை' என்றார்.[1] இஃது ஆகுபெயர். அசைக்கப்பட்டது அசையென்பதும் ஆகுபெயர்.[2] 'நோயுமின்பமும்' (196) என்பதனுள் 'இரு பெயர் மூன்றுமுரியவாக' என்பதனால் திணை மயங்குமென்றும் 'உண்டற்குரிய வல்லாப் பொருளை' (213) என்றும் பிறாண்டுஞ் சொல் வேறுபட்டுப் பொருளுணர்த்தலும் இறைச்சிப் பொருண் முதலியன நாடக வழக்கின் வழீஇயவாறுந், 'தேரும் யானையும்' (212) அறக்கழிவுடையன (218) தாயத்தினடையா (221) என்னுஞ் சூத்திர முதலியன உலகியல் வழக்கின் வழீஇயவாறுங் கூறி அவ்வழு அமைக்கின்றவாறு மேலே காண்க. புறத்திணையியலுட் புறத்திணை வழூக்கூறி அகப்பொருட்குரிய வழூவே ஈண்டுக் கூறுகின்றதென்றுணர்க.

'இயலா' என்றதனால் 'என் செய்வாம்' என்வழிப் பொன் செய்வாம்' என்றாற்போல வினாவிற் பயவாது[3] இறைபயந்தாற்[4]

---

1. இசை—ஓசை. அது சொல்லுக்கு ஆயிற்று; ஆகுபெயர்.

2. அசை—அசைத்தல். அது அசைக்கப்படும் சீர் உறுப்புக்கு ஆயிற்று; ஆகுபெயர்.

3. வினாவிறை பயவாது என்றிருத்தல் நலம். வினாவுக்கேற்ற விடைபயவாமல் என்பது பொருள். என் செய்வாம் என்ற வினாவுக்கு இன்னது செய்வாம் என்னாமல் தொடர்பின்றிப் பொன் செய்வாம் என்றது வினாவுக்கேற்ற விடை பயக்கவில்லை.

4. இறை என்பது விடை. இறை பயத்தல் என்பது நேரே விடை கூறாமல் விடையாகக் கொள்ளுமாறு அமைதல். உண்டாயா என்றால் உண்டேன் என்பது நேர்விடை. அப்பொருள்படும்படி உண்ணாமல் இருப்பேனோ என்றால் நேர்விடையாகாமல்விடை (இறை) பயப்பதாகும்.

போல நிற்பனவுங் கொள்க. இன்னும் அதனானே செய்யுளிடத்துச் சொற்பொருளானன்றித் தொடர் பொருளாற் பொருள் வேறுபட இசைத்தலுங் கொள்க.[1] அதுசூத்திரத்துஞ் செய்யுளுள்ளும் பொருள் கூறுமாற்றானுணர்க.

**சிவலிங்கனார்**

பொருள் அல்லனவும் பொருள் ஆமாறு உணர்த்தும் இயலாதலின் இவ்வியல் பொருளியல் என்னும் பெயரதாயிற்று.

பொருளல்லவாவன வழுக்கள். அவ்வழுக்களும் அகவொழுக்கத்தில் அமைக்கப்படுதலின் பொருளாயின. அப்பொருள்களின் இலக்கணம் கூறும் இயல் பொருளியலாயிற்று.

எழுத்ததிகாரத்தில் தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஐந்தியல்களும் சிறப்பாகப் புணர்ச்சி விதிகளைக் கூறினாலும் அதாவது செய்கை விதிகளைக் கூறினாலும் அவற்றுக்கு முன்னதாக அறிய வேண்டிய அமைக்க வேண்டிய கருவி விதிகளைக் கூறும் இயலைப் புணரியல் எனப்பொதுப்படக் கூறியது போலவும், சொல்லதிகாரத்தில் வேற்றுமையியல் முதலாக எச்சவியல் ஈறாக உள்ள எட்டு இயல்களும் சொற்களை ஆக்கிக் கோடற்குரிய இலக்கணமே கூறினாலும் அவற்றின் வேறாக வழுக்களை அமைக்கும் இயலைக் கிளவியாக்கம் எனத் தனியாகக் கூறியது போலவும் அகஇலக்கணங்களைக் கூறும் அகத்திணையியல், களவியல், கற்பியல் ஆகிய இயல்கள் இருக்கவும் அவற்றின் வேறாகச் சில வழுக்களை அமைக்கும் இயலாகப் பொருளியலை அமைத்தார் ஆசிரியர் என்க.

பொருளல்லனவும் பொருளாமாறு உணர்த்தும் இயல் பொருளியலாம் என்னும் கருத்தினர் நச்சினார்க்கினியர் என்பதை அவர் கூற்றால் உணரலாம். அது,

> "இவ்வோத்துப் பொருள் இலக்கணம் உணர்த்தினமையிற் பொருளியல் என்னும் பெயர்த்தாயிற்று. ஏனை ஓத்துக்களும் பொருளது இலக்கணம் அன்றே உணர்த்தின;

---

1. கல்கறிக்க நன்கு அட்டாய் என்ற தொடர் நேர்ப் பொருள் தாராமல் நன்கு அடவில்லை என்றபொருளைக் குறிப்பால் தருவது தொடர்ப் பொருளால் பொருள் வேறுபட இசைத்தலாம்.

இதற்கு இது பெயராயவாறு என்னையெனின், சொல்லதிகாரத்திற் கூறிய சொற்களை மரபியலின் இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத் திரிபில் சொல் என்பர். ஆதலின் அவை ஈண்டுத் தம் பொருளை வேறுபட்டிசைப்பினும் பொருளாம் எனவும், இப் பொருளதிகாரத்து முன்னர்க் கூறிய பொருள்களிற் பிறழ்ந்திசைப்பனவும் பொருளாம் எனவும் அமைத்துச் சொல் உணர்த்தும் பொருளும் தொடர் மொழி உணர்த்தும் பொருளும் ஒருங்கே கூறலிற் பொருளியல் என்றார்''

என்பது. இனி, இளம்பூரணர்

''இதனை ஒழிபியல் எனினும் இழுக்காது. அகப்பொருள் புறப்பொருள் என்பன இரண்டு பொருண்மையினும் எஞ்சி நின்றன கூறினமையின்,''

எனக் கூறியது பொருந்தாது. இவ்வியலில் புறப் பொருட் செய்திகள் கூறப்படவில்லை. இரண்டொரு சூத்திரங்கள் புறப் பொருளுக்கும் பொருத்தலாம். அவைகளும் அகப்பொருளுக்குச் சிறந்தாங்குச் சிறந்தன இல்லை. அன்றியும்,

''இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், பொருளியல் என்னும் பெயர்த்து; பொருளியல்பு உணர்த்தினமையாற் பெற்ற பெயர். என்னை பொருளியல்பு உணர்த்தியவாறு எனின், மேற்சொல்லப்பட்ட ஓத்துக்களினும் இனிச் சொல்லும் ஓத்துக்களினும் வரும் பொருளினது தன்மை உணர்த்தலிற் பொருளியல் உணர்த்திற்றாம்''

என அவர் கூறுவதும் ஏற்புடைத்தன்று. பின்னர் உள்ள மெய்ப்பாட்டியல், செய்யுளியல், மரபியல்களின் தன்மைகள் இவ்வியலில் கூறப்படவில்லை. புறத்திணையியலுக்குரிய வெட்சி முதலிய திணைகளுக்குரிய செய்திகளுள் ஒன்றேனும் கூறப்படவில்லை.

இச்சூத்திரம் செய்யுட்கண் வரும்வழுக்களை அமைத்தலும் வழுக்காத்தலும் நுதலிற்று.

(இ-ள்) செய்யுளில் ஒரு கருத்தை விளக்க வரும் சொற்றொடர்கள் ஒன்றுபோல் இல்லாமல் மாறுபட்டுவரினும் பொருள் பொருத்தம் உற அமையும்; ஆனால் சொற்களின் விகுதி முதலிய உறுப்புகள் வேறுபடுதல் இல்லை என்று கூறுவர் புலவர் என்றவாறு.

இசை என்பது சொல்; அது சொற்றொடர்களுக்கு ஆகு பெயராய் வந்தது. அசை என்பது அசை (பிரி)த்தல்; அது அசைக்கப்படும் விகுதி முதலியவற்றுக்கு ஆகி வந்தது.

சொல்லதிகாரத்துக் கூறப்பட்ட திணை, பால், எண், இடம், வினா, விடை, மரபு என்னும் ஏழும்பற்றி வரும் வழுக்கள் யாவும் ஒரு தொடரில் அமைவன. இங்குக் கூறப்பட்ட இசை திரிதல் எனும் சொற்றொடர் வழு ஒரு கருத்தை விளக்கவரும் பல சொற்றொடர்களின் ஒழுங்கின்மையைக் குறிக்கும்.

'உண்ண எஞ்சிய' என்பது 'உண்டு எஞ்சிய' எனவரின் உண்ண என்பதின் செயல் என்னும் வாய்பாட்டு வினையெச்ச விகுதியாகிய அகரம், உண்டு என்பதில் செய்து என்னும் வாய் பாட்டு வினையெச்ச உகர விகுதியாகத் திரிந்தது. 'மலர்மிசை ஏகினான்' (குறள். 3) என்பதில் 'ஏகுவான்' என்று எதிர்கால முணர்த்தும் வகர இடைநிலை 'ஏகினான்' என இறந்தகாலம் உணர்த்தும் இன் இடைநிலையாகத் திரிந்தது. இவை அசை திரிந்தனவாம். ஒரு கருத்தை விளக்கவரும் பல சொற்றொடர் களில் வரும் சொற்கள் அவ்வாறு அசை திரிந்து வருதல் இல்லை. இதை இளம்பூரணர் காட்டிய 'கார் நறுங்கொன்றை' (அகம். கடவுள் வாழ்த்து) என்னும் பாடலில் விளங்கக் காணலாம்.

> "மணிமிடற் றந்தண னாகிய சிவன் தாரன்,
> மாலையன், கண்ணியன், நுண்ஞாண் மார்பினன்,
> இமையா நாட்ட நுதலினன், கணிச்சியொடு
> மழுக்கையினன், மூவாய்வேலன், ஏறூர்ந்தான்,
> உமைசேர்ந்தோன், மேனியன், எயிற்றன், புரி
> சடையினன், திங்கள் சுடரும் சென்னியன்,
> தொன்முறை மரபினன்."

என இவ்வாறு உயர்திணைக் குறிப்பு வினைமுற்றுத் தொடர் ஒழுங்கில் அமைய வேண்டிய செய்யுள்,

> தாரன், மாலையன், கண்ணியன், ஞாண் மார்பினது,
> நாட்டம் நுதலது, கணிச்சியொடு மழுக்கையது, வேலும்
> உண்டு, ஊர்ந்தது ஏறு, சேர்ந்தோள் உமையே, மேனி,
> வையெயிற்று, புரிசடை, சுடரும் சென்னி, தொன்று
> முறை மரபின் மணிமிடற்றந்தணன்

என உயர்திணைக் குறிப்பு வினைமுற்றுகளும், அஃறிணைக் குறிப்பு வினைமுற்றுகளும், மேனி, எயிற்று, புரிசடை முதலிய

எண்ணும்மைத் தொடர்களும் கலந்து தொடர் ஒழுங்கின்றி அமைந்தது காணலாம். இது வழுவாயினும் கருத்துப் பொருளுக் கேற்ப உயர்திணை வினைக்குறிப்பு முற்றுத் தொடர்ப் பொரு ளாகவே பொருள் கொள்ளல் வேண்டும். இச் செய்யுளில் யாண்டும் தனிச் சொற்றொடர்ப் பிழை அதாவது சொல் திரிந்த பிழையில்லை.

நச்சினார்க்கினியர், இச்சூத்திரம், நாடக வழக்கும் உலகியல் வழக்கும் கூறும் புலனெறி வழக்காகிய செய்யுளில் வரும் சொற் பொருள் வழுவும் தொடர்ப்பொருள் வழுவும் அமைகின்றதாகக் கொண்டமையால்,

> ''இச் சூத்திரம் இவ்வோத்தின்கண் அமைக்கின்ற வழு வமைதிகள் எல்லாம் சொற்பொருளின் வழுவமைதியும் பொருளின் வழுவமைதியும் என இருவகைய என்கின் றது''

எனக் கூறி, இச்சூத்திரத்தை,

> ''இசை திரிந்து இசைப்பினும் அசை திரிந்து
> இயலா இசைப்பினும் மன்பொருள் இயையும்
> என்மனார் புலவர்''

எனக் கொண்டுகூட்டி இடர்ப்படுவர். சூத்திரக் கிடக்கை அவ் வாறு கொண்டு கூட்டுமாறு அமையாமையின் அவர் கூற்றுப் பொருந்தாது. எனினும் அவர் அவ்வாறு இடர்ப்பட்டுப் பொருள் உரைக்கக் காரணம் என்னை?

தாய்முறைப் பெயராகிய 'அன்னை' என்பதும் முன்னோன் (அண்ணன்) முறைப் பெயராகிய 'என்னை' என்பதும் முறையே தோழியும் தலைவியும் ஒருவரையொருவர் குறிக்கவும், இருவரும் தலைவனைக் குறிக்கவும் பாடலில்(புலனெறி வழக்கில்) வழங்கப் பட்டிருத்தலின் அவை பற்றிய இலக்கணம் அமைத்தல் வேண்டும் ஆதலினாலும், தலைவன், தலைவி, தோழி ஆகியோர் உரை யாடலில் கருத்துகளை நேரே கூறுவதன்றி உள்ளுறை இறைச்சி கள் அமைத்துக் கூறுதல் நாடக வழக்கில் இல்லையாதலின், உள்ளுறையும் இறைச்சியும் அமைத்துப் பாடுதல் நாடக வழக்குக்கு மாறுபட்ட புலனெறி வழக்கமாதலின் செய்யுளில் அவை அமைந்து வருவதை வழுவமைப்பாகக் கூற வேண்டும் ஆதலினாலும், தோழியானவள் தலைவியின் தோளைத் தலை வன் தழுவினான் எனக் கூற வேண்டி, 'என் தோளைத் தழுவி

னாய்' எனக் கூறுதல் உலக வழக்குக்கு மாறுபட்டதான அறக் கழிவுடையது ஆதலின் அது செய்யுளில் வருவதை அமைத்தல் வேண்டும் ஆதலினாலும் இவ்வியலில் அவற்றை அமைக்கு முன்னர்ப் பாதுகாவலாக முதற்சூத்திரத்தை அமைத்தார் தொல் காப்பியர் என நச்சினார்க்கினியர் கருதினாராதல் வேண்டும். சொல் வழு சொற்றொடர் வழுக்கள் பற்றிச் சொல்லதிகாரத்தி லேயே கூறப்பட்டு விட்டன. இங்கே அமைக்கப்படும் வழுக்கள் அவற்றின் வேறாய புலனெறி வழக்கு பற்றிய சொல் வழு தொடர் வழுக்களேயாம் என்பதும் அவர் கருத்தாகலாம்.

இசை என்பதற்குச் சொல் என்றும், அசை என்பதற்கு அசைக்கப்பட்ட (கட்டப்பட்ட) பொருள் என்றும் அவர் கொண்டார்.

அவர் உரைத்தனவற்றை 'இசை திரிந்து இசைப்பினும் இயையும்மன் பொருளே' என்னும் முதல் அடியிலேயே அமைத்து விடலாம். அசை திரிந்தியலா என்பதற்கு முன் கூறியவாறே கூற லாம். எனவே நச்சினார்க்கினியர் உரையும் கருதுதற்குரியதே யாம்.

### காமக்கிளவி

**194.** **நோயும் இன்பமும் இருவகை நிலையிற்**
**காமம் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய**
**உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்**
**மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்**
**சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்**
**அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்**
**அறிவும் புலனும் வேறுபட நிறீஇ**
**இருபெயர் மூன்றும் உரிய வாக**
**உவம வாயிற் படுத்தலும் உவமம்**
**ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி.** **(2)**

**ஆ. மொ.**

During the two states of joy and sorrow for knowing the technique of love the eight divisions being understood, the heart is being addressed as though it has limbs, sense and the

capacity of refusing representing the things which cannot speak, as said to have spoken, the things which cannot act, as said to have acted each of their diseases being considered as their own, the wisdom and sense are being set apart, the three genders of high-class are attributed to the two genders of non class, saying with the simile when they are fit to be used simile these are the expressions which belong to the two, the lover and the lady-love.

**பிற்கால இலக்கண நூல்கள்**

இலக்கண விளக்கம்-பொருளதிகாரம் 570. தொல்காப்பிய மேற்சூத்திரமே.

**நம்பி அகப்பொருள் 229**

நெஞ்சும் நாணும் நிறைசேர் அறிவும்
செஞ்சுடர்ப் பருதியும் திங்களும் மாலையும்
புள்ளும் மாவும் புணரியும் கானலும்
உள்ளுறுத் தியன்றவும் ஒழிந்தவை பிறவும்
தன்சொல் கேட்குந போலவும் தனக்கவை
இன்சொல் சொல்லுந போலவும் ஏவல்
செய்குந போலவும் தேற்றுந போலவும்
மொய்குழல் கிழத்தி மொழிந்தாங் கமையும்.

## இளம்

என்-எனின். ஒருசார் காமப் பொருண்மை பற்றி நிகழ்வ தோர் கிளவி யுணர்த்திற்று.

(இ-ள்) நோயும் இன்பமும் இருவகை நிலையிற் காமங் கண்ணிய மரபிடை தெரிய எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல் மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்தும் என்பது-துன்பமும் இன்பமும் ஆகிய இருவகை நிலையினையுடைய காமத்தைக் குறித்த மரபு இடையீடுபடுதலான மெய்ப்பரிவு[1] எட்டாகிய எட்டன் பகுதியும் விளங்கப் பொருந்திய உறுப்புடையது போலவும் உணர்வுடையது போலவும் மறுத்துரைப்பது போலவும் நெஞ்சொடு புணர்த்துக் கூறியது என்றவாறு.

---

1. மெய்ப்பிரிவு—மெய்ப்பாடு

'காமங்கண்ணிய' என்றதனால் அகப்பொருளாகிய காமமும் புறப்பொருளாகிய காமமும் கொள்ளப்படும். 'இடைதெரிய' என்பதனை,[1]

> ''..................இன்பம்
> இடைதெரிந் தின்னாமை நோக்கி மனையாறு
> அடைவொழிந்தார் ஆன்றமைந் தார்''[2]
>
> (நாலடி. 54)

என்றாற் போலக் கொள்க. 'தெரிய' என்னும் செயவெனெச்சம் ஏதுப் பொருண்மை குறித்து நின்றது. மெய்ப்பாடு எட்டாவது:- நகை, அழுகை, உவகை, இளிவரல், அச்சம், பெருமிதம், மருட்கை, வெகுளி; இவற்றின் பகுதி மெய்ப்பாட்டியலுட் காண்க. இம் மெய்ப்பாடு உறுப்புடையது போலச் சொல்லப்பட்ட நெஞ்சின்கட் புலப்பட என்றவாறு.

சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச் செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும் என்பது-சொல்லாத மரபினையுடைய வற்றோடு கெழுமி அவை செய்யாத மரபையாண்டுப் படுத்திய வற்றையும் நெஞ்சினைப் போல அடக்கியும் என்றவாறு.

சொல்லா மரபின ஆவன-புள்ளும், மாவும், மரனும், கடலும், கானலும் முதலாயின. செய்யா மரபாவன-தூதாச் சேறலும் வருதலும் உளபோலக் கூறும் அவைபோல்வனவும் பிறவும்.

அவரவருறுபிணி தமபோற் போற்றியும் என்பது-யாவர் சிலர் யாதொரு பிணியுற்றார் அவருற்ற பிணியைத் தாமுற்ற பிணிபோலச் சேர்த்தியும் என்றவாறு.

'அவரவர்' என்பது உயர்திணையாய்க் கூறினும் இருதிணை யுங் கொள்ளப்படும்;-

> ''ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்
> வருவகை தானே வழக்கென மொழிப''
>
> (பொருளியல். 27)

---

1. இடை—இடையீடு
2. பொருள், கல்வி, கேள்விகளால் நிறைந்து புலன்கள் அடங்கப் பெற்றவர்கள் இன்பத்துக்கு வரும் இடையீடு களையறிந்து அவற்றின் கொடுமைகளை நோக்கி மனை வாழ்க்கை நெறியிற் சேர்தலை விட்டார்கள்.

என்பதனால்.

அறிவும் புலனும் வேறுபட நிறீஇ இருபெயர் மூன்றும் உரிய வாக வுவம வாயிற் படுத்தலும் உவமம் ஒன்றிடத்து என்பது-அறிவையும் அறியப்படும் பொருளையும் வேறுபட நிறுத்தி இருவகைப்பட்ட பெயரும் மூவகைப்பட்ட பொருட்கும்[1] உரித் தாக உவமம் பொருந்துமிடத்து உவமவாயிற் படுத்தலும் என்றவாறு.

வேறுபட நிறுத்தலாவது-தத்தம் நிலைமையொழிய வென்ற வாறு.இரு பெயராவது —உவமைப் பெயரும் உவமிக்கும் பெயரும், மூன்றும் உரியவாகும் என்பது-தொழிலும் பண்பும் பயனும். 'உவமம் ஒன்றிடத்து' என்றதனை மொழி மாற்றுக.

இருவர்க்கும் உரியபாற் கிளவி என்பது-தலைமகற்கும் தலை மகட்கும் உரிய வொரு கூற்றுக் கிளவி என்றவாறு.

அவற்றுள் நெஞ்சொடுபுணர்த்தற்கு உதாரணம்:—

''கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்தோள் பெறநசைஇச் சென்றஎன் நெஞ்சே''[2]
(அகம். 9)

என்பது உறுப்புடையது போல உவகைபற்றி வந்தது.

---

1. மூவகைப்பட்ட பொருள்: உவமம் தோன்றக் காரண மான வினை, பயன், மெய் என்பன. உரு என்பதை மெய்யுள் அடக்கினார் இளம்பூரணர். நச். உரை வேறு பாடு காண்க.

2. பொருள்: நாணும் கற்பும் நுதலும் இன்சொல்லும் உடைய குறுமகளாகிய தலைவியின் தோளை அடைய விரும்பிச் சென்ற என் நெஞ்சமானது, தன் கையைக் கவிழ்த்துச் சென்று அவள் கண்ணைப் புதைத்துக் குறுகி அவள் பின்னலைத் தீண்டி அவள் கையைத் தடவி அவளுடன் தோய்ந்ததோ?

"சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்
துணையும்
நின்றதுகொல் நேர்மருங்கிற் கையூன்றி-முன்றில்
முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்கு
உழந்துபின் சென்றஎன் நெஞ்சு."[1]
(முத்தொள். 91)

இது அவலம் பற்றி நெஞ்சினை உறுப்புடையதுபோற் கூறிய பெண்பாற் கூற்று.

"உள்ளம் பிணிக் கொண் டோள்வயின் நெஞ்சஞ்
செல்லல் தீர்கஞ் செல்வா மென்னும்."[2]
(நற். 284)

என்ற வழி உணர்வுடையது போல் இளிவரல் பற்றி வந்த தலைமகன் கூற்று.

"குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந் தீயக்
கண்களி பெறூஉங் கவின்பெறு காலை
யெல்வளை நெகிழ்த்தோற் கல்ல லுறீஇயர்
சென்ற நெஞ்சம் செய்வினைக் குசாவாய்
ஒருங்குவரல் நகையொடு வருந்துங் கொல்லோ
அருளா னாகலின் அழிந்தவண் வந்து
தொன்னலன் இழந்தஎன் பொன்னிறம் நோக்கி

---

1. பொருள்: கடாம் உடைய யானையும் மாலையும் உடைய பாண்டியனுக்காக வருந்தி அவன்பின் சென்ற என் நெஞ்சம் அவன் இருக்குமிடம் சென்றதோ? முடியாமல் வந்து விட்டதோ? அவன் செவ்வி பெறுமளவும் இடுப்பில் கையூன்றி நின்றதோ? அறியேன்—இது தலைவி கூற்று.

2. பொருள்: என் நெஞ்சமானது நம் உள்ளத்தைப் பிணித்துக் கொண்டோள் இடத்துக்கு நம் துன்பம் நீங்கச் செல்வோம் என்று கூறும்—இது தலைவன் கூற்று.

ஏதி லாட்டி இவளெனப்
போயின்று கொல்லோ நோதலை மணந்தே.''[1]
(நற். 56)

இஃது உணர்வுடையதுபோல் இளிவரல் பற்றி வந்த தலை மகள் கூற்று.

''நின்மொழி கொண்டியானோ விடுவனென் மொழிகொண்
டென்னெஞ்சம் ஏவல் செயின்.'' (கலி. 113)

இது மறுத்துரைப்பது[2] போல் தலைமகன் கூற்று: உவகைபற்றி வந்தது.

''அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவனெஞ்சே
நீயெமக் காகா தது''[3] (குறள். 1291)

இதுவும் மறுத்துரைப்பதுபோல் தலைவி கூற்று: இளிவரல்பற்றி வந்தது.

''இருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே.''[4] (அகம். 128)

---

1. பொருள்: குறியதாக நிற்கும் குராமரத்தின் அரும்பு மலர்ந்த மலரில் வண்டு மொய்த்து அதனால் வீசும் மணத்தைக் காற்று கொண்டு தர அது கண்டு கண் மகிழ்ச்சி பெறும் காலத்தில் என் வளையலை நெகிழும் படிப் பிரிந்தவர்க்கு என் துன்பத்தைச் சொல்ல வேண்டி அவர்பாற் சென்ற என் நெஞ்சம் அவர் செய்யும் வினைக்குத் தான் உசாத்துணையாய் இருந்து அவர் மீண்டு வரும்போது வரலாம் என்று எண்ணி வருத்தத் துடன் அவரிடமே தங்கி விட்டதோ? அல்லது அவர் எனக்கு இரங்காமையால் வருந்தி வந்து இங்கே பழைய அழகு இழந்து மாறிய உடம்பின் பொன்னிறம் பார்த்து இவள் ஒருத்தி யாரோ என்று நினைத்து என்னைத் தேடி வருத்தம் கொண்டு போய் விட்டதோ? அறியேன். தலைவி கூற்று.
2. ஏவல் செய்யேன் என்று நெஞ்சம் மறுத்துரைப்பது போல் அமைந்தது.
3. அவர் நெஞ்சம் அவர்சொற்கேட்டு அவர்க்கு ஆவது பார்த்தும் என் நெஞ்சமே! நீ என் சொற்கேட்டு எனக்கு ஆகாதது ஏன்?
4. என் நெஞ்சம் இருளில் தலைவன் மிதித்துச் செல்லும் இடத்தின் கொடுமையை நினைந்து அவர் தளரும் கால்களைத் தாங்கச் சென்றது.

இஃது அச்சம்பற்றி வந்தது. பிறவு மன்ன

சொல்லாமரபி னவற்றொடு கெழீஇச் செய்யாமரபிற்றொழிற் படுத்தடக்கியும் என்பதற்குச் செய்யுள்:-

''கானலுங் கழறாது கழியுங் கூறாது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
ஒருநின் அல்லது பிறிதியாதும் இலனே
இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தற்
கமழிதழ் நாற்றம் அமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து
பறைஇய தளருந் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால்..........''[1] (அகம். 170)

என்பது தலைவி கூற்று. தலைவன் கூற்று வந்தவழிக் காண்க.

அவரவர் உறுபிணி தம்போற் சேர்த்தியதற்குச் செய்யுள்:-

''பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்
தூவறத் துறந்தனன் துறைவனென் றவன்நிறம்
நோய்தெற உழப்பார்கண் இமிழ்தியோ எம்போலக்
காதல் செய் தகன்றாரை உடையையோநீ.''[2]

(கலி. 129)

பிறவு மன்ன.

அறிவும் புலனும் வேறுபட நிறீஇ உவமவாயிற் படுத்தற்குச் செய்யுள்:-

---

1. பொருள்: கரியகழியில் கண்போல் மலர்ந்த நெய்தற் பூவின் இதழ் மணத்தை அமுதென விரும்பித் தாதூதும் வண்டுகள் களிப்பு மிக்குப் பறந்து தளரும்படியான துறைவனிடம் என்னைப் பற்றி கழிக்கானலும் சொல்லாது உப்பங் கழியும் சொல்லாது தேன் சொரியும் நறுமலருடைய புன்னை மரமும் சொல்லாது ஒப்பற்றி நின்னையன்றி வேறு யாதொன்றையும் உதவியாக உடையேன் அல்லேன், அதனால் நீ அவனிடம் சென்று சொல்லல் வேண்டும்.

2. பொருள்: பாயும் அலையோசை நீங்காத பரந்த நீருடைய பனிக்கடலே! அன்பறத்துறந்தான் துறைவன் என்று அவனால் உண்டான காமநோய் சுடவருந்துவாரிடத்தே நின்று வருத்த நினைந்து ஒலிக்கின்றாயோ அல்லது நீயும் முன்னே காதல் செய்துப் பின்னர் நீங்கிய தலைவனை உடையையாய் வருந்தியழுகின்றாயே!

"ஓங்கெழிற் கொம்பர் நடுவி தெனப்புல்லும்;
காந்தட் கிவருங் கருவிளம் பூக்கொள்ளும்
மாந்தளிர்க் கையில் தடவரு மாமயில்
பூம்பொழில் நோக்கிப் புகுவன பின்செல்லும்
தோளெனச் சென்ற துளங்கொளி வேய் தொடும்
நீள்கதுப் பிஃதென நீரற் றறல்புகும்
வாளொளி முல்லை முகையை முறுவலென்று
ஆள்வலி மிக்கான் அஃதறி கல்லான்."[1]

இவை இடையுங் கையு முதலாகிய உறுப்புகளைப் பற்றிய உவம வாயிற் படுத்தறியும் அறிவையும் அறியப்படும் பொருளையும் வேறுபட நிறுத்தி உவமம் பொருந்தியவழிக் கூறியவாறு காண்க. வேயைத் தோள் போலு மென்னாது தோளென்று தொட்டமையால் அறியப்படும் பொருள் வேறுபட்டது. அதனைத் திரியக் காண்டலால் அறிவு வேறுபட்டது. பித்துங் களியும் போல் முலையெனச் சென்று வேயைத் தொடும் என்னாது தோளெனச் சென்று வேயைத் தொட்டமையால் உவமம் ஒன்றியவழி உவமவாயிற் படுத்தது.

நச்

இது, முற்கூறிய இருவகையானும் பொருள் வேறுபட்டுவழீஇ யமையுமாறு கூறுகின்றது.

(இ-ள்) நோயும் இன்பமும் இருவகை நிலையிற் காமம் கண்ணிய மரபிடைதெரிய—துன்பமும் இன்பமுமாகிய இரண்டு நிலைக் களத்துங் காமங்கருதின வரலாற்று முறைமையிடம் விளங்க, எட்டன் பகுதியும் விளங்க நகை முதலிய மெய்ப்பாடு எட்டனுடைய கூறுபாடுந் தோன்ற அறிவும் புலனும் வேறுபட நிறீஇ இருபெயர் மூன்றும் உரியவாக மனவறிவும் பொறியறிவும் வேறுபட நிறுத்தி அஃறிணை யிருபாற் கண்ணும் உயர்திணை

---

1. பொருள்: இடைஎன்று கொம்பைத் தொடும். கை என்று காந்தட் பூக் கொய்யும் கருவிளம் பூக் கொள்ளும் மாந்தளிரைத் தடவும்; பூம் பொழில் நோக்கிப் புகுவன வான மயில்களை நீ என்று தானும் அங்குப் புகும். தோள் என்று மூங்கிலைத் தொடும். நீர் குறைந்த கருமணலில் நின் கூந்தல் எனப் புகும் நின் முறுவல் என்று முல்லையரும்பைக் கண்டு அறியாதவனான் ஆள்வலி மிக்க தலைவன்.

—தோழி தலைவியிடம் கூறியது.

மூன்று பொருளு முரியவாக அவரவர்தமக்குப் பொருந்திய உறுப் பெல்லாம் அறிவுடையது போலவும் உணர்வுடையது போலவும் மறுமாற்றந் தருவது போலவுந் தந்நெஞ்சொடு புணர்த்துச் சொல்லியும், சொல்லா மரபினவற்றொடுகெழீஇச் செய்யா மரபிற் றொழிற்படுத்து அடக்கியும்-வார்த்தை சொல்லா முறைமையுடையனவாகிய புள்ளும் மாவும் முதலியவற்றோடே அவை வார்த்தை கூறுவனவாகப் பொருந்தி அவை செய்தலாற் றாத முறைமையினையுடைய தொழிலினை அவற்றின் மேலே ஏற்றியும், உறுபிணி தமபோலச் சேர்த்தியும் - அச்சொல்லா மரபினவை உற்ற பிணிகளைத் தம்பிணிக்கு வருந்தின போலச் சார்த்திக் கூறியும்,உவமம் ஒன்றிடத்து உவமவாயிற் படுத்தலும்- அம்மூவகைப் பொருளை உவமஞ் செய்தற்குப் பொருந்து மிடத்து உவமத்தின் வழியிலே சார்த்திக் கூறுதலும்,இருவர்க்கும் உரிய பாற்கிளவி-அத்தலைவர்க்கும் தலைவியர்க்குமுரிய இலக் கணத்திற் பக்கச் சொல் என்றவாறு.

தெரிய விளங்க உரியவாகப் புணர்த்தும் அடக்கியுஞ் சேர்த்தும் அவற்றைப் படுத்தலும் இவ்விருவர்க்குமுரிய பாற் கிளவியென முடிக்க. 'அவரவர்' என்கின்றார் அகத்திணை யியலுட் பலராகக் கூறிய தலைவியரையுந் தலைவரையும். 'இருவர்' என்றதும் அவரென்னுஞ் சுட்டு. நெஞ்சென்னும் அஃறிணை யொருமையைத் தெரிய விளங்கத் தலைவன் கூறும் வழி உயர்திணை யாண்பாலாகவும் தலைவி கூறும் வழி உயர் திணைப் பெண் பாலாகவும் பன்மையாற் கூறும் வழி பன்மைப் பாலாகவும் கொள்க என்றுஞ் சொல்லா மரபினவற்றையும்உயர் திணைப் பாலாக்கியும் அவற்றைத் தமபோலச் சேர்த்திக் கூறு படுத்து உயர்திணை முப்பாலாக்கியுங் கூறுபவென வழுவமைத் தார்.

இருவகை நிலைக்களத்து எட்டனையுஞ் சேர்க்கப் பதினா றாம். அவற்றை நெஞ்சொடு சேர்க்கப் பலவா மென்றுணர்க.

'உண்ணாமையின்' என்னும் அகப்பாட்டி (123)னுள்,

''இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கட லோதம் போல
வொன்றிற் கொள்ளாய் சென்று தரு பொருட்கே''[1]

---

1. நெஞ்சமே! தலைவியைப் பிரிந்து சென்று பொருள்தரும் எண்ணத்தில்,இறால்மீனோடு கரைவந்து மகளிர் விட்டுச்

என்றவழி 'அழிதக வுடைமதி வாழிய நெஞ்சே' என்றதனான் நிலையின்றாகுதியென நெஞ்சினை உறுப்புடையது போலக் கழறி நன்குரைத்தவாறும் ஓதத்தையும் நெஞ்சையும் உயர்திணை யாக்கி உவமவாயிற் படுத்தவாறுங் காண்க.

"கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுத
லந்தீங் கிளவிக் குறுமகண்
மென்றோள் பெறனசைஇச் சென்றவென் னெஞ்சே"[1]

(அகம். 9)

இஃது, உறுப்புடையது போல் உவந்துரைத்தது.

'அன்றவ ணொழிந்தன்று மிலையே' என்னும் அகப் பாட்டினுள் (19),

"வருந்தினை வாழியென் னெஞ்சே பருந்திருந்
துயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை
யுருடுடி மகுளியிற் பொருடெரிந் திசைக்குங்
கடுங்குரற் குடிஞைய நெடும்பெருங் குன்ற
மெம்மொ டிறத்தலுஞ் செல்லாய் பின்னின்
றொழியச் சூழ்ந்தனை யாயிற் றவிராது
செல்லினிச் சிறக்கநின் னுள்ளம்."[2]

(அகம் 19)

என அறிவுடையதுபோல் அழுகை பற்றிக் கூறிற்று.

---

சென்ற மாலையொடு திரும்பிச் செல்லும் அலை வருவதும் போவதுமாக இருநிலையில் இருப்பதுபோல நீயும் பிரிவதும் பிரியாமையும் ஆகிய இரண்டில் ஒன்றைக் கொள்ளாமல் இரண்டிலும் தடுமாறுகிறாய் - தலைவன் கூற்று.

1. பொருள்: பக்கம் 12-ல் காண்க.

2. பொருள்: என் நெஞ்சமே! தலைவியைப் பிரிய வருந்தினை. பருந்து தன் துணையை அழைக்கும் யாமரம் உள்ள உச்சியுடையதும் கடியகுரலால் குடிஞை ஒலிக்கக் கூடியதுமாகிய குன்றத்தில் என்னொடு கடந்து செல்வதைச் செய்யாமல் பின் நின்று திரும்பிச் செல்ல நினைத்தாயாயின் செல்வாயாக; நின் உள்ளம் சிறப்பதாக.

''பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே''[1] (குறுந். 19)

என்றது, உணர்வுடையது போல் வெகுளி பற்றிக் கூறிற்று.

''உள்ளம் பிணிக்கொண் டோள்வயி னெஞ்சஞ்
செல்ல றீர்கஞ் செல்வா மெனினுஞ்
செய்வினை முடியா தெவ்வஞ் செய்த
லெய்யா மையோ டிளிவுதலைத் தருமென
வுறுதி தூக்காத் தூங்கி யறிவே
சிறிதுநனி விரைய லென்னு மாயிடை
யொளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்லென் வருந்திய வுடம்பே''[2] (நற். 284)

இஃது உணர்வுடையதுபோல இளிவரல் பற்றிக் கூறியது.

''ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ
வெம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே''[3]
(குறுந். 63)

---

1. நெஞ்சே! பூ இல்லாத வறியதலை பொலிவிழந்து காணப்படுதல் போல நீயும் பொலிவிழந்து வருந்துவாயாக.

2. பொருள்: என் நெஞ்சமானது நம் உள்ளத்தைப் பிணித்துக் கொண்டவள் தனித்திருந்துபடும் துயரைத் தீர்ப்போம், ஆதலின் இடைவழியிலே மீண்டு சென்று விடுவோம் என்று கூறினாலும் என் அறிவானது மேற்கொண்டவினையை முடியாது கைவிடுதல் அறியாமையோடு இழிவையும் நமக்குத்தரும் என்று கூறி, மேலும் 'நெஞ்சமே! உறுதிப்பாட்டை ஆராய்கையால் சற்று நின்று சில நாளாவது அவசரப்படாதே நில்' என்று கூறும். இவ்விரண்டிலும் சார்ந்து வருந்துகின்ற என் உடம்பானது, இரண்டு களிறுகள் எதிர்எதிராக இருந்து இழுக்கத் தேய்ந்த புரியுடைய பழங்கயிறு தாங்காமல் அறுவது போல அழிவதுதானோ? என்னே கொடுமை-பொருள் வயிற் பிரிந்ததலைவன் இடைச்சுரத்து அழுங்கிக் கூறியது.

3. பொருள்: என் நெஞ்சமே! ஈதலும் துய்த்தலும் பொருள் இல்லார்க்கு இல்லை என்று எண்ணிப் பொருளீட்டும் வினையை மிக நினைகின்றாய். அவ்வினைக்கு நாம் செல்லும் போது அரிவையும் உடன் வருமோ? அன்றி என்னை மட்டும் போகச் செய்வாயோ? எனக்குச் சொல்வாயாக.

இது, மறுத்துரைப்பது போல நெஞ்சினை இளிவரல் பற்றிக் கூறியது.

''பின்னின்று துரக்கும் நெஞ்சம் நின்வாய்
வாய்போற் பொய்ம்மொழி யெவ்வமென் களைமா''[1]
(அகம் 3)

என்பதும் அது.

''விசும்புறநிவந்த'' (அகம். 131) என்பதனுள்,

''வருக வென்னுதி யாயின்
வாரே னெஞ்சம் வாய்க்கநின் வினையே''

என்பது மறுத்துரைப்பது போல் தறுகண்மை பற்றிய பெருமிதங் கூறிற்று. ஏனை அச்சமும் மருட்கையும் பற்றியன தலைவன் கூற்று வந்துழிக் காண்க. இவை நெஞ்சை ஆண்பாலாகக் கூறி யன.

'மன்றுபா டவிந்து' (அகம். 128) என்பதனுள்.

''நெஞ்ச, மென்னொடு நின்னொடுஞ் சூழாது கைம்மிக
இறும்புபட்டிருளிய விட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கானக நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப் புறத்தன்ன கண்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்
பிட்டருங் கண்ண படுகுழி யியவி
னிருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே''[2] (அகம். 128)

என்பது உறுப்புடையது போல் அழுகை பற்றிக் கூறியது.

---

1. பொருள்: என் பின்னே நின்று செலுத்தும் என் நெஞ்சமே! நின்னிடத்து உண்மை போல் தோன்றும் பொய் என் துன்பத்தைக் களையுமோ?

2. பொருள்: தோழி! நெஞ்சமானது என்னோடு நின்னோடும் கேட்டறியாது சிறுகாடாக இருண்ட சிறிய அரிய பக்கமலையில் உள்ள குறுஞ்சுனையிற் பூத்த குவளையைச் சூடிக் காட்டுநாடுடைய தலைவன் ஏறிவரும் யானையின் முதுகுபுறத்துக் கயிற்றுத் தழும்பு போலும் மலைவழியில் மேகம் மழை பொழிதல் நீர் ஒழுக செல்லுதற்கரிய சிறிய இடங்களில் உள்ள படுகுழிகளுள்ள வழியில் மிதிக்குமிடம் பார்த்துத் தலைவனின் தளரும் அடியைத் தாங்கும் பொருட்டு இன்று சென்று விட்டது. — தலைவி கூற்று.

குறுநிலைக் குரவின்' (நற். 56) என்பது உறுப்புடையது முணர்வுமுடையது போல இளிவரல் பற்றிக் கூறியது.

"அறியவும் பெற்றாயோ வறியாயோ மடநெஞ்சே",
(கலி. 123)

இஃது உணர்வுடையது போல் நகை பற்றிக் கூறியது.

"கோடெழி லகலல்குற் கொடியன்னார் முலைமூழ்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரினெல்லா
வூடுவே னென்பேன்ம னந்நிலையே யவற்காணிற்
கூடுவே னென்னுமிக் கொள்கையி னெஞ்சே"[1]
(கலி. 67)

இது மறுத்துரைப்பது போல் உவகை பற்றிக் கூறியது.

"அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது" (குறள் 1291)

இஃது, இளிவரல் பற்றி மறுத்துக் கூறியது. ஏனைய வந்துழிக் காண்க. இவை நெஞ்சினைத் தலைவி பெண்பாலாகக் கூறியன. இவை துன்பமும், இன்பமும் நிலைக்களமாகக் காமங்கண்ணிய மரபிடை தெரிய வந்தன.

"கானலுங் கழறாது கழியுங் கூறாது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையு மொழியா
தொருநீ யல்லது பிறிதியாது மிலனே
யிருங்கழி மலர்ந்த கண்போ னெய்தற்
கமழிதழ் நாற்ற மமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து
பறைஇய தளருந் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமா ரலவ"[2]
(அகம். 170)

---

1. பொருள்: தோழீ! உயர்ந்த அழகிய அல்குலுடைய கொடி போலும் பரத்தையர் தம் முலையிடைத் தோய்ந்து அதனால் பக்கம் எங்கும் சிதைந்த சந்தனத்தையுடைய தலைவன் பண்பு இல்லாமல் இங்கு வந்தால் ஊடுவேன் என்பேன்; அதற்கு மாறாகக் கொள்கையற்ற என் நெஞ்சம் அவனைக் கண்டால் அப்பொழுதே அவனைக் கூடுவேன் என்னும்.

2. பொருள்; பக்கம் 15-ல் காண்க

இது, சொல்லா மரபின சொல்லுவனவாக அழுகை பற்றிக் கூறியது. இவை உயர்திணையுமாயின.

''கொங்குதேர் வாழ்க்கை...'' (குறுந். 2)

என்பது உவகைப் பற்றிக் கூறியது.

''போர்தொலைந் திருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போ
லாரஞ ருற்றாரை யணங்கிய வந்தாயோ''[1]
(கலி. 120)

இது, செய்கையில்லாத மாலைப் பொழுதினைச் செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கி உவமவாயிற்படுத்தது.

'தொல்லூழி தடுமாறி' (கலி. 129) என்பதனுள்,

''பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கட
றூவத் துறந்தனன் றுறைவனென் றவன்றிற
நோய்தெற வுழைப்பார்க ணிமிழ்தியோ வெம்போலக்
காதல்செய் தகன்றாரை வுடையையோ நீ;
மன்றிரும் பெண்ணை மடல்சே ரன்றி
னன்றறை கொன்றன ரவரெனக் கலங்கிய
வென்றுய ரறிந்தனை நரறியோ வெம்போல
வின்றுணைப் பிரிந்தாரை யுடையையோ நீ;
பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழல்
இனிவரி னுயருமற் பழியெனக் கலங்கிய
தனியவ ரிடும்பைகண் டனைதியோ வெம்போல
வினியசெய் தகன்றாரை யுடையையோ நீ''[2]

---

1. பொருள்: போரில் தோற்றவரை அவர் பெருமைகளை யிகழ்ந்து சிரிப்பாரைப் போல ஏ மாலைக் காலமே! தலைவர் பிரிவால் அரிய துயருற்றவர்களைவருத்துவதற் காக நீ வந்தாயோ?-தலைவி கூற்று.

2. பொருள்: 'பாய்திரை ...யுடையையோ'-பக்கம் 15-ல் காண்க.

ஊர்ப் பொது மன்றில் உள்ள பனைமரத்தின் மடலில் வாழும் அன்றிலே! தலைவர் செய்த நல்லனவற்றை யான் எடுத்துக் கூறுதலைக் கொன்றார் என யான் கொண்டதுயரை அறிந்தாய் போல் கூவுகின்றாயோ அல்லது என்னைப் போலவே இனிய துணைவரை நீயும் பிரிந்தாயோ?

வருத்தத்தையுடைய புல்லாங்குழலே! பிரிந்தவர் இப் போதுவரின் அவர் மீதுள்ள பழி நீங்கும் என்று எண்ணி

எனக் கடலும் அன்றிலும் குழலும் உற்ற பிணியைத் தம் பிணிக்கு வருந்தினவாகச் சேர்த்தி உயர்திணையாக்கி உவம வாயிற்படுத்தவாறு காண்க.

'ஒன்றிடத்து' என்றார் வேண்டியவாறு உவமங்கோடலாகாதென்றற்கு; 'பகுதியைப் பால்செழு கிளவி' (199) என மேலும் ஆளுப. 'காமங் கண்ணிய' என்றதனாற் கைக்கிளையும் பெருந்திணையுமாகிய காமத்திற்கு வருவனவுங்கொள்க

''சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையு
நிற்றதுகொ னேர்மருங்கிற் கையூன்றி - முன்றின்
முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்
குழந்துபின் சென்றவென் னெஞ்சு''[1] (முத்தொள்.)

இது, கைக்கிளைக்கண் உறுப்புடையது போல் அவலம் பற்றி நெஞ்சினைக் கூறியது.

''ஓங்கெழிற் கொம்பர் நடுவிதெனப் புல்லுங்
சாந்தட் கிவருங் கருவிளம் பூக்கொள்ளு
மாந்தளிர்க் கையிற் றடவரு மாமயில்
பூம்பொழி னோக்கிப் புகுவனபின் செல்லுந்
தோளெனச் சென்று துளங்கொளி வேய்தொடு
நீள்கதுப் பிஃதென நீரற லுட்புகும்
வாளொளி முல்லை முகையை முறுவலென்
றாள்வலி மிக்கா னஃதறி கல்லான்''[2]

என்றாற் போல உயர்திணையாக உவமவாயிற்படுத்த பெருந்திணையாய் வருவனவுங் காண்க. இஃது அவலம்.

**சிவ**

இச் சூத்திரம் தலைவனும் தலைவியும் காமம் மிக்க வழித் தம் நெஞ்சையும் புள், விலங்கு முதலிய அஃறிணைப் பொருள்

---

பனியுடன் இருள் சூழ்ந்து வர அதனால் வருந்திய தனித்துள்ள மகளிர் துன்பங் கண்டு வருந்துகின்றனையோ அல்லது முன் நல்லன செய்து பின் பிரிந்து சென்ற காதலரை எப்போல நீயும் உடையையோ?

1. பொருள்: பக்கம் 13-ல் காண்க.

2. பொருள்: பக்கம் 16-ல் காண்க.

களையும் படர்க்கையாகவும் முன்னிலையாகவும் வேறுபடுத்திக் கூற்று நிகழ்த்துமாறு கூறுகின்றது.

(இ-ள்) துன்பமும் இன்பமுமாகிய இருவகை நிலைக்களத் தினையுடைய காமம் பற்றிய வரன்முறையான நிகழ்ச்சியில் ஒருவரையொருவர் காணாதபடி அல்லது அருகிருந்தும் முயக்கம் பெறாதப்டி இடையீடு வருதலால் அப்போது நகை முதலிய எட்டு மெய்ப்பாடுகளையும் வெளிப்படுத்தக் கூடிய உறுப்புகளை யுடையது போலவும், உணர்வுடையது போலவும் தம்மை மறுத் துரைப்பது போலவும் இப்படித் தம் நெஞ்சொடு சேர்த்துக் கூற்று நிகழ்த்துதலும், சொல்லாடுதல் இல்லாத புள் விலங்கு முதலிய வற்றொடு அவை சொல் நிகழ்த்துவன போலவும் தொழில் செய் யாத அவற்றைச் செய்வன போலவும் அடக்கிக் கூற்று நிகழ்த்துத லும், அவரவரும் பிற பொருள்கள் உறும் நோயைத் தாம் உற்றதுபோல் சேர்த்துக் கூற்று நிகழ்த்துதலும் உவம இலக்கணம் பொருந்துமிடத்துத் தம் மன அறிவையும் ஐம்புலன்களையும் மேற்சொல்லிய நெஞ்சுக்கும் புள் விலங்கு முதலியவற்றுக்கும் உரியவாக வேறுபடுத்தி நிறுத்தி உவமப் பொருளும் உவமிக்கப் படும் பொருளுமாகிய இரு பெயர்களும் உவமை நிலைக்கள மாகிய வினை, பயன், பண்பு என்னும் மூன்றற்கும் உரியவாக உவமைப்படுத்திக் கூற்று நிகழ்த்தலும் ஆகியவை தலைவன் தலைவியராகிய இருவர்க்கும் உரிய அகப்பொருள் இலக்கணத் துப் பகுதியைச் சாரும் கூற்றுகளாம் என்றவாறு.

துன்பம் நிலைக்களனாகவுள்ள காமமாவது களவிலும் கற்பிலும் பிரிவுக்காலத் துளதாவது. இன்பம் நிலைக்களமாக வுள்ள காமமாவது களவிலும் கற்பிலும் அருகிருக்கவும் முயக்கம் காரணமாகவும் முயக்கம் வேண்டிய போது நீட்டிக்கும் காரண மாகவும் வருவது.

''கொங்குதேர் வாழ்க்கை'' என்னும் குறுந்தொகைப் பாட்டில் சொல்லா மரபினதாகிய வண்டைநோக்கி அரிவை கூந்தலின் நீயறியும் பூக்களுள் நறியவும் உளவோ எனத் தலை வியைக்கூடிய பின் புணர்ச்சியின் மகிழ்தலாகத் தலைவன் கூறியது காண்க.

அதுவே இயற்கைப் புணர்ச்சிக்குமுன் முயக்கம் வேண்டி வண்டோச்சி மருங்கணைதல் நோக்கொடு சென்று வண்டினைப் பார்த்துத் தன்காமம் காரணமாக இவள் கூந்தலின் நீ அறியும்

பூக்களுள் நறியவும் உள்வோ எனத் தலைவன் கூறியதாகக் கொள்ளலும் ஆம். இதுநேரம் காரணமாகக் கூறியதாம்.

'காமம் கண்ணிய மரபிடை தெரிய' என்பதில் இடை என்பதை இடையீடு என்னும் பொருளதாக இளம்பூரணர் கொள்ள, நச்சினார்க்கினியர் மரபின்கண் என ஏழன் உருபுப் பொருளதாகக் கொண்டார். நெஞ்சொடு புணர்த்தல் முதலியன பெரும்பாலும் புணர்ச்சியிடையீடு காரணமாகவே நிகழ்வன ஆதலின் இளம்பூரணர் கூற்று சிறக்கும்.

''காமம் கண்ணிய என்றதனால் அகப்பொருளாகிய காமமும் புறப்பொருளாகிய காமமும் கொள்ளப்படும்'' என்றார் இளம் பூரணர். புறப்பொருட்காமம் பற்றி நெஞ்சொடு புணர்த்தல் முதலியவற்றுக்கு அவர் உதாரணம் காட்டாமையின் புறப் பொருட்காமம் பற்றி வருதல் அத்துணைச் சிறப்பினதன்று என்பது அவர் கருத்து போலும்.

'இரு பெயர் மூன்றும் உரியவாக' என்பதற்கு இளம் பூரணர், ''உவமப் பெயரும் உவமிக்கப்படும் பெயரும் தொழில் பண்பு பயன் என்னும் மூன்றற்கும் உரியவாக'' எனப் பொருள் கூற, நச்சினார்க்கினியர், ''அஃறிணை யிருபாற்கும் உயர்திணை மூன்று பொருளும் உரியவாக'' எனப்பொருள் கூறினார்.

'உவமவாயிற் படுத்தல்' எனப் பின்னர் வருவதற்கு ஏற்ப இளம்பூரணர் கூறியதே பொருந்தும். அஃறிணை இருபாலும் உயர்திணை முப்பாலுக்கும் உரியவாமாற்றுக்கு நச்சினார்க் கினியர் தரும் விளக்கம் பொருந்துமேனும் தலைவி தன் நெஞ்சு பற்றிக் கூறும்போது அதனைப் பெண்பாலாக்குவதும் தலைவன் தன் நெஞ்சு பற்றிக் கூறும்போது அதனை ஆண்பாலாக்குவதும் இயல்பே. ஆதலின் இளம்பூரணர் உரையே சிறக்கும் என்னலாம்.

'பாற்கிளவி' என்பதற்கு 'ஒரு கூற்றுக் கிளவி' என்பர் இளம்பூரணர். அதற்கு ''உணர்ச்சி வயப்பட்டு உள்ளக் கலக்க முற்ற ஒரு திறத்தார்க்கே யுரியதாய்ப் பயின்று வரும் கூற்று வகை'' என விளக்கம் தருவர் வெள்ளைவாரணனார். கலக்க முற்ற ஒரு திறத்தார் என்பது யாரைக்குறிக்கும் என்பது புலப்பட வில்லை. இருவருமே அவ்வப் போது கலக்கமுற்றுக் கூறிய செய்யுட்கள் உதாரணங்களாகக் காட்டப்பட்டுள்ளன. ஆதலின் நெஞ்சொடு புணர்த்தல் முதலியன வழுவாயினும் இலக்கணப் புக்கச் சொற்களாம். ஆதலின், நச்சினார்க்கினியர் 'இலக் கணத்திற் பக்கச் சொல்' எனக் கூறியவுரையே சிறக்கும்.

மேலும் ''பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே'' **(5)** எனும் சூத்திரத்து இதுபற்றிக் கூறுதும்.

## கனவு

**195. கனவும் உரித்தால் அவ்விடத் தான. (3)**

**ஆ.மொ.**

**The dream also is appropriate for such description**

**பி.இ.நூ.**

இ.வி. 571. தொல்காப்பியச் சூத்திரமே.

**இளம்**

என்-எனின் இதுவுங் காமம் இடையீடுபட்டுழி வருவதோர் பொருள் வேறுபாடு உணர்த்திற்று.

(இ-ள்) மேற்கூறியவாற்றால் காமம் இடையீடுபட்டுழிக் கனாக்காண்டலும் உரித்தென்றவாறு.

இது தலைமகற்குந் தலைமகட்கும் உரித்து.

'இன்னகை இனைய மாகவும் எம்வயின்
ஊடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவுநுதல் நீவி
நறுங்கதுப் புளரிய நன்ன ரமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவின்
ஏற்றேக் கற்ற உலமரல்
போற்றா யாகலிற் புலத்தியால் எம்மே''[1] **(அகம்.39)**

என்றது கனாக்கண்டு கூறியது.

---

1. பொருள்: இனிய நகையாய்! நின் வருந்திய நிலையைக் கனவிற் கண்டு யான் வருந்தும் நிலையில் இருக்கவும் என்னிடத்து ஊடல் எப்படி வந்தது என்று சொல்லி புருவ நுதலைத் துடைத்து கருங்கூந்தலைக் கோதிய சமயத்தில் வெறுங்கையைக் காட்டிய அப்பொய்க் கனவில் நீங்கித் துயில் எழுந்து நின்னைக் காணாது ஏங்கிய வருத்தத்தை நீ யறியாய் ஆதலினால் என்னைப் புலந்து நின்றாய்-தலைவன் கூற்று.

"கேட்டிசின் வாழி தோழி அல்கற்
பொய்வ லாளன் மெய்யுறல் மரீஇ
வாய்த்தரு பொய்க்கனா மருட்ட ஏற்றெழுந்து
அமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற அளியன் யானே"[1] (குறுந்.30)

இது, தலைவி கனாக்கண்டு கூறியது.

நச்.

இது மேற்கூறிய நிலைமைகள் கனவின் கண்ணும் நிகழு மெனப் பகுதிக்கிளவி கூறுகின்றது.

**(இ-ள்) அவ்விடத்தான** - முன்னர் வழுவமைத்த நிலைமை யின் கண்ணே வந்தன; **கனவும் உரித்தால்** - கனவும் உரித்தா யிருந்தது முந்து நூற்கண் என்றவாறு.

எனவே யானுங் கூறுவலென்றார்.

"அலந்தாங் கமையலே னென்றானைப் பற்றியென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும்"

"முலையிடைத் துயிலு மறந்தீத் தோயென
நிலையழி நெஞ்சத்தே னழுவேன் போலவும்
வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும்"[2]
(கலி. 128)

---

1. பொருள்: தோழி! கேட்பாயாக. நேற்றிரவில் பொய் வல்ல தலைவன் என்மெய்யோடு பொருந்த அணைத்த உண்மைபோலும் கனவானது மருட்ட துயில் எழுந்து தலைவன் இருப்பதாக எண்ணிப் படுக்கையைத் தடவி னேன். வண்டுகள் மொய்த்து உழக்கியதால் மெலிந்த மலர்போல் யான்மெலிந்து தனித்தவளானேன்; யான் மிக இரங்கத்தக்கள் காண்.
2. பொருள்: துன்புற்று நின்னைப் பிரிந்து அங்கே தங்கி யிரேன் என்ற தலைவனைப் பற்றி என் அழகைத் தந்து செல் என வளைப்பேன் போலவும் உடனே அவன் கலந்து என் அழகு யான்பெற முயங்கி தனிமையாதலை விடுக என்று தலையளி செய்வானானான் போலவும், என்மார்பிடைத் துயிலுதலை மறந்தாய் போலும்என

இவற்றுள் தன்னெஞ்சினை[1] உறுப்பும் உணர்வும் மறுத் துரைத்தலுமுடையதாகக் கூறியவாறும், அங்கு எதிர்பெய்து கொண்ட தலைவன் உருவும் உறுப்பும் உணர்வும் மறுத்துரைத் தலுமுடையதாகச் செய்யா மரபின செய்ததாகக் கூறியவாறும், அவை உயர்திணையாகக் கூறியவாறும் பிறவு முணர்க.

''இன்னகை யினைய மாகவு மெம்வயி
னூடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவுநுத னீவி
நறுங்கதுப் புளரிய நன்ன ரமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவின்''[2] (அகம்.39)

எனவருவனவுங் கொள்க.

**சிவ**

இச் சூத்திரம் காமம் இடையீடு பட்டவழித் தலைவனும் தலைவியும் கனாக்காண்டலும் உண்டு என்றுரைப்பதாக இளம் பூரணர் கருதினார். நச்சினார்க்கினியர் காமம் மிக்க விடத்து இருவரும், முற்சூத்திரத்தில் கூறியவாறு தாம் நெஞ்சொடு புணர்த்துக் கூறுதல் மட்டுமன்றித் தம் நெஞ்சு உறுப்புடையது போலவும் உணர்வுடையது போலவும் மறுத்துரைப்பதுபோலவும் கனாக்காண்டலும் உண்டு என்றுரைப்பதாகக் கருதி உரையும் உதாரணமும் கூறினார். அவரே இளம்பூரணர் கருத்தையும் ஏற்றார். அதாவது நெஞ்சுபற்றியன்றிப் பிறவாறும் கனாக் காண்டல் உண்டு என்பதை ஏற்றார். அதனால் அவர் ''இன்னகையினைய மாகவும்... கனவின்'' என வருவனவும் கொள்க'' என்றெழுதினார். பொதுவாகக் கனாக்காண்டலும் உரித்து என்கின்றது இச்சூத்திரம் என்றலே அமையும்.

---

என் உறுதியழிந்த நெஞ்சத்தேனாய் அழுவேன் போல வும் உடனே அவன் 'வலைப்பட்ட மான்போல் பெரிதும் வருந்தினாய்; அது தவிர்க' என்று சொல்லி என் காலடி யில் தலை வணங்கிப் பணிவான் போலவும் (கனாக் கண்டேன்).

1. மேற்பாடலில் நெஞ்சினைப் பற்றி இங்குக் கூறியவாறு காணப்படாமையின் உதாரணம் பொருந்துமாறில்லை.
2. பொருள்: பக்கம் 26-ல் காண்க.

## தாயின் கனவு

### 196. தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின் (4)

**ஆ. மொ.**

**If elopement is described, it (dream) is appropriate on the part of the foster mother also.**

**இளம்**

என்-எனின், நற்றாய்க் குரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட கனவு தாய்க்கும் உரித்து' உடன்போக்குக் கிளக்கப்பட்டுழி என்றவாறு.

உதாரணம்

''கண்படை பெறேன் கனவ'' (அகம். 55)

எனவரும். வேறும் வந்தவழிக் காண்க.

**நச்**

இது முற்கூறிய கனவு களவின்கட் செவிலிக்கு முரித்தென வழுவமைக்கின்றது.

(இ-ள்) உடன்போக்குக் கிளப்பின்-உடன் போக்கின்கட் கூறின்; தாய்க்கும் உரித்தால்-அக்கனவு செவிலிக்கும் உரித்தா யிருந்தது முந்து நூற்கண், என்றவாறு.

தோழி, உடன்பட்டுப் போக்குதலானும் நற்றாய் ''நற்பாற் பட்டனள்''[1] என்று வருதலானுந் ''தாயெனப் படுவோள் செவிலி யாகும்'' (124) என்பதனானுஞ் செவிலியைத் தாயென்றார். தலைவி போகாமற் காத்தற்குரியளாதலானும் அவளை என்றும் பிரியாத பயிற்சியானுஞ் செவிலிக்குக் கனவு உரித்தாயிற்று.

'காய்ந்து செலற் கனலி' (அகம். 55) என்பதனுட்

''கண்படை பெறேன் கனவ''

என்றவாறு காண்க.

---

1. நற்பால் பட்டனள் - நல்ல பகுதியிற் பொருந்தினாள் அதாவது கற்பு வழிப்பட்டாள்.

**சிவ**

இச் சூத்திரத்தில் 'தாய்' என்பது நற்றாயைக் குறிப்பதாக இளம்பூரணரும், செவிலித் தாயைக் குறிப்பதாக நச்சினார்க்கினியரும் கொண்டனர்.

உடன்போக்கு நிகழ்ச்சியில் தலைவியைப் பற்றிக் கனவு காண வேண்டியவர் தோழி, நற்றாய், செவிலித்தாய் ஆகிய மூவர். தோழியானவள் தான் உடன்பட்டுத் தலைவன் தலைவியரை உடன்போகச் செய்தவளாதலின் அதாவது தெளிந்த மனதுடையவளாதலின் வருத்தமிகுதியால் கனவு காண்டற்கில்லை. நற்றாய் உடன்போய மகளைப் பற்றி அவள் தான் விரும்பிய ஒருவனுடன் போய நிலையில் கற்பு வழிப்பட்டாள் எனத் தெளிவு கொண்டு மகளைத் தேடுவதை விட்டு மனைக்கண் இருப்பவள். ஆதலின் அவளும் கனவு காண்டற்கில்லை. செவிலியானவள் தலைவியைக் காத்தற்குரியவள்; உடன்போக்கால் மகளைக் காத்தல் தொழிலில் தவறினாள் ஆவாள். அத்தவறை எண்ணி வருந்தியும், நற்றாயினும் தானே தலைவியிடம் அதிகம் பழகியவள்-வளர்த்தவள் ஆதலின் அவள் பிரிவு இவளுக்கே பெரிதும் வருத்தத்தைத் தருவது ஆதலின் பிரிவு எண்ணி வருந்தியும் துன்புறுவள். அதனால் செவிலிக்கே கனவுகாண்டல் உண்டு. இவ்வாறு காரணம் காட்டித் தாயெனப்படுவாள் இச் சூத்திரத்தில் செவிலியாவாள் என்றார், நச்சினார்க்கினியர்.

## நால்வர் கிளவி

**197* பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே**
**நட்பின் நடக்கை யாங்கலங் கடையே (5)**

**ஆ. மொ.**

Gender-denoting expressions belong to the four when the existence of friendship is not found, (the above expressions occur).

**இளம்**

என்-எனின் எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுதனுதலிற்று

---

* இவ்விரண்டடிகளையும் தனித் தனிச் சூத்திரங்களாகக் கொள்வர் நச்சினார்க்கினியர்.

(இ-ள்) பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்து என்பது- பான்மை கெழுமப்பட்ட கிளவி பெண்பாலா ராகிய நால்வர்க்கும் உரித்தென்றவாறு.

நால்வராவார்-தலைவி, தோழி, நற்றாய், செவிலி. அஃதேல் தலைமகளை யொழிய மூவர் என்று அமையாதோ எனின், மேல் தலைமகட்கும் உரித்தென்றார். அவரொடு கூட நால்வர் என வகையறுத்தல் என்பது.

நட்பி னடக்கை யாங்கலங் கடையே என்பது-நட்பின் வழங்கும் வழக்கல்லாதவிடத்து என்றவாறு

அஃதாவது, தலைவியோடு தோழி யொழுகும் ஒழுக்கம் அவ் வழியல்லாதவிடத் தென்றவாறு. அவண்மாட்டு நிகழ்வது தலைவன் தோழிக்குணர்த்தாது பிரிந்தவழி என்று கொள்ளப்படும். பாற்கிளவி என்பது பயிலாது வரும் ஒரு கூற்றுச் சொல் எனப்பட்டது.[1] அதனைக் கெழுமிய சொல் பால்கெழு கிளவியாயிற்று. ஆண்டு நற்றாய் கூறியதற்குச் செய்யுள்:

"கருமணற் கிடந்த பாவைஎன்
அருமக ளேயென முயங்கினள் அழுமே"[2]

(அகம். 195)

செவிலி கூறியதற்குச் செய்யுள்:

"தான்தாயாக் கோங்கம் தளர்ந்து முலைகொடுப்ப
ஈன்றாய்நீ பாவை இருங்குரவே - ஈன்றாய்
மொழிகாட்டா யாயினும் முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டாய் ஈதென்று வந்து"[3]

(திணை: நூற். 95)

தோழி கூறியதற்குச் செய்யுள் வந்தவழிக் காண்க.

---

1. பயிலாது வரும் ஒரு கூற்றுச் சொல்-இலக்கணம் உள்ளதாக அடிக்கடிப் பயிலப்படாது வரும் ஒருவாறு இலக்கணம் உடையதாகக் கொள்ளப்படும் சொல்.

2. பொருள்: கருமணலிற் கிடந்த பாவையைப் பார்த்து என் அரிய மகளே என்று சொல்லித் தழுவி அழுவாள் என் மகள்.

3. கோங்கின் அரும்பை முலையாகவும் குரவை மலரைப் பாவையாகவும் கொண்டு கூறப்பட்டது. குராமரத்தின் மலரில் கோங்க மரத்தின் அரும்பு அமைய இரண்டு மரங்களும் நெருங்கியிருந்தன.அதுகண்டு செவிலிகூறியது இது. "இப்பாலை வழியில் கோங்க மரம் தான் செவிலித்

நச்

இஃது எய்தாத தெய்துவித்து வழுவமைக்கின்றது.

(இ-ள்.) பால்கெழுகிளவி-இலக்கணத்தில் பக்கச் சொல்; நால்வர்க்கும் உரித்து-தோழியுஞ் செவிலியும் நற்றாயும் பாங்கனுமென்னும் நால்வர்க்கும் உரித்தாம் என்றவாறு.

மேல் 'இருவர்க்கு முரிய பாற்கிளவி' (196) என்றலின் தலைவனையுந் தலைவியையும் ஆண்டேட் கூறலின் ஈண்டு இந்நால் வருமென்றே கொள்க.

''தருமணற் கிடந்த பாவையென்
னருமக ளேயென முயங்கின ளழுமே''[1]

(அகம். 165)

இது, நற்றாய் மணற்பாவையைப் பெண்பாலாகக் கூறித் தழீஇக்கொண்டழுதலிற் பால்கெழுகிளவியாயிற்று.

''தான்றாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
வீன்றாய்நீ பாவை யிருங்குரவே—யீன்றாள்
மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டா யீதென்று வந்து''[2]

(திணை. நூற். 65)

என்பது செவிலி குரவை வழிகாட்டடென்றலிற் பால்கெழுகிளவி யாயிற்று. ஏனை யிரண்டும் மேல்விலக்குப.

இஃது, இறந்தது காத்தது.

(இ-ள்.) ஆங்கு-அந்நால்வரிடத்து; நட்பின் நடக்கை அலங்கடை-நட்பின் கண்ணே ஒழுகுதலல்லாத அவ்வீரிடத்தும் பால்கெழுகிளவி உரித்து என்றவாறு.

எனவே, நட்புச்செய்தொழுகுந் தோழிக்கும் பாங்கனுக்கும் 'பால்கெழுகிளவி' (199) இன்றென்றாரெனக் கொள்க.

---

தாயாக இருந்து அரும்பாகிய முலையை உண்ணத் தரும்படி மலராகிய பாவையை ஈன்ற குராமரமே என்னால் பெறப்பட்ட மகளின் சொல்லை நீ எனக்குச் சொல்லிக் காட்டாயாயினும் அவள் சென்ற வழியையாவது இது தான் என்று எனக்குக் காட்டுவாயாக.''

1, 2 பொருள்: பக்கம் 31-ல் காண்க.

**சிவ**

இச்சூத்திரம் 'பால்கெழு கிளவி' கூறுதற்குரியோர் யார் என்பது கூறுகின்றது. அவர் நால்வர் ஆவர்.

பால் என்பது 'பக்கம்' என்னும் பொருளது. அது 'ஒரு பக்கம்' என்னும் பொருளில் வந்தது. தனக்கு மாறுபட்ட கருத்துடையான் ஒருவன் கூற்றை 'நீ கூறுவதும் ஒரு பக்கத்தில் சரிதான்' என்று ஒருவன் கூறும்போது 'ஒரு பக்கம்' என்பது 'பொருந்தாததாயினும் ஒருவாறு ஏற்புடையது' என்ற கருத்தைத் தரும். அதுபோல இங்குப் 'பால்கெழு கிளவி' என்பது 'ஒருவாறு இலக்கணத்தின் பக்கம் பொருந்தும் கூற்று' என்னும் பொருளில் வந்தது. 'நோயும் இன்பமும்' (2) என்னும் சூத்திரத்துக் கூறிய பாற்கிளவி என்பதும் அதுவே. அச்சூத்திரத்திற் கூறப்பட்ட நான்கு வகையான பாற்கிளவிகளுள் சொல்லுதலும் செய்தலும் இல்லாத புள், விலங்கு முதலியவற்றைச் சொல்வனவாகவும் செய்வனவாகவும் கூறும் பாற்கிளவி பற்றியது இச்சூத்திரம் என்பதும் இளம்பூரணர் நச்சினார்க்கினியர் தரும் உதாரணங்களால் அறியலாம்.

அத்தகைய 'பால்கெழுகிளவி' கூறுவதற்குரியார் நோயும் இன்பமும் (2) என்னும் சூத்திரத்தால் தலைவனும் தலைவியும் ஆவர் என்பதும் இச்சூத்திரத்தால் நால்வர் ஆவர் என்பதும் பெறப்படும்.

நால்வராவார் தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய் என்பவர் என்றார் இளம்பூரணர். அவர் தலைவி நோயும் இன்பமும் எனும் சூத்திரத்துக் கூறப்பட்டாள். ஆதலின் இங்கு நால்வர் என்றது மற்றை மூவரையே கூற வேண்டும். ஆயினும் அவளையும் சேர்த்தே நால்வர் எனக் கூறப்பட்டது என்றார்.

நச்சினார்க்கினியர், நால்வராவார் தோழியும் செவிலியும் நற்றாயும் பாங்கனும் 'நட்பின் நடக்கை ஆங்கலங்கடையே' என்பதால் விலக்கப்படுவர் என்று கூறிப் 'பால்கெழுகிளவி' செவிலிக்கும் நற்றாய்க்கும் உரியது என்றார்.

தோழி பால்கெழுகிளவி கூறுவது எப்போது எனின், 'தலைவன் தோழிக்கு உணர்த்தாது பிரிந்த வழி' என்றார். அக்கிளவிக்கு உதாரணம் வந்த வழிக் காண்க என்று போனார்.

உரையாசிரியர் இருவரின் உரைகளைக் கொண்டு பால்கெழு கிளவி கூறுதற்குரியார் தலைவன், தலைவி, தோழி, நற்றாய்,

செவிலி, பாங்கன் என்னும் அறுவராவார் என்பது பெறப்படும். அதற்கேற்ப இச்சூத்திரப் பொருள்,

"நட்பொடு ஒழுகுதலுடையாராகிய தோழியும் பாங்கனும் அல்லாவிடத்துப் பால்கெழுகிளவி நால்வர்க்கும் உரியதாகும்"*.

என்பதாகும்.

ஒரு சூத்திரத்தை இரு சூத்திரங்களாகப் பிரித்ததும் அதற்கேற்ப உரை கூறியதும் அத்துணைச் சிறப்புடையனவல்ல.

## நால்வர்க்குரிமை

**198. உயிரும் நாணும் மடனும் என்றிவை**
**செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய. (6)**

**ஆ. மொ.**

Life modesty and feigned ignorance belong to the faultless honoured four.

### இளம்

என்-எனின் மேற்சொல்லப்பட்ட நால்வர்க்கு முரியதோர் பொருண்மை யுணர்த்திற்று.

(இ-ள்)உயிரும் நாணும் மடப்பமும் என்று சொல்லப்பட்டவை குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய தலைமகட்கும் தோழிக்கும் நற்றாய்க்கும் செவிலிக்கும் உரிய என்றவாறு.

செயிர்தீர் சிறப்பின் என்றமையான் ஏனையோர் போலாது இவர் நால்வரும் ஒரு நீர்மையர் என்று கொள்க. இதனாற் சொல்லியது என்னையெனின் இந்நால்வரும் ஆக்கமுங்கேடும் ஒருவர்மாட்டு வந்துழித் தமக்குற்றதுபோல் நினைப்பாராதலான் ஒருவரையொருவர் இன்றியமையாது ஓருயிர் போல்வர் எனவும், நாணமும் மடனும் நால்வர்க்கும் ஒக்குமாகலான் அவலமாகிய வழியும் வருத்தம் ஒக்கும் எனவும் கூறியவாறு. அதற்குச் செய்யுள்:-

---

* 'எழுத்தெனப்படுவ, அகரமுதல் னகர இறுவாய், முப்பஃதென்ப, சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே' என்பதற்கு உரை கூறியாங்கு இங்கு உரை கூறப்பட்டது.

"இவளே நின்னல திலளே யாயுங்
குவளை உண்கண் இவளல திலளே
யானும் ஆயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே"[1]

எனவரும்.

**நச்**

இது, தலைவிக்குத் தலைவனாற் பிறப்பதோர் வேறுபாடு தோன்றியவழி அதனைப் பரிகரித்தற் குரியோர் இவரென வழுவமைக்கின்றது.

(இ-ள்) உயிரும் நாணும் மடனும் என்றிவை-உயிரும் நாணும் மடனுமென்று கூறப்பட்ட இவை மூன்றும், செயிர் தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய-குற்றந் தீர்ந்த தலைமையினையுடைய நற்றாய்க்குஞ் செவிலிக்குந் தோழிக்குந் தலைவற்குமுரிய என்றவாறு.

உம்மை ஐயமாதலின்[2] தலைவனை யொழிந்த மூவர்க்குமுரிய என்றாராயிற்று என்றது தலைவன் இவற்றைக் களவினுங் கற்பிலுங் காத்தலும் வரைவிடை வைத்துப் பிரிந்தும் பரத்தையிற் பிரிந்துங் காவாமையுடையனென்பது கூறிற்று. அவை எழுவகையால் (207) தோழி அவற்றைக் காத்து அறத்தொடு நிற்ப, அதனைச் செவிலி உட்கொண்டு அவற்றைக் காத்து நற்றாய்க் கறத்தொடு நிற்ப, அவளும் அவற்றை உட்கொண்டு காத்தற்கு அறத்தொடு நிற்றலும் உடன் போயது அறனென நற்றாய் கோடலுஞ் செவிலி பிறரை வரைகின்றானோ வெனத் தோழியை வினவலும் பிறவுமாம். உதாரணம் முன்னர்க் காட்டியவற்றுட் காண்க.

இனி உம்மையை முற்றும்மை யாக்கி உயிர் முதலிய தலைவியுறுப்பினை உறுப்புடைத்தாகவும் மறுத்துரைப்பதாகவுங் கூறப்பெறாதென்றார்.

---

1. பொருள்: மாமலை நாடனே! இத்தலைவி உன்னையின்றி உயிர் வாழாள்; இவள் தாயும் இவளை யின்றி உயிர்வாழாள்; யானும் அப்படியே; அதனால் எம்மை மறவாதே-தோழி கூற்று.

2. ஐயவும்மை கொடுத்துத் தலைவனை நீக்க வேண்டுவதன்று. மூவர்க்கும் என்றே கூறலாம். ஆதலின் ஐயவும்மை என்றல் பொருந்தாது. சிவ. விளக்கம் பார்க்க.

**சிவ**

இச்சூத்திரம் உயிர், நாண், மடன் பற்றி வரும் குறைபாடு களைக் காத்தற்குரியோர் இவர் என்கின்றது.

(இ-ள்) உயிரும் நாணமும் மடனும் என்று சொல்லப்படும் இவைகள் குற்றம் நீங்கிய சிறப்புடைய தலைவி, தோழி, செவிலி நற்றாய் எனும் நால்வர்க்கும் போற்றப்படற் குரியனவாம் என்றவாறு.

இது பெரிதும் களவுக்கும் சிறுபான்மை கற்புக்கும் உரியு தாகும். நால்வராவார் தலைவி, தோழி, செவிலி, நற்றாய்.

தலைவனால் தலைவிக்குக் களவுக் காலத்தில் உயிர்போம் அளவில் துயர் ஏற்படின் அதைக்காக்கவும் நாண்மடன் ஆகியவை நீங்காவாறு காத்தலும், உயிரினும் சிறந்தது நாணம்;அதனினும் கற்புச் சிறந்தது.ஆதலின் கற்பைக் காக்க நாண்மடங்களை நீங்க வேண்டின் நீங்கிக் காத்தலும் நால்வர்க்கும் உரிய செயல்களாம். அதன் காரணமாகவே தலைவி தோழிக்கும் தோழி செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும் நற்றாய் தன்னையர்க்கும் அறத்தொடு நிலை நிகழ்த்துவர் என்க. கற்புக் காலத்தில் பரத்தையர்ப் பிரிவில் தலைவி ஆற்றியிருந்து உயிரைப் போற்றுதலும் தலை வனைத் தேடிப் பரத்தையர் சேரி செல்லாது நாணத்தையும் மடனையும் காத்தலும் நிகழும். தலைவியின் உயிரும் நாணமும் மடனும் தம்முடையனபோல் கொண்டு மற்றை மூவரும் காப்பர் இம்மூவரையல்லாப் பிற பெண்டிராயின் அவற்றைக் காவாமல் அம்பலாகவும் அலராகவும் தூற்றுவர்.

தலைவியின் பொருளல்லா ஒழுக்கத்தை (களவு)ப் பொரு ளாகச் செய்ய இவற்றைக்காத்தலின் இச்சூத்திரமும் வழுவமைப் பாயிற்று.

## உணரும் உறுப்பு

**199.** **வண்ணந் திரிந்து புலம்புங் காலை[1]**
**உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி**
**புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே. (7)**

---

1. புலம்புறு காலை-நச். படம்

ஆ. மொ.

When the lady-love having her colour changed laments, she can describe the limbs in the suitable manner as if they have the capacity of understanding.

இளம்

என்--எனின் தலைமகட் குரியதோர் பொருளுணர்த்திற்று.

(இ-ள்) தலைமகள் வண்ணம் வேறுபட்டுத் தனிமையுறுங் காலைத் தலைமகன் பிரிவைத்தன் உறுப்புகள் உணர்ந்தன போலப் பொருந்தும் வகையாற் கூறவும் பெறும் என்றவாறு.

உம்மை எதிர்மறை

''தண்ந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்''[1] (குறள். 1233)

''தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை''[2] (குறள். 1277)

எனவரும்.

நச்

இது, வருத்தமிக்க வழி இவையுமா மென்கிறது.

(இ-ள்) வண்ணம் பசந்து புலம்பு உறுகாலை—மேனிபசந்து தனிப்படருறுங் காலத்து, கிழவி உறுப்பினை உணர்ந்த போல- தலைவி தனது உறுப்பினை அறிந்தன் போல புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே—பொருந்தின கூற்றாற் சொல்லவும் பெறும் என்றவாறு.

---

1. பொருள்: காதலனைக் கூடியிருந்த காலத்தில் பூரித் திருந்த என் தோள்கள் இப்போது அவர் பிரிந்திருத் தலை அறிவிப்பனபோல மெலிந்து விட்டன.

2. பொருள்: தண்ணிய அழகிய நீர்த்துறையுடைய தலை வன் நம்மைப் பிரிந்ததை நமக்குமுன்னே அறிந்தன்போல கைகளினின்றும் வளை கழன்றன.

''கேளல னமக்கவன் குறுகன்மி னெனமற்றெந்
தோளொடு பகைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்''[1]
(கலி. 68)

''நாணில மன்றவெங் கண்ணே நாணேர்பு
சினைப்பசும் பாம்பின் சூன்முதிர் பன்ன
கனைத்த கரும்பின் கூம்பு பொதியவிழ
நுண்ணுறை யழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே''[2]
(குறுந். 35)

''தணந்தநாள் சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள்''[3] (குறள். 1233)

என வரும்.

காதும், ஓதியும் முதலியன கூறப்பெறா; கண்ணுந் தோளும் முலையும் போல்வன புணர்க்கப்படு மென்றற்கும் 'புணர்ந்தவகை' என்றார். இதனானே[4] இவற்றைத் தலைவன்பாற் செலவுவர வுடையனபோலக் கூறலுங் கொள்க.

''கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று''[5] (குறள். 1244)

எனக் கண்ணினைச் செல்வனவாகக் கூறினார்.

---

1. பொருள்: தலைவி கூற்று. அவன் (காதலன்) நமக்கு உறவுடையன் அல்லன். ஆதலின் தோள்களே அவனைக் குறுகாதீர்கள் என்று சொல்லத் தோளொடு பகை கொள்ளும் நெஞ்சத்தேம்.

2. பொருள்: தோழீ! தலைவன் பிரியும் நாளில் உடன்பட்டுப் பின்னர் கருக் கொண்ட பச்சைப் பாம்பின் சூல் முதிர்ந்தாற் போன்ற பருத்த கரும்பின் குவிந்த அரும்பு மலரும்படி நுண்ணிய தூவுகின்ற மேகத்தினின்றும் அவிழ்ந்து வீழும் துளியைத் தன்கண் உடைய குளிர்ச்சி வரும் வாடைக் காலத்தில் பிரிந்த தலைவனை நினைந்து அழுவதால் என் கண்கள் உறுதியாக நாண் உடையன அல்லவாம்-தலைவி கூற்று.

3. பொருள்: பக்கம் 37ல் காண்க.

4. புணர்ந்தவகை என்றதனானே.

5. பொருள்: நெஞ்சமே! இக்கண்கள் தலைவரைக் காண வேண்டும் என்னும் அவாமிகுந்து என்னைத் தின்று கொண்டே இருக்கும்; அதனால் கண்களையும் நின்னுடன் கொண்டு அவரிடம் செல்வாயாக.

### சிவ

இச் சூத்திரம் தலைவிதன் உறுப்புகள் உணர்வுடையன போலக் கூறவும் பெறும் என்கின்றது.

வண்ணம் திரிதலாவது உடம்பு பொலிவு வேறுபடுதல். களவில் தலைவன் கூட்டத்தால் மகிழ்ந்த நிலையில் உடல் பொலிவு மிகுதிப்படும் என்றாலும் 'புலம்புங்காலை' என்றதால் தலைவன் பிரிந்தவழி யுளதாம் பசலைபரவுதல், மெலிதல் போலும் அழகுக் குறைவையே இங்குக் கொள்ளல் வேண்டும். புலம்புதல்-தனிமைப்பட்டு வருந்துதல். அடுத்த சூத்திரமும் இதனைக் காட்டும்.

தலைவன் பிரிவால் வண்ணந்திரிந்து வேறுபட்டுக்காணப் படுவன கண், தோள், முலை என்னும் உறுப்புகளேயன்றிக் காது கூந்தல் மூக்கு போலும் உறுப்புகள் அல்ல என்பதையுணர்த்தப் 'புணர்ந்தவகை' என்றார். புணர்ந்தவகை யென்றதனால் கண் முதலியன உணர்ந்தனபோலக் கூறலேயன்றித் தலைவன் பால் செலவு வரவு உடையனபோலவும் கூறப்படும் என்று கூறி,

> ''கண்ணும் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
> தின்னும் அவர்க்காணல் உற்று'' (குறள். 1244)

என உதாரணமும் காட்டிய நச்சினார்க்கினியர் உரைத்திறம் போற்றற்குரியதாம்.

## கிழத்தியின் நிலை

**200. உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்**
**என்னுற் றனகொல் இவையெனின் அல்லதைக்**
**கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை. (8)**

### ஆ. மொ.

Even when the body and life suffer, the lady-love can say "What happened to these?," but she cannot join her lover on her own accord.

### இளம்

(இ-ள்.) இஃது உடம்பும் உயிரும் மெலிந்த இடத்தும் இவை என்னுற்றன எனக் கூறினல்லது, கிழவோன் உள்வழிப் படர்தல் கிழத்திக்கு இல்லை என்றவாறு.

**உதாரணம்**

''கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து''[1]
(குறள். 1173)

எனவும்,

''ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது''[2] (குறள். 1176)

எனவும் வரும்.

**நச்**

இது, தலைவனொடு வேறுபட்டுழிப் பிறப்பதோர் வழுவமைதி கூறுகின்றது.

(இ-ள்) உடம்பும், உயிரும் வாடியக்காலும்-தன் உடம்பும் உயிருந்தேய்ந்து கூட்டமின்றி இருந்த காலத்தும், இவை என் உற்றனகொல் எனின் அல்லது-இவை என்ன வருத்த முற்றன கொலென்று தனக்கு வருத்தமில்லது போலக் கூறினல்லது, கிழத்திக்குக் கிழவோற் சேர்தல் இல்லை-தலைவிக்குத் தலைவனைத் தானே சென்று சேர்தல் இருவகைக் கைக்கோளினு மில்லை என்றவாறு.

இது காதல் கூரவுங் கணவற்சேராது வஞ்சம் போன்றொழுகலின் வழுவாயினும் அமைக்க என்றவாறு.

''எற்றோ வாழி தோழி முற்றுபு
கறிவள ரடுக்கத் திரவின் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட விழுக்கிய பூநாறு பலவுக்கனி
வரையிழி யருவி யுண்டுறைத் தரூஉங்

1. பொருள்: என்கண்கள் அன்று காதலரைத் திடீரெனத்தாமே பார்த்து விட்டு இன்று காணாமல் அழுகின்றன. இது நகைக்கத் தக்கது ஒன்று உடையதாம்.

2. பொருள்: எனக்கு இக்காம நோயைச் செய்த கண்கள் இன்று தாம் காமத்தால் நினைந்து அழுவனவாயின, அது மிகவும் நல்லதேயாம்.

குன்ற நாடன் கேண்மை
மென்றோள் சாய்த்துஞ் சால்பீன் றன்றே''[1]
(குறுந். 90)

என்பதனுட் கேண்மை தோளை மெலிவித்த தாயினும் எனக்கு அமைதியைத் தந்தது. யான் ஆற்றவுந் தாம் மெலிதல் பொருந்தாது எத்தன்மைத் தெனத்தலைவி தோழிக்குக் கூறிய வாறு காண்க.

''கலைதீண்ட வழுக்கி வீழ்ந்த பழத்தை யருவிப் பின்னும் பயன்படுத்து நாடன்' என்றதனானே அலரால் நஞ்சுற்றத்திற் பிரிந்தே மாயினும் அவன் நம்மை வரைந்து கொண்டு இல்லறஞ் செய்வித்துப் பயன்படுத்துவனென்பதாம்.

''கதுமெனத் தாநோக்கித் தாமேகலுழு
மிதுநகத் தக்க துடைத்து''[2] (குறள். 1173)

இதுவும் அது.

''ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிடர்ப்பட் டது''[3] (குறள். 1176)

இதுவும் இதன் பாற்படும்.

''இனிப்புணர்ந்த வெழினல்லா ரிலங்கெயிறுஉறாஅலின்
நனிச் சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரினெல்லா
துனிப்பேன்யா னென்பேன்ம னந்நிலையே யவற்காணிற்
றனித்தே தாழுமித் தனியி னெஞ்சே''[4] (கலி. 67)

---

1. பொருள்: தலைவியே! சூல் முதிர்ந்து மிளகுக்கொடி வளர்கின்ற மலைப்பக்கத்தே இரவில் இடித்தமேகம் மழை ஒழுக்கியதாக அந்நீரோடு கூடி மலையினின்றும் இழியும் அருவியானது, குளிரால் மயிர் சிலிர்க்கும் குரங்கு தொட்டதனால் பலாப்பழம்வீழ அதனை அவ் வருவி நீருண்துறையிற் சேர்க்கும் குன்றநாடனிடம் கொண்ட நட்பு நின்மெல்லிய தோளை மெலியச் செய்துவைத்தும் நின் உள்ளத்து அமைதியைத் தந்தது; இது என்ன வியப்போ!-தோழி கூற்று.

2,3. பொருள்: புக்கம் 40 ல் காண்க.

4. பொருள்: தோழீ! தலைவன் இப்பொழுது தாம் கூடிய அழகிய பரத்தையரின் பற்கள் படுதலால் மிகவும் சிவந்த வடுக்களைக் காட்டிக் கொண்டு நாணமின்றி இங்கு வந்தால் யான் ஊடுவேன் என்பேன்; ஆனால் அதற்கு மாறாக என் தனி நெஞ்சமானது அவனைக் கண்டால் அப்பொழுதே தான் தனித்துச் சென்று அவையடையும்,

இதனுள் யான் துனித்தல் வல்லேன். என் நெஞ்சிற்குத் தன்றன்மை யென்பதொன்றில்லை. ஈதென்னென்றலின் அவ்வாறு காண்க.

**சிவ**

இச்சூத்திரம் தலைவி தன் நாண் காக்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) தலைவன் பிரிவால் உடலுறுப்பும் உயிரும் பொலிவிழந்து துன்பத்தால் வாட்டமுற்ற போதும், இவ்வுறுப்புகள் என்ன துன்பம் உற்றன இப்படி வாடுவதற்கு எனத் தான் துன்பம் உறாதாள் போலப் பிரித்துக் கூறுதல் அல்லது, தலைவன் இருக்கும் இடம் சென்று சேர்தல் தலைவிக்கு இல்லை. என்றவாறு.

இதில் வருந்தாவுறுப்புகளை வருத்தமுற்றன போலக் கூறுவதும் தான் வருந்தாதவள்போல் காட்டலும் வழுக்களாய் அமைந்தன. ''இது காதல் கூரவும் கணவற் சேராது வஞ்சம் போன்று ஒழுகலின் வழுவாயினும் அமைக என்றவாறு'' என நச்சினார்க்கினியர் எழுதுவது அத்துணைச் சிறப்பின்று; காதல் கூர்ந்த மாத்திரத்தில் கணவற் சேர்தலே வழுவாம் ஆதலின்.

''இது தலைவனொடு வேறுபட்டுழிப் பிறப்பதோர் வழுவமைதி கூறுகின்றது'' என நச்சினார்க்கினியர் கூறுவது சிறப்பின்று. மேலைச் சூத்திரமும் அதுவே யாதலின்.

உடம்பு வாட்டமே வெளிப்படையிற் காணப்படுவதாதலாலும் உயிர் வாட்டத்தையும் உடம்பு வாட்டமே வெளிப்படுத்துவது ஆதலினாலும் உடம்பு முற்கூறப்பட்டது.

அல்லதை-ஐ சாரியை.

## நெஞ்சோடு உசாவுதல்

**201. ஒரு சிறை நெஞ்சோ டுசாவுங் காலை**
**உரிய தாகலும் உண்டென மொழிப. (9)**

**ஆ. மொ.**

It is said that there are occasions when she delibrates with her heart as if it has separate existence.

**இளம்**

என்-எனின் மேலதற்கோர் புறனடை உணர்த்திற்று.

(இ-ள்) தனித்து நெஞ்சோடு உசாவுங் காலத்துக் கிழவோற் சேர்தல் உரியதாகலும் உண்டு என்றவாறு.

உம்மை எச்சவும்மை யாகலால் தோழியோடு உசாதலுங் கொள்க.

''கோடீர் இலங்குவளை நெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவண் உறைதலும் உய்குவம் ஆங்கே
எழுவினி வாழிய நெஞ்சே''[1] (குறுந். 11)

எனவரும்.

''பகலே பலருங் காண வாய்விட்
டகல்வயற் படப்பை யவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி''[2] (நற். 365)

என்றது தோழியோடு உசாவியது.

**நச்**

இதுவும் அது.

(இ-ள்) ஒரு சிறை-தன் உள்ளத்து நின்ற தலைவனை யொழியப் போந்து நின்றது, நெஞ்சமோடு உசாவுங் காலை-தானுந் தன் நெஞ்சமும் வேறாக நின்று கூட்டத்திற்கு உசாவுங் காலம், உரியதாகலும் உண்டென மொழிப-தலைவிக் குரித்தாலும் உண்டென்று கூறுவர் புலவர், என்றவாறு.

உம்மையால் தோழியுடன் உசாவுங் காலமும் உண்டு என்று கொள்க. உம்மை எச்சவும்மை. இது தலைவனை வேறுபடுத்துத் தானும் நெஞ்சமும் ஒன்றாய் நின்று உசாவுதலின் வழுவாயமைந்

---

1. பொருள்: வளை கழலுமாறு நாளும் அழும் கண்களுடன் தனித்து இவ்வூரில் இவ்வீட்டில் உறைதலை விட்டுப் பிழைத்துப் போவோம்; நெஞ்சமே! அவர் ஊர்க்குச் சொல்ல எழுவாயாக.

2. பொருள்: தோழி! இப்பகல் காலத்திலேயே பலரும் காணும் படியாக அகன்ற வயலும் தோட்டமும் உள்ள அக்காதலன் ஊரை வாய்விட்டுக் கேட்டுச் செல்வோம்.

தது. இது யாண்டு நிகழுமெனின் இவனொடு கூடாமையின் இவன் ஆற்றானாவனென்றானும் 'உணர்ப்புவயின் வாராவூடற்' கட் (150) புலக்குமென்றானும் பிறவாற்றானு மென்றானும் உசாவும்.

''மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே
யுறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎமென நெருங்கிற் றப்பினேன்
என்றடி சேர்தலு முண்டு''[1] (கலி. 89)

என வரும்.

''பகலே பலரும் காண நாண்விட்டு
அகல்வயற் படப்பை அவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி''[2] (நற். 365)

இது தோழியொடு உசாவியது.

**சிவ**

இச்சூத்திரம் மேலதற்குப் புறனடை கூறுகின்றது.

(இ-ள்). ஓரிடத்துத் தனித்திருந்து தன்நெஞ்சொடு தலைவன் கூட்டம் வேண்டி உசாவும் காலத்தில் தலைவனைச் சேர்வல் எனக் கூறுதல் உரியதாதலும் தலைவிக்கு உண்டு என மொழிவர் புலவர் என்றவாறு.

தலைவனைச் சேர்வேன் எனக் கூறுதலேயன்றிச் சேர்தல் இல்லை; சேரின் அது அகப்புறமாம்.

வெள்ளைவாரணனாரும் 'தலைவனை யடைதல் வேண்டும் என்ற உணர்வு அவட்கு உரியதாதலும் உண்டு' என்றாரேயன்றி அடைவள் எனக் கூறாததும் காண்க.

---

1. பொருள்: நெஞ்சே! தலைவனை நம்மிடம் பொய் சொல்ல விடேம் என்று மாறுபட்டுக் கோபித்தால், தவறுதான் செய்து விட்டேன் என்று காலில் விழுதலும் செய்வான். நம்மை மறந்து நாம் மகிழ்வாக இருக்க நினையாத நாணமில்லாதவனுக்கு இவ்வூடற் போரில் தோற்று அதனால் வரும் பயனைக் காண்பாய்-தலைவி ஊடல் தீர்ந்தாள்.

2, பொருள்; பக்கம் 43ல் காண்க,

நெஞ்சொடு உசாவுங்காலை உரியதாதலும் என்றமையால் தோழியொடு உசாவுங் காலையும் கொள்ளப்படும். அதனால் உம்மை எதிரது தழீஇய எச்சவும்மை. உரியதாகாமையே பெரும் பான்மை என்பதால் எதிர் மறையுமாம்.

## மடன்

**202.** **தன்வயிற் கரத்தலும் அவள் வயின் வேட்டலும்[1]**
**அன்ன இடங்கள் அல்வழி யெல்லாம்**
**மடனொடு நிற்றல் கடனென மொழிப. (10)**

**ஆ.மொ.**

It is said that it is her duty to have 'madan' (feigned ignorance) in all stages except those in which the lady-love is deceived by the lover and she wants him ardently.

**இளம்**

என்-எனின் தலைமகட்கின்றியமையாத மடன் அழியும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைமகன் தனதொழுக்கந் தலைமகள் மாட்டுக் கரந்து உணர்த்தும் வழியும் தலைமகள் மாட்டுப் புணர்ச்சி வேட்கை தோன்றிய வழியுமாகிய அத்தன்மைப்பட்ட விடங் களல்லாத வழி யெல்லாம் தலைமகள் மடனொடு நிற்றல் கடன் என்று சொல்லுவர் என்றவாறு.

தன்வயிற் கரந்தவழி மடனழிய நின்றதற்குச் செய்யுள்:-

''முத்தேர் முறுவலாய் நம்வலைப் பட்டதோர்
புத்தியானை வந்தது; காண்பான் யான் றங்கினேன்''.

என்றவழி அதற்குடம்படாது,

''அவ்வியானை வனப்புடைத் தாகலுங் கேட்டேன்.''
(கலி. 97)

1. அவன்வயின் வேட்டலும்-நச். பாடம்

என்றவழி, பொய் கூறினான் என்னுங் கருத்தினளாகிக் கூறுதலின் மடனழிதலாயிற்று.[1]

> ''கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி மதவுநடைச்
> செவிலி கையென் புதல்வனை நோக்கி
> நல்லோர்க் கொத்தனிர் நீயிர் இஃதோ
> செல்வர்க் கொத்தனம் யாமென மெல்லவென்
> மகன்வயிற் பெயர்தந் தேனே''[2] (அகம். 26)

என்றவழி வேட்கை தணிதலாகாதான் அது தணியுந் துணையுமுயங்காது, கவவுக்கை நெகிழ்ந்ததெனப் பெயர்தல் மடனழிதலாயிற்று.

**நச்**

இது, பெண்டிர்க்கியல்பாகிய மடமை யழிவதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) தன் வயிற் கரத்தலும்-தலைவன் தலைவியிடத்தே புறத்தொழுக்கமின் றென்று பொய் கூறலும், அவன் வயின் வேட்டலும்-அங்ஙனங் கரந்து கூறிய தலைவன்கட்டலைவி விரும்புதலும், அன்ன இடங்கள் அவ்வழி எல்லாம்—ஆகிய அவை போலும் இடங்களல்லாத இடத்தெல்லாம், மடனொடு நிற்றல் கடன் என மொழிப-தலைவி மடமையுள்ளாகி நிற்றல் கடப்பாடென்று கூறுவர் புலவர் என்றவாறு.

எனவே, இவ்வீரிடத்தும் மடனழிதலுடையளென வழுவமைத்தார். அது 'குதிரை வழங்கி வருவல்' (கலி. 96) என்று அவன்

---

1. முத்து போலும் பல்லுடையாய்! நம் வலையில் அகப்பட்ட ஒரு புது யானை வந்தது; அதைக் காண வேண்டி வெளியில் தங்கினேன் என்று பரத்தையொழுகி வந்த தலைவன் தலைவியிடம் கூறினன். அதற்கு அவள் பரத்தமையை யறிந்ததனால் தான் அறிந்ததையுணர்த்த வேண்டி நகைச்சுவையாக ''ஆம் அது அழகுடைபதாதலையும் கேள்விப் பட்டேன்'' என்றாள். இதன் விளக்கம் சிவ. விளக்கத்திற் காண்க.

2. பொருள்: தோழி! தலைவன் என்னைத் தழுவிய கை சிறிது நெகிழ்ந்ததாக வேட்கை தணியுமளவும் முயங்காமல் கை நெகிழ்ந்தான் என்று எண்ணி உடனே செவிலி கையில் இருந்த மகனைப் பார்த்தபடியே தலைவன் கேட்க 'நீயிர் நல்லோர்க்கு (பரத்தையர்க்கு) ஏற்றவரானீர்; யான் இம்மகனுக்கு ஏற்றவளானேன்' என்று சொல்லி மகன் பால் சென்றேன். சிவ. விளக்கம் பார்க்க.

கரந்த வழி, அதனை மெய்யெனக் கோடலன்றே மடமை, அங்ஙனங் கொள்ளாது அறிந்தேன் குதிரை தானெனப் பரத்தையர்கட்டங்கினாயெனக் கூறுதலின் இது மடனழிந்த வழுவமைதியாயிற்று.

''கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி மதவுநடைச்
செவிலி கையென் புதல்வனை நோக்கி
நல்லோர்க் கொத்தனிர் நீயி ரிஃதோ
செல்வர்க் கொத்தனம் யாமென மெல்லவென்
மகன்வயிற் பெயர்தந் தேனே''[1] (அகம்.26)

என்றவழி மனத்து நிகழ்ந்த வேட்கையை மறைத்து வன்கண்மை செய்து மாறினமையின் அதுவும் மடனழிந்து வழுவாகி அமைந்தது. 'அன்னவிடம்' என்றதனால்,

''யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று''[2] (குறள். 1314)

என்றாற் போல மடனழிய வருவனவும் கொள்க.

**சிவ**

இச்சூத்திரம் தலைவி மடன் காக்கும் இடமும் காவா இடமும் கூறுகின்றது.

இச்சூத்திரத்தில் அவள் வயின் வேட்டலும் எனப் பாடம் கொள்வர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் அவன்வயின் வேட்டலும் எனக் கொள்வர். இச்சூத்திரம் தலைவி செயல் கூறுதலின் 'தன்' என்றது தலைவியைக் குறிக்கும் போது 'அவள்' என்றது வேறொருத்தியைக் குறிக்க வேண்டும். தலைவியையே குறிப்பதாக இளம்பூரணர் கொண்டது பொருந்தாது. அன்றியும் தலைவிக்குத் தலைவனிடம் வேட்கைமிக்குக் கூடும் போதுதான் தலைவனின் செயலில் தலைவி குறைகண்டு மடன் அழிதல் நிகழும். தலைவன் விரும்பிக் கூடும் போது தலைவன் செயலில் தலைவி குறை காணுதல் இல்லை; ஏன் எனின் அப்போது தலை

---

1. பொருள்: பக்கம் 46ல் காண்க.
2. பொருள்: ''மற்றைக் காதலர் யாரினும் நாம் மிக்க காதலுடையேம்'' எனப் பொதுவில் யான் கூறினேனாக, உடனே அவள், பிற பெண்டிர் பலருடன் யான் தொடர்புடையவன் என எண்ணி,''நீ விரும்பும் யாரைக் காட்டிலும் யாரைக் காட்டிலும் நாம் காதல் மிக்குடையோம் சொல்வீராக'' என்று ஊடினாள்.

வன் கருத்தை நிறைவேற்றுவதே அவள் குணம் ஆதலின்.மேலும் அவர், "கவவுக்கை......பெயர் தந்தேனே" (அகம்.26) என்ற வழி வேட்கை தணிதலாகாதாள் அது தணியும் துணையும் முயங்காது கவவுக்கை நெகிழ்ந்தது எனப் பெயர்தல் மடன் அழிதலாயிற்று என எழுதியதும் 'அவன் வயின் வேட்டலும்' என்ற பாடத்துக்கே பொருந்தும்.

மடன் என்பது அறிந்தும் அறியாதது போன்றிருக்கும் குணம். மடன் அழிதலாவது அறிந்ததை அறிந்தேன் என வெளிப்படுத்துதல்.

தன்வயிற் கரத்தலில் மடன் அழிதற்கு இளம்பூரணர் காட்டிய உதாரணத்தில் தலைவன் தன் புறத்தொழுக்கத்தை மறைக்க யான் புது யானை காண்பதற்காகச் சென்று தங்கினேன் என்று கூறத் தலைவி ஆமாம் அந்த யானை நல்ல அழகுடையதாயிருந்தது என்பதையும் யான் கேட்டேன் எனத் தான் அந்த யானை ஒரு பரத்தை என்பதை உணர்ந்ததாகக் கூறியது மடனழிந்ததாம். நச்சினார்க்கினியார் காட்டிய குதிரைக் கதையும் அதுவே.

உரையாசிரியர் இருவரும் காட்டிய 'கவவுக்கை...பெயர் தந்தேனே' என்னும் உதாரணத்தில் தலைவி தலைவனொடு வேட்கையிற் கூடியிருந்தபோது அவன் கை சிறிது நெகிழ்ந்ததாக அது அவனுக்குத் தன் அன்பின்மை காரணமாக நிகழ்ந்தது எனக் கொண்டு கூட்டத்தின் நீங்கினாள். அவன் பரத்தை யொழுக்கம் தான் அறிந்ததும் அறியாதாள் போல் அவனிடம் கூடியிருக்கும் போதே அறிந்தாளாகப் பெயர்ந்தது மடன் அழிந்ததாகும்.

மடன் என்பது கொளுத்தக் கொண்டு (அறிந்து) கொண்டது விடாமை என்பர் பேராசிரியர். தலைவன் தன்புறவொழுக்கத்தை மறைத்து யானை காணத் தங்கினேன்; குதிரையேறி வந்தேன் எனக் கூற அதைக் கொள்ளுதலாக இருக்க உடனே மறுத்துரைத்தது கொண்டது விடுதலாகும்.

## அறத்தொடு நிற்றல்

**203.** **அறத்தொடு நிற்குங் காலத் தன்றி**
**அறத்தியல் மரபிலள் தோழி என்ப** **(11)**

ஆ.மொ.

Except at the time when she wants to stand by moral code, the maid-friend has not the duty of applying the code of the moral; (i. e. divulging the secret of love).

**பி. இ. நூ.**

**இறை. 14.**

தோழிக் குரியன கோடாய் தேளத்து
மாறுகோ ளில்லா மொழியுமா ருளவே

**இளம்**

இது அறத்தொடு நிற்கும் நிலைமரபு உணர்த்திற்று.

(இ-ள்) தலைவி அறத்தொடு நிற்குங் காலத்தன்றித் தோழி தானே அறத்தொடு நிற்கும் மரபு இலள் என்றவாறு.

தலைவி அறத்தொடு நிற்குமாறு:-

''விழுந்த மாரிப் பெருந்தண் சாரற்
கூதிர்க் கூதளத் தலரி நாறும்
மாதர் வண்டின் நயவருந் தீங்குரல்
மணநாறு சிலம்பின் அசுணம் ஓர்க்கும்
உயர்மலை நாடற் குரைத்தல் ஒன்றோ
துயர்மருங் கறியா அன்னைக் கிந்நோய்
தணியுமா றிதுவென உரைத்தல் ஒன்றோ
செய்யா யாதலிற் கொடியை தோழி
மணிகெழு நெடுவரை அணிபெற நிவந்த
செயலை அந்தளிர்; அன்ன என்
மதனின் மாமெய்ப் பசலையுங் கண்டே''[1]

(நற். 244)

எனவரும். தோழி யறத்தோடு நிற்றல் வருகின்ற சூத்திரத்தாற் கூறுப.

---

1. பொருள்: தோழீ! என் உடம்பில் பசலையை நீ பார்த்தும், மழை பெய்த சாரலில் கூதிர்க் காலத்துக் கூதள மலரில் தோய்ந்ததால் அம்மலர் மணம் நாறும் வண்டின் ஒலியை மலையடுக்கத்துள்ள அசுணப் புள் கேட்டு உண்ணும் படியான மலைநாடனுக்கு என் இந்த நோய் தணியுமாறு இது என உரைத்தல் ஒன்று; அல்லது என் துயரறியாத தாய்க்கு இந்நோய் தணியுமாறு இது என உரைத்தல் ஒன்று. இவ்விரண்டில் எதுவும் செய்யாது நின்றாய் ஆதலின் நீ மிகக் கொடியை-தலைவி கூற்று.

நச்

இது தலைவியால் தோழிக்கு வருவதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) அறத்தொடு நிற்குங் காலத்தன்றி-தலைவி இக்களவினைத் தமர்க்கறிவுறுத்தல் வேண்டுமென்னுங் கருத்தினளாகிய காலத்தன்றி, தோழி அறத்தியன் மரபிலளென்ப[1]-தோழி அறத்தினியல்பாகத் தமர்க்குக் கூறும் முறைமையில்ளென்று கூறுவர் புலவர் என்றவாறு.

காலமாவன நொதுமலர் வரைவும் வெறியாட்டெடுத்தலும் முதலியன. தலைவி களவின் கண்ணே கற்புக்கடம் பூண்டு ஒழுகுகின்றாளை நொதுமலர் வரைவைக் கருதினார் என்பதூஉம் இற்பிறந்தார்க் கேலாத வெறியாட்டுத் தன்மனைக்கண் நிகழ்ந்ததூஉம் தலைவிக்-கிறந்துபாடு பிறக்குமென்று உட்கொண்டு அவை பிறவாமற் போற்றுதல் தோழிக்குக் கடனாதலின் இவை நிகழ்வதற்கு முன்னே தமர்க்கறிவித்தல் வேண்டும். அங்ஙனம் அறிவியா திருத்தலின் வழுவாயமைந்தது.

''இன்றியாண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கின்
கண்ணகன் றூமணி பெறூஉ நாடன்
அறிவுகாழ்க் கொள்ளு மளவைச் சிறுதொடி
யெம்மில் வருகுவை நீயெனப்
பொம்ம லோதி நீவி யோனே''[2] (குறுந். 379)

---

1. அறத்தியல் மரபு என்பதற்கு இளம்பூரணர் 'அறத்தொடு நிற்கும் மரபு' என்றார். அறத்தியல் என்பதற்கு அறத்தின் வழி எனக் கொண்டு அதாவது அறத்தொடு நிற்றல் என்றார். நச்சினார்க்கினியர் அறத்தியல் என்பதற்கு அறத்தின் இயல்பாகத் தமர்க்குக் கூறும் முறைமை என்றார். இருவர் கருத்தும் அறத்தொடு நிற்றலையே குறிக்கும்.

2. பொருள்: தோழீ! கானவன் பழைய குழியைத் தோண்டிய போது கிழங்குடன் மணியையும் பெறும் படியான நாட்டுக்குடைய தலைவன், நின்னை நோக்கி 'நீ அறிவு முதிர்ந்த காலத்து எம் வீட்டிற்கு வருக' என்று சொல்லி நின் கூந்தலைத் தடவியவன் வரைவிடை வைத்துப் பிரிந்த இன்று எவ்விடத்துள்ளானோ? -தோழி தலைவியிடம் கூறியது.

இது, நொதுமலர் வரைவுகூறி உசாவி அறத்தொடு நின்றது.

''கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த'' (நற். 34)

இது வெறியாட்டெடுத்தவழி அறத்தொடு நின்றது.

''அகவன் மகளே யகவன் மகளே'' (குறுந். 23)

இது கட்டுக்காணிய நின்ற விடத்து அறத்தொடு நின்றது.

அதுவும் வெறியாட்டின்கண் அடங்கும். தலைவிக்குக் குறிப்பினுமிடத்தினுமல்லது வேட்கை நெறிப்பட வாராமையிற் சின்னாள் கழித்தும் அறத்தொடு நிற்பாளாகலானுஞ் செவிலியும் நற்றாயுங் கேட்டபொழுதே அறத்தொடு நிற்பராகலானும் ஆண்டு வழுவின்று.

**சிவ**

இச்சூத்திரம் தோழி அறத்தொடு நிற்கும் காலம் உணர்த்துகிறது.

(இ-ள்) அறத்தொடு நிற்றற்காகும் காலத்தில் அறத்தொடு நிற்றல் உரியதாதலேயன்றி அதற்கு முன்னர் அறத்தின் வழிச் செல்லும் முறைமையிலள் தோழி என்று கூறுவர் புலவர் என்றவாறு.

அறத்து இயல்மரபாவது அறவழியில் நடக்கும் முறைமை. தோழியானவள், முன்னுறவுணர்தல் குறையுறவுணர்தல் இருவரும் உள்வழி அயன்வரவுணர்தல் எனபனவற்றால் தலைவிக்கும் தலைவனுக்கும் உள்ள உறவை, உணர்ந்தவுடனோ தன்னால் கூட்டம் நிகழ்ந்த பின்னரோ அம்பலும் அலரும் தோன்றும் முன்னரோ, பின்னரோ, பிறர் வரைவு வேண்டி வருதலும் தாய் வெறியாட்டயர்தலும் நிகழ்வதற்கு முன்னரே தாய்க்கு அறிவிப்பது அவளின் கடனாய அறம். அவ்வறத்தின் வழிச் செல்லாது வாளா இருப்பது வழு. இச்சூத்திரம் அவ்வழுவை அமைக்கின்றது. தலைவி தன்னிடம் தாய்க்கு அறத்தொடு நிற்றல் வேண்டும் எனக் கூறுங்காலத்தோ அல்லது குறிப்பால் உணர்த்தும் காலத்தோ தான் தாய்க்குத் தோழி அறத்தொடு நிற்றல் வேண்டும் என அமைக்கின்றது.

## தோழி அறத்தொடு நிற்றல்

**204. எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்**
**கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு**
**உண்மை செப்புங் கிளவியோடு தொகைஇய**
**ஏழு வகைய என்மனார் புலவர். (12)**

**ஆ. மொ.**

The poet say that the modes of standing by moral code are of seven which are speaking of the lover as a man of easy approach, speaking highly of him, speaking of the ardent desire, having deliberation by putting forth question about love affairs, citing reasons for her love towards him, occurrence of their unexpected meeting and speaking the truth.

**இளம்**

என்-எனின். இதுதோழி யறத்தொடு நிற்குமாறு உணர்த்திற்று.

இதற்குப் பொருள் களவியலுள் தோழிகூற்று உரைக்கின்றுழி உரைக்கப்பட்டது.[1]

**நச்**

இதுவும், அவ்வறத்தொடுநிலை இனைத்தென்கின்றது.

(இ-ள்) எளித்தல்-தலைவன் எளியனாகக் கூறுதல், ஏத்தல்-அவனைஉயர்த்துக் கூறல்,வேட்கை உரைத்தல்-அவனதுவேட்கை மிகுத்துரைத்துக் கூறல், கூறுதல் உசாதல்-தலைவியுந் தோழியும் வெறியாட்டிடத்தும் பிரிவிடத்தும் சில கூறுதற் கண்ணே தாமும் பிறருடனேவும் உசாவுதல், ஏதீடு-ஒருவன் களிறும் புலியும் நாயும் போல்வன காத்து எம்மைக் கைக்கொண்டானெனவும் பூத்தந் தான் தழை தந்தான் எனவும் இவை முதலிய காரணமிட்டுணர்த் தல், தலைப்பாடு-இருவருந் தாமே எதிர்ப்பட்டார் யான் அறிந்தி லேனெனக் கூறுதல், உண்மை செப்புங்கிளவியொடு தொகைஇ-என்று அவ்வாறனையும் படைத்து மொழியாது பட்டாங்கு கூறுத லென்னுங் கிளிவியோடே கூட்டி, அவ் எழுவகையை என்மனார்

1. உரைக்கப்பட்டவாறு

புலவர்-அத்தன்மைத்தாகிய எழு கூற்றையுடைய அறத்தொடு நிற்றலென்று கூறுவர் புலவர் என்றவாறு.

'அவ்வெழுகையை' என்றதனால் உண்மை செப்வுங்கால் ஏனையாறு பொருளினுட் சில உடன் கூறி உண்மை செப்பலும் ஏனைய கூறுங்காலுந் தனித்தனி கூறாது இரண்டும் மூன்றும் உடனே கூறலுங் கொள்க.

(உ-ம்) ''எல்லு மெல்லின் றசைவுபெரி துடையேன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துண்டு யானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனோ?
எனமொழிந் தனனே யொருவன்''[1] (அகம். 110)

என்பது எளித்தல்.

''பகன்மா யந்திப் படுசுட ரமயத்து
அவன் மறை தேஎ நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றனள்''[2] (அகம். 48)

என்பது ஏத்தல்.

''பூணாக முறத்தழீஇப் போதந்தான்'' (கலி. 39)

என்பது வேட்கையுரைத்தல்.

''முருகயர்ந்து வந்து முதுவாய் வேலன்
சினவ லோம்புமதி வினவுத லுடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையோடு
சிறுமறி கொன்றிவ ணறுநுத னீவி
வணங்கினை கொடுத்தி யாயி னணங்கிய
விண்டோய் மாமலைச் சிலம்ப
னொண்டா ரகலமு முண்ணுமோ பலியே''[3]
(குறுந். 362)

---

1. பொருள்: ஞாயிறும் ஒளி மறைந்தது; தளர்வு மிக வுடையன் அத்தகைய ஒருவன் மெல்லிலை விரிப்பில் விருந்து உண்ண (வருவன்).

2. பொருள்: பகல் மறையும் அந்தியில் ஞாயிறு படும் சமயத்தில் அக்காதலன் சென்று மறையும் திசைநோக்கி 'இவன் ஓர் சிறந்த ஆண்மகனேயாவான்' என்றாள்.

3. பொருள்: முருக வழிபாடு செய்து வந்த, சொல்வது நடக்கும் முதியவாயுடைய வேலனே! சினங்கொள் ளாதே; ஒரு கேட்பது உடையேன். பல நிறத்துச் சோற்

இது, வேலனொடு கூறுதலுசாதல். கூறுதற்கண் உசாதலென விரிக்க.[1]

> ''வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
> கோடாது நீர் கொடுப்ப தல்லது-கோடா
> வெழிலு முலையு மிரண்டற்கு முந்நீர்ப்
> பொழிலும் விலையாமோ போந்து''[2]
>
> (திணை. நூற். 15)

இதுவும் உசாதலாய் அடங்கும்.

> ''உரவுச் சினஞ்செருக்கித் துன்னுதொறும் வெகுளும்
> முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
> திளையாக் கண்ண வளைகுபு நெரிதர
> நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா
> மிடும்பைகூர் மனத்தே மருண்டு புலம்படர
> மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்
> தாகாண் விடையி னணிபெற வந்தெ
> மலமர லாயிடை வெரூஉவுத லஞ்சி
> மெல்லிய வினிய மேவரக் கிளந்தெ
> மைம்பா லாய்கவி னேத்தி யெண்டொடி
> யசைமென் சாயலவ்வாங் குந்தி
> மடமதர் மழைக்க ணிளையீ ரிறந்த
> கெடுதியு முடையே னென்றான்''[3] (குறிஞ். 130-42)

எனநாய் காத்தவாறும்.

---

றோடு ஆட்டைக் கொன்று அதன் இறைச்சியை இத் தலைவியின் நல்ல நெற்றியைத் தடவி அவளுக்காக முருகனை வணங்கிப் பலியாகக் கொடுக்கின்றாய். அப் பலியை விண்தோயும் மாமலை நாடனின் மாலை யணிந்த மார்பும் உண்ணுமோ?

1. கூறுதல் உசாதல்-கூறுதற்கண் வினாதல்.
2. பொருள்: தோழி, தந்தை தன்னையரிடம் கூறியது. ஐயன்மீர்! வாடாத பெரியோர் மணம் பேசி வந்தால் அவரை எதிர்கொண்டு வரவேற்று மகளைக் கொடுப்ப தல்லது குறையாத அழகும் முலையும் என்னும் இரண் டற்கும் விலையாகுமே கடல் சூழும் இவ்வுலகம்!
3. பொருள்: வலிய சினத்தால் செருக்குற்று நெருங்குந் தோறும் கோபிக்கும் முளை போலும் கூரிய பற்க ளுடையனவான கூரிய நகமுடைய நாய்கள் மூடாத கண் கள் உடையனவாய் எங்களை வளைத்து நெருங்க யாங்

''கணைவிடு புடையூஉக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிரக்
கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக
இரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கிமரங் கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
வுய்விட மறியே மாகி யொய்யெனத்
திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோ
லுடுவுறு பகழி வாங்கிக் கடுவிசை
யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவே
ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்
திண்ணிலைக் கடம்பின் றிரளரை வளைஇய
துணையறை மாலையிற் கைபிணி விடேஎம்
நுரையுடைக் கலுழி பாய்தலி னுரவுத்திரை
யடுங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
யஞ்சி லோதி யசைய லெனையதூஉ
மஞ்ச லோம்புநின் னணிநலங் காக்கென

---

கள் நடுங்கி இருந்த இடத்தை விட்டு எழுந்து அடி தளர்ந்ததால் வருத்தமிக்க மனத்தேமாகி மயங்கி வேறிடம் செல்ல பகையை ஓட்டிய செருக்கோடு வேறிடத்து ஆ ஒன்றைக் கண்ட ஏறு போல அழகு பெற வந்து நிற்க அதனால் யாம் துன்பத்தால் அஞ்சு தற்குத் தான் அஞ்சி மெல்லிய இனிய சொற்களை எமக்கு ஏற்கும்படிச் சொல்லி எம் கூந்தலழகைப் பாராட்டி ஒண்தொடியும் மென்சாயலும் அழகிய வளைந்த கொப்பூழும் இளைய மதர்த்த கருங் கண்ணும் உடைய இளைய மகளிரே! என்னால் எய்யப் பட்ட என்னைக் கடந்து இவ்வழிவந்த மானையுடை யேன் என்றான்-இது தோழி செவிலிக்குக் கூறியது.

''மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்
தென்முக நோக்கி நக்கனன்''[1] (குறிஞ். 160-83)

எனச் களிறு காத்தவாறும் புனலுள் எடுத்தவாறுங் காண்க.

''புலிபுலி யென்னும் பூசல் றோன்ற
வொண்செங் கழுநீர்க் கண்போ லாயித
ழூசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்ல னொருகணை தெரிந்துகொண்
டியாதோ மற்றிம் மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனே''[2] (அகம். 48)

---

1. பொருள்: கணைகள் விட்டும் தட்டை புடைத்தும் காட்டிடம் ஒலிக்குமாறு சீழ்க்கையால் இளையவர்கள் வெடி ஒலி எழுப்பி ஓட்ட, அதனால் மேக இடிபோலப் பிளிறித் தன் பெரிய கையை நிலத்திற் சேர்த்திச் சினம் மிகுந்து மதத்தினால் செருக்குற்று மரங்களைச் சாய்த்து ஒரு மதமயக்கமுடைய களிறு சிங்கம் போல் தம் எதிரே வர, உய்யுமிடம் அறியேமாகி ஒய்யென வளையல் ஒலிக்க நாணம் விட்டு நடுங்கும் மனத்தேமாகி அவனைச் சார்ந்து அச்சமுற்ற மயில் போல நடுங்க அவன் அம்பு தொடுத்து யானையின் முகத்தே அதனால் ஏற்பட்ட புண்ணில் வழியும் குருதியானது முகவழியாகப் பாய புள்ளியும் வரியும் உடைய நுதல் சிதைய அங்கே நில்லாமல் தளர்ந்து ஓடிய பின்னர், அவ்விடம் வெறியாட்டில் மறியறுத்ததால் குருதி வழிந்து காணப்படும் இடத்தை ஒப்ப கடம்பினது அடியில் வளைத்த மாலை போல எங்கைகளைக் கோத்து விடாமல் நின்று, நுரையுடைய வெள்ளம் அங்கே பாய்தலினால் அலையுடைய கரையில் உள்ள வாழை போல யாங்கள் நடுங்க, அப்பெருந்தகையானவன், அழகிய சிலவான கூந்தலுடையாளே! அசையாதே சிறிதும் அஞ்சாதே நின் அணி நலத்தைக் காப்பேன் என்று கூறி என் சுடருடைய நெற்றியைத் தடவி நெடிதாக நினைந்து என்முகம் பார்த்துச் சிரித்தான்.

2. பொருள்: கண்போலும் கழுநீர்ப் பூக்களை ஊசிநூலால் சுற்றிக் கட்டிய மாலையனும் அதன் பக்கத்துச் சேர்த்து அணிந்த செச்சை மாலையனும் ஆகிய ஒருவன் புலிபுலி என்னும் ஓசையைக் கேட்டு உடனே தோளிற் சந்தனத்தைத் தடவிக் கிடந்த வரிந்து கட்டப்பட்ட வில்லில் கணையைத் தொடுத்து வந்து எம்மை நோக்கி இங்கே விலங்கால் வந்த துன்பம் யாது என வினவி எதிரே நின்றான்-தோழிகூற்று.

இது, புலிகாத்தற்கு வந்தானென இட்டுரைத்தது.

''அன்னாய் வாழிவேண் டன்னை யென்னை
தானு மலைந்தா னெமக்குந் தழையாயின
பொன்வீ மணியரும் பினவே
யென்ன மரங்கொலவர் சார லவ்வே''[1] (ஐங்குறு.201)

இதுதோழி தழை தந்தானென அறத்தொடு நின்றது.

''சுள்ளி சுனைநீலஞ் சோபா லிகைசெயலை
யள்ளி யளகத்தின் மேலாய்ந்து-தெள்ளி
யிதணாற் கடியொடுங்கா வீர்ங்கடா யானை
யுதனாற் கடிந்தா னுளன்''[2] (திணை. நூற். 2)

இதனுள் அளகத்தின் மேலாய்ந்தெனவே பூத்தந்தமை கூறினாள்.

''பிறிதொன் றின்மை யறியக் கூறிக்
கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வ நோக்கி
கடுஞ்சூ டருகுவ னினக்கே''[3] (அகம். 110)

இது தலைப்பாடு.

''நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
வீர நன்மொழி தீரக் கூறித்
துணைபுண ரேற்றி னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயி

---

1. பொருள்: தோழிகூற்று அன்னையே! வாழி, யான்சொல் வதை விரும்பிக்கேட்க. ஒருவன் தானும் மலைந்து கொண்டான்; எங்களுக்கும் தழை உண்டாயின. அப்படி யாகும்படி பொன்மலரையும் மணிபோலும் அரும்பையும் உடையனவான மரங்கள் அவன் மலைச்சாரலில் உள் ளன; அவை என்ன மரங்கள்?

2. பொருள்: சுள்ளி, நீலம், சோபாலிகை, அசோகு ஆகிய வற்றைச் சேர்த்து எம்கூந்தலில் செருகியதோடு, தெளி வாகப் பரணில் இருந்து யாம் ஓட்ட ஓடாத மதயானை யைத் தன் அம்பினால் ஓட்டினான் ஒருவன்உளன்- தோழி கூற்று.

3. பொருள்: (ஒருவன் வந்து நின்றான் என்னும் இதுவன்றி) வேறு ஒன்றும் நிகழ்ந்ததில்லை என்பதை அறியக் கூறிப் புகார்த் தெய்வத்தை நோக்கி நினக்குக் கடிய சூளுறவு செய்வேன்-தோழி செவிலியிடம் கூறியது.

லுண்டுறை நிறுத்துப் பெயர்ந்தென னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்று
மிரவரன் மாலைய னேவரு தோறுங்
காவலர் கடுகினுங் கதனாய் குரைப்பினு
நீதுயி லெழினு நிலவு வெளிப் படினும்
வேய்புரை மென்றோ ளின்றுயி லென்றும்
பெறாஅன் பெயரினு முனியலுறாஅ
னிளமையி னிகந்தன்று மிலனே''[1] (குறிஞ். 231-44)

''வளமையிற் றன்னிலை திரிந்தன்று மிலனே''
(குறிஞ். 245)

''கன்மழை பொழிந்த வகன்க ணருவி
யாடுகழை யடுக்கத் திழிதரு நாடன்
பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாளிவண்
மயங்கிதழ் மழைக்கண் கலுழு மன்னாய்''[2]
(ஐங்குறு. 220)

என வருவன உண்மை செப்பல்.

---

1. பொருள்: நுமது முன்கையைப் பற்றி நுமர் எனக்குத்தர நாடு அறியும் படியான நல்ல மணத்தைச் செய்து கொள்வேம். இலங்கும் அணியுடையீர்! அதுவரை சில நாள்கள் கலங்குதலை விடுங்கள் என்று அன்பு கலந்த நல்ல சொற்களை எம்அச்சம் தீரக் கூறித் துணை யோடு சேர்ந்து வரும்ஏறுபோல எம்மோடு வந்து முழவு ஒலியடங்காத எம் மூதூர் வாயிலில் நீர் உண்ணும் துறையில் எம்மை நிறுத்தி விட்டுச் சென்றான். அதில் இருந்து அன்றை நாளில் கொண்ட விருப்பத்தோடே நாளும் இரவில் வரும் தன்மையுடையனானான். அப்படி வருந்தோறும் இரவில் ஊர்க் காவலர் கடுகி வந்தாலும் நாய்துஞ்சாது குரைப்பினும் அன்னையே நீதுயில் எழுந்தாலும் நிலவு வெளிப்பட்டாலும் மென்தோள் துயிலை என்றும் பெறாதவனாய்த் திரும்பிச் செல்லினும் அதற்காக வெறுக்க மாட்டான். இளமை காரணமாக எல்லை கடந்தவனும் இல்லை; வளமை காரணமாகத் தன் உயர்குடிப் பிறப்பு நிலையில் திரிந்தவனும் இல்லை.

2. பொருள்: அன்னையே! மிக்க மழை பொழிந்ததால் அகன்ற இடம்பட ஒழுகும் அருவியானது மூங்கில் உள்ள மலையடுக்கங்களில் இழியும் மலை நாடனின் பெருமலை போலும் அழகிய விளக்கமுடைய மார்பை முயங்காது கழியும் நாள்களில் இத்தலைவியின் கண்கள் அழா நிற்கும்-தோழி கூற்று.

''காமர் கடும்புனல்'' (கலி. 39)

## கிளவியால் வேட்கை உணர்தல்

**205 உற்றுழி யல்லது சொல்ல லின்மையின்**
**அப்பொருள் வேட்கைக் கிளவியி னுணர்ப. (13)**

**ஆ. மொ.**

As It is not to be divulged except at the happening of some affliction (affecting her moral code) the disire for divulging the secret will be known from the gesture of the lady-love.

**இளம்**

என்-எனின், இது செவிலிக் குரியதோர் மரபுணர்த்திற்று.

*(இ-ள்)* காமம் மிக்கவழி[1] யல்லது சொல் நிகழ்ச்சியின்மையின் தலைமைகள் தான் கருதிய பொருள்மேல் வேட்கையைத் தன் னானே[2] யறிவர் என்றவாறு.

பன்மையாற் கூறினமையால் அவ்வுணர்ச்சி செவிலிக்கும் நற்றாய்க்கும் ஒக்கும் என்றவாறு.

இதனாற் சொல்லியது அறத்தொடு நிற்பதன் முன்னம் செவிலி குறிப்பினான் உணரும் எனக் கொள்க.

''அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி'' (அகம். 48)

என்றவழிச் செவிலி குறிப்பினான்[3] உணர்ந்தவாறு காண்க.

---

1. உறு-மிகுதி. உற்றுழி-காமம் மிக்கவழி.
2. தலைமகள் தன்னால்-தலைமகளிடத்து நிகழும் உடல் மெலிவு முதலிய வேறுபாடுகளால்.
3. தோழி, செவிலித்தாய் தன்னிடம் தலைவி ஏதோ மனத்தில் ஒரு துயர் கொண்டு பாலும் உண்ணாளாய் மிகவும் பசந்து தோன்றுகின்றாள். இதற்குக் காரணம் என்ன எனக் கேட்டதாகக் கூறும் இதில், செவிலி தலைவி யின் வேறுபாடு கண்டு குறிப்பால் கூட்டம் உண்மை யுணர்ந்தாள் என்பது புலப்படும்.

வேட்கை தோற்றத் தலைமகனில்லாதவழித் தோழி கூற்று நிகழும். அது "காமர் கடும்புனல்" (கலி. 39)எனும் பாட்டினுள் காண்க.

**நச்**

இது, மேலதற்கோர் புறனடை.

*(இ-ள்)* உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின் - தலைவியர்க்கும் ஏதமுற்ற இடத்தன்றித் தோழி அவ்வாறு மறைபுலப் படுத்துக் கூறாளாதலின், அப்பொருள் வேட்கைக் கிழவியின் உணர்ப-அம்மறை புலப்படுத்துதல் விருப்பத்தைத் தலைவியர் காரணத்தால் தோழியர் உணர்வர் என்றவாறு.

'உணர்வர்' என்று உயர்திணைப் பன்மையாற் கூறவே: தலைவியருந் தோழியரும் பலரென்றார். 'கிளவி' என்றாரேனும் 'ஒரு பாற் கிளவி' (222)யென்பதனாற் பன்மையாகக் கொள்க. உயிரினுஞ் சிறந்த நாணுடையாள் (113). இது புலப்படுத்தற்கு உடம்படுதலின் வழுவாயமைந்தது.

> "இன்னுயிர் கழிவதாயினு நின்மக
> ளாய் மலருண்கட் பசலை
> காம நோயெனச் செப்பா தீமே"[1] (அகம்.52)

என்றாற் போல்வனவே இலக்கணமென்பது மேலைச்சூத்திரத் தாற் கூறுப.

**சிவ**

இச்சூத்திரம் செவிலியும் நற்றாயும் குறிப்பால் தலைவி யொழுக்கம் உணருமாறு கூறுகின்றது.

*(இ-ள்)* தலைவியின் ஒழுக்கத்தைச் சொல்லுதற்கு உற்ற இடத்திற் சொல்லுதலன்றிப் பிறவிடங்களில் தோழி தாய்க்குச் சொல்லுதல் இல்லையாதலின் தலைவிமாட்டு நிகழும் உடல் மெலிவு முதலியவற்றானே தாயர் இருவரும் தலைவியின் களவொழுக்கத்தைக் குறிப்பாள் உணர்வர் என்றவாறு.

---

1. பொருள்: தலைவிகூற்று இனிய உயிர் போவதாயினும் நின்மகளின் ஆய்ந்த மலர் போலும் கண்ணின் பசலைக்குக் காரணம் அவள் கொண்ட காமநோயேயாம் எனச் சொல்லாதே. தோழியிடம் கூறியது.

உற்றுழி என்பதற்குத் தலைவிக்குக் காமம்மிக்கவழி என்பர் இளம்பூரணர். உறு+உழி என்பன உறுவுழி என்றாகுமன்றி உற்றுழி என்றாகாது. ஆதலின் உற்றஉழி என்று நச்சினார்க்கினியர் கொண்டதே பொருந்தும்.

இச்சூத்திரம் தோழியின் உணர்வு பற்றியதாக நச்சினார்க்கினியர் கொண்டது சிறவாது. தோழியின் உணர்வாகக் கொண்டமையால்'உணர்ப' எனப்பன்மையாற் கூறியது தோழியர் பலரை என்றும் தோழியர் பலராதற்கேற்பத் தலைவியர்பலர் என்றும் கூறியதும் சிறவாது. 'உணர்ப' என்ற பன்மை தாயர் இருவரைக் குறிப்பதாகும்.

அப்பொருள்மேல் வேட்கை என்றது களவொழுக்கத்தில் தலைவிக்குண்டான வேட்கையை, அதாவது தலைவனை அடிக்கடிக் காணும் வேட்கை பிரிவுக் காலத்தில் மிக்குக் காணப்படுவதாகும்.அவ் வேட்கையைப் புலப்படுத்துவது தலைவியின் உடலுறுப்புகளின் வேறுபாடாதலின் கிழவியின் உணர்ப என்றார்.

## பெண்ணியல்பு

**206. செறிவும் நிறைவும்[1] செம்மையுஞ் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான. (14)**

**ஆ. மொ.**

Self-restraint chastity, uprightness impartiality, knowledge and dearness are the characteristics of the lady.

**இளம்**

என் - எனின். இது பெண்டிர்க் குரியதோர் இயல்புணர்த்திற்று.

(இ-ள்) செறிவு என்பது-அடக்கம்
நிறைவு என்பது-அமைதி
செம்மை என்பது—மனங்கோடாமை
செப்பு என்பது-சொல்லுதல்
அறிவு என்பது-நன்மை பயப்பனவுந் தீமை
பயப்பனவும் அறிதல்.

1. நிறையும்-நச். பாடம்.

அருமை என்பது - உள்ளக் கருத்தறிதலருமை. இவை எல்லாம் பெண்பக்கத்தன என்றவாறு.

இதனாற் சொல்லியது மேற்சொல்லிய அறத்தொடு நிலைவகை இனிக் கூறுகின்ற வரைவுகடாதற்குப்[1] பகுதியும் உண்மை வகையானும் புனைந்துரைவகையானும் கூறுங்கால் இவை பேதையராகிய பெண்டிர்க்கு இயையுமோ என ஐயுற்றார்க்குக் கூறப்பட்டது.

**நச்**

இது, மறைபுலப்படாமல் ஒழுகுதல் இலக்கணமென்றற்கும் மறைபுலப்படுத்துதல் வழுவென்றற்குங் கூறுகின்றது.

(இ-ள்) செறிவும்-அடக்கமும், நிறைவும்-மறைபுலப்படாமல் நிறுத்தும் உள்ளமும், செம்மையும்-மனக்கோட்டமின்மையும், செப்பும்-களவின்கட் செய்யத் தகுவன கூறலும், அறிவும்-நன்மை பயப்பனவும் தீமை பயப்பனவும் அறிவித்தலும், அருமையும்-உள்ளக் கருத்தறித லருமையும், பெண்பாலான-இவையெல்லாம் பெண்பாற்குக் காரணங்கள் என்றவாறு.

இவையுடையளெனவே மறைபுலப்படுதற்கு உரியளல்லளென்பதூஉம் அதனைப் புலப்படுத்தலின் முற்கூறியன வழுவமைத்தனவுமாயிற்று. இவை வருஞ்சூத்திரத்திற்கும் ஒத்தலிற் சிங்கநோக்கு.

## வரைதல் வேட்கைப் பொருள்

**207.** **பொழுதும் ஆறுங் காப்புமென் றிவற்றின்**
**வழுவி னாகிய குற்றங் காட்டலும்**
**தன்னை யழிதலும் அவனூ றஞ்சலும்**
**இரவினும் பகலினும் நீவரல் என்றலும்**
**கிழவோன் தன்னை வாரல் என்றலும்**
**நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும்**
**புரைபட வந்த அன்னவை பிறவும்**
**வரைதல் வேட்கைப் பொருள என்ப. (15)**

**ஆ. மொ.**

They say that pointing out the harm arising from the failure of keeping appointed time, sual route and vigilance

---

1. வரைவு கடாதற் பகுதி என்றிருப்பின் நன்று.

blaming herself, fearing the harm which may happen to him, asking to lover to come during night and day. asking him not to come, and illustrating the good and bad out comings of the action of the same with reference to him and such others which may look indecent on the part of them lady-love and her maid are the expressions which indicate their desire for conducting the marriage.

பி.இ.நூ.

**இறையனார் அகப்பொருள்: 30.**

காமம் மிக்க கழிபடர் கிளவியும்
காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும்
ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவியும்
இரவினும் பகலினும் நீவரு கென்றலும்
கிழவோன் தன்னை வாரல் என்றலும்
தன்னுள் கையா றெய்திடு கிளவியும்
அன்ன மரபின் பிறவுந் தொகைஇத்
தன்னை யழிந்த கிளவி யெல்லாம்.
வரைதல் வேட்கைப் பொருள என்ப.

**நம்பி 164, இ.வி. 521.**

பருவரல்............
அலர்பார்த் துற்ற அச்சக் கிளவியும்
ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவியும்
காமம் மிக்க கழிபடர் கிளவியும்
தன்னுட் கையா றெல்திடு கிளவியும்
...............
வரைதல் வேட்கைப் பொருள என்ப.

**மாறன் அகப்பொருள் 136.**

மின் இடை............
அலர்பார்த் துற்ற அச்சந் தன்னுடன்
ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவியும்
காமம் மிக்க கழிபடர் கிளவியும்
தன்னுள் கையா றெய்திடு கிளவியும்
..............
மேதக வரைதல் வேட்கையின் விரியே.

**இளம்**

என்-எனின்.இது தோழி கூற்றிற் கூறப்பட்ட சில கிளவிக்குப் பயன் உணர்த்திற்று.

(இ-ள்) தலைமகன் வருகின்ற பொழுதும் நெறியும் ஊரின் கட் காவலும் என்று சொல்லப்பட்டவற்றின்கண் வரும் தப்பி னால் உளதாகுங் குற்றங் காட்டலும், தான் மனனழிந்து கூற லும், தலைமகட்கு வரும் இடையூறு கூறலும், தலைமகளைப் பகற் குறி விலக்கி இரவுக்குறி நீ வா என்றாலும், தலைமகனை வாராதொழியெனக் கூறலும், நன்மையாகவுந் தீமையாகவும் பிற பொருளை எடுத்துக் கூறலும், இத் தன்மையவாகிக் குற்றம் பயப்ப வந்த அத்தன்மைய பிறவும் புணர்ச்சி விருப்பமின்மை யால் கூறப்பட்டனவல்ல; வரைதல் வேண்டும் என்னும் பொரு ளையுடைய என்றவாறு.

இவையெல்லாந் தோழி கூற்றினுள் கூறப்பட்டன. ஆயின் ஈண்டோதிய தென்னை எனின், அவை வழுப்போலத் தோற்றும் என்பதனைக் கடைப்பிடித்து அன்பிற்கு மாறாகாது ஒரு பயன் படவந்ததென உணர்த்துதலே ஈண்டு ஓதப்பட்ட தென்ப. நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும் என்பது நாடும் ஊரும் இல்லுங் குடியும் என ஆண்டோதப்பட்டது. இவை வரை தல் வேட்கைப் பொருளவாமாறும் ஆண்டுக்காட்டப்பட்ட உதாரணத்தான் உணர்க.

**நச்**

இதுவுந் தோழிக்குந் தலைவிக்கும் உரியனவாகிய வழு வமைக்கின்றது.

(இ-ள்) பொழுதும் ஆறும் காப்பும் என்றிவற்றின் வழுவின் ஆகிய குற்றங்காட்டலும்-இராப்பொழுதும் அக்காலத்து வழியுங் கண்ணுறும் இடத்துள்ள காவலுமென்று கூறப்பட்டவை மூன்றி னது பழைய முறையிற் பிறழுதலால் தலைவற்குளதாகிய குற் றத்தை யுணர்த்தலும்.

இவை தலைவற்கு அச்சம் உளவாகக் கருதுதலும் அவனால் நிகழும் இன்பத்தைத் துன்பமாகக் கருதுதலும் உடையனவாயிற் றேனும் அன்பு பற்றிக் கூறலின் அமைந்தது. அப்பொழுதிற் றலைவனது செலவு ரைவு நிகழ்ந்துழியே இக்குற்றங் காட்டுவ தென்று கொள்க.

"மன்றுபா டவிந்து..." (அகம். 128)

என்பது பொழுது வழுவுதலிற் குற்றங்காட்டியது.

"ஈர்ந்த ணாடையை யெல்லி மாலையை
சோர்ந்துவீழ் கதுப்பினாள் செய்குறி நீவரி
னொளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்
களிறென வார்ப்பவ ரேனல்கா வலரே"[1]

(கலி, 52)

இது, காப்பினான் வழுவுணர்த்தியது.

தன்னை அழிதலும்-அவன் அக்காலத்து அவ்வழியில் தனியே வருவதற்கு யான் ஏதுவாயினேன் எனத் தன்னை அழிவு படுத்துரைத்தலும்:

"நீதவ றுடையையு மல்லை நின்வயி
னானா வரும் படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே"

(அகம். 72)

அவன் வரவினை உவவாது துன்பங்கூர்தல் வழுவாயினும் அதுவும் அவன் கண் அன்பாதலின் அமைத்தார்.

அவன் ஊறு அஞ்சலும்-அவ்வழியிடத்துத் தலைவற்கு வரும் ஏதமஞ்சுதலும்:

"அஞ்சுவல் வாழி யைய வாரிருட்
கொங்கிய ரீன்ற மைந்தின்
வெஞ்சின வுழுவை திரிதருங் காடே"

இஃது, அவனைப் புலி நலியுமென் றஞ்சியது.

---

1. பொருள்: தலைவ! பகற் காலந்து ஒழுக்கத்துக்கு ஏற்ப ஈரமான ஆடையுடையையாயும் இரவுப் புணர்ச்சிக்குரிய மாலையை யுடையையாயும சரிந்து தொங்கும் கூந்தலுடைய தலைவி செய்த இரவுக் குறியிடத்து நீ வருவையாயின், ஒளி விளங்கும் தீக் கொள்ளியுடையராய் கவண் உடையராய் வில்லுடையராய் நிற்கும் தினைப் புனங் காப்பவர்கள் நின்னை ஒரு களிறு வந்தது என ஆரவாரிப்பர். ஆதலின் வரவைத் தவிர்ந்து வரைந்து கொள்க-தோழி கூற்று.

''ஒரு நாள் விழும முறினும் வழிநாள்
வாழ்குவ ளல்ல ளென் றோழி.'' (அகம்.18)

என்பதும் அது.

ஆறின்னாமையாவது:-விலங்கு முதலியவற்றான் வரவிற்கு இடையீடு நிகழுமென்றஞ்சுதல். ஏத்தல், எளித்தலின் வேறாயிற்று. இது நன்குமதியாமையின் வழுவாயினும் அன்பு மிகுதியான் அமைத்தார்.

இரவினும் பகலினும் நீ வா என்றலும்-இராப்பொழுதின் கண்ணும் பகற்பொழுதின் கண்ணுந் தலைவனைக் குறியிடத்து வருகவெனத் தோழி கூறலும்:

''வல்வில் இளையரொ டெல்லிச் செல்லாது
சேந்தனை செலினே சிதைகுவ துண்டோ
பெண்ணை யோங்கிய வெண்மணற் படப்பை
யன்றி லகவு மாங்கட்
சிறுகுர னெய்தலெம் பெருங்கழி நாட்டே''[1]

(அகம். 120)

''பூவேய் புன்னையந் தண்பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே''[2]

(அகம். 240)

களவு அறிவுறுமென்று அஞ்சாது வருக வென்றலின் வழுவேனுந் தலைவி வருத்தம் பற்றிக் கூறலின் அமைத்தார்.

கிழவோன்றன்னை வாரல் என்றலும்-தோழியுந் தலைவியுந் தலைமை செய்துகொண்டு தலைவனை வாரற்க என்று கூறுதலும்:

தலைமை வழுவேனும் அன்பான் அமைத்தார்.

---

1. பொருள்: பனைமரம் ஓங்கியுள்ள வெண்மணல் தோட்டத்தில் அன்றிற் பறவை கூவும் அவ்விடத்தில் சிறிய கொத்தாக நெய்தல் மலரும் பெரிய உப்பங்கழியுடைய நாட்டின் தலைவ! நின்வலிய வில்லுடைய வீரரொடு இரவில் பயணம் கொள்ளாமல் தங்கிச் சென்றால் கெடுவது உண்டோ?

2. பொருள்: தலைவ! இவளைக் கூடிப்போதற்கு புன்னைப் பொழிலில் வருக. (தெய்ய-அசை)

''இரவு வார லைய விரவுவீ
யகலறை வரிக்குஞ் சாரற்
பகலும் பெறுதியிவ டடமென் றோளே''[1] (கலி.49)

இஃது, இரவுவாரலென்றது.

''பகல்வரிற் கவ்வை யஞ்சுதும்'' (அகம். 118)

என்றது பகல்வாரலென்றது.

''நல்வரை நாட நீவரின்
மெல்லிய லோருந் தான்வா ழலளே.''[2] (அகம்.12)

இஃது, இரவும் பகலும் வாரலென்றது.

நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்-பிறிதோர் பொருண்மேல் வைத்து நன்மையுந் தீமையுந் தலைவற்கேற்பக் கூறலும்.

''கழிபெருங் காதல ராயினுஞ் சான்றோர்
பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்''[3] (அகம்.112)

எனப் பிறர்மேல் வைத்துத் தலைவனை அறிவு கொளுத்தின மையின் வழுவாயமைந்தது.

''பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்''

எனவே புகழொடு வரூஉம் இன்பம் வெஃகுவரெனக் கொள்ளவைத்தலின் நன்மையுந் தீமையும் பிறிதின்மேல் வைத்துக் கூறிற்றாம்.

புரைபட வந்த அன்னவை பிறவும்-வழுப்பட வந்த இவை போல்வன பிறவும்:

---

1. தலைவ! இவளைக் கூடுதற்கு இரவில் வாராதே; பல மலர்கள் வீழ்ந்து அழகு செய்யும் பாறையுடைய சாரலில் பகற்காலத்தும் இவள் பெரிய மெல்லிய தோளைப் பெறுவாய்.

2. நல்ல மலை நாடனே, நீ இரவிலும் பகலிலும் வருவாய் ஆயின் மெல்லியலாகிய இவள் தான் வாழாள்.

3. பொருள்: சான்றோர் அடைந்தேயாக வேண்டும். என்னும் மிகப்பெரிய விருப்புடையாராயினும் பழியொடு வரும் இன்பத்தை விரும்பார்.

அவை ஊடற்கணின்றியுந் தலைவனைக் கொடியனென்ற லும் நொதுமலர் வரைகின்றாரென்றலும் அன்னை வெறியெடுக் கின்றாளென்றலும் பிறவுமாம்.

''பகையினோய் செய்தான்'' (கலி. 40)

என்பது ஊடற்கணின்றிக் கொடியனென்றது.

''தினையுண் கேழ விரிய'' என்னும் நற்றிணை (11) யுள்,
''யாவது, முயங்கல் பெறுகுவ னல்லன்
புலவிகொளிறீஇய தன் மலையினும் பெரிதே''

இது, நொதுமலர் வரைவு சிறைப்புறமாகக் கூறியது.

''கடம்புங் களிறும் பாடித் தொடங்குபு
தோடுந் தொடலையுந் கைக்கொண் டல்கலு
மாடிப் பாடின ளாக னன்றோ''[1] (அகம். 138)

என்பது தலைவர்க்கு வெறியாட்டுணர்த்தியது.

வரைதல் வேட்கைப் பொருள என்ப-தலைவன் வரைந்து கோடற்கண் நிகழும் விருப்பத்தைத் தமக்குப் பொருளாகவுடைய வென்றவாறு.

என்றது, வழுப்படக் கூறினும் வரைவுகாரணத்தாற் கூறலின் அமைக்க வென்றவாறாம்.

## வேட்கை மறுத்தல்

**208. வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல்
மரீஇய மருங்கின் உரித்தென மொழிப. (16)**

**ஆ. மொ.**

They say that the plain talk denying the desire is appropriate when they have become intimate.

---

1. பொருள்: வெறியாடுபவள் முருகன் கடம்பமாலையை யும் அவன் ஊரும் யானையையும் பாடித் தொடங்கி இதழ்களும் மாலைகளும் கைக்கொண்டு நாளும் ஆடியும் பாடியும் ஆக இருத்தல் நன்றோ-தலைவனிடம் தோழி கூறியது.

## இளம்

என்-எனின். இதுவும் தலைமகட்குந் தோழிக்கும் உரிய தோர் இயல்புணர்த்திற்று.

(இ-ள்) வரைதல் வேட்கைப் பொருளாற் கூறுதலை[1] மறுத்துப் பட்டாங்கு கூறிச் சொல்லுதல்[2] மருவிய பக்கத்தின் உரித் தென்றவாறு. மருவிய பக்கமாவது களவொழுக்கம் நீட்டித்த இடம். அவ்வழிப் பட்டாங்கு கூறுதலும் ஆம் என்றவாறு. எனவே மேற்கூறியவாறு கூறுதல் மருவாத வழி என்றவாறாம்.

'கொடிச்சி யின்குரல் கிளைசெத் தடுக்கத்துப்
பைங்குரல் ஏனல் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மால்வரை நாட வரைந்தனை கொண்மே''[3]

(ஐங்குறு. 289)

எனவரும்.

## நச்

இது, நடுவணைந்திணையல்லாத கைக்கிளை பெருந்திணைக் கட்படுவதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) வேட்கை மறுத்து - தம் மனத்து வேட்கையை மாற்றி, ஆங்குக் கிளந்து உரைத்தல் - இருவரும் எதிர்ப்பட்ட விடத்துத் தாம் ஆற்றின தன்மையைப் புலப்படக் கூறி ஒருவர் ஒருவர்க்கு அறிவித்தல், மரீஇய மருங்கின் உரித் தென் மொழிப - புலனெறி வழக்கஞ் செய்து மருவிப்போந்த கைக்கிளை பெருந்திணைக்கண் உரித்தென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்' (1) என அவை இருமருங்கும் நிற்றலின் ஈண்டு 'மருங்கு' என்றார்.

---

1. வேட்கைப் பொருளைத் தருமாறு குறிப்பாற் கூறுதலை.
2. பட்டாங்கு கூறிச் சொல்லுதல் - வெளிப்படையாகக் கூறுதல். கூறிச் சொல்லுதல் - கூறுதல்.
3. பொருள்: மலைநாடனே! கொடிச்சியாகிய தலைவி கிளிகடியும் குரலைத் தம் இனக்கிளியின் குரல் என்று கிளிகள் எல்லாம் தினைப் புனத்து வந்து கதிர்களைக் கொய்துவிடும் ஆதலின் இவள் காவல் தேவையில்லை என்று நீக்கி விடுவர் தமர்; ஆதலின் இவளை விரைவில் மணந்து செல்வாயாக-தோழிகூற்று.

''தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று''[1] (கலி.62)

இஃது அடியோர் தலைவராய வழித் தலைவி வேட்கை மறுத்துணர்த்தியது.

''எறித்த படைபோன் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன நிறையேரா லென்னைப்
பொறுக்கலா நோய் செய்தாய் பொறீஇ நிறுக்கல்லே
னீநல்கி னுண்டென் னுயிர்''[2] (கலி.94)

இவை அடியோர் தலைவராக வேட்கை மறுத்துணர்த்தியது. பெருந்திணை.

ஏனை வினைவல பாங்கினோர்க்கு வந்துழிக் காண்க. இவை கைகோளிரண்டன் கண்ணும் வழங்குதல் சிறுபான்மை யுரித்தென்று அகத்திணைக்கட்கூறலின் வழுவமைத்தார். 'ஒன்றென முடித்த' லான் மரீஇயவாறு ஏனையவற்றிற்குங் கொள்க.

''புள்ளிக் கள்வன் புனல்சேர் பொதுக்கம் போல்
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவு
மொள்ளிதழ் சோர்ந்தநின் கண்ணியு நல்லார்
சிரறுபு சீறச் சிவந்தநின் மார்புந்
தவறாதல் சாலாவோ கூறு''[3] (கலி.88)

---

1. பொருள்: பிறர்க்கு இன்னா செய்வது தமக்கு இனிதாகும் என்று பிறர்க்குக் கெடுதல் செய்வரோ? அது போல நீ நினக்கு இனிது என்று எனக்கு இன்னாமை செய்யலாமோ?

2. பொருள்: குள்ளனும் கூனியும் உறழ்ந்து பேசும்போது குள்ளன் கூறியது இது. கலப்பையில் தைத்த கொழுப் போல் ஓரிடம் வளைந்து முன்னே மடங்கி முறித்து விட்டாற் போன்ற அழகாலே எனக்குத் தாங்க முடியாத காமநோயைச் செய்தவளே, தாங்கி நிற்றல் ஆற்றேன். நீ இறங்கி வந்தால்தான் என் உயிர் இருக்கும்.

3. பொருள்: புள்ளிகளுடைய நண்டுகள் சென்றதால் நீர் அருகே அமைந்த கீறல்கள் போல் பரத்தையரின் கூரிய நகங்கள் பிளந்த வடுக்களும் அவர்தம் பற்களின் அடையாளங்களும் இதழ் வாடிய நின் மாலையும் அந் நல்லவர் நின்னொடு மாறுபட்டுக் கோபித்து அடிக்கச் சிவந்த மார்பும் ஆகியவை நின் தவறான பரத்தைமையைக் காட்டும் சான்றாகாவோ?

''குதிரையோ வீறியது'' (கலி. 96)

என வருவனவும் பிறவும் இழிந்தோர் கூற்றை[1] உயர்ந்தோர் கூறுவன: அவையும் அமைத்துக் கொள்க.

**சிவ**

இச்சூத்திரம் வரைதல் வேட்கையை வெளிப்படக் கூறுதலும் உண்டு என்கின்றது.

(இ-ள்) வரைதல் வேட்கையை முற்சூத்திரத்துக் கூறியது போல, பொழுதும் ஆறும் காப்பும் என்றவற்றின் வழுவினாகிய குற்றம் காட்டல் முதலியவற்றால் குறிப்பினால் கூறுதல் இன்றி வெளிப்படையாகவே கூறுதல் பொருந்தும் இடத்து உரியதாம் என்று கூறுவர் புலவர் என்றவாறு.

பொருந்தும் இடம் என்பது களவொழுக்கம் நீட்டிக்கும் இடம் அன்றி வேறில்லையாதலின் அதுவேயாம்.

நச்சினார்க்கினியர் மரீஇய மருங்கு என்பதற்கு ஐந்திணைக்கு முன்னும் பின்னுமாகி மருவிய பக்கம் எனக் கொண்டு கைக்கிளை பெருந்திணை என்பர். அவரது கருத்து வரைதல் வேண்டும் என வெளிப்படையாகக் கூறுதல் அகப்பொருட்குச் சிறந்த தன்று என்பது. அதனால் கைக்கிளை பெருந்திணைகளுக்கு உரியது என்றார். என்றாராயினும் ஒன்றென முடித்தலால் ஏனையவற்றிற்கும் கொள்க என்றார். இதனால் அகத்திணையிலும் வரைதல் வேட்கையை வெளிப்படையாகக் கிளத்தலை உடன்பட்டார் ஆவர்.

'வேட்கைமறுத்து' என்பதற்கு வரைதல் வேட்கைப்பொருள் தருமாறு குறிப்பாற் கூறுதலை மறுத்து என இளம்பூரணர் கொண்டதற்கு மாறாக நச்சினார்க்கினியர், தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் எப்போதும் அருகிலிருந்து காணுதல் வேண்டும் என்னும் தம்மனத்து வேட்கையை மாற்றி எனப் பொருள் கொண்டு அதற்கேற்ப 'கிளந்தாங் குரைத்தல்' என்பதை 'ஆங்குக் கிளந்துரைத்தல்' என மாற்றி இருவரும் எதிர்ப்பட்ட விடத்துத் தாம் ஆற்றின தன்மையைப் புலப்படக் கூறுதல் எனப் பொருள் உரைத்தார்.

---

1. பரத்தையர் தாக்க வடுக்கொள்ளல், பரத்தையரைக் குதிரை என்றல் போல்வன இழிந்தோர் கூறுவன; அவை உயர்ந்தோர் கூற்றில் வைத்துக் கூறப்பட்டன.

அகவொழுக்கம் கூறிவரும் இடத்தில் இடையே அகப்புற வொழுக்கம் கூறுதல் ஏலாது ஆதலின் அவர் உரை பொருந்தா தென்க. மேலும் முன் சூத்திரத்து முடிவில் வரைதல் வேட்கைப் பொருள என்ப எனமுடித்து இச்சூத்திரத்தில் 'வேட்கைமறுத்து' எனத் தொடங்குதலின் முன்னதின் தொடர்பாக வரைதல் வேட்கைப் பொருளை மறைத்து என்று பொருள் கொள்வதே சிறக்கும்.

**ஊர்தி**

**209. தேரும் யானையுங் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப. (17)**

**ஆ.மொ.**

They say that lovers will have car, elephant horse and such others as conveyances of riding for their journey.

**இளம்**

என்-எனின், இது தலைமகற்குரியதோர் மரபுணர்த்திற்று.

(இ-ள்) களவு காலத்துத் தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்து சேறலும் உரியர் என்றவாறு. களவின்கண் என்பது அதிகாரத்தான் வந்தது.[1]

''நெடுந்தேர் கடாஅய்த் தமியராய் வந்தோர்
கடுங்களிறு காணீரோ என்றீர்-கொடுங்குழையார்
யானை அதருள்ளி நிற்பரோ தம்புனத்து
ஏனல் கிளிகடிகு வார்''[2]

பிறவுமன்ன

---

1. 'அறத்தொடு நிற்கும் காலத்தன்றி' (11) என்னும் சூத்திரம் முதல் முன் சூத்திரம் வரை களவு நிகழ்ச்சியே கூறி வந்தமையின் இச்சூத்திரமும் களவுபற்றியதே என்பார் அதிகாரத்தான் வந்தது என்றார்.

2. பொருள்: நெடியதேர் செலுத்தித் தனித்து வந்து எம்மைப் பார்த்து ஓர் பெரிய களிறு இவ்வழிவந்ததோ என்கின்றீர்; தினைப்புனம் காப்பவராகிய குழையணிந்த மகளிர் கிளிகளைக் கடிவதை விட்டு யானைவரும் வழியைப் பார்த்து நிற்பரோ? கூறுமின்-தோழி கூற்று.

''ஊர்ந்தன ரியங்கலு முரியர்'' என்றமையால் தனிவருதல் பெரும்பான்மை. இதனை எச்சவும்மையாக்கி வையமூர்தலும் இளையரோடு வருதலுங் கொள்க.

''வல்வே லிளையரொடெல்லிச் செல்லாது''[1] *(அகம்.120)* எனவரும்.

பிறவுமன்ன. இதனால் சொல்லியது பெரியார் இவ்வாறு செய்வார் எனவுங் கூறியவாறாம்.

**நச்**

இது, களவொழுக்கத்துக்கு மறுதலையாயதோர் வழுவமைக்கின்றது.

*(இ-ள்)* தேர் முதலியவற்றையும் பிறவூர்திகளையும் ஏறிச் சென்று கூடுதலையும் உரியர் தலைவரென்று கூறுவர் புலவர் என்றவாறு.

'பிற' ஆவன கோவேறு கழுதையுஞ் சிவிகையும் முதலியனவாம். இது செல்வக் குறைபாடின்மை கூறுதலான் அமைந்தது.

''குறியின்றிப் பன்னாணின் கடுந்திண்டேர் வருபதங்கண்
டெறிதிரை யிமிழ்கான் லெதிர்கொண்டா ளென்பதோ
அறிவஞ ருழந்தேங்கி யாய்நலம் வறிதாகச்
செறிவளை தோளூர லிவளைநீ துறந்ததை''[2]

*(கலி.127)*

''நிலவுமணற் கொட்குமோர் தேருண் டனவே''[3]

*(அகம். 20)*

---

1. வலிய வேலுடைய இளையரோடு பகலில் செல்லாமல்.
2. பொருள்: அறிவோடு துன்புற்று ஏங்கி ஆய்ந்த அழகு வறிதாகும்படி செறிந்தவளையல் தோளினின்றும் கழல நீ இவளைத் துறந்தது, வீசும் அலையொலிக்கும் கடற் கானலிடத்து குறியிடம் என்பதில்லாமலே பலநாளும் நின் விரையும் திண்ணிய தேர் வரும் காலங்களைப் பார்த்திருந்து எதிர்கொண்டாள் என்பதற்காகவா?- தோழி தலைவனிடம் கூறியது.
3. நிலவு போலும் வெள்ளிய மணலிற் சுழலும் ஓர் தேர் உண்டு.

''கடுமான் பரிய கதழ்பரி கடைஇ
நடுநாள் வரூஉம்''[1] (நற். 149)

''கழிச்சுறா வெறிந்த புட்டா ளத்திரி
நெடுநீ ரிருங்கழிப் பரிமெலிந் தசைஇ''[2]
(அகம்.120)

எனவரும். ஏனைய வந்துழிக் காண்க.

உம்மையான், இளையரோடு வந்து தனித்துக் கூடுதலுங் கொள்க.

''வல்வி விளையரொ டெல்லிச் செல்லாது
சேந்தனை செலினே சிதைகுவ துண்டோ''
(அகம். 120)

என்றாற் போல்வன கொள்க.

இதனானே உடன்போக்கிலும்,

''கடுங்கட் காளையொடு நெடுந்தே ரேறி
கோள்வல் வேங்கை மலைபிறக் கொழிய
வேறுபல் லருஞ்சுர மிறந்தன ளவளெனக்
கூறுமின் வாழியோ வாறுசென் மாக்கள்
நற்றோ ணயந்துபா ராட்டி
யெற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே''[3]
(ஐங்குறு. 385)

எனத் தேர் முதலிய ஏறிப்போதலுங் கொள்க.

**சிவ**

தலைவன் அரசிளங் குமரனாயின் அல்லது பெருஞ் செல்வனாயின் அவன் தேர் யானை குதிரை முதலிய ஊர்திகளுடைய

---

1. கடிய விலங்குகள் ஓடும்படி விரையும் குதிரையைச் செலுத்தி நடு இரவில் வருவன்.

2. பொருள்: உப்பங்கழியிடத்துச் சுறா மீனால் எறியப் பட்ட புண்ணுடைய காலுடைய கோவெறு கழுதை மிக்க நீருள்ள கழியிடமாக விரைவு தளர்ந்து தங்கி.

3. பொருள்: இவ்வழிச் செல்லும் மக்களே! என் நல்ல தோளை விரும்பிப் பாராட்டி என்னைக் காணாமல் இருந்த அறனில்லாத தாய்க்கு ''கரிய கண்ணுடைய காளையொருவனுடன் நெடிய தேரில் ஏறி புலி வழங்கும் மலைபிற்படப் பல அரிய வெவ்வேறான சுரவழிகளைக் கடந்தனள் நின்மகள்'' எனக் கூறுமின்-இடைச் சுரத்துத் தலைவி கூறியது.

னாவன் ஆதலின் அவன் களவொழுக்கத்தில் ஒன்றையூர்ந்து வரு வனோ எனின் வருதலும் உண்டு என்கின்றது இச்சூத்திரம்.

அவ்வாறு ஊர்ந்து வந்து களவிற் கூடிச் செல்வனாயின் பலரும் அறியக்கூடும் ஆதலின் அவ்வாறு ஊர்ந்து வாராமையே பெரும்பான்மை என்பார் 'ஊர்ந்தனர் இயங்கலும்' என உம்மை கொடுத்துக் கூறினார், இளம்பூரணர். இதனாற் சொல்லியது பெரியார் இவ்வாறு செய்வார் எனவும் கூறியவாறாம் பெரியார் என்றது செல்வரை.

> ''களவொழுக்கம் ஒழுகும் தலைவர் ஊர்திமுதலியன இன்றித் தனித்துச் செல்லுதலே களவு வெளிப்படா மைக்கு ஏதுவாம். ஆயினும் தேர் முதலிய ஊர்திகளி லேயே செல்லும் பழக்கம் உடைய தலைவர்கள் ஊர்தி முதலியன இன்றித் தனித்துச் செல்வாராயின் அச்செயல் 'ஊர்தியிற் செல்லும் இவர் ஊர்தியின்றித் தனித்துச் செல்வது ஏன்?' என்றதோர் ஐயம் ஊர்மக்களிடையே தோன்றிக் களவு வெளிப்படுதற்கும் ஏதுவாமாகலின் தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்றார் ஆசிரியர்''

என வெள்ளைவாரணனார் கூறுவதும் கொள்க.

''கடுங்கட் காளையொடு நெடுந்தேர் ஏறி-சுரம் இறந்தனள் அவள் எனக் கூறுமின்...யாய்க்கே' எனவரும் ஐங்குறுநூற்றுப் பாடலில் (385) தலைவி உடன்போக்கில் தான் தலைவனின் தேர் ஏறிச் சென்றதாகக் குறிப்பிடுவதன் மூலம் கால் பரல் உறுத்த நடவாமல் மகிழ்வாகவே செல்வதையும் தேர் ஊரும் செல்வனுடன் செல்வதையும் குறிப்பிட்டாள். இவ்வாறுபொருட் செறிவுபடக் கூறுதற்கும் ஊர்தியிற் செல்வதாகக் கூறிச் செய்யுள் இயற்றினர் புலவர் ஆதலின் இது செய்யுட்குரிய மரபு என்ன லும் ஆகும்.

## இலக்கணை

**210. உண்டற் குரிய அல்லாப் பொருளை**
**உண்டன போலக் கூறலும் மரபே. (18)**

**ஆ. மொ.**

It is in accordance with usage to describe things which have no capacity to eat as said to have eaten.

**இளம்**

என்-எனின். இஃது ஒருசார் வழுவமைத்தலை நுதலிற்று.

(இ-ள்) உண்டற்றொழிலுக் குரியவல்லாத பொருளை உண் டனவாகக் கூறலும் மரபென்றவாறு.

''பசலையால் உணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்''
(கலி.15)

எனவும்,

''நீலமுண்டதுகில்'' எனவும்

''கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று''
(குறள். 1244)

எனவும் வரும்.

இது சொல்லின்கட் கிடந்ததோ ரொழிபு.

**நச்**

இது, சொல்வேறுபட்டு பொருளுணர்த்தும் வழுவமைக் கின்றது.

(இ-ள்) உண்டற்கு உரிய அல்லாப் பொருளை-உண்டற் றொழிலை நிகழ்த்துதற்கு உரியவல்லாத பொருளை, உண்டன போலக் கூறலும் மரபே-அத்தொழிலை நிகழ்த்தினவாகப் புல னெறி வழக்கஞ் செய்தலும் மரபு என்றவாறு அது.

''பசலையா லுணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்''

எனவரும்.

இதன்கட் சொல்வழுவன்றிச் செய்யா மரபிற் றொழிற் படுத்து அடக்கலும் அமைத்தார். இன்னும், உய்த்துக் கொண் டுணர்தல் (665) என்பதனான் உண்ணப்படுதற்குரிய வல்லாத பொருள்தனைப் பிறர் உண்ணப்பட்டதுபோலக் கூறலும் மரபா மென்பது பொருளாக் கொள்க. அவை,

''தோணல முண்டு துறக்கப் பட்டோர்
வேணீ ருண்ட குடையோ ரன்னர்;
நல்குநர் புரிந்து நலனுணப் பட்டோ
ரல்குநர் போகிய வூரோ ரன்னர்;
கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்
சூடுந ரிட்ட பூவோ ரன்னர்''[1]

(கலி. 23)

என வரும். பிறவுங் கொள்க.

உம்மையாற் பிறதொழில் புற்றி வருவனவுங் கொள்க.

''கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று'' (குறள். 1244)

''புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு''[2] (குறள். 1187)

''வருத்தின் வான்றோய் வற்றே காமம்''

(குறுந். 1102)

என்றாற் போல்வனவுங் கொள்க.

**சிவ**

இச்சூத்திரம் செய்யா மரபிற் றொழிற் படுத்தடக்கியும் (2) என்பதன் புறனடை கூறுகின்றது.

(இ-ள்) உண்ணவோ உண்ணப்படவோ செய்தற்குரிமையில்லா பொருள்களை வினை முதலாய் உண்டன போலவும் செய்ப்படு

---

1. பொருள்: காதலனால் தம் தோள் நலனை உண்டு துறக்கப்பட்டவர்கள் விரும்பி நீருண்டு எறியப்பட்ட பனங்குடையைப் போல்வர்.

   தமக்கு இன்பம் தந்தவரால் விரும்பி தம் நலம் உண்ணப் பட்டவர் பின் அவரால் விடப்படுதலின் குடியிருந்தோர் நீங்கிய ஊரைப் போல்வர்.

   தம்மைக் கூடியகாதலால் விரும்பித் தம் குணம் உணப் பட்டவர் பின் அவரால் விடப்படுதலின் சூடுநர்பின் கழித்து விட்டமலர் போல்வர்.

2. பொருள்: காதலனுடன் தழுவிக் கிடந்தயான் சிறிது பெயர்ந்தேன்; அப்பொழுதே பசலை என்னை அள்ளிக் கொள்வது போலும் அத்தன்மைய தாயிற்று.

பொருளாய் உண்ணப் படுவன போலவும் கூறுதல் செய்யுளில் மரபேயாகும்.

'பசலையால் தோள் உணப்பட்டது' என்புழிப் பசலை உண்டது போலவும் தோள் உணப்பட்டது போலவும் கூறியவாறு காண்க. ''பசலையால் உணப்பட்டு'' என்பது கலித்தொகை (15).

## காப்பு

**211. பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே**
**காப்புக் கைம் மிகுதல் உண்மை யான**
**அன்பே யறனே யின்ப நாணொடு**
**துறந்த ஒழுக்கம் பழித்தன் றாகலின்**
**ஒன்றும் வேண்டா காப்பி னுள்ளே. (19)**

**ஆ. மொ.**

The saying (of the maid), for lessening the worries of the lady-love caused by the militant watch over her, that the cause of the delay for marriage on the part of the lover is want of wealth, is not inappropriate.

As the conduct, devoid of love virtue pleasure and modesty. is not to be discouraged during the period subjected to vigilance, nothing is to be observed as formality.

**இளம்**

என்-எனின். இது களவுக் காலத்துத் தலைமகற் குரியதோர் இயல்புணர்த்திற்று.

(இ-ள்) பொருள் வயிற் பிரிதல் வேண்டும் எனக் கூறுதலும் கடியப்படாது, தலைமகளைத் தமர் காக்குங் காவல் மிகுதியுள்ள வழி இவை நீங்கப் பெறும் என்றவாறு.

இதனாற் சொல்லியது அன்பையும் அறத்தையும் இன்பத்தையும் நினைத்து வருத்தப் பெறான் எனவும். நாணத்தைக் கைவிட்டுத் தமர் கொடுக்குமாறு முயல வேண்டுமென்பதூஉம் கூறியவாறாம். இவை ஒருவழித்தணத்தற்கண் நிகழ்வன.

நச்

"பொருளென..........யான"

இது களவின்கண் தோழிக்குரியதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) பொருள் என மொழிதலும் வரைநிலை இன்றே-எமர் வரைவு நேராமைக்குக் காரணம். பொருள் வேண்டியெனத் தோழி கூறலும் நீக்கு நிலைமையின்று, காப்புக் கைம்மிகுதல் உண்மையான-காவன் மிகுதியால் தலைவிக்கு வருத்தங் கை கடத்தலுண்டாகையால் என்றவாறு.

உம்மையால், பொருளேயன்றி ஊரும் காடும் மலையும் முதலியன வேண்டுவரென்றலுங் கொள்க.

"சான்றோர் வருந்திய வருத்தமு நுமது
வான்றோய் வன்னகுடிமையு நோக்கித்
திருமணி வரன்றுங் குன்றங் கொண்டியவள்
வருமுலை யாகம் வழங்கி னன்றே
யஃதான் றடைபொருள் கருதுவி ராயிற் குடையொடு
கழுமலந் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவின் வஞ்சியோ
டுள்ளி விழவி னுறந்தையுஞ் சிறிதே"[1]

இதனுள் பொருள் விரும்பியவாறும் குன்றம் விரும்பிய வாறுங் காண்க. அடைபொருள்-இவள் நும்பால் அடைதற்குக் காரணமாகிய பொருளென்க.

"அன்பே யறனே... .......னுள்ளே"

---

1. பொருள்: தலைவனின் சான்றோர் மணம் பேசிப் பல் கால் வந்து சென்ற வருத்தமும் உங்கள் வானளாவிய உயர் குடிமையும் பார்த்து அவர்கள் பரிசமாகத் தரும் அழகிய மணிகளை அருவி கொழிக்கும் படியான மலையைப் பெற்றுக் கொண்டு நும் மகளாகிய இவளின் வளரும் முலையுடைய உடம்பை மணம் செய்து கொடுத்தல் மிக நல்லது. அஃதல்லாமல் மேலும் மிக்க பொருளையே பரிசமாகக் கருதுவீர்களானால் கொற்றக் குடையுடன் சென்று கழுமலம் என்னும் ஊரை வென்று கொண்டு வந்த நல்ல தேருடைய செம்பியனது பங்குனி விழா நடைபெறும் வஞ்சி மாநகரோடு உள்ளி விழா நடைபெறும் உறையூரும் சிறிதளவினலேயாகும்-வரைவு உடன் படுமாறு தந்தை தன்னையர்க்குத் தோழி கூறியது.

இது, தோழி பொருளென மொழிதற்குத் தலைவியும் உடன் பட்டு நிற்றற்குரியளென்றலின் மேலதற்கோர் புறனடை.

(இ-ள்) காப்பினுள்-காவன் மிகுதியால் தலைவிக்கு வருத்தம் நிகழ்ந்தவிடத்து, அன்பே அறனே இன்பம் நாணொடு துறந்த ஒழுக்கம்; தலைவன் கண் நிகழும் அன்பும், குடிப்பிறந்தோர் ஒழுகும் அறனும் தமக்கு இன்றியமையா இன்பமும் நாணும் அகன்ற ஒழுகலாறு. பழித்தன்று ஆதலின் ஒன்றும்-பழியுடைத் தன்று ஆகையினாலே புலனெறி வழக்கிற்குப் பொருந்தும், வேண்டா-அவற்றை வழுவாமென்று களையல் வேண்டா என்றவாறு.

எனவே பொருளென மொழிதல் தலைவிக்கும் உடன்பா டென்று அமைத்தாராயிற்று.

**சிவ**

இச்சூத்திரம் முன் இரண்டடிகளும் ஒரு சூத்திரமாகவும் பின்னிரண்டடிகள் ஒரு சூத்திரமாகவும் நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டது. இளம்பூரணர் உரையும் இருசூத்திரமாகக் கொள்ளுமாறு அமைந்ததாயினும் தெளிவாக இல்லை.

பொருளென மொழிதலும் என்பதற்குத் 'தலைவன் களவுக் காலத்துக் காப்புக் கைம்மிக்க போது பொருள்வயிற்பிரிய விரும்புகிறேன் எனக் கூறுதலும்' எனவும்' அன்பே அறனே... காப்பினுள்ளே என்பதற்குக் காப்புக் கைம்மிக்க போது அன்பும் அறனும் இன்பமும் நாணும் துறந்த வொழுக்கம் பழிக்கப்பட்டது ஆதலின் அவைகள் தலைவனுக்கு நீங்கப்பெறும் எனவும் உரை கூறி, 'இதனாற் சொல்லியது அன்பையும் அறத்தையும் இன்பத் தையும் நினைந்து வருந்தப் பெறான் எனவும், நாணத்தைக் கை விட்டுத் தமர்கொடுக்குமாறு முயல வேண்டும் என்பதூஉம் கூறிய வாறாம்' எனவும் கூறினார்.

நச்சினார்க்கினியர் 'பொருளென மொழிதலும்' என்பதற்கு 'எமர் வரைவு நேராமைக்குக் காரணம் பொருள் வேண்டி எனத் தோழி கூறுதல்' எனவும், அன்பே அறனே...காப்பினுள்ளே என்பதற்கு அன்பும் அறனும் இன்பமும் நாணும் அகன்ற ஒழுக் கம் உலகத்தாரால் பழிக்கப்பட்டதன்று ஆதலின் புலனெறி (செய்யுள்) வழக்குக்குப் பொருந்தும். அதனால் அவை வேண்டா எனக் 'கடியப்படா' எனவும் கூறினர்.

இருவர் கருத்துமே இச்சூத்திரப் பொருளாகக் கொள்ள லாம். தலைவன் பொருள்வயிற் பிரிவேன் என மொழிதலும் தோழி எமர்வரைவு மறுப்பது பொருள் வேண்டி என மொழி தலும் அப்போது தலைவன் அன்பு முதலியவற்றை விடுதல் தக்கது எனக் கோடலும் தோழி அன்பு முதலியவற்றைக் கொண்டு கூறுவது உலகம் பழித்ததன்றாதலின் அவை புலனெறி வழக்குக்குரியவாம் எனக் கோடலும்ஆம் என இரு கருத்தையும் பொருளாகக் கொள்ளலாம்.

## சுரவழி

**212. சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே. (20)**

**ஆ. மொ.**

To say that it (the route of his journey) is desert cannot be avoided.

**இளம்**

என்-எனின் இதுவும் தலைமகற்குரியதோர் திறன் உணர்த் திற்று.

(இ-ள்) தலைமகன் பொருள்வயிற் பிரியும்வழி உடன் போக்குக் கருதிய தலைமகட்கு யான் போகின்ற நெறி கல்லுங் கரடுமாகிய சுரம் எனக் கூறுதலும் நீக்கப்படாது என்றவாறு. இதனாற் சொல்லியது காப்பு மிகுதிக்கண் வருத்தமுறுந் தலை மகளை உடன் கொண்டு போதல் தக்கது என்பார்க்கு நெறி யருமை கூறி விலக்கவும் பெறும் என்றவாறு.

**நச்**

இது, தோழிக்குந் தலைவிக்கு முரியதோர் வழுவமைக் கின்றது.

(இ-ள்) தலைவன் பிரியக் கருதிய வழித்தோழியுந் தலைவியும் நீ போகின்றவிடம் எல்லாவற்றானும் போதற்கரிய நிலமெனக் கூறி விலக்குதலும் நீக்கு நிலைமையின்று என்றவாறு.

(உ-ம்) "இடுமு ணெடுவேலி போலக் கொலைவர்
கொடுமாந் தேய்த்தார் பதுக்கை நிரைத்த

கடுநவை யாராற் றறுசுனை முற்றி
யுடங்குநீர் வேட்ட வுடம்புயங் கியானை
கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப் பட்டு
வெறிநிரை வேறாகச் சார்ச்சார லோடி
நெறிமயக் குற்ற நிரம்பாநீ டத்தஞ்
சிறுநனி நீதுஞ்சி யேற்பினு மஞ்சு
நறுநுத னீத்துப் பொருள்வயிற் செல்வோ
யுரனுடை யுள்ளத்தை''[1] (கலி.12)

எனச் சுரமெனக் கூறினாள்.[2]

தலைவியுந் தோழியாற் கூற்று நிகழ்த்தும். சூத்திரம் பொதுப் படக் கிடத்தலின் தலைவி உடன்போகக் கருதியவழித் தலைவனுஞ் சுரமெனக் கூறுதல் கொள்க.

''எல்வளை யெம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியன் மேவந்த சீறடித் தாமரை
யல்லிசே ராயித ழரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறி னவ்வடி கறுக்குந வல்லவோ''[3] (கலி.13)

எனவரும்.

---

1. பொருள்: வளைவும் சார்ந்தாரைக் குத்துதலும் உடைய இடப்பட்டமுள்வேலி போன்ற கொலைஞரின் வளைந்ததும் சார்ந்தாரைக் கொல்வதுமான வில்லால் கொல்லப் பட்டவர் உடம்புகளைச் சருகுகள் குவியலில் மூடிய கொடிய குற்றமான வழியில் நீரற்றசுனையைச் சூழ்ந்து வருந்துதலுடைய நீரைவேட்ட உடம்பு இளைத்த யானைக் கூட்டங்கள்கடிய தாகத்தால் பதிந்து நீர் உண்ணக் கைகளை வைத்த மாத்திரத்தில் வெப்பத்தால் சூடு பட்டு ஒழுங்குபட்ட வரிசை குலையும்படி வேறு வேறாக மலைச் சாரல்தோறும் ஓடியதால் வழிகள் மறைக்கப்பட்டுள்ள நீண்டசுரவழியே,சிறிதுகாலம் தாழ்த்தித் துயின்று எழுந்தாலும் ஏதோ ஓர் எண்ணம் காதலரிடையே உண்டு என்று அஞ்சும் தலைவியைப் பிரிந்து பொருள் வயிற்பிரிவோனே! நீ உறுதியான உள்ளம் உடையை தான்-இதுதோழி கூற்று.
2. சுரம்எனக் கூறினாள்-சுரம் கொடியது எனக் கூறினாள்.
3. பொருள்: ஒளிவளையலுடையாய்! என்னொடு நீ சுரவழிவரின் மெல்லிய இயல்பு பொருந்திய நின் சிறிய அடிகள், பரற்கற்களால் உறுத்தப் பெறின் தாமரையின் இதழ்கள் செல்வரக்குத் தோய்ந்தாற்போல விரல்கள் சிவக்கும் அல்லவோ?

**சிவ**

இச் சூத்திரம் சுரத்தருமை கூறி விலக்குவது கூறுகின்றது.

(இ-ள்) களவில் பொருள்வயிற் பிரியுங்கால் தலைவியையும் உடன் கொண்டு செல்க என்னும் தோழிக்குச் சுரத்தினது கடத்தற்கரிய நிலையைத் தலைவன் கூறி விலக்குதலும் கற்பில் தலைவன் பொருள்வயிற் பிரியக்கருதின் தோழியும் தலைவியும் நீ போகின்ற இடம் கொடிய சுரவழி (பாலைவழி)யுடையதாகும் ஆதலின் போதற்கரிதாகும் எனக்கூறிவிலக்குதலும் ஆகிய கூற்றுகள் நீக்கும் நிலைமைய அல்ல என்றவாறு.

## செய்யுள் வழக்கு

**213. உயர்ந்தோர் கிளவி[1] வழக்கொடு புணர்தலின்**
**வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே. (21)**

**ஆ.மொ.**

The Composition of literature must conform to the tradition for the sayings of the great men gain currency as the tradition of the time.

**இளம்**

என்-எனின் இதுவுமோர் மரபு உணர்த்திற்று.

(இ-ள்) உயர்ந்தோர் கூற்று வழக்கு வழிப்படுதலின் வழக்குப்படுதல் செய்யுட்குக் கடன் என்றவாறு.

எனவே வழக்கழியவருவன செய்யுட்கண் வரப்பெறா என்றவாறு. இதனானே மேலதிகாரத்திற் கூறிய சொல்லும் இவ்வதிகாரத்திற் கூறுதற் கியன்ற பொருளும் வழக்கொடு புணர்ந்தனவே செய்யுட்கண் வருவன; புணரா தன செய்யுட்கண் வரப்பெறா என்றவாறாம். இன்னும்இந்நூலகத்து அகப்பொருளாகவும் புறப்பொருளாகவும் எடுத்தோதப் பட்டதன்றி உயர்ந்தோர் வழக்கொடு பொருந்தி வருவனவெல்லாஞ்[2] செய்யுட்குப் பொருளாகப் புணர்க்க என வெஞ்சிய துணர்த்தியவாறுமாம். உயர்ந்

---

1. கிளவியும்-நச். பாடம்
2. வருவன வெல்லாம்-அவ்வக் காலங்களில் புதியனவாக வருவனவெல்லாம்.

தோர் வழக்கென்றமையானும், பொருளு மின்பமும்[1] கொடா மல் மூன்றினுளொன்று பயப்பக் கூறுதல் கொள்க.

**நச்.**

இது, முன்னர் உலகியல் வழக்கென்றது, செய்யுட்கா மென்று அமைக்கின்றது.

(இ-ள்) உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்- உயர்ந்த மக்கள் கூறுங் கூற்றும் வேத நெறியோடு கூடுதலின், வழக்கு வழிப்படுத்தல் செய்யுட்குக்கடனே-அவ்வழக்கினது நெறி யிலே நடத்தல் செய்யுட்கு முறைமை என்றவாறு.

'வழக்கெனப் படுவது' (647) என்னும் மரபியற் சூத்திரத் தான் வழக்கு உயர்ந்தோர் கண்ணதாயிற்று. அவர் அகத்தியன் முதலியோ ரென்பது பாயிரத்துட் கூறினாம். அவை சான்றோர் செய்யுளுட் காண்க. இதனை மேலைச் சூத்திரத்திற்கும் எய்து விக்க.

**சிவ**

இச்சூத்திரம் செய்யுள் மரபு ஒன்று கூறுகின்றது.

(இ-ள்) அவ்வக் காலங்களில் உயர்ந்தோர் கூறும் கூற்றுகள் உயர் வழக்கொடு சேர்தலின் அவர் கூற்றுகளை செய்யுள் வழக் கில் படுத்துச் செய்யுள் செய்தல் செய்யுள் செய்வார்க்குக் கடப் பாடாகும் என்றவாறு.

வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான (மரபியல்)

எனவரும்மரபியற் சூத்திரம் வழக்காவதுயாது என விளக்குவது. உயர்ந்தோர் செய்யும் செயல்கள் எல்லாம் அவர்கூறும் கூற்றெல் லாம் வழக்கு எனக்கொள்ளப்படும் என்பது அச்சூத்திரம்.இச்சூத் திரம் அவ்வுயர்ந்தோர் கூறும் கூற்றுகள் உலகம் ஏற்கும் வழக் காக அமைதலின் அவற்றைச் செய்யுளில் அமைக்கலாம் என் கின்றது. மரபியற் சூத்திரம் முறையான வழக்கைக் குறிக்கும். இச்சூத்திரம் வழுவாகக் காணப்படும் வழக்குகளும் உயர்ந்தோர் கூறின் செய்யுளில் அமைக்கப்படும் என்கின்றது.

---

1. பொருளும் இன்பமும் அறனும் கெடாமல் என்றிருத்தல் நன்று.

## வழக்காகாமை

**214. அறக்கழி வுடையன பொருட்பயன் வரினே[1]
வழக்கென வழங்கலும் பழித்த தென்ப[2]. (22)**

**ஆ. மொ.**

If those themes which are to be rejected as unworthy of moral code appear to be useful because of their content in dealing with the love, they may be allowed as usages and such usage is not to be depreciated.

## இளம்

என்-எனின். மேலதற்கோர் புறனடை.

(இ-ள்) அறத்திற் கழிவுடையன பொருட்குப் பயன்படவரின் அதனை வழக்கென்று வழங்குதலும் பழித்ததென்றவாறு.

பொருளாவது அகப்பொருளும் புறப்பொருளும். அறத்திற் கழிவு வரும் அகப்பொருளாவது பிறன்மனைக் கூட்டம்.

பொருட்பயன் வருதலாவது அவராலே பொருள் பெறுதல். அவ்விடத்து இன்பமும் பொருளும் பயப்பினும் அதனை வழங்குதலும் பழிக்கப்பட்ட தென்றவாறு. உம்மை முற்றும்மையாக லான் வழக்கென் றுரையற்க என்றவாறு.

''எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்''[3] (குறள். 144)

என வரும்.

புறப்பொருட்கண் அறக்கழி வுடையன பகைவர் தேஎத்து நிரைகோடலும் அழித்தலும் போலப் பொருட்பயன் காரணத் தான் நட்டோர் தேஎத்துஞ் செயல்-இவையும் பொருள் பயப் பினும் வழக்கென வழங்குத லாகா என்றவாறு. இதுவும் ஓர் முகத்தான் நீதி கூறியவாறு.

---

1. பொருட் பயன்படவரின்-பாடம்
2. பழித்தன் றென்ப-பாடம்
3. பொருள்: தினையளவேனும் ஆராயாது பிறன் மனைவியின் பால் செல்வானாயின் ஒருவன் அவன் எத்துணைப் பெரியவனாயினும் என்ன பயன்?

''பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை''[1] (குறள். 657)

என வரும்.

**நச்**

இஃது, உலகியல் வழக்கன்றிப் பொருள் கூறினும் அமைக வென்கின்றது.

(இ-ள்) அறக்கழிவு உடையன-உலக வழக்கத்திற்குப் பொருத்த மில்லாத கூற்றுக்கள், பொருட் பயம் படவரின்-அகப் பொருட்குப் பயமுடைத்தாக வருமாயின், வழக்கென வழங் கலும்-அவற்றை வழக்கென்றே புலனெறி வழக்கஞ் செய்தலும், பழித்தன்று என்ப-பழியுடைத் தன்றென்று கூறுவாராசிரியர் என்றவாறு.

தலைவன் குறையுற்று நிற்கின்றவாற்றைத் தோழி தலைவிக் குக் கூறுங்கால், தன்னை அவன் நயந்தான் போலத் தலைவிக்குக் கூறுவனவும், 'பொய்யாக வீழ்ந்தே னவன் மார்பின்' (கலி. 37) எனப் படைத்து மொழிவனவும், தலைவி 'காமக் கிழவ னுள் வழிப் படுதலும்', 'தாவி னன்மொழி கிழவி கிளப்பினும்' (113) போல்வன பிறவும் அறக்கழிவுடையனவாம். தலைவி தனக்கு மறை புலப்படுத்தாது வருந்துகின்ற காலத்து அதனைத் தனக்குப் புலப்படுவித்துக் கொண்டே அவளை ஆற்றுவித்தற் பொருட்டு அறக்கழி வுடையன கூறலின் அவை பொருட்குப் பயன்றந்தன வாம்.

''நெருந லெல்லை யேனற் றோன்றி'' (அகம். 32)
என்பதனுள்,

''சிறுபுறங் கவையின னாக வதற்கொண்
டிகுபெயன் மண்ணின் ஞெகிழ்பஞ ருற்றவென்
னுள்ளவ னறித லஞ்சி யுள்ளில்
கடிய கூறிக் கைபிணி விடாஅ''[2]

---

1. பொருள்: பழிமேற்கொண்டு ஈட்டிய செல்வத்தைக் காட்டிலும் அவ்வாறு செய்யாத சான்றோரது மிக்க வறுமையே சிறந்ததாகும்.

2. பொருள்:''நேற்றைப் பொழுது தினைப்புனத்தில் வந்து என் சிறிய புறமுதுகைத் தழுவினானாக அதனால் மழைத் துளியேற்கும் மணல்போல நெகிழ்ந்து துன்புற்ற

எனத் தலைவன் தன்னை நயந்தானென இவள் கொண்டாள் கொல்லெனத் தலைவி கருதுமாற்றால் தோழி கூறவே தலைவி மறை புலப்படுத்துவளென்பது பயனாயிற்று.

''கயமல ருண்கண்ணாய்...
அங்க ணுடைய னவன்'' (கலி. 37) என்பதனுள்

''மெய்யறியா தேன்போற் கிடந்தேன்''

என்புழி, முன்னர் மெய்யறி வழிநிலை பிழையாம னின்று[1] பின்னர்ப் பொய்யாக வழிநிலை பிழைத்துக்[2] கூறியது வழுவே னும் இவளுந் தலைவனும் இவ்வாறே செறிந்தமை யுணர்த்த லின் மறைபுலப்படுத்துங் கருத்தினளாந் தலைவியென்பது பயனாம்.

''மள்ளர் குழீஇய விழவி னானும்.'' (குறுந். 31)

''அருங்கடி யன்னை'' (நற். 365)

''பம்புமத னழியும் பானாட் கங்குலு
மரிய வல்லம ணிகுளை'' (அகம். 8)

என்பனவற்றுள், தலைவி தேடிச் சென்றதும், செல்வாமென் றதும், சிறைப்புறமாக வரைவுகடாயது பொருட் பயன் றருதலின் அறக்கழிவுடையவேனும் அமைந்தன.

---

என் உள்ளத்தை அத்தலைவன் அறிதலுக்கு யான் அஞ்சி உள்ளத்துள்ளே கடிய மொழிகளைக் கூறி அவன் கைத்தழுவலை விட்டு''-தோழி தலைவியிடம் கூறியது.

1. வழி நிலை பிழையாமல் நின்று-தலைவியை வழிபடும் நிலையில் தவறாமல் நின்று.

2. வழி நிலை பிழைத்து-வழிபடும் நிலை பிழைத்தல்.அதாவது பொய் சொல்லுதல்.

''கயமலருண்கண்ணாய்'' என்னும் பாடலில் தோழியானவள் தலைவியிடம் அவளின் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்ததை அறியும் பொருட்டுப் பொய்யாக, ஒருநாள் தான் ஊஞ்சலாடியபோது தலைவன் வந்ததாகவும் அவனிடம் ஊஞ்சலை ஊக்குமாறு கூறியதாகவும் அவன் ஊக்கும்போது பொய்யாக மயங்கி அவன் மார்பில் வீழ்ந்ததாகவும் மயக்கம் தெளிந்தவள்போல் எழுந்தால் அவன் நீ செல் என விடுவான்.ஆதலின் அவன் மார்பில் கிடப்பதையே விரும்பியவளாய்க் கிடந்ததாகவும் கூறினாள் என்பது கூறப்பட்டது.

இது, 'பல்வேறு கவர்பொரு ணாட்டத்தான்' (114)

அறக்கழிவுடையனவுங் கூறப்பெறுமென்றமைப்பது பெரும்பான்மை. இஃது அதிகாரத்தாற் றோழிக்குந் தலைவிக்குங் கொள்க.

**சிவ**

அறக்கழி வுடையன பொருட்பயன் வரினே
வழக்கென வழங்கலும் பழித்தது என்ப.

என இளம்பூரணர் கொண்ட சூத்திரம்,

அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின்
வழக்கென வழங்கலும் பழித்தன்று என்ப.

என நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டது.

''அகத்திலும் புறத்திலும் அறத்துக்கு அழிவு நேருமாறு மாறுபட்ட செயல்களும் கூற்றுகளும் பொருளும் இன்பமுமாகிய பயன் தரவரினும் அவை வழக்கே என வழங்குதல் சான்றோரால் பழிக்கப்பட்டதே யாகும்''

இக்கருத்தை இளம்பூரணர் கூறி அகத்துக்கு அறக்கழிவுடையதாகப் பிறன்மனை நயத்தலைக் கூறி அது மறுக்கப்பட்டதற்கு ''எனைத் துணையராயினும் என்னாம் தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்'' (குறள்) என்னும் குறளை உதாரணம் காட்டினார். புறத்துக்கு அறக்கழிவுடையதற்கு உதாரணமாக ''பழிமலைந்தெய்திய ஆக்கத்திற் சான்றோர் கழி நல்குரவே தலை'' (குறள்) என்னும் குறளைக் காட்டினார். ஆனால் திருவள்ளுவர் அறக்கழிவுடைய பொய்யையும் பொருட்பயம் படவரின் வழங்கலாம் என்பாராய்,

''பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்'' (குறள்)

என்றதை நோக்கும்போது புறத்தும் அறக்கழிவுடையன பொருட்பயம்தரின் கூறலாம் என்பது போதரும். ஆதலின் இளம்பூரணர் பாடமும் உரையும் அத்துணைச் சிறப்பினவல்ல என்னலாம்.

மேலும் பொருளியலில் வழுவமைப்பே கூறுதலின் வழுவற்க என்னும் பொருளில் இச்சூத்திரம் உள்ளதாகக் கூறுதலும் பொருந்தாது.

"உலக வழக்கத்திற்குப் பொருத்தமில்லாத கூற்றுகள் அகப் பொருட்குப் பயமுடைத்தாக வருமாயின் அவற்றை வழக் கென்று புலனெறி வழக்கம் செய்தலும் பழியுடைத்தன்று என்று கூறுவாராசிரியர்"

என நச்சினார்க்கினியர் கூறும் பொருளும் சிறப்புரையும் உதார ணமுமே பொருந்தும் என்க.

அடுத்து வரும் சூத்திரத்துக்கும் நச்சினார்க்கினியர் உரையே பொருத்தம் என்க.

## நாண்நீங்காப் பொருள்

**215. மிக்க பொருளினுட் பொருள் வகை புணர்க்க**
**நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே. (23)**

**ஆ.மொ.**

Among the themes which speak of love affairs as said above, those which do not violate the modesty of the lady and which are in conformity with the virtues are to be included.

**இளம்**

என்-எனின் இதுவுமது.

(இ-ள்) மிக்க பொருளாவது மேற்கூறப்பட்ட அகப் பொருள்.[1] அப்பொருட்கண்ணும் நாண் நீங்காத, நல்வழிக்கட்படுத்துப் பொருள்வகை புணர்க்க என்றவாறு. எனவே அற முதலாயின வழுவின் றாயினும் நாணழிய வரும் பொருண்மை புணர்த்தற்க என்றவாறு.

"பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறன்நாணத் தக்க துடைத்து"[2] (குறள். 1018)

என வரும்.

---

1. அகப் பொருள் என்பதற்குப் பதில் 'அறமுதற் பொருள்' என்றிருத்தல் வேண்டும் என்பர் வெள்ளைவாரணனார்.
2. ஒருவன் தன்பொருட்டுப் பிறர் நாணத்தக்க செயலுக் குத் தான் நாணானாயின் அச்செயல் அறம்நாணும் தகுதியுடையதாம்,

நச்

இது, மேல் அறக்கழிவுடைத்தாயினும் அது பொருட் பயம்படு (218) மென்றார். அப்பொருளினை இது வென்றலி னதற்கோர் புறனடை.

(இ-ள்) மிக்க பொருளினுள் முன்னர் அகப்பொருட்குப் பயம் படவரினென்று வழுவமைத்த பொருளின் கண்ணே, நாணுத்தலைப் பிரியா நல்வழிப் பொருள் வகை படுத்துப் புணர்க்க- தலைவியது நாண் அவளிடத்து நின்று நீங்காமைக்குக் காரணமாகிய நன்னெறியாகிய பொருட் கூறுபாடுகளை உள்ளடக்கிப் படுத்துக் கூறுக என்றவாறு.

''நெருந லெல்லை'' (அகம்.32) என்பதனுள் நெருநல் யான் காக்கின்ற புனத்துவந்து ஒரு தலைவன் தன் பெருமைக் கேலாச் சிறுசொற் சொல்லித் தன்னை யான் வருத்தினேனாகக் கூறி என்னை முயங்கினான்; யான் அதற்கு முன்நெகிழ்ந்தே மனநெகிழ்ச்சி அவனறியாமன் மறைத்து வன்சொற் சொல்லி நீங்கினேன்; அவ்வழி என் வன்கண்மையாற் பிறிதொன்று கூறவல்லனாயிற்றிலன்; அவ்வாறு போனவன் இன்று நமக்குத் தோலாத் தன்மையின்மையினின்றும் இளிவந்தொழுகுவன்; தனக்கே நந்தோள் உரியவாகலும் அறியானாய் என்னைப் பிறநிலை முயலுங்கண்ணோட்டமு முடையவனை நின் ஆய்மும் யானும் நீயுங்கண்டு நகுவோமாக; நீ அவன் வருமிடத்தே செல்வாயாக எனக் கூறியவழி, எம் பெருமானை இவள் புறத் தாற்றிற் கொண்டாள் கொல்லோவெனவும் அவன் தனக்கு இனியசெய்தனவெல்லாம் என்பொருட்டென்று கொள்ளாது பிறழக் கொண்டாள் கொல்லோ வெனவுந் தலைவி கருதுமாற் றானே கூறினாளெனினும் அதனுள்ளே இவளெனக்குச் சிறந்தா ளென்பதுணர்தலின் என் வருத்தந் தீர்க்கின்றில்லை யென்றான் எனவும், அதற்கு முகமனாக இவளைத் தழீஇக் கொண்டதன்றி இவள் பிறழக் கொண்ட தன்மை அவன்கணுளதாயின் இவளைக் குறிப்பறியாது புல்லானெனவும், இவ்வொழுகலாறு சிறிதுணர் தலில் இக்குறை முடித்தற்கு மனஞெகிழ்ந்தாளெனவும். அவனை என்னோடு கூட்டுதற்கு என்னைவேறு நிறுத்தித் தானும் ஆயமும் வேறுநின்று நகுவேமெனக் கூறினாளெனவும், தலைவி நாண் நீங் காமைக்குக் காரணமாகிய பொருளை உள்ளடக்கிப் புணர்த்துக் கூறியவாறு காண்க. இதனுள் அறக்கழிவான பொருள் புலப்படவும் ஏனைப்பொருள் புலப்படாமலும் கூறாக்கால் தலைவியது

மறையை வெளிப்படுத்தினாளா மாதலின் அதனை 'மிக்க பொருள்' என்றார். ஏனையவற்றிற்கும் உட்பொருள் புணர்த்த வாறுணர்ந்து பொருளுரைத்துக் கொள்க.

## முறைப் பெயர்

**216. முறைப் பெயர் மருங்கினற் கெழுதகைப் பொதுச்சொல்**
**நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே. (24)**

**ஆ.மொ.**

The common word which depicts relationship of intense love, belongs to the endings of two genders-masculine and feminine of the current usage*.

**இளம்**

என்-எனின் இதுவும் வழுவமைத்தலை நுதலிற்று.

(இ-ள்) முறைப் பெயராவது-இயற்பெயர் முதலிய பெயரா னன்றி முறைமை பற்றி வருவது; அது தந்தைமகனைக் கூறும் பொழுது தம்முன், தம்பி, என்பனவும் கிழவன், தோழன் என் பனவும் போல வருவன.

அப்பெய ரகத்துவரும் நன்றாகிய கெழுதகைப் பொதுச் சொல்லாவது-பயிற்சியாற் கூறும் 'எல்லா' என்பது.

நிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே என்பது-நிற்றற்குரிய மரபினானே யிருபாற்கு முரித்தென்றவாறு. நிற்றற்குரிய மரபின் என்பது இவ்வாறு தோற்றாமையின் என்றவாறு.

''எல்லா[1] இஃதொத்த னென்பெறான் கேட்டைக்காண்''
(கலி.61)

என்றவழிப் பெண்பால்மேல் வந்தது.

''எல்லா,[2] தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று'' (கலி.62)

என்றவழித் தலைமகன்மேல் வந்தது.

---

* The common word here referred is Ella

1. எல்லா-ஏடீ!
2. எல்லா-ஏடா!

இதுவும் ஒரு சொல்வழு அமைத்தவாறு. இச்சொற் காமப் பொருளாகத் தோற்றுதலாற் சொல்லதிகாரத்து ஓதாது ஈண்டு ஓதப்பட்டது.

**நச்**

இது, கிழவன் கிழத்தி பாங்கன் பாங்கியென்னும் முறைப் பெயராகிய சொல்பற்றிப் பிறந்ததோர்வழு அமைக்கின்றது.

*(இ-ள்) முறைப் பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச் சொல்-முறைப் பெயரிடத்து இருபாற்கும் பொருந்தின தகுதி யையுடைய எல்லா வென்னுஞ் சொல், நிலைக்கு உரி மரபின் இருவீற்றும் உரித்தே-புலனெறி வழக்கிற்குரிய முறைமை யினானே வழுவாகாது, ஆண்பாற்கும் பெண்பாற்கும் ஒப்ப உரிய தாய் வழங்கும் என்றவாறு.*

'கெழுதகை' என்றதனானே தலைவியும் தோழியும் தலை வனைக் கூறியதே பெரும் பான்மையென்றும், தலைவன் தலை வியையும் பாங்கனையுங் கூறுதல் சிறுபான்மை வழுவமைதி யென்றுங் கொள்க.

(உ-ம்)

''அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேல்
முதிர்பூண் முலைபொருத வேதிலாண் முச்சி
யுதிர்துக ளக்கநின் னாடை யொலிப்ப
வெதிர்வளி நின்றாய்நீ செல்;
இனி யெல்லா''[1] *(கலி.81)*

*எனத் தலைவியைத் தலைவன் விளித்துக்கூறலின் வழுவாயமைந் தது.*

---

*1. பொருள்: தலைவ! அதிர்ச்சி யில்லாத வஞ்சனையால் வருத்தி மகன்மேல்காதலுடையாய்போல்வந்து முதிர்ந்த பூண் அணிந்த முலையால் தழுவிய பரத்தையின் தலை யுச்சியில் புனைந்த மலரின் தாதுகளாகிய துகள்கள் நின் ஆடையில் படிய அவை விளங்குமாறு காற்றின் எதிரே நின்றாய் இவ்விடம் விட்டுச் செல்க. இது தலைவி தலை வனிடம் கூறியது. இதன் பின்னர்த் தலைவன் தலை வியை எல்லா எனவிளித்துக் கூறலுற்றான். இதில் எல்லா என்பது தலைவியைக் குறித்தது.*

"எல்லா நீ
முன்னத்தா னொன்று குறித்தாய்போற் காட்டினை
நின்னின் விடாஅ நிழற்போற் றிரிதருவா
யென்னீ பெறாத தீதென்"[1] (கலி.61)

எனத் தோழி தலைவனை விளித்துக் கூறலின் வழுவாயமைந்தது.

'எல்லா விஃதொத்தன்' (கலி.61) என்பது பெண்பால்மேல் வந்தது. ஏனைய வந்துழிக்காண்க. 'பொதுச் சொல்' என்ற தனானே எல்லா எலா எல்ல எலுவ எனவும் கொள்க.

"எலுவ சிறாஅர்" (குறுந்.129) என வந்தது.

"யாரை யெலுவ யாரே" (நற்.395)

எனத் தலைவனைத் தோழி கூறினாள்.

எலுவியென்பது பாலுணர்த்தலின் ஆராயப்படா.

## சிவ

இச் சூத்திரம் எல்லா என்னும் சொல்லாட்சிபற்றிக் கூறு கின்றது.

(இ-ள்) முறைப் பெயர் பக்கத்திற் சேர்த்தற்குரிய நட்புரிமை யுடைய இருபாற்கும் பொதுவான எல்லா எனும் சொல் விளிக் கும் நிலைக்குரிய முறைமையால் தலைவி தலைவன் எனும் இரு பகுதியினருக்கும் உரியதாம் என்றவாறு.

எல்லா என்னும் சொல் ஆண்பாலாரையும் பெண்பா லாரையும் நட்பு அன்புஉரிமை தோன்ற விளிக்கும் சொல்லாகும்.

தந்தை தாய் முதலிய நேர்முறைப் பெயரின் நீக்குதற்கு முறைப் பெயர் என்னாது முறைப் பெயர் மருங்கின் என்றும், தந்தை தாய் தம்பி, தங்கை முதலியன ஒரு பாற்குரியனவாதலின் அவற்றை நீக்குதற்குப் பொதுச் சொல் என்றும் முறைப் பெயர் கள் முறைப் பெயரளவில் நிற்பனவன்றி நட்புரிமையைப் புலப் படுத்துவன வல்ல ஆதலின் கெழுதகைச் சொல் என்றும் கூறி எல்லா என்னும் சொல்லைக் குறிப்பிற் கொள்ளவைத்தார் ஆசிரியர் என்க.

---

1. பொருள்: ஏடா! குறிப்பால் ஏதோ ஒன்றைக் குறித் தாய்போலக் காட்டினாய். நின்னைவிட்டு நீங்கா நிழல் போல் எம்மை விட்டு நீங்காமல் திரிகின்றாய்; நீ பெறா தது என் கூறுக.

ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுச் சொல் என்றமையின் இருவீற்றும் என்றது தலைவனையும் தலைவியையும் குறித்தது. நிலைக்குரி மரபின் என்றது விளிக்கும்நிலைக்குரிய முறைமையை. இருவீற்றும் என்ற உம்மையால் தோழி, பாங்கன் ஆகியோர்க்கும் கொள்க.

## 'எம்' எனும் உரிமை

**217. தாயத்தின் அடையா ஈயச் செல்லா**
**வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படா**
**எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்**
**அல்ல வாயினும் புல்லுவ உளவே. (25)**

**ஆ.மொ.**

The existence of the relationship between the lady-love and her maid-companion as if they are one in body and soul, identifying themselves as 'Em', is one which cannot be given as charity, which cannot be claimed as the fruit of labour and which cannot be divided as shares. Though it seems improbable there are instances to prove.

**இளம்**

என்-எனின் இதுவும் ஒருசார் மரபு வழுவமைத்தலை நுதலிற்று.

(இ-ள்) தாயத்தான் எய்துதலாவது தந்தை பொருள் மகற்குறுதல். ஈயச் சேறலாவது ஒருவன் கொடுப்ப ஒருவன் கோடல். வினைவயிற் றங்கலாவது உழவு முதலியனவற்றான் வருதல். வீற்றுக்கொளப்படுதலாவது வேறுபடுத்திக் கோடல்; அஃதாவது பகையினால் வந்தது கோடல். இந்நான்கினும் வரும் பொருளினது உரிமைத் தோற்ற மல்ல வாயினும் பொருந்துவ உள என்றவாறு.

செய்யா என்னும் வினை யெச்சம் வரூஉம் என்னும் பெயரெச்சத்தொடு முடிந்தது.[1] அன்றியும் செய்யா என்பதனைப்

---

1. அடையா (அடையாது) செல்லா (செல்லாது) தங்கா (தங்காது) கொளப்படா (கொளப்படாது) வரும் என இயையும்.

பெயரெச்ச எதிர்மறையாக்கி இந்நான்கிலும் வருந்தகவு இல்லாத பொருள் பொருளலவாயினும் எமதெனவரும் உரிமைத் தோற்றம் பொருந்துவ என்றவாறு.[1]

அல்லவாயினும் என்பதனை மாறிக் கூட்டுக. எனவே ஒரு முகத்தாற் பொருள் தேடுவார் திறன் கூறினாருமாம். இனி அக்கிழமைத் தோற்றம் ஆவது.

''விரும்பிநீ, என்தோள் எழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் அணங்கும் நினைத்துக் காண்''
(கலி. 18)

என்றவழித் தலைமகள் தோளைத் தோழி தன்னையுமுளப் படுத்தி எனதெனக் கூறியவாறு காண்க.[2] பிறவுமன்ன.

நச்

இது, தோழி தலைவியுறுப்பினைத் தன்னுறுப்பாகக் கூறப் பெறுமென வழுவமைக்கின்றது.

(இ-ள்) தாயத்தின் அடையா-தந்தையுடைய பொருள்களாய் மக்களெய்துதற்குரிய பொருள்களிற் சேராதனவுமாய், ஈயச் செல்லா-அறமும் புகழுங் கருதிக் கொடுப்பப் பிறர்பாற் செல்லாதனவுமாய், வினை வயின் தங்கா-மைந்தரில்லாதார்க்கு மைந்தர் செய்வன செய்து பெறும் பொருளில் தங்காதனவுமாய், வீற்றுக் கொளப்படா வேறுபட்டானொருவன் வலிந்து கொள்ளப் படாதனவுமாய், எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்-எம்முடையனவென்று தோழி கூறப் புலனெறி வழக்கிற்குப் பொருந்தி வரும் உரிமையையுடைய உறுப்புகள், அல்லாவாயினும் புல்லுவ உளவே-வழுவாயினும் பொருந்துவனவுள என்றவாறு.

---

1. பெயரெச்ச எதிர்மறையாக்குதற்கு இடனில்லை. ஆதலின் இவ்வுரை பொருந்தாது. அடையா முதலியவற்றை ஈறுகெட்ட எதிர்மறை வினைமுற்று வினையாலணையும் பெயராக வந்தன என்றலே பொருந்தும்.
2. தலைவன் தலைவியின் தோளில் தொய்யில் எழுதியதைத் தோழி தலைவனிடம் பேசும்போது 'என் தோளில் நீ எழுதிய தொய்யிலை நினைக்க' எனக் கூறியது எம் என வரும் உரிமை பற்றியதாகும்.

உறுப்புக் கட்புலனாதலின் 'தோற்றம்' என்றார். எனவே உறுப்பொழிய இந்நான்கும் எம்மெனக் கூறலாகா வென்றார்.

"ஒருநாளென், றோணெகிழ் புற்ற துயராற்றுணி தந்தோர்" என்வும், (கலி. 37)

"என்றோ ளெழுதிய தொய்யிலும்" (கலி. 18)

எனவும் தலைவி தோளினை என்தோள் என்றாள்.

"என்கா, லரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிப்புனை பந்தொடு வைகிய செல்வோள்
இவைகாண் டோறு நோவா மாதோ"[1] (நற். 12)

"நெய்த லிதழுண்க ணின்கண்ணா கென்கண் மன"
(கலி. 39)

என்பவும் இதன்கணடங்கும். 'உள' என்றதனாற் சிறுபான்மை தலைவி கூறுவனவுங் கொள்க: அவை,

"என்னொடு நின்னொடுஞ் சூழாது" (அகம். 128) எ-ம்,

"நின்கண்ணாற் காண்பென்மன் யான்" (கலி. 39)

எனவும் வரும்.

**சிவ**

இச்சூத்திரம் எம்முடையன எனக் கூறலாகாப் பொருள்கள் கூறவும்படும் என வழுவமைக்கின்றது.

(இ-ள்) தந்தையின் பொருள் மகனுக்கு எனும் தாய முறையில் அடையப் பெறாதனவும் ஒருவர் ஈய வாராதனவும் ஈட்டுதல் தொழிலால் சேராதனவும் பகை முதலிய வேறுபாட்டினால் கொள்ளப்படாதனவும் ஆகிய தலைவியின் உறுப்புகள், தோழியால் எனது எனக் கூறவரும் உரிமை நிலையுடையன அல்ல என்றாலும் புலனெறி வழக்கில் எனது எனக் கூறும் உரிமை நிலைக்குப் பொருந்துவன உளவாம் என்றவாறு.

---

1. பொருள்: என் காலில் உள்ள உள்ளீடுள்ள சிலம்பை கழற்றிப் பலதடவை வரிந்து கட்டிய பந்துடன் தங்கச் செல்லும் அவள் இவற்றைக் காணுந்தோறும் துன்பப் படுவாள்-இதில் தலைவி காலைத் தோழி என் கால் என்றாள்.

தலைவியும் தோழியும் வேறல்லராதலின் தலைவியின் பொருள்களை என் பொருள் என்னும் உரிமை தோழிக்குண்டு. அவ்வகையில் தலைவியின் உறுப்புகளையும் தன் உறுப்புகளாகக் கூறுதல் உண்டோ எனின் இல்லை. அகவொழுக்கத்தில் தலைவன் தலைவியின் தோளில் தொய்யில் எழுதியதைக் குறிப்ப தாயின் தோழி என் தோளில் நீ தொய்யில் எழுதினாய் எனக் குறிப்பதுண்டு. இது உலக வழக்கில் இல்லாதது. ஆனால் புல னெறி (செய்யுள்) வழக்கில் உள்ளது.

'எமவெனவரூஉம்' என்பது 'எம்மெனவரூஉம்' என நின் றது. எம—எம்முடையன.

அடையா, செல்லா, தங்கா, கொளப்படா என்பன எதிர்மறை வினைமுற்றுகள்; அவை பொருள் (உறுப்பு) களை உணர்த்தி வினையாலணையும் பெயர்களாயின. தாயம்—வழி வழி வரும் உரிமை. வினை—பொருளீட்ட மேற் கொள்ளும் தொழில். வீறு—வெற்றி விளக்கம். வீற்றுக்கொளப்படல்—பகை வென்று திறையாகக் கொள்ளப்படுதல்.

## வழக்கு

**218. ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்**
**வருவகை தாமே வழக்கென மொழிப (26)**

**ஆ.மொ.**

It is said that the usage is that the expression of one gender will embrace the other genders also.

**இளம்**

என்-எனின் இதுவு மொருசார் பொருள் கொளுந்திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒரு பக்கத்துக் கூறிய பொருண்மை ஒழிந்த பக்கத்துக் கண்ணும் வருவகைதாம் வழக்கு நெறி என்றவாறு.

மனையோள்மாட்டுங் காமக்கிழத்தி மாட்டும் நிகழும். அது வருமாறு:-

'அன்னை கடுஞ்சொல் அறியாதாள்' (கலி. 97) என்னுங் கலியுள்,

''சிறுகாலை யிற்கடை வந்து குறிசெய்த
அவ்வழி என்றும் யான் காணேன்''

என்பது புணர்வு குறித்து வந்தது.

''உள்ளுதொறு நகுவன் தோழி வள்ளுகிர்
மாரிக் கொக்கின் கூர்அல கன்ன
குண்டுநீர் ஆம்பல் தண்துறை யூரன்
தேங்கம ழைம்பால் பற்றி என்வயின்
வான்கோல் எல்வளை வவ்விய பூசற்
சினவிய முகத்துச் சினவாது சென்றுநின்
மனையோட் குரைப்பல் என்றலின் முனையூர்ப்
பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும்
தேர்வண் மலையன் முந்தைப் பேரிசைப்
புலம்பிரி வயிரியர் நலம்புரி முழவின்
மண்ணார் கண்ணின் அதிரும்
நன்ன ராளன் நடுங்கஞர் நிலையே.''[1] (நற். 100)

இஃது ஊடல் குறித்து வந்தது. இப்பரத்தையர் பொருட் பெண்டி ராகலின் இன்பம் பயக்குமோ எனின், அஃது இன்பமா மாறு வருகின்ற சூத்திரத்தான் எல்லாப் பொருட்கும் உளதாகும் பொதுவிலக்கணம் கூறியவாறு.

**நச்**

இஃது, 'ஒன்றே வேறே' (93) என்னுஞ் சூத்திரத்து 'ஒத்த கிழவனுங் கிழத்தியும்' என்ற ஒருமையைப் பன்மைப் பாலாய் உணர்த்துகவென வழுவமைத்தது.

---

1. பொருள்: மழைக்காலக் கொக்கின் கூரிய அலகு போலும் ஆழமான நீரில் தோன்றிய ஆம்பலுடைய நீர்த்துறையுடைய ஊரனாகிய தலைவன், எனது கூந்தலைப் பற்றியிழுத்து என் கை வளையல்களைப் பற்றிய போரில், சினம் கொண்ட முகத்தோடு அவளைப் பார்த்து'சினம் கொள்ளாமல் போய் உன் மனைவிக்கு நீ செய்த இச்செயலைச் சொல்வேன்' என்று நான் கூறவே பகைவர் ஊர் முனையில் உள்ள ஆநிரைகளைத் தன் வில்லாற்றலாற் கொண்டு வந்து இரவலர்க்கு ஈயும் மலையன் திருவோலக்கத்தின் முன்னே வேற்றூரிலிருந்து பிரிந்து வரும் கூத்தர் இயக்கும் முழவின் கண்ணானது அதிர்வதுபோலத் தலைவன் நடுங்கிய நடுக்க நிலையை இன்று நினையுந்தோறும் சிரிப்பேன் ஆவேன்—இது பரத்தையொருத்தி மனைக்கிழத்தியைச் சார்ந்தவர் கேட்குமாறு தன் தோழியிடம் கூறியது.

(இ-ள்) ஒருபாற் கிளவி 'ஒத்த கிழவனுங் கிழத்தியும்' என்ற வழி ஆணொருமையும் பெண்ணொருமையும் உணர்த்தி நின்ற சொற்களை ஆசிரியரும் அவ்வாறு ஆண்டாரேனும் அவ்வொரு மைச் சொற்கள், எனைப்பாற் கண்ணும் வருவகை தானே-நால் வகைக் குலத்துத் தலைவரையுந் தலைவியரையும் உணர்த்தும் பன்மைச் சொற் கண்ணே நின்று பன்மைப் பொருள் உணர்த்தி வருங் கூறுபாடுதானே, வழக்கென மொழிப-உலக வழக்கென்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

இதனாற் பயன் உலகத்து ஒருவர்க் கண்ணும் ஓரோவொரு குலத்தின் கண்ணும் தலைவருந் தலைவியரும் பலரேனும் அவர்களை யெல்லாங் கூறுங்காற் கிழவனுங் கிழத்தியுமென்று ஒருமையாற் கூறுவதன்றி வேறோர் வழக்கின்றென்பது பற்றி முதனூலாசிரியர் அங்ஙனஞ் சூத்திரஞ் செய்தலின், யானும் அவ்வாறே சூத்திரஞ் செய்தேனாயினும், அச்சொல் பலரையும் உணர்த்துமென வழுவமைத்தாராயிற்று. ஒருவனோடு பலர் கூட்டமுங் கோடற்கு ஏனைப்பாலென்று ஒருமையாற் கூறாது 'எனைப்பால்' எனப் பன்மையாற் கூறினார். இது சொல்வழுவும் பொருள் வழுவும் அமைத்தார். 'ஒத்தகிழவனுங் கிழத்தியும் (93) என்ற ஒருமையே கொள்ளின் அன்னாரிருவர் இவ்வுலகத்துள்ளா ரன்றி வேறாக நாட்டிக் கொள்ளப்படாரென்பதுபட்டு இஃது உலக வழக்கத்தல்லாதோர் நூலுமாய் 'வழக்குஞ் செய்யுளும்' (பாயிரம்) என்பதனோடு மாறுகோடலேயன்றிப் 'பரத்தை வாயி னால்வர்க்கு முரித்தே' (224) என்றாற் போல்வன பிற சூத்திரங் களும் வேண்டாவா மென்றுணர்க.

**சிவ**

இச்சூத்திரம் பகுதியினர்க்குக் கூறிய கிளவி (கூற்று)த் தொகைகள் மற்றைப் பகுதியினர்க்கும் உரிய என்கின்றது.

(இ-ள்) உயர்ந்தோராகிய ஒரு பகுதியினர்க்குக் கூறப்பட்ட கிளவித் தொகைகள் எல்லாம் ஏனை அடியோர் வினைவலர் பாணன் பறையன் துடியன் கடம்பன் ஆகியோர்க்கும் வரும் வகை புலனெறி வழக்கு ஆகும் என்று கூறுவர் என்றவாறு.

களவும் கற்பும் யாவர்க்கும் உரியனவாயினும் புலனெறி வழக்குக்கேற்ப உயர்ந்தார்க்குரிய வகையில் கிளவிகள் கூறப் பட்டன என்றாலும் மற்றையோர்க்கும் அவை புலனெறி வழக் கில் கூறப்படலாம் என்பது கருத்து.

''மனையோள் மாட்டும் காமக்கிழத்தி மாட்டும் நிகழும் புணர்ச்சியும் பிரிவும் ஊடலும் பரத்தையார் மாட்டு நிகழும்''

என இளம்பூரணர் கூறுவது சிறப்பின்று. கிளவி எனப் பொதுப் படக்கூறலின் புணர்ச்சி பிரிவு ஊடல் என்பனவற்றை மட்டும் கொளல் அத்துணைச் சிறப்பின்று. நச்சினார்க்கினியர் ''ஒருமைப் பாலில் கூறப்பட்ட கிழவன் கிழத்தி என்பன கிழவர் கிழத்தியர் எனும் பன்மைப்பாலுக்கும் வழங்கும்'' எனக் கூறியதும் பொருந் தாது. அது சொல்லதிகாரத்துச் சூத்திரத்துக் கூறப்பட்டது.

## உயிர்க்கு இன்பம்

**219. எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தான் அமர்ந்து வருஉம் மேவற் றாகும் (27)**

**ஆ. மொ.**

The plesure of all beings is that which is to be achieved by attachment to the one which is loved by them.

**இளம்**

என்-எனின் மேலதற்கோர் புறனடை உணர்த்திற்று.

(இ-ள்) எல்லாவுயிர்க்கும் இன்பமென்பதுதான் மனம் பொருந்திவரும் விருப்பத்தையுடைத்து என்றவாறு. எனவே மனம் பொருந்தியவழிப் பரத்தையர் மாட்டும் இன்பமுளதாகும் எனவும், பொருந்தாதவழி மனைவியர் மாட்டும் இன்பமின்றாம் எனவும் கொள்க.

**நச்**

இது மேலதற்கோர் புறனடை.

(இ-ள்) இன்பம் என்பதுதான்-அறனும் பொருளும் ஒழிய இன்பமென்று கூறப்படுவதுதான், எல்லா உயிர்க்கும் அமர்ந்து வருஉம்-மக்களும் தேவரும் நரகரும் மாவும் புள்ளு முதலிய எல்லாவுயிர்களுக்கும் மனத்தின் கண்ணே பொருந்தித் தொழிற் பட வருமாயினும், மேவற்றாகும்-ஆணும் பெண்ணுமென அடுக்கிக் கூறலுடைத்தாய் நுகர்ச்சி நிகழும் என்றவாறு.

'மேவற்றாகும்' என்றார், என்பது ஆணும் பெண்ணு மாய்ப் போக நுகர்ந்து வருதலின் ஒருவனும் ஒருத்தியுமே இன்ப நுகர்ந்தாரெனப்படாது அவ்வின்பம் எல்லாவுயிர்க்கும் பொது வென்பதூஉம் அவை இருபாலாய்ப் புணர்ச்சி நிகழ்த்துமென்ப தூஉம் கூறியதாயிற்று. அறனும் பொருளும் எல்லா உயிர்க்கும் நிகழா, மக்கட்கே சிறந்து வருமென்றாராயிற்று.

**சிவ**

இச்சூத்திரம் இன்பமாவது யாது என்கின்றது.

(இ-ள்) இன்பம் என்பதுதான், எல்லாவுயிர்களுக்கும் மனம் விரும்பிப் பொருந்த வருகின்ற புணர்ச்சி நுகர்வுடையதாகும் என்றவாறு.

அமர்தல் விரும்புதல்; அது விரும்பி அமைதலை யுணர்த் திற்று. மேவல்+று=மேவற்று. மேவல் ஆணும் பெண்ணும் கூடு தல்; அது கூடிப் பெறும் நுகர்ச்சியை யுணர்த்திற்று. இதனால் புணர்ச்சி நுகர்வே இன்பம் எனப்படும் என்பதும் பிறவற்றால் வருவன மகிழ்ச்சியேயன்றி இன்பம் எனப்படா என்பதும் மகிழ்ச் சியை இன்பம் என்பது இலக்கணை என்பதும் பெறப்படும்.

> ''மேவற்றாகும் என்றார்: என்பது ஆணும் பெண்ணு மாய்ப் போக நுகர்ந்து வருதலின் ஒருவனும் ஒருத்தியு மே இன்பம் நுகர்ந்தார் எனப்படாது அவ்வின்பம் எல் லா வுயிர்க்கும் பொதுவென்பதூஉம் அவை இருபாலாய் புணர்ச்சி நிகழ்த்தும் என்பதூஉம் கூறியதாயிற்று''.

என நச்சினார்க்கினியர் கூறியதற்கு மாறாக வெள்ளை வாரண னார்,

> ''எனவே, அன்பின் ஐந்திணை ஒழுகலாற்றில் இன்பம் எனப்படுவது தான் எல்லாவுயிர்க்கும் பொதுப்படவுரிய புலன் நுகர்ச்சியாகிய இன்பம் என்ற அளவில் அமை யாது மக்கட் குலத்தார் ஆணும் பெண்ணுமாய்த் தம் மிற் கூடி அளவளாவும் நிலைமைக் கண் அவர்தம் மன னுணர்வின்கண் அன்பின்வழித் தோன்றும் காதல் இன்ப நுகர்ச்சியே ஈண்டு இன்பம் எனச் சிறப்பித்து உரைக்கப்படும் என்பதும் தெளியப்படும்''

என்றார். சூத்திரக்கிடக்கை அவ்வாறின்மையான் அவர் கருத்து ஆய்தற்குரியதாம்.

## வாயில்-நால்வர்

**220. பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே**
**நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர். (28)**

**ஆ.மொ.**

The messengers to be sent to the wife on account of his relation with the paramour are four (out of twelve). The poets say that such themes will not have the change of land.

**பி. இ. நூ.**

**இறை. 42**

*பரத்தையிற் பிரிவே நிலத்திரி பின்றே.*

**இளம்**

*என்-எனின் பரத்தையிற் பிரிவிற்கு உரியாரை உணர்த்துதல் நுதலிற்று.*

*(இ-ள்) பரத்தையர் மாட்டு வாயில் விடுதல் நான்குவருணத் தார்க்கும் உரித்து; அவ்வழிப் பிரியும் பிரிவு நிலம் பெயர்தல் இல்லை என்றவாறு.*

*எனவே, தன்னூரகத்துஞ் சார்ந்த விடமுங் கொள்க. நால் வர்க்கும் உரித்து என்றமையான் நான்கு வருணத்துப் பெண்பா லாரும் அவனொடு ஊடப்பெறுப என்றவாறுமாம்.*

*"யாரிவன் எங்கூந்தல் கொள்வான் இதுவுமோர்*
*ஊராண்மைக் கொத்த படிறுடைத்து." (கலி. 89)*

*என்பது பார்ப்பனி கூற்று.*[1]

*"பெரியார்க் கடியரோ ஆற்றா தவர்." (கலி. 88)*
*என்பது அரசி கூற்று.*[2]

---

1. எம் கூந்தலைத் தொட யார் இவன்? இவன் தொடு தலும் உதவி செய்வது போலக் காட்டிச் செய்யாத வஞ்சனையுடையதாகும்.
பார்ப்பனி கூற்று என்பதற்குப் பாடலில் சான்றில்லை.
2. பிரிவாற்றும் பெரியவர்க்குப் பிரிவாற்றாதவர் அடியரோ?
அரசி கூற்று என்பதற்குப் பாடலில் சான்றில்லை.

நச்

இது, தலைவர்க்குரிய தலைவியர் பலருந் தலைவன் பரத்தைமை காரணமாக ஊடற்குரிய ரென்பதூஉம் அவரிடத்து வாயில் சேறற்குரியரென்பதூஉங் கூறி வழுவமைக்கின்றது.

(இ-ள்) பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்து தலைவன் பரத்தைமையால் தலைவிக்குள் தோன்றிய ஊடல் தீர்த்தற்குரிய வாயிலை அவர்பாற் செலுத்தல் நான்கு வருணத்தாருக்கும் உரித்து, அஃது நிலத்திரிபு இன்று என்மனார் புலவர்—அவ்வொழுக்கம் பெரும்பான்மை மருத நிலத்தினின்றுந் திரிந்து வருதல் இன்றென்று கூறுவர் புலவர் என்றவாறு.

'பரத்தைவாயில்' என்றது 'குதிரைத் தேர்' போல நின்றது. இதனாற் பயன்: அந்தணர்க்கு நால்வரும் அரசர்க்கு மூவரும் வணிகர்க்கு இருவருமாகிய தலைவியர் ஊடற்குரியவாயில் விடுவரென்பதூஉம், அவர் வாயின் மறுத்தலும் நேர்தலும் உடையரென்பதூஉம், ஏனைப் பரத்தையர்க்கு வாயில் விடுதல் இன்றென்பதூஉங் கூறியவாறாயிற்று. 'ஒருபாற் கிளவி' (222) என்பதனால் ஒரோவோர் குலத்துத் தலைவருந் தலைவியரும் அடங்குமாறுணர்க உதாரணம் முற்காட்டியவற்றுட் காண்க. ஒருவனும் ஒருத்தியுமாகி இன்பநுகர்ந்து இல்லற நிகழ்த்துதலே சிறந்ததென்றற்கு இங்ஙனம் பலராதல் வழுவென்று அதனை அமைத்தார்.

சிவ

தலைவன் வாயில் விடப்படுவார் இவர் என்கின்றது இச்சூத்திரம்.

(இ-ள்) தலைவன் தன் பரத்தைமை காரணமாக விடப்படும் வாயில் இற்கிழத்தி (தலைவி) பின் முறைவதுவை காமக்கிழத்தி காதற் பரத்தை என்னும் நால்வர் பாலும் உரிமையுடையதாம். அப்பரத்தைமை யொழுக்கம் தலைவன் நிலத்தை கடந்ததாகாது தன்னூரிடத்ததேயாம்.

இற்கிழத்தியாகிய தலைவியேயன்றி மற்றவரும் தலைவன் தம்மையன்றிப் பிறள் ஒருத்தியை விரும்பின் அதனை அயன்மை (பரத்தைமை) யொழுக்கமாகவே கருதுவர் என்பதும், அதனால் அவர் ஊடல் கொண்டவழித் தலைவனால் வாயில் அனுப்பப் பெறுவர் என்பதும் பெற்றாம்.

நால்வராவார் நான்கு வருணத்தார் எனக் கொண்டு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தமக்கு வேண்டியவாறே உரையெழுதினர்.

> ''பரத்தையிற் பிரிவு காரணமாகப் பாணர் முதலியோரை வாயிலாக அனுப்புதல் மருத நிலத்தலைவர்க்கே சிறப்புரிமை யுடையதாயினும் நால் நிலத்தலைவர்க்கும் ஒப்பு உரியதாகும்''

என வெள்ளைவாரணனார் கூறும் உரை பொருந்துமேனும் புலனெறி வழக்கில் மருத நிலத்தலைவரே கூறப் படுவராதலின் அத்துணைச் சிறப்பின்று.

## களவில் தலைவி

**221. ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉப்**
**பிரித லச்சம் உண்மை யானும்**
**அம்பலும் அலருங் களவுவெளிப் படுக்குமென்று**
**அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்**
**நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்**
**போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும் (29)**

**ஆ.மொ.**

The desire to have the privilege of having him always with her, the fear of separation from the lover the two modes of revealment of the secret love by means of rumour and scandal as feared by her, and the hindrance caused by the look of doubt (to their union) will cause the elopement and the marriage on the part of the would-be wife.

**இளம்**

என்-எனின் இது களவின்கண் தலைமகட்குரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ-ள்) ஒருதலையுரிமை வேண்டினும் என்பது—ஒரு தலையாகத் தலைமகள் உரிமை பூண்டலை வேண்டிய விடத்துமென்றவாறு.

மகடூஉப் பிரித லச்ச முண்மை யானும் என்பது-பிரிதற்கண் வரும் அச்சம் பெண்பாற்கு இயல்பாகு மென்றவாறு.

அம்பலும் அலரும் களவுவெளிப்படுக்குமென்று அஞ்ச வந்த வாங்கிரு வகையினும்என்பது-களவொழுக்கத்தை வெளிப்படுக்குமென்று அஞ்சும்படியாக வந்த அம்பலும் அலருமாகிய இரு வகையின் கண்ணும் என்றவாறு.

நோக்கொடு வந்த இடையூறு பொருளினும் என்பது—தலைமகன் வரவுபார்த்திருந்தவழி வந்த இடையூறாகிய பொருளின் கண்ணும் என்றவாறு.

அவையாவன:-தாய்துஞ்சாமை நிலவு வெளிப்படுதல் முதலியன.

போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும் என்பது-தலைமகளுடன் போதற் குறிப்பும் வரைவு கடாதற் குறிப்பும்மனைவிமாட்டுத் தோன்றும் என்றவாறு.

**உதாரணம்**

"சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென் வாழிதோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகஇவ் அழுங்க லூரே"[1] (நற். 149)

இது போக்குக் குறித்தது. 'இரும்பிழி மகாஅர்' என்னும் பாட்டு வரைவு குறித்தது.

---

1. பொருள்: தோழீ! தெருப் பெண்கள் சிலரும்பலருமாகச் சேர்ந்து என்னைக் கடைக்கண்ணால் பார்த்துத் தம்மூக்கின்மேல் சுட்டு விரலை வைத்து என்னைப்பற்றி அம்பல் தூற்றவும், தாயானவள் சிறுகோலைக் கொண்டுஅலைக்கவும் நான்துன்புற்றேன்; அன்றலர்ந்த மலர்களைத் தீண்டியதால் நாறும் தலையாட்டத்தையுடைய குதிரை பூட்டப்பட்ட தேரினைச் செலுத்தி நடுயாமத்தில் வரும் தலைவனொடு உடன்போகத் துணிந்தேன்யான்; அதனால் இவ்வூர்என்னைப் பற்றிய அலர் தூற்றுதலைச் சுமந்தொழிவதாக—தலைவி கூற்று.

நச்

இது, களவின்கட் டலைவியின்கண் நிகழ்வதோர் வழு வமைக்கின்றது.

(இ-ள்) உரிமை ஒருதலை வேண்டியும் இடை விடாது இன்ப நுகர்தலோடு இல்லற நிகழ்த்தும் உரிமையை உறுதியாகப் பெறுதலை விரும்புதலானும், பிரிதல் அச்சம் மகடூஉ உண்மை யானும்-ஆள்வினைக் குறிப்புடைமையின் ஆண்மக்கள் பிரிவ ரென்று அஞ்சும் அச்சம் மகளிர்க்குண் டாகையினானும், ஆங்கு அம்பலும் அலரும் களவு வெளிப்படுக்கும் என்று அஞ்ச வந்த இருவகையினும்—அக்கள வொழுக்கத்திடத்தே அம்பலும் அல ரும் இக்களவைப் புலப்படுக்குமென்று அஞ்சும்படி தோன்றிய இருவகைக் குறிப்பானும், நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்—பிறர் தன்னை அயிர்த்துநோக்கும் நோக்கங் காரணமாக வந்த கூட்டம் இடையூறுற்ற காரியத்தினானும், மனைவிகட் போக்கும் வரைவும் தோன்றும்—தலைவியிடத்தே உடன் போக்கும் வரையக் கருதுதலுந் தோன்றும் என்றவாறு.

''வழையம லடுக்கத்து'' (அகம்.328) என்பதனுள்

'முகந்துகொண் டடக்குவம்' என இடைவிடாது இன்ப நுகர விரும்பியவாறும் உள்ளுறையான் இல்லறநிகழ்த்த விரும்பிய வாறுங்காண்க.

'உன்னங் கொள்கையொடு' (அகம்.65) என்பது அம்பலும் அலரும் அஞ்சிப் போக்குடன்பட்டது.

''ஆனா தலைக்கு மறனி லன்னை
தானே யிருக்க தன்மனை யானே.''[1] (குறுந்.262)

இஃது, இடையூறு பொருளின்கட் போக்குடன்பட்டது.

ஏனைய முன்னர்க் காட்டியவற்றுட் காண்க. 'ஒன்றித் தோன்றுந் தோழி மேன' (39) என்பதனால் தோழிக்கும் இவை யுரிய வென்று கொள்க. உடன் போக்குக் கருதுதலும் தலைவன் தான் வரையாமல் தலைவி விரும்புதலும் வழுவாய் அமைந்தன.

---

1. பொருள்: எப்போது ஒழியாது தாயும் அலைப்பாள்; அதனால் தானே தன் வீட்டில் இருப்பாளாக. யான் தலைவனுடன் போவேன்—தலைவி கூற்று.

**சிவ**

இச்சூத்திரம் களவில் தலைவி தன் உடன்போக்குக் குறிப்பையும் வரைதல் வேட்கைக் குறிப்பையும் வெளிப்படுக்கும் இடம் கூறுகின்றது.

*(இ-ள்)* தான் அவன் என்னும் இருபக்கத்தில் தன் ஒரு பக்கமாக மனைவி என்னும் உரிமையைப் பெற விரும்பும் காரணமாகவும் தன்னை அவன் பிரியுமோ என எண்ணுங்கால் பெண்பாற்கு இயல்பாக வரும் அச்சம் காரணமாகவும் அம்பலும் அலரும் என்னும் இருவகையும் தன் களவொழுக்கத்தைப் பிறர்க்கு வெளிப்படுத்தி விடும் என நினைக்கும் அச்சம் காரணமாகவும் இரவினும் பகலினும் அவன் வரும் வழி நோக்குதற்கண் ஆறு இன்னாமை நிலவு வெளிப்படுதல் முதலாய இடையூறுகள் நேர்தல் காரணமாகவும் தலைவிக்கு உடன்போக்குக் குறிப்பு அல்லது வரைதல் வேட்கைக் குறிப்பு நிகழும் என்றவாறு.

போக்கும் வரைவும் என இரண்டு கூறினும் ஒரு காலத்தில் ஒன்றே நிகழும் என்க.

மனைவி என்பது மனைக்குரியாள் எனும் பொருளைக் குறியாமல் வாளா தலைவியைக் குறித்தது.

## வருத்தமும் இரக்கமும்

**222. வருத்த மிகுதி சுட்டுங் காலை**
**உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம் (30)**

**ஆ.மொ.**

They say that there is compassion in life when the excess of suffering is pointed out.

**இளம்**

என்-எனின். இது தலைமகட்குந் தோழிக்கு முரியதோர் திறன் உணர்த்திற்று.

*(இ-ள்)* வருத்தமிகுதியைக் குறித்தவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் உரித்தென்று சொல்லுவர் என்றவாறு.

எனவே வருத்தமிகுதியைச் சுட்டாதவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் இன்றெனக் கொள்ளப்படும்.

''செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்குரை.'' (குறள். 1151)

''அன்பற மாறியாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ என்று வருவாரை
என்திறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்கு நின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றாமல் ஆண்டோர்
அவலம் படுதலும் உண்டு.''[1] (கலி. 19)

இதுவுமோர் மரபுவழு வமைத்தது.

**நச்**

இது, கற்புக் காலத்துத் தோழிக்கும் அறிவர்க்கும் உரிய தோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) வருத்தமிகுதி சுட்டுங்காலை-தோழியும் அறிவரும் பரத்தையிற் பிரிவால் தலைவர்க்குந் தலைவியர்க்குந் தோன்றிய வருத்த மிகுதியைத் தீர்க்கக் கருதிக் கூற்று நிகழ்த்துங் காலத்து, வாழ்க்கையுள் இரக்கம் உரித்தென மொழிப-அவரது இல் வாழ்க்கை நிகழ்ச்சிக் கண்ணே தமக்கு வருத்தந் தோன்றிற்றாகக் கூறுதலும் உரித்தென்று கூறுவராசிரியர் என்றவாறு.

''நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கு
மார்ந்தோர் வாயிற் றேனும் புளிக்குந்
தணந்தனை யாயினெம் முய்த்துக் கொடுமோ
வந்தண் பொய்கை யெந்தை யெம்மூர்க்
கடும்பாம்பு வழங்குந் தெருவி
னடுங்கரு ரெவ்வங் களைந்த வெம்மே.''[2]
(குறுந். 354)

---

1. பொருள்: தலைவ! 'அன்பு மிக மாறுபட்டு யாம் நினைக்குமளவில் எம்மால் துறந்துவிடப்பட்டவளது நிலைமையையும் அறிவீரோ' என வழிவருவாரைப் பார்த்து என்னைப் பற்றி ஏதும் வினவாதீர். என் எனின், வினவினால் ஞாயிறு போல் விளங்கும் நின் செம்மல் சிதையும்படி கெடுதல் இல்லாத செய்வினையை முற்றமுடிக்க முடியாமல் சென்ற அவ்விடத்தே என் அவலச் செய்தி கேட்பதால் நீ துன்பப்படுதலும் நேரும் —தலைவி கூற்று.
2. பொருள்: தலைவ! நீரில் நெடுநேரம் ஆடின் கண்ணும் சிவக்கும். நன்கு சுவைத்தோர் வாயில் தேன்கூடப் புளித்து விடும்; அவை போல இவ்வளவு காலம் இருந்த யான் நுமக்குப் புளித்தேன் போலும். அதனால் என்

இதனுள் 'இல்லறத்தினை நீ துறந்தாயாயின் எம்மை எம்மூர்க் கண்ணே விடுக' எனத் தனக்கு வருத்தந் தோன்றிற்றாகத் தோழி கூறியவாறு காண்க.

''உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த வாயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயே யிஃதோ
வோரா வல்சிச் சீரில் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகன் வந்தென
வினிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே.''[1] (குறுந். 295)

இதனுள், 'ஓரா வல்சியொடு முன்னர் நிகழ்த்திய வாழ்க்கை இவள் வந்தாளாகப் புறத்து விளையாடும் விழவுள தாயிற் றென்று இவ்வூர் கூறா நிற்குஞ் செல்வம் இவளை ஞெகிழ்ந்தாற் பழைய தன்மையா' மென்று அறிவர் இரங்கிக் கூறியவாறு காண்க.

' துறைமீன் வழங்கும்'' (அகம். 316) என்பதனுள்

''அதுபுலந் துறைதல் வல்லி யோரரோ.''

எனப் புலவியால் நின் இல்வாழ்க்கை குறைபடுமெனத் தோழி கூறியவாறு காண்க.

இன்னும், உய்த்துக் கொண்டுணர்தல் (665) என்பதனால் 'ஏனைப்பிரிவான் நிகழும் வருத்த மிகுதியைக் குறித்தவிடத்து

---

னைப் பிரிய நினைத்தீர்; அப்படியானால் அழகிய தண்ணிய பொய்கையுள்ள எம் தந்தை வாழும் எம் ஊரில் கரும்பாம்பு நடமாடக் கூடிய தெருவில் நடுங்கும் நடுக்கத்தைக் களைந்து இருக்கும் எம்மைக் கொண்டு போய் விட்டு விடுவீராக—தோழி தலைவியை உட்படுத்திக் கூறியது.

1. பொருள்: தலைவ! இன்று நீ ஆடையுடுத்தும் மாலை தொடுத்தணிந்தும் அணிகள் பூண்டும் கூந்தலில் மலர் செருகியும் வரும் பரத்தையர் குழாத்துடன் சூழ்ந்து விழாவொடு வருகின்றாய். இதுகாணும் ஊரார், 'இவன் வாழ்க்கையானது முன்னர் ஓர் பசுத் தரும் பயன் கொண்டு உண்டு வாழும் சிறப்பில்லா வாழ்க்கையாய் இருந்தது; பெரிய நலத்தையுடைய இக்குறுமகள் மனைவியாக வந்த காரணத்தால் இப்போது பெரிய விழாக் கொள்ளும் அளவில் சிறப்புடையதாயிற்று'' என்பர்—தோழி கூற்று.

உயிர் வாழ்க்கையின் இரக்க முரித்தென மொழிப' என்றும் பொருள் கூறிச்

''செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை'' (குறள். 1151)

''அன்பற மாறியா முள்ளத் துறந்தவள்
பண்பு மறிதிரோ வென்று வருவாரை
யென்றிறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றாம லாண்டோ
ரவலம் படுதலு முண்டு''[1] (கலி.19)

என வருவன பிறவுங் கொள்க.

## சிவ

இச்சூத்திரம் மனை வாழ்க்கையில் அவரவரும் தத்தம் வருத்தத்தைத் தெரிவிக்கும் இடம் கூறுகின்றது.

(இ-ள்) மனையறம் நிகழ்த்தும் காலத்தில் தத்தமக்கேற்படும் வருத்தத்தை வெளிப்படுத்தும் போது இரக்கக் கிளவி உரித்தாகும் என்று சொல்வர் புலவர் என்றவாறு.

தலைவன் பிரிவு கேட்டவழி அவனிடம் தலைவிதான் உயிர் வாழாமை கூறுதல், தோழியும் அவ்வாறு தலைவி உயிர்வாழாள் எனக்கூறுதல், ஊடற்காலத்து ஊடல் நீட்டித்துழித் தலைவன் வருந்திக் கூறுதல் வாயில்கள் தலைவனிடமும் தலைவியிடமும் ஊடல் ஒழிய வேண்டி இரங்கிக் கூறுதல் முதலியன இரக்கக் கிளவியாகும்.

உரையாளர் இருவரும் காட்டிய உதாரணங்கள் யாவும் கொள்க.

---

1. பொருள்: அன்பு முழுதும் மாறி என்னையே நினைக்குமாறு என்னால் துறந்து விடப்பட்டவளின் நிலைமையை அறிவீரோ என்று என்னைப் பற்றிய நிலைமையை வழியில் வருவாரிடம் கேளாதே. கேட்டால் அவர் சொல்லும் பதிலால் ஞாயிறு போல் விளங்கும் நின் தோற்றம் சிதையுமாறு கெடுதல் இல்லாத நின் பொருள் செய்வினை முடியாமல் ஆங்கே ஓர் துன்பம் எய்துதலும் உண்டாம். தலைவி தலைவனிடம் கூறியது.

## புலவியில் மனைவி உயர்வு

**223. மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்**
**நினையுங் காலைப் புலவியுள் உரிய (31)**

**ஆ. மொ.**

The superiority of the wife and inferiority of the husband are to be found in love-quarrels, if examined.

**இளம்**

என்-எனின் கற்புக் காலத்துத் தலைமகட் குரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ-ள்) தலைமகள் உயர்வும் தலைமகன் தாழ்வும் ஆராயுங் காலத்துப் புலவிக் காலத்து உரிய வென்றவாறு.

எனவே ஒழிந்த ஊடல் துனியென்பனவற்றிக் குரியவாம்.

''ஒரூஉக் கொடியியல் நல்லார் குரனாற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிய எமக்கு நீ யாரைப் பெரியார்க்கு
அடியரோ ஆற்றா தவர்;
கடியர் நமக்கியார்சொலத் தக்கார் மாற்று
வினைக்கெட்டு வாயல்லா வெண்மை யுரையாது கூறு நின்
மாய மருள்வா ரகத்து;
ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர் வாழ் கல்லா
என்கண் எவனோ தவறு''[1] (கலி. 88)

---

1. பொருள்: தலைவியும் தலைவனும் உறழ்ந்து பேசுவது இது. தலைவி: கொடிபோலும் இயல்புடைய பரத்தை யரின் மணப் பொருள் கலந்த மயிர் முடியினின்றும் உதிர்ந்த பூந்தாதுகள் நின் தோளில் கிடப்பனவாய் இருக்க எம்மைத் தொட நீர் யார்? பிரிவாற்றாதவர் எல்லாரும் ஆற்றுபவரான ஆடவர்க்கு எளியரோ? என்னைவிட்டு நீங்குக. தலைவன்: சோபமாப் இருப்ப வர்க்குப் பதில் சொல்லத்தக்கவர் யார்?
தலைவி: நீ போகும் தொழிலை விட்டு இப்போது உண் மையல்லாத பொய்களைச் சொல்லாதே. நின் பொய் யைக் கேட்டு மயங்குவாரிடத்துச் சென்று சொல்க.
தலைவன்: ஆயிழாய்! நின்கண் அருளைப் பெற்றா லன்றி உயிர் வாழாத என்னிடம் தவறு என்னை?

இதனுள் தலைமகன் பணிவுந் தலைவி யுயர்வுங் காண்க. இஃது ஈண்டுக் கூறியதென்னை? 'காமக் கடப்பினுட் பணிந்த கிளவி' (கற்பியல் 19) யென மேற் கூறப்பட்ட தாலெனின் ஆண்டுக் கூறியது ஊடல் புலவி துனி யென்னு மூன்றிற்கும் பெதுப்பட நிற்றலின், இது புலவிக்கே உரித்தென்னுஞ் சிறப்பு நோக்கிக் கூறியவாறு காண்க.

**நச்**

இது, கற்பினுள் தலைவற்குந் தலைவிக்கும் எய்தியதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) புலவியுள் மனைவி உயர்வும்-புலவிக் காலத்துத் தலைவன் பணிந்துழி உட்கும் நாணுமின்றித் தலைவி அதனை ஏற்றுக் கோடலும், கிழவோன் பணிவும்-தலைவன் தலைமைக்கு மாறாகத் தலைவியைப் பணிதலும், நினையுங்காலை உரிய-ஆராயுங்காலை இருவர்க்கு முரிய என்றவாறு.

**(உ-ம்)** ''வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும்
கோதை கோலா விறைஞ்சி நின்ற
வூதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்''[1]
(கலி.128)

இது, முன்னே தலைவி மனத்து நிகழ்தலுண்மையிற் கனவிலுங் கண்டாளென்றுணர்க.

''தப்பினே, னென்றடி சேர்தலு முண்டு'' (கலி.89)
என்பதும் அது.

'நினையுங்காலை' என்றதனால் தோழியுயர்வும் கிழவோன் பணிமொழி பயிற்றலுங் கொள்க.

---

1. பொருள்: வலையில் அகப்பட்டமயில்போல மிகவும் வருந்தினாய் என்று சொல்லி என் அடிமுன் தன் தலைபடியப் பணிவான் போலவும், அப்படிப் பணிந்து நின்ற ஊதைக் காற்றடிக்கும் கடற்கரைத் தலைவனாகிய காதலனை என்மாலையே கோலாகக் கொண்டு அடிப்பேன் போலவும் - கனாக்கண்டதாகத் தலைவி தோழியிடம் கூறினாள்.

"ஒன்று, இரப்பான்போ லெளிவந்துஞ் சொல்லு முலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போ
னல்லார்கட் டோன்று மடக்கமு முடைய
னில்லோர் புன்க ணீகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் வண்மையு முடைய
னன்னா னொருவன்றன் னாண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ சுடரிழாய் பன்மாணும்"[1]
(கலி.47)

இதனுள், தலைவன் இரந்துரைத்தவாறும் தான் அதனை ஏற்றுக் கொண்டவாறுங் காண்க. இச்சூத்திரம் புலவிக்கே கூறினார். ஊடற்குந் துனிக்குங் 'காமக்கடப்பின்' (160) என்பதனுட் கூறினாரென வுணர்க.

## கற்பின்கண் புகழ்ச்சி

**224. நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்**
**புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே. (32)**

**ஆ.மொ.**

During the regular life of married love praising one another because of excess passion is not forbidden.

**இளம்**

என்-எனின் இதுவுமோர் மரபுணர்த்திற்று.

(இ-ள்) கற்புக் காலத்து நிகழாநின்ற தகையின் பக்கத்து வேட்கை மிகுதியாற் புகழ்தலை நீக்கார் என்றவாறு.

---

1. பொருள்: தோழி தலைவியிடம் கூறியது. சுடரிழாய்! என்னிடம் ஒன்றை இரப்பவன் போல் எளியனாகிச் சில சொல்வன்; ஆனால் அவன் உலகத்தைக் காக்கும் ஆற்றலும் உடையவன். அறிவுடையாரை வழிபட்டு அவரால் நல்லது ஒன்று அறிந்தானைப்போல நன்மக்களிடம் காட்டும் அடக்கமும் உடையன். வறியவர் துன்பத்தைப் போக்கும் வல்லமையுள்ளவன் போலும் வண்மையும் உடையன். அப்படிப்பட்ட ஒருவன் தன் ஆண்மையை விட்டுத் தாழ்ந்து என்னிடம் சொல்லும் சொல்லையான் கூறக்கேட்பாயாக.

களவுக் காலத்து நலம் பாராட்டிய தலைமகன் கற்புக் காலத்து மெழினலம் பாராட்டப்பெறும் என்றவாறு.

தகை என்பது அழகு. அதனைப் பற்றிப் புகழும் எனக் கொள்க.

''அணைமருள் இன்றுயில் அம்பணைத் தடமென்றோள்
துணைமலர் எழில்நீலத் தேந்தெழில் மலருண்கண்
மணமௌவல் முகையன்ன மாவீழ்வான் நிரைவெண்பல்
மணநாறு நறுந்தண் மாரிவீழ் இருங்கூந்தல்
அலர்முலை யாகத் தகன்ற அல்குல்
சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்
பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி''[1] (கலி.14)

**நச்**

இது, கற்புக் காலத்துத் தலைவற்குந் தலைவிக்கும் உரியதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) கற்பினுள்-கற்புக் காலத்து, தகை நிகழ் மருங்கின்-ஒருவர்க்கொருவர் மனத்து நிகழுமிடத்து, வேட்கை மிகுதியிற் புகழ் தகை வரையார்-வேட்கை மிகுதியாலே அதனைப் புகழ்ந் துரைக்குந் தகைமையினை ஆசிரியர் இருவருக்கும் நீக்கார் கொள்வர் என்றவாறு.

''ஆக வனமுலை யரும்பிய சுணங்கின்
மாசில் கற்பிற் புதல்வன் றாயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றி''[2] (அகம்.6)

இது, புலவிக்கண் தலைவன் புகழ்ந்தது.

---

1. பொருள்: இனிய துயிலுக்குரிய அணை போன்றதும் மூங்கில் போன்றதுமான தோள்களையும், இணையான நீலமலர்போலும் கண்களையும், முல்லையரும்புபோலும் வரிசையான வெண்பற்களையும், மணம் நாறும் நுதலையும், மேகம்போல் கறுத்த கூந்தலையும் முலை வளர் ஆகத்தையும் அகன்ற அல்குலையும் சிலவான வெள்ளிய வளையல்களையும் உடைய செய்யவளே! என இப்படிப் பலவான சிறப்புரைகளைப் பண்டையினும் மிகவும் பாராட்டி-தலைவன் தலைவியைப் பாராட்டியது.
2. பொருள்: ஆகத்து அழகிய முலையினையும் தோன்றிய சுணங்கினையும் குற்றமில்லாத கற்பினையும் உடைய மகனுக்குத்தாயானவள் நீ என்று என்னைப்பற்றி மாயமான பொய்ம்மொழியைச் சொல்லி.

''அணைமரு ளின்றுயி லம்பணைத் தடமென்றோட்
டுணைமல ரெழினீலத் தேந்தெழின் மலருண்கண்
மணமௌவன் முகையன்ன மாவீழ்வா ணிரைவெண்பன்
மணநாறு நறுநுதன் மாரிவீ ழிருங்கூந்த
லலர்முலை யாகத் தகன்ற வல்குல்
சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்
பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி
யினிய சொல்லி யின்னாங்குப் பெயர்ப்பது
இனியறிந் தேனது துனியா குதலே''[1] (கலி.14)

இது, போக்கின்கண் தலைவன் புகழ்ந்தது.

''அரிபெய் சிலம்பின்'' (அகம்.6) என்பதனுள்

''ஏந்தெழி லாகத்துப் பூந்தார் குழைய''

என்பது, தலைவி புலவிக்கட் புகழ்ந்தது.

''நிரைதார் மார்ப நெருந லொருத்தியொட்டு''
(அகம்.66)

என்பதும் அது.

'தகை' எனப் பொதுவாகக் கூறலிற் குணத்தைக் கூறலுங் கொள்க.

''நாலாறுமாறாய்'' (நாலடி.383) எனவும்

''நின்ற சொல்லி னீடுதோ றினியர்'' (நற்.1)

எனவும் வரும்.

குற்றேவனிலையளாகிய தலைவியைத் தலைவன் புகழ்தலானும் பெருநாணினளாகிய தலைவி கணவனைப் பிறரெதிர் புகழ்தலானும் வழுவாயிற்று.

**சிவ**

இச்சூத்திரம் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் புகழுமிடம் கூறுகின்றது.

(இ-ள்) கற்பொழுக்கமாகிய மனைவாழ்க்கையில் ஒருவரைப் பற்றி ஒருவர் மனத்து நிகழும் அழகின் இடமாகக் கூடுதல்

---

1. பொருள்: பக்கம் 114 ல் காண்க.

வேட்கை மிக்கபோது ஒருவரை யொருவர் புகழும் குணத்தை அறிஞர் நீக்கார் என்றவாறு.

ஒருவரை யொருவர் புகழ்தல் சிறப்பின்றாயினும் வேட்கை மிகுதியிற் புகழ்தலின் அமைக என அமைத்தவாறு.

## இறைச்சி

**225. இறைச்சி தானே உரிபுறத் ததுவே. (33)**

**ஆ. மொ.**

'Iraicei' is one which appears besides fauna and flora of the land.

**பி. இ. நூ.**

**நம்பி. 240**

கருப்பொருட் பிறக்கும் இறைச்சிப் பொருளே.

**இல. வி. 568.**

இறைச்சி தானே பொருட் புறத் ததுவே.

**மாறன் அகம். 176**

கருப்பொருள் களனாம் கட்டுரை பயின்ற
பொருட்புறத்தனவாம் இறைச்சிப் பொருளணி.

**இளம்**

என்-எனின் இறைச்சி பொருளாமா றுணர்த்திற்று.

(இ-ள்) இறைச்சி பொருளென்பது உரிப்பொருளின் புறத் தாகித் தோன்றும் பொருள் என்றவாறு.

அஃதாவது கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்குந் துறைக் கும் அடையாகி வருவது.

''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''[1]

என்றவழி நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப்பூவுந் தேனும் இறைச்சிப் பொருள் என்று கொள்க.

**நச்**

இது, தலைவிக்குந் தோழிக்குமுரியதோர் வழுவமைக்கின்றது. இறைச்சியாவது உள்ள பொருள் ஒன்றனுள்ளே கொள்வதோர் பொருளாகலானுஞ் செல்வன் கூறப்படாமையானுந் தலைவன் கொடுமை கூறும் வழிப் பெரும்பான்மை பிறத்தலானும் வழுவாயிற்று.

(இ-ள்)இறைச்சிதானே-கருப்பொருட்கு நேயந்தான், பொருட் புறத்ததுவே-கூற வேண்டுவதோர் பொருளின் புறத்தே புலப் பட்டு அதற்கு உபகாரப்படும் பொருட்டன்மையுடையதாம் என்றவாறு.

''இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை''[2]

(கலி. 41)

சூளைப்பொய்த்தா னென்பதே கூறவேண்டும் பொருள். அதன்புறத்தே இங்ஙனம் பொய்த்தான் மலையகத்து நீர் திகழ் வானென்னென (?) இறைச்சிப் பொருள் தோன்றியவாறு காண்க. பிறவுமன்ன.

**சிவ**

இச்சூத்திரம் இறைச்சியின் இலக்கணம் கூறுகின்றது.

---

1. பொருள்: மலைச்சாரலிற் பூத்த கரிய திரண்ட குறிஞ் சிப் பூக்களின் தேனைக் கொண்டு மிக்க தேனைத் திரட் டும் மலை நாடனொடு யாம் கொண்ட நட்பானது நிலத்தினும் பெரியது, வானினும் உயர்ந்தது; கடலினும் ஆழம் அளவிடற்கரியதாம்-தலைவி (அ) தோழி கூற்று.

2. பொருள்: தான் (காதலன்) நமக்கு முன்னாளில் உற்ற சூளுறவினை இந்நாளில் பொய்த்துப் பிரிந்து வாரா திருக்கும் காதலனின் மலையாய் இருந்தும் அவன் மலை யானது விளங்கும் அருவியினையுடையதாய் இருந்தது; இஃதென்னே மாறுபாடு?

(இ-ள்)இறைச்சியாவது செய்யுளிற் கூறப்படும் அகத்திணைத் துறைப்பொருட்கு உபகாரப்படும்படி அதாவது அப்பொருளையே வற்புறுத்தும்படிப் புறம்பே தோன்றும் குறிப்புப் பொருளாகும் என்றவாறு.

இளம்பூரணர் ''இறைச்சிப் பொருளென்பது உரிப்பொரு ளின் புறத்தே தோன்றும் பொருள் என்றவாறு'' என்று உரை யெழுதி ''அஃதாவது கருப்பொருளாய் நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வருவது'' என விளக்கமும் எழுதினார். இப்படி எழுதியதால் இறைச்சி என்பது கருப்பொருளைக்குறிக்கும் என்பது அவர் கருத்தென அறியலாம். 'அடையாகி வரும்' என அவர் எழுதியதற்கு 'வெறும் அடையாகி வரும்' எனக் கொள்ளா மல் 'பிறிதோர் குறிப்புப் பொருளைக் கொண்டு அடையாகி வரும்' என விளக்கம் கொள்ளுதல் வேண்டும். அப்படிக் கொள் ளின், நச்சினார்க்கினியர்

> ''கருப்பொருட்கு நேயந்தான் கூறவேண்டுவதோர்
> பொருளின் புறத்தே புலப்பட்டு அதற்கு உபகாரப்படும்
> பொருள் தன்மையுடையதாம்''

என எழுதிய வுரையும் இளம்பூரணர் உரையும் ஒத்தனவாம்.

> ''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
> நீரினும் ஆரள வின்றே சாரற்
> கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
> பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''
>
> (குறுந். 3)

இது தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைவியிடம் கூறியது. தலைவன் வரையாது நீட்டித்தவழித் தலைவன்பால் கொண்ட அன்பின் சிறப்புக் கூறு முகத்தால் அவ்வன்பு சிறக்கவும் நிலைக்கவும் விரைந்து வரைந்து கொள்ளுதல் வேண்டும் எனத் தோழி சிறைப்புறமாக இருக்கும் தலைவனுக்குக் குறிப்பால் உணர்த்தினாள். 'சிறிய குறிஞ்சிப் பூவைக் கொண்டு பெரிய தேனை இழைக்கும் நாடன்' என்பதால் அவன் நாடு சிறிய குறிஞ்சிப் பூக்கொண்டு தேவையான பெரிய தேனை ஆக்கிச் சிறப்புறும் தன்மை போலத் தலைவனும் சிறிது கால அளவில் மறைத்து ஒழுகும் நம் அன்பை உளத்திற் கொண்டு எக்காலத்தும் வெளிப்படையாக ஒழுகுமாறு வரைந்து கொள்ளவில்லையே என்று குறிப்பால் விளக்கினாள் தோழி எனலாம். இறைச்சி என்பது பெரும்பாலும் தலைவனின் கொடுமை கூறும்வழி வரு

வது என நச்சினார்க்கினியர் கூறுதற்கேற்ப இப்பாடலிலும் தலைவன் வரைந்து கொள்ளாமைக் கொடுமையை 'கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடன்' என்ற தொடர் குறிப்பது காணலாம்.

## இறைச்சியிற் பிறக்கும் பொருள்

**226. இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே**
**திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே. (34)**

**ஆ. மொ.**

There may be hidden meanings to be derived from 'iraicci' for those who are capable of understanding the true nature of them.

**இளம்**

என்-எனின் இஃது இறைச்சிப் பொருள்வயிற் பிறக்கும் பிறிதுமோர் பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இறைச்சிப் பொருள்வயிற் றோன்றும் பொருளும் உள; பொருட்டிறத்தியலும் பக்கத்து ஆராய்வார்க் கென்றவாறு.

இறைச்சிப் பொருள் பிறிதுமோர் பொருள்கொளக் கிடப்பன வுங் கிடவாதனவு மென இருவகைப்படும். அவற்றிற் பிறிதோர் பொருள்பட வருமாறு:-

''ஒன்றேன் அல்லென் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெறிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்று கொய்ய மலரு நாடனோடு
ஒன்றேன் தோழி ஒன்றி னானே''[1] (குறுந். 208)

---

1. பொருள்: தோழீ! தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த இப்பிரிவுக்கு உடன்படாதேன் அல்லேன்; உடன்படுவேன். ஒன்றோடொன்று பொரும் களிறுகள் மிதித்ததால் வளைந்து தாழ்ந்த வேங்கை மரத்தில் குறவர் மகளிர் தம் கூந்தலில் சூடிக் கொள் வதற்காக நின்றபடியே பறிக்கும்படி மலரும்படியான நாடனோடு அயலார் மணம் பேசி வருவரே என்னும் ஒரு காரணத்துக்காகவே பிரிவுக்கு மனம் உடம்படாதவ ளானேன்-தலைவி கூற்று.

என்பது வரைவெதிர் கொள்ளாது தமர் மறுத்தவழித் தலைமக னோடு ஒன்றுமாறு என்னெனக்கவன்ற தோழிக்கு உடன்போதற் குறிப்பினளாய்த் தலைமகள் கூறியதாகலின் இதனுட் பொருகளி றென்றமையால் தலைமகள் தமர் தலைமகன் வரைவிற்குடன்படு வாரும் மறுப்பாருமாகி மாறுபட்டதென்பது தோற்றுகின்றது. 'பொருகளிறு மிதித்த வேங்கை' யென்றதனாற் பொருகின்ற விரண்டு களிற்றினும் மிதிப்ப தொன்றாகலின் வரைவுடன்படா தார் தலைமகனை யவமதித்தவாறு காட்டிற்று. 'வேங்கை நின்று கொய்ய மலரும்' என்றதனான் முன்பு ஏறிப்பறித்தல் வேண்டுவது இப்பொழுது நின்று பறிக்கலாயிற்று என்னும் பொருள் பட்டது. இதனானே பண்டு நமக்கரியனாகிய தலை மகன் தன்னை யவமதிக்கவும் நமக்கெளியனாகி யருள் செய்கின் றானெனப் பொருள் கொளக் கிடந்தவாறு காண்க.

நச்

இஃது, எய்தியது இகந்து படாமற் காத்தது.

(இ-ள்) இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே-கருப் பொருள் பிறிதோர் பொருட்கு உபகாரப்படும் பொருட்டாதலே யன்றி அக்கருப் பொருடன்னுள்ளே தோன்றும் பொருளும் உள; திறத்து இயல் மருங்கில் அஃது உள்ளுறையுவமத்தின் கூற்றிலே அடங்குமாறு போல நடக்குமிடத்து, தெரியு மோர்க்கே-அவ்வுள் ளுறை யுவமமன்று இஃது இறைச்சி யென்று ஆராய்ந்துணரும் நல்லறிவுடையோர்க்கு என்றவாறு.

''கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத்து வந்த வுதவிக் கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தமை யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவ
ளொலிமென் கூந்த லுரியவா நினக்கே'' (குறுந். 225)

இதனுள், 'தான் கெட்ட விடத்து உதவின உதவியை அரச வுரிமை யெய்திய மன்னன் மறந்தாற்போல நீ இரந்து துயருற்ற காலத்து யான் தலைவியை நின்னோடு கூட்டிய செய்ந்நன்றியை மறவாது இன்று நீ வரைந்து கொள்வாயாயின் இவள் கூந்தல் நினக்குரிய என்றவழி உவமையும் பொருளும் ஒத்து முடிந்தமை யின் முன்னின்ற 'நாட' என்பது உள்ளுறையுவமமன்றாய்

இறைச்சியாம்[1] என்னை தன் கன்றிற்குப் பயன்பட்டுப் பிறர்க்கு உயிரைக் கொடுக்கின்ற தினையைத் தான் உண்டு அழிவு செய் கின்றாற் போல, நீ நின்கருமஞ் சிதையாமற் பார்த்து எமக் குயிராகிய இவளைத் துயருறுத்தி எம்மை இறந்து படுவித்தல் ஆகாதென்று உவமை யெய்திற்றேனும், பின்னர் நின்ற பொரு ளோடியையாது இவ்வுவமம் உள்ளுறை யுற்றுப் பொருள் பய வாது இறைச்சியாகிய நாடனென்பதனுள்ளே வேறோர் பொருள் தோற்றுவித்து நின்றதேயாமாதலின். முலைமாந்த என்றது தன் கருமஞ் சிதையாமற் பார்த்தென்னுந் துணையன்றி உள்ளுறை யுவமப் பொருளை முற்ற உணர்த்தாமை யுணர்க.

''வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்
தேந்து மருப்பி னினவன் டிமிர்பூதுஞ்
சாந்த மரத்தி னியன்ற வுலக்கையா
லைவன வெண்ணெ லறையுரலுட் பெய்திருவா
மையனை யேத்துவாம் போல வணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
தையலாய் பாடுவாம் நாம்''[2] (கலி. 43)

இதனுட், புலவுநாறியும் பூநாறியுந் தீதும் நன்றுமாகிய இறைச்சியாகிய உலக்கைகளால் தலைவனைப் பாடும் பாட் டோடே கலந்து கூறத் தகாத தெய்வத்தையும் பாடுவா மென் னும் பொருள் பயப்பச் செய்த இறைச்சியிற் பொருளே பயந்த வாறும் இரண்டுலக்கையானும் பயன் கொண்டாற்போலையன் பெயர் பாடுதலாற் பயன்கொள்ளாமையின் உள்ளுறை யுவம மன்மையுங் காண்க. உள்ளுறையுவம மாயின்,

---

1. ''கன்றுதன்...நாட'' என்பதில் உள் பொருளில் வரும் குறிப்புப் பொருள் செய்யுளின் துறைப் பொருளுக்கு யாதோர் இயைபும் இல்லாதிருத்தலின் உள்ளுறையு வமம் போலத் தோன்றினாலும் உள்ளுறையாகாது; என்றாலும் வேறும் ஓர் குறிப்பொருள் தருதலின் இறைச்சி என்னல் வேண்டும். சிவ. விளக்கம் பார்க்க.

2. பொருள்: தையலே! புலியைக் கொன்ற மதமண நாறும் புள்ளிகளுடைய யானையின் நுனி யுயர்ந்த மருப்பினாலும் வண்டுக் கூட்டம் எழுந்து ஒலிக்கும் சந்தன மரத்தினாலும் செய்யப்பட்ட உலக்கைகளால் ஐவனம் என்னும் வெள்ளிய நெல்லைப் பாறையாகிய உரலிற் பெய்து நாம் இருவரும் முருகனை ஏத்திப் புகழ் வேம் போல அழகிய கருமேகம் உள்ள உச்சியுடை பயன்தரும் மலை நாடனைப் பாடுவோமாக,

"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத் தவனூ ரென்ப"[1] (ஐங்குறு. 41)

என்றாற் போலத் தலைவன் கொடுமையுந் தலைவி பேதைமையும் உடனுவமங் கொள்ள நிற்கும். இதுபற்றித் 'தெரியுமோர்க்கே' என்றார். உம்மை, இறந்தது தழீஇயிற்று.

**சிவ**

இச்சூத்திரம் இறைச்சிப் பொருள் மூலம் வேறும் ஒரு குறிப்புப் பொருள் தோன்றும் என்கின்றது.

(இ-ள்) இறைச்சிப் பொருள் இலக்கணப் பக்கத்தை நன்கு தெரியும் அறிவினர்க்கு இறைச்சிப் பொருள் மூலம் பிறக்கும் வேறு குறிப்பும் உளவாம் என்றவாறு.

**உதாரணம்**

"அகவினம் பாடுவாம் தோழி அமர்க்கண்
நகைமொழி நல்லவர் நாணு நிலைபோல்
தகைகொண்ட ஏனலுள் தாழ்குரல் உரீஇ
முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்
வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சிப்
பகையில்நோய் செய்தான் பயமலை யேத்தி
அகவினம் பாடுவாம் நாம்" (கலி. குறி. 4)

என்பது.

(இ-ள்) 'தோழீ! நாம் நம் தலைவனைப் பற்றி நம் மனப் போக்குக்கு ஏற்றபடி அழைத்துப் பாடுவோம்! என்று தலைவியிடம்தோழி கூறினாள். அதற்குத் தலைவி 'ஆம்; அப்படியே அழைத்துப் பாடுவோம்; நல்லவர் தம்மைப் பற்றிப் பிறர் கூறும் புகழ் மொழி கேட்டு நாணத்தால் தலை குனிதல் போல முற்றிய காரணத்தால் சாய்ந்திருக்கும் தினைக்கதிரையுருவிச் சந்தன உரலில்பெய்து யானைத் தந்த உலக்கையால் மாறி மாறிக் குற்றிக் கொண்டே மருந்தில்லாத நோயை நமக்கு உண்டாக்கிய தலைவனின் பயனுள்ள மலையைப் பாடுவோம்' என்றாள்.

---

1. பொருள்: தான் ஈன்ற குட்டியையே தான் தின்னும் அன்பு இல்லாத முதலையுடன் வெள்ளிய பூம் பொய்கையையுடையதாகும் அத் தலைவன் ஊர்.

என்பதாம். இதில் உள்ள கருப்பொருள்கள் தினைக்கதிர், யானை மருப்பு, சந்தனமரம் என்பன. இவை கொண்டு சொல் லப்பட்ட கருத்து, 'தினைக் கதிரை யுருவிச் சந்தன மர உரலில் பெய்து யானை மருப்பாகிய உலக்கையால் மாறிமாறிக் குற்று வோம்' என்பது. இதன் மூலம் பெறப்படும் இறைச்சியாவது,

> ''தினைக் கதிரைச் சந்தன உரலிற் பெய்து மருப்பு
> உலக்கையால் குத்திப் பயன் கொள்வோம். அதுபோலத்
> தலைவன் பயமலைச் செய்திகளைத் தலைவன்பால்
> வைத்துப் பாடிப் பயன் கொள்ளாது போயினேம்''

என்பதாம். இதுவன்றித் தினைக்கதிரைப் பெய்யும் உரல் சந்தன மரத்தால் ஆனது என்பதால் சந்தனமரம் மணம் நாறும் தன்மை யுள்ளதுபோல் தலைவன் நம்மை மணந்து புகழ்மிகும் பண் பினன் ஆயிலனே என்னும் இறைச்சி புலப்படுகின்றது. இதன் மூலம் தலைவனைப் பழித்தலால் 'இயற்பழித்தல்' என்னும் குறிப்பும் பெறப்படுகின்றது. புலால் நாறும் மருப்பை 'முத்தார் மருப்பு' என்பதால் வரைந்து பயன்படாத தலைவனை வெறு மனே புகழ்ந்து பாடுவோம் என்னும் குறிப்புப் புலப்படுகின்றது. இதன் மூலம் தலைவனைப் புகழ்தலால் 'இயற்பட மொழிதல்' என்னும் குறிப்பும் பெறப்படுகின்றது. இவ்வாறு இறைச்சிப் பொருள் மூலம் தோன்றும் பிறிதொரு கருத்துப் பொருளே இறைச்சியிற் பிறக்கும் பொருளாம்.

இளம்பூரணர் இறைச்சியிற் பிறக்கும் பொருள் உள்ளுறை யுவமமாகும் என்னும் கொள்கையுடையவர். இறைச்சி என் பதற்குக் கருப்பொருள் என்றும் இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்பதற்கு உள்ளுறை யுவமம் என்றும் கொண்டால் உடனுறை சுட்டு நகை சிறப்பு உள்ளுறைகளும் கருப் பொருள் மூலமாகவே பெறப்படுவனவாதலின் உள்ளுறை யுவமம் மட்டும் இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்றல் பொருந்தாது. அன்றியும் உவம வுள்ளுறை என்பது உவமமும் பொருளும் ஒத்து முடிந்தாலும் ஒவ்வாது முடிந்தாலும் உவமவுள்ளுறையாம் என்பது பெறப்படும் ஆதலாலும் அது பொருந்தாது.

நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்து இறைச்சி என்பதற்குக் கருப்பொருள் என்று பொருள் கொண்டதும் பொருந்தாது. கருப் பொருட் கருத்தால் பெறப்படும் குறிப்புப் பொருளை இறைச்சி என்று 'இறைச்சி தானே' என்னும் சூத்திரத்தாற் குறித்த ஆசிரி யர், அடுத்துக் கூறும் இச்சூத்திரத்தில் இறைச்சி என்பதைக்

கருப்பொருள் என்னும் பொருளில் கூறினார் என்பது ஏற்பதற் கில்லை. அதனால் இறைச்சியிற் பிறக்கும் பொருள் என்பதற்குக் 'கருப்பொருட் கருத்தால் பெறப்படும் குறிப்புப் பொருளிலிருந்து பெறப்படும் வேறு ஒரு பொருள்' என்பதுவே கருத்தாகும். அதற் கேற்ற உதாரணம் ''அகவினம் பாடுவாம்'' என்னும் செய்யுளில் முன் காட்டியதேயாகும்.

## வன்புறை

**227. அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும்**
**வன்புறை யாகும் வருந்திய பொழுதே. (35)**

**ஆ. மொ.**

When the wife suffers (on account of his absence), making reference (by others) to things loved by him among the fauna and flora, is equal to 'Vanpurai'-i.e. compelling her to be patient assuring his immediate return.

### இளம்

என்பது சூத்திரம்.

என்-எனின் இது இறைச்சிப் பொருளாற் படுவதோர் பொருள் உணர்த்திற்று.

(இ-ள்) அன்புறுதற்குத் தகுவன இறைச்சிப்பொருட்கண் சுட்டுதலும் வற்புறுத்தலாம் என்றவாறு. உம்மை இறந்தது தழீஇயிற்று.

''அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்
தனரே''[1] (கலி.11)

என்றது வற்புறுத்தற் குறிப்பு.

---

1. பொருள்: காலடிப் பாகம் தாங்கும் அளவில் இன்றி நெருப்புப் போலும் வெய்யிலால் காடானது கடத்தற் கரியதாகும். ஆதலின் மேகம் போலும் கூந்தலாய் நீ உடன் வராதே என்றார் காதலர். அதனுடன் மேலும் அவர். அக்காடானது துடிபோலும் காலடியுடைய கன்று கலக்கிய சில நீரைத் தன் பிடிக்கு முன்னர் ஊட்டிப் பின்னர்த்தான் உண்ணும்களிறும் உடையது என்றார் -தலைவி கூற்று.

நச்

இஃது, இறைச்சி முற்கூறியவற்றின் வேறுபட வருமென் கின்றது.

(இ-ள்) வருந்திய பொழுதே-பிரிவாற்றாத காலத்து, இறைச்சியுள் அன்புறு தகுந சுட்டலும்-தோழி கருப்பொருள்களுள் தலைவன் அன்பு செய்தற்குத் தகுவனவற்றைக் கருதிக் கூறலும், வன்புறை ஆகும்-வன்புறுத்தலாகும் என்றவாறு.

> ''நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
> பிடிபசி களைஇய பெருங்கை வேழ
> மென்சினை யாஅம் பொளிக்கு
> மன்பின தோழியவர் சென்ற வாறே''[1] (குறுந். 37)

இதனுள், 'முன்பே நெஞ்சகத்தன்புடையார் அதன் மேலே களிறு தன்பிடியின் பெரும்பசி களைதற்கு மென்றோலையுடைய ஆச்சாவைப் பிளந்து அந்நாரைப் பொளித்தூட்டும் அன்பினையுடைய அவர் சென்ற ஆறதனைக் காண்பர் காண்' என்று அன்புறுதகுந கூறிப் பிரிவாற்றாதவளை வற்புறுத்தவாறு காண்க. நம்மேல் இயற்கையாக அன்பிலனென்று ஆற்றாளாவளென்று கருதாது இவளை ஆற்றுவித்தற் பொருட்டு இவ்வாறு கூறலின் வழுவாயமைந்தது.

'அரிதாயவறன்' (கலி. 11) என்பது தோழி கூற்றன்மை உணர்க.

## கிழவியைப் பாராட்டல்

**228. செய்பொரு ளச்சமும் வினைவயிற் பிரிவும்**
**மெய்பெற உணர்த்துங் கிழவிபா ராட்டே. (36)**

---

1. பொருள்: தோழி! தலைவர் நம்மைப் பிரிந்து சென்ற பாலைவழி எத்தகையது என்றால், களிறானது தன் பிடியின் பசியைப் போக்க ஆச்சா மரத்தின் மெல்லிய கிளைகளை ஒடித்து அவற்றின் நாரை உண்ணக் கொடுக்கும் அன்பினையுடையது. அதனை அவர் காண்பர் ஆதலின் நம்மிடம் விருப்பம் மிகவுடையராவர். உடன் நம்மை வந்து அருளுவர்.

**ஆ. மொ.**

The exaltation of the wife by the husband will indicate his fear of her hindrence to his activity and his separation on his duty.

**பி. இ. நூ.**

**நம்பி. 83, இல. வி. 450**

குறிப்பின் உணர்த்தும் பெறலருங் கிழத்திக்கு.

**இளம்**

என்-எனின் இது தலைமகட்குரியதோர் இயல்புணர்த்தல் நுதலிற்று.

(இ-ள்) தலைமகன் பொருள்வயிற் பிரியுமிடத்து ஆறின்னா மையா னுளதாகிய அச்சமும் வினைவயிற் பிரியுங் காலத்தினுந் தலைவியைப் பாராட்டிப் பிரிதலினால், அப்பாராட்டினான் மெய் பெற வுணரும் என்றவாறு.

**உதாரணம்**

''நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தாம்
அஞ்சியது ஆங்கே அணங்காகும் என்னுஞ்சொல்
இன்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட யானும்,
இதுவொன் றுடைத்தென எண்ணி''[1] (கலி. 24)

என்றமையாற் பாராட்டினால் தலைமகள் பிரிவு உணர்ந்தவாறு அறிக.

---

1. பொருள்: மிக இனிய சொல்லுடைய தோழியே! நெஞ்சம் நடுங்கும்படியாகக் கேட்டும் அவ்வாறிருக்குமோ எனஐயுற்றும் தாம் அஞ்சிய ஒரு நிகழ்ச்சி உண்மை யாகவே ஆகிவருத்தும் என்று சொல்லும் சொல் உண்மையே நின் உறவினனாகிய தலைவன் புதுவதாகப் பல் நாளும் என்னைப் பாராட்ட யானும் இப்பாராட்டு ஏதோ ஒரு பிரிவையுடையதாகும் என எண்ணினேன். (அவ்வாறேயாயிற்று எனத்தலைவி தோழியிடம் கூறி னாள்).

**நச்**

இது, தலைவன் தலைவியைப் பாராட்டியவழி வருவதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) கிழவி பாராட்டே-தலைவன் தலைவியைப் பாராட்டிய பாராட்டு, செய்பொருள் அச்சமும்-யாஞ்செய்யக் கருதிய பொருட்கு இவள் இடையூறாவள் கொலென்றுதலைவன் அஞ்சிய அச்சத்தையும், வினைவயிற் பிரிவும்-தான் பொருள் செய்தற்குப் பிரிகின்றதனையும், மெய்பெற உணர்த்தும்-ஒருதலையாகத் தலைவிக்கு உணர்த்தும் என்றவாறு.

அப்பாராட்டுக் கிழவியதாகலிற் 'கிழவி பாராட்டு' என்றார்.

''நுண்ணெழின் மாமை'' (கலி. 4)

என்பதனுட் கழிபெருநல்கலால் தலைவன் செய்பொருட் கஞ்சிய வாறும் அவன் பிரியக்கருதியதூஉந் தலைவியுணர்ந்தாள் அப்பாராட்டினாலென்றுணர்க.

அன்பானன்றிப் பொருள் காரணத்தாற் பாராட்டினமை யானும் அதனைச் செவ்வனங்கொள்ளாது பிறழக்கோடலானும் இருவர்க்கும் வழுவாமென்றமைத்தார்.

**சிவ**

இச்சூத்திரம் தலைவன் தலைவியை வலிந்து பாராட்டும் காலம் உணர்த்துகின்றது.

(இ-ள்) தலைவன் தலைவியைப் பாராட்டும் பாராட்டானது, தான் பொருள் செய்யப் பிரியின் ஆறின்னாமை முதலிய வற்றுக்கு அஞ்சிஇடையூறாவாளோ என அஞ்சிய அச்சத்தையும், ஓதல் தூது முதலிய காரணமாகப் பிரியும் பிரிவையும் தலைமகட்கு உண்மை பெற உணர்த்தும் என்றவாறு.

இதனால் தலைவன் பொருள் ஓதல் முதலியவற்றுக்குப் பிரியுமுன் தலைவியை முன்னையினும் பாராட்டிப் புணர்வன் என்பது கூறப்பட்டது.

ஓதல் தூது முதலியவற்றுக்குப் பிரிதல் தலைவன் கடமையென உணர்தலின் பொருட் பிரிவு பற்றியே ஆறின்னாமை முதலியவற்றுக்குத் தலைவி அஞ்சுவள் ஆதலின் செய்பொருள் அச்சம் தனித்துக் கூறப்பட்டது.

## பரத்தையை ஏத்தல்

**229. கற்புவழிப் பட்டவள் பரத்தையை ஏத்தினும்
உள்ளத் தூட லுண்டென மொழிப. (37)**

**ஆ. மொ.**

They say that when the lady of wedded-love praises the paramour it is to be understood that there is discord in her heart.

**இளம்**

என்-எனின் இதுவும் அது.

(இ-ள்) கற்புக் காரணமாகத் தலைமகனது பரத்தைமைக் குடன்பட்டாளே யாயினும், உள்ளத்தின்கண் ஊடல் நிகழும் என்றவாறு.

**நச்**

இது, தலைவிக்கட் டோன்றியதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) கற்பு வழிப்பட்டவள்-கற்பின் வழி நின்ற தலைவி, பரத்தை ஏத்தினும்-பரத்தையைப் புகழ்ந்து கூறினாளாயினும், உள்ளத்து ஊடல் உண்டென மொழிப-உள்ளத்துள்ளே ஊடின தன்மை உண்டென்று கூறுவர் புலவர் என்றவாறு.

பரத்தையை ஏத்தவே தலைவன்கட் காதலின்மை காட்டி வழுவாயிற்றேனும் உள்ளத் தூடலுண்மையின் அமைக்க வென்றார்.

"நாணி நின்றோ ணிலைகண் டியானும்
பேணினெ னல்லனோ மகிழ்ந வானத்
தணங்கருங் கடவுளன் னோணின்
மகன்றா யாதல் புரைவதாங் கெனவே"[1]

(அகம். 16)

---

1. பொருள்: பெரும! என் சொல்லுக்கு நாணி நின்ற (பிறள் ஒருத்தியின்) நிலைகண்டு, வானத்து வருத்துதல் இல்லாத கடவுள் போல்வாளாகிய அவள் நின் மகனுக் குத் தாயாதல் ஒக்கும் என்று அவளை விரும்பினேன் அல்லவோ.

'ஏத்தினும்' என்ற உம்மையால் ஏத்தாமற் கூறும் பொழுதெல்லாம் மாறுபடக் கூறலுளதென்பது பெற்றாம்.

"என்னொடு புரையுந ளல்லள்
தன்னொடு புரையுநர்த் தானறி குநளே"[1]

(பதிற்றுப்.)

**சிவ**

இச்சூத்திரம் தலைவியின் ஊடல் உள்ளடக்கம் கூறுகின்றது.

(இ-ள்) தலைவி தான் கற்பு வழிப்பட்டவளாய்த் தலைவன் பரத்தைமையை உடன்பட்டுப் பரத்தையை அவனிடம் புகழ்ந்துரைத்தாலும் அவள் உள்ளத்தில் ஊடல் உணர்வு உண்டென்று கூறுவர் புலவர் என்றவாறு.

புலனெறி வழக்கில் பரத்தையை ஏத்துவதாக இருப்பினும் அதனொடு அமையாது தலைவியின் உள்ளத்தில் ஊடல் உண்டு எனக்கொள்ளல் வேண்டும் என்பது இதனாற் கூறப்பட்டது.

## குறிப்புணர்தல்

**230. கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக்
கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள். (38)**

**ஆ. மொ.**

The wife will try to find out the nature of his mind by describing the nature of another woman.

**இளம்**

என்-எனின் இது தலைமகட்குரியதோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தலைவி மற்றொருத்தி குணம் இத்தன்மையள் எனச் சொல்லித் தலைமகன் குறிப்பினை யறிதற்கு முரியள் என்றவாறு.

1. பொருள்: நின்பரத்தையானவள் தன்னொடு ஒப்பவரைத்தான் அறிவாள்; ஆனால் அவள் என்னொடு ஒப்பானவள் அல்லள்-தலைவி கூற்று.

இது கற்பியலுட் கூறியதற் கிலக்கணம்.

''கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே''[1]

(ஐங்குறு.122)

என்வரும். பிறவு மன்ன.

நச்

இஃது எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது. உள்ளத்தூடலின்றியும் பிறளொருத்தியைத் தலைவி புகழுமென்றலின்.

(இ-ள்) கிழவோள் பிறள் குணம் இவையெனக் கூறி-தலைவி வேறொரு தலைவியுடைய குணங்கள் இத்தன்மைய வென்று தலைவற்குக்கூறி, கிழவோன் குறிப்பினை அறிதற்கும் உரியள்-அவள் மாட்டு இவன் எத்தன்மையனாயிருக்கின்றானென்று தலைவன் குறிப்பினை உணர்தற்கு முரியள் என்றவாறு.

பரத்தையென்னாது 'பிறள்' என்றதனால் தலைவியே யாயிற்று; அன்றிப் பரத்தையாயின் ஊடலின்மை அறனன்றாகலின் உள்ளத்தூடல் நிகழ்பவை வேண்டும். தோழிகூறுங்கால் தலைவியரைக் கூறப்பெறாளென்பதூஉம் பரத்தையரைக் கூறின் அவர்க்கு முதுக்குறைமை கூறிக் கூறுவளென்பதூஉங் கொள்க.

''கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
யொள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே''

(ஐங்குறு. 122)

இது தலைவன் வரையக் கருதினானோர் தலைவியை இனையளெனக் கூறி அவள் மாட்டு இவன் எத்தன்மையனென்று விதுப்புற்றுக் கூறியது. இது தலைவன் கூற உணராது தான்

---

1. பொருள்: தலைவனே! நினக்கு உறவுடையவளை யான் கண்டேன் அல்லவோ? எப்படி எனின், தான் மணலில் விளையாடியபோது தன் ஒளிமிக்க அணி வீழ்ந்ததாக நினக்குக் கூறுவாள் போல நீ அருகிருக்கவும் நெய்தல் நிலப் பறவையாகிய வெள்ளாங்குருகை நோக்கி என் அணியைக் கண்டாயோ என வினவினாள். அதனால் கண்டேன்-தலைவி கூற்று.

வேறொன்றுகூறி அவன் குறிப்பு அறியக் கருதுதலின் வழு வாயமைந்தது. இது கைக்கிளைப் பொருட்கண் வழுவமைக் கின்றது.

**சிவ**

இச்சூத்திரம் தலைவி தலைவனின் பரத்தைமையை யறியும் வழியொன்று கூறுகின்றது.

(இ-ள்) தலைவன்பால் பரத்தைமை ஐயுற்ற தலைவி அப் பரத்தையின் குணங்கள் இத்தகையன எனக் கூறு முகத்தான் தலைவனின் குறிப்பினை உணர்தற்கும் உரியளாவாள் என்ற வாறு.

பிறள் என்றது பரத்தையை. காமக்கிழத்தி முதலியவரும் ஆவர்.

**பரத்தையர் விழுமம் கழறல்**

**231.** **தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்**
**மெய்ம்மை யாக அவர்வயி னுணர்ந்தும்**
**தலைத்தாட் கழறல்தம் எதிர்ப்பொழு தின்றே**
**மலிதலும் ஊடலும் அவையலங் கடையே.** **(39)**

**ஆ. மொ.**

Even if the paramours make complaints to the lady about their sufferings caused by her lord and even after knowing them to be true the lady will not admonish her husband in the presence of the paramours unless she feels joy at the thought of his separation from his paramours and sadness at their love towards her lord.

**இளம்**

என்-எனின் இது தலைமகட்குரியதோர் மரபுணர்த்திற்று.

(இ-ள்) பரத்தையர் தாமுற்ற துன்பத்தினைத் தலைமகட்குக் கூறியவழியும் அவரிடத்துத் துன்பத்தை மெய்ம்மையாகஉணர்ந்து வைத்துந் தலைமகன் மாட்டுக் கழறுதல் தலைவன் எதிர்ப்பட்ட பொழுது இல்லை, மகிழ்ச்சியும் புலவியும் அல்லாத காலத்து என்றவாறு.

கூறினும் என்ற உம்மை எதிர்மறை. கூறாமை பெரும்பான்மை. அதனை ஐயப்படாது துணிதலான் மெய்ம்மையாக வென்றார். அதனைத் தலைமகன் வந்தவழிக் கூறுவாளாயின் தனக்குப் புணர்ச்சியிற் காதலில்லையாம்- சொல்லாளாயின் அவள் கூறியவதனாற் பயனில்லையாம். அதனைக் கலவியிறுதியினும் புலவியினும் கூறப்பெறும் என்றவாறு.

''நின்னணங் குற்றவர் நீசெய்யும்* கொடுமைகள்
என்னுழை வந்துநொந் துரையாமற் பெறுகற்பின்''[1]
(கலி.77)

எனப் புலவியிற் கூறியவாறு காண்க.

நச்

இது, பரத்தையர்க்கும் தலைவிக்கும் தலைவற்கும் படுவதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்-தலைவனால் தாம் உற்ற வருத்தத்தைத் தலைவிக்குப் பரத்தையர் கூறினும் ஏனைத் தலைவியர் கூறினும், அவர்வயின் மெய்ம்மையாக உணர்ந்து-அவர் கூறியவாற்றானே அவ்வருத்தத்தை அவரிடத்து உண்மையாக உணர்ந்து, தலைத்தாட் கழறல்-தலைவன் முன் நின்று கழறுங் கழற்றுரை, தம் எதிர்ப்பொழுது இன்று தம்மைப் பரத்தையர் எதிர்ப்பட்ட பொழுதின்கண் இல்லை, மலிதலும்-அவர் துயருற நின்றுழிக் கவலாது நீங்கினானென மகிழ்தலும், ஊடலும்-அவன் பிரிவிற்கு இவர் இரங்கினாரென்ற காரணத்தான் ஊடுதலும், அவை அலங்கடை-அவ்விரண்டும் நிகழாவிடத்து என்றவாறு.

என்பது, வெறுத்த உள்ளத்தளாமென்பது கருத்து. எனவே, மலிதலும் ஊடலும் நிகழுமிடத்தாயின் தலைத்தாட் கழறுமென்பது பெறுதும், தலைத்தாள்-தகுதி பற்றிய வழக்கு.

---

1. பொருள்: நின்னால் வருத்தம் செய்யப் பெற்றவளாகிய பரத்தை நீ அவட்குச் செய்யும் கொடுமைகளை என்னிடம் வந்து மனம் நொந்துசொல்லவில்லையென்றால்... (தலைவி தலைவன் பரத்தைமை பற்றிக் கூறியது.)

"பொன்னெனப் பசந்தகண் போதெழி னலஞ்செலத்
தொன்னல மிழந்தகண் துயில்பெறல் வேண்டேன்மன்
னின்னணங் குற்றவர் நீசெய்யுங் கொடுமைக
ளென்னுழை வந்துநொந் துரையாமை பெறுகற்பின்"[1]
(கலி. 77)

இது பரத்தையர் முன்னரன்மையின் மலிதலும் ஊடலும் நிகழ்ந்து தலைத்தாட் கழறியது.

கழறாது கூறியது வந்துழிக் காண்க. தம்முறு விழுமத்தைப் பரத்தை தலைவிக்குக் கூறுதலாற் பரத்தைக்கும். அவர் கூறத் தான் எளிவந்தமையின் தலைவிக்கும், இவரிங்ஙனமொழுகலின் தலைவற்கும் வழுவமைந்தது. உம்மை, இறந்தது தழீஇயிற்று.

**சிவ**

இச்சூத்திரம் தலைவி தலைவனைக் கழறும் இடமும் கழற லாகா இடமும் கூறுகின்றது.

(இ-ள்) பரத்தையர் தலைவனால் தாம் உற்ற பிரிவுத் துன்பத் தைத் தன்னிடம் கூறினாலும், அவரிடம் அத்துன்பம் உண்டென் பதை உண்மையாக உணர்ந்தாலும் அவரின் நீங்கித் தலைவன் தன்னிடம் எதிர்ப்பட்ட அப்பொழுதே அவன் முன்னிலையில் அவனைக் கழறியுரைக்கும் கூற்று இல்லை. புணர்ச்சியிறுதியும் புலவிக் காலமும் அல்லாவிடத்து என்றவாறு.

எனவே புணர்ச்சியிறுதியிலும் புலவியிலும் கழறுதல் உண்டு என்றவாறாம். கழறுதல் என்பது தலைவனது பரத்தைமையைச் சுட்டி இடித்துரைத்தலாம். பரத்தையர்க்குப் பரிந்துரைத்த லன்று.

---

1. பொருள்: என்கண்கள் மலர்போலும் அழகு கெடப் பொன்போலப் பசந்தன; அப்படிப் பழைய அழகு கெட்ட அக்கண்கள் துயில் பெறுதலையும் யான்வேண் டேன், எப்போதெனின் நின்னால் வருத்தம் செய்யப் பெற்ற பரத்தையர் அவர்க்கு நீ செய்த கொடுமைகளை என்னிடம் வந்து நொந்து உரையாமையைப் பெறுவே னாயின் அப்பொழுது.

## கையறு கிளவி

**232. பொழுது தலைவைத்த கையறு காலை**
**இறந்த போலக் கிளக்குங் கிளவி**
**மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு**
**அவைநாற் பொருட்கண் நிகழும் என்ப. (40)**

**ஆ. மொ.**

It is said that during the evening time when she is broken-hearted, the uttering of expressions as if exceeding the limit, is apt on four themes of feigned ignorance, pain, wonder and excellence of beauty.

என்-எனின் இது பருவம் வந்துழித் தலைமகட் குரியதோர் வழுக்காத்தலை நுதலிற்று.

(இ-ள்) பொழுது தலைவைத்த லாவது-யாதானுமொரு பருவத்தைக் குறித்தவழி யப்பருவம் இருதிங்களை யெல்லையாக வுடைத்தாயினும் அது தோற்றிய வழி என்றவாறு.

கையறு காலை என்பது-இது கண்டு செயலற்றகாலை என்ற வாறு.

இறந்த போலக் கிளத்த லாவது-அக்காலந் தோன்றிய பொழுது கழிந்தது போலக் கூறுதல்.

மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு அவை நாற் பொருட்கண் நிகழும் என்ப என்பது-அவ்வாறு கூறுதல் அறியா மையானாதல் வருத்தத்தானாதல் மயக்கத்தானாதல் அக் காலத்துக்குரிய பொருள் மிகத் தோன்றுதலானாதல் என இந் நான்கு பொருளானும் நிகழும் என்றவாறு.

சிறுபொழுதாயின் யாமங் கழிவதன் முன்னர்க் கூறுதல். எனவே இவ்வாறு வருஞ் செய்யுள் காலம் பிழைத்துக் கூறுகின்ற தல்ல என்றவாறு.

### உதாரணம்

''பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழ

வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானம்
கருவிருந்து ஆலிக்கும் போழ்து''[1] (கார்நாற். 1)

இது பருவங்கண்டவழி வாரார்கொல் என்றமையால் இறந்த போலக் கிளந்தவாறாயிற்று. பிறவு மன்ன. இதுவுமோர் மரபு வழுவமைத்தல்.

நச்

இது 'பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே' (105) என்ற சிறப்புடைய பெருந்திணை யன்றிப் பெருந்திணைக் குறிப் பாய்க் கந்தருவத்துட்பட்டு வழுவிவரும் 'ஏறிய மடற்றிறம்' (51) முதலிய நான்கினுள் ஒன்றாய் முன்னர் நிகழ்ந்த கந்தருவம் பின்னர் வழீஇ வந்த 'தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்' (51) ஆகிய பெருந்திணை வழு அமைக்கின்றது.

ஓதலுந் தூதும் ஒழிந்த பகைவயிற் பிரிவாகிய வாளா ணெதிரும் பிரிவும் முடியுடை வேந்தர்க்கும் அவரேவலிற் பிரியும் அரசர்க்கும் இன்றியமையாமையின், அப்பிரிவிற் பிரிகின்றான். 'வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்' (185) என்பதனாற் கற்புப்போல நீ இவ்வாறொழுகி யான் வருந்துணையும் ஆற்றி யிருவென ஆற்றுவித்துப் பிரிதல் இலக்கண மன்மையின் வாளா பிரியுமன்றே. அங்ஙனம் பிரிந்துழி அவன் கூறிய கூற்றினையே கொண்டு ஆற்றுவிக்குந் தோழிக்கும் ஆற்றுவித்தலரிதாகலின், அவட்கு அன்பின்றி நீங்கினானென்று ஆற்றாமை மிக்கு ஆண்டுப் பெருந்திணைப் பகுதி நிகழுமென்றுணர்க.

(இ-ள்) பொழுது-அந்திக் காலத்தே, கையறு காலை-'புறஞ் செயச் சிதைத்தல்' (18) என்னுஞ் சூத்திரத்தில் அதனினூங் கின்று எனக் கூறிய 'கையறவுரைத்த' லென்னும் மெய்ப்பா டெய்திய காலத்தே, தலைவைத்த-அந்த வாற்றாமையின் இகந்த வாக முடிவிலே வைக்கப்பட்ட மெய்ப்பாடுகள், மிகுதியோடு மடனே வருத்தம் மருட்கை நாற்பொருட்கண் நிகழும்-தன் வனப்பு மிகுதியுடனே மடப்பமும் ஆற்றாமையும் வியப்புமாகிய நான்கு பொருட்கண்ணே நடக்கும். அவை இறந்தபோலக்

---

1. பொருள்: கடல் வண்ணனாகிய திருமாலின் மார்பில் மாலைபோல் அழகிய வில்லை ஊடேபதித்து இனிய மேகம் பொழியும் யாம் அக்காலத்து வருவேம் என்று சொல்லிச் சென்றார் காதலர்; மேகம் மேலே அருகாக இருந்து மழை பொழியும் இப்போழ்வு வாராரோ?. தலைவிகூற்று.

கிளக்குங் கிளவி என்ப-அங்ஙனம் அவை நடக்கின்ற நான்கு பொருளுங் கூற்று நிகழுங்கால் தன்னைக் கைகடந்தன போலக் கூறுங் கூற்றாய் நிகழுமென்று கூறுவர் புலவர் என்றவாறு.

தலைவைத்த மெய்ப்பாடாவன: ஆறாமவதியினும் ஒப்பத் தோன்றுதற்குரிய மெய்ப்பாடுகளாகி மன்றத்திருந்த சான்றோரறியத் தன்றுணைவன் பெயரும் பெற்றியும் அவனோடு புணர்ந்தமையுந் தோன்றக் கூறியும் அழுதும் அரற்றியும் பொழுதொடு புலம்பியும் ஞாயிறு முதலியவற்றோடு கூறத்தகாதன கூறலும் பிறவுமாம்.

(உ-ம்)

*''புரிவுண்ட புணர்ச்சியுட் புல்லாரா மாத்திரை
யருகுவித் தொருவரை யகற்றலிற் றெரிவார்கட்
செயநின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது
நயநின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினும்
பயனின்று மன்றம்ம காம மிவண்மன்னு
மொண்ணுத லாயத்தா ரோராங்குத் திளைப்பினு
முண்ணுனை தோன்றாமை முறுவல்கொண் டடக்கித்தன்
கண்ணினு முகத்தினு நகுபவள் பெண்ணின்றி
யாவருந் தண்குரல் கேட்ப நிரைவெண்பன்
மீயுயர் தோன்ற நகாஅ நக்காங்கே
பூவுயிர்த் தன்ன புகழ்சா லெழிலுண்க
ணாயிதழ் மல்க வழும்;
ஒஒ, அழிதகப் பாராதே யல்லல் குறுகினங்
காண்பாங் கனங்குழை பண்பு;
என்று, எல்லீரு மென்செய்தீ ரென்னை நகுதிரோ
நல்ல நகாஅலிர் மற்கொலோ யானுற்ற
வல்ல லுறீஇயான் மாய மலர்மார்பு
புல்லிப் புணரப் பெறின்;
எல்லாநீ யுற்ற தெவனோமற் றென்றீரே லெற்சிதை
செய்தா னிவனென வுற்ற திதுவென
வெய்த வுரைக்கு முரனகத் துண்டாயிற்
பைதல வாகிப் பசக்குவ மன்னோவென்
னெய்தன் மலரன்ன கண்;

---

* இதன் உரையை இச்சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் உரைமுடிவில் காண்க.

கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே
யாடையான் மூஉ யகப்படுப்பேன் சூடிய
காணான் றிரிதருங் கொல்லோ மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன்;

தெள்ளியே மென்றுரைத்துத் தேரா தொருநிலையே
வள்ளியை யாகென நெஞ்சை வலியுறீஇ
யுள்ளி வருகுவர் கொல்லோ வுளைந்தியா
னெள்ளி யிருக்குவேன் மற்கொலோ நல்கிருண்
மாந்தர் கடிகொண்ட கங்குற் கனவினாற்
றோன்றின னாகத் தொடுத்தேன்மன் யான்றன்னைப்
பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து;

கதிர்பகா ஞாயிறே கல்சேர்தி யாயி
னவரை நினைத்து நிறுத்தென்கை நீட்டித்
தருகுவை யாயிற் றவிருமென் னெஞ்சத்
துயிர்திரியா மாட்டிய தீ;

மையில் சுடரே மலைசேர்தி நீயாயிற்
பௌவநீர்த் தோன்றிப் பகல்செய்யு மாத்திரை
கைவிளக் காகக் கதிர்சில தாராயென்
றொய்யில் சிதைத்தானைத் தேர்கு;

சிதைத்தானைச் செய்வ தெவன்கொலோ வெம்மை
நயந்து நலஞ்சிதைத் தான்;

மன்றப் பனைமேன் மலைமாந் தளிரேநீ
தொன்றிவ் வுலகத்துக் கேட்டு மறிதியோ
மென்றோ ணெகிழ்த்தான் றகையல்லால் யான்காணே
னன்றுதீ தென்று பிற;

நோயெரி யாகச் சுடினுஞ் சுழற்றியென்
னாயித முள்ளே கரப்பன் கரந்தாங்கே
நோயுறு வெந்நீர் தெளிப்பிற் றலைக்கொண்டு
வேவ தளித்திவ் வுலகு;

மெலியப் பொறுத்தேன் களைந்தீமின் சான்றீர்
நலிதருங் காமமுங் கௌவையு மென்றிவ்
வலிதி னுயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழும மிரண்டு;

எனப்பாடி;

இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தன
ளெல்லையு மிரவுங் கழிந்தன வென்றெண்ணி யெல்லிரா
நல்கிய கேள்வ னிவன்மன்ற மெல்ல
மணியுட் பரந்தநீர் போலத் துணிவாங்
கலஞ்சிதை யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போற் றெளிந்து நலம் பெற்றா
ணல்லெழின் மார்பனைச் சார்ந்து[1]'' (கலி. 142)

இதனுள் அந்திக்காலத்தே கையறவெய்திப் பின்னர்ச் சான்றோரை நோக்கிக் கூறுகின்றவள் புல்லாரா மாத்திரையென அவனோடு புணர்ச்சி நிகழ்ந்தமையும் யாவருங் கேட்ப நக்கழுது அல்லலுறீஇ யானெனப் பெயரும் பெற்றியுங் கூறிப், புல்லிப் புணரப் பெறின் ஈதிகழ்ச்சியன்றாமெனக் கூறத்தகாதன கூறலான் மடந்தன்னை இறந்தவாறும், தெள்ளியே மென்றதனானும் எள்ளியிருக்குவே னென்றதனானும் வருத்த மிறந்தவாறும் 'கோடுவாய் கூடா' என்பது முதலாகக் 'கொன்றையவன்' என்னுந் துணையுந் தான்செய்ததன்னை வியவாமையின் மருட்கையிறந்தவாறும், நெய்தன் மலரன்ன கண்ணெனத் தன் வனப்பு மிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க. எல்லிரா நல்கிய கேள்வனிவனெனவே கந்தருவத்தின் வழுவிப் பெருந்திணை நிகழ்ந்தவாறும் பின்னர் வரைவு நிகழ்ந்தவாறுங் காண்க. இதற்குப் பொருளுரைக்குங்காற் கேட்பீராக இவள் நக்கு, நக்க அப்பொழுதேயழும்; இங்ஙனம் அழுமாறு காமத்தை ஊழானது அகற்றலின் அஃதறுதியாக நரம்பினும் பயனின்றாயிருந்தது; ஓஒ, இதனையுற்ற இவள் அல்லற் பண்பைப் பாராதே அழிதக யாங்குறுகினோம்; குறுகி யாம் இதனை முடிவுபோகக் காண்பேமென்று வந்து எல்லீரும் என் செய்தீர்? என்னையிகழ்கின்றீரோ? இவ்வருத்தத்தை எனக்குறுத்தினவனது மாயஞ்செய்த மலர்ந்த மார்பை யான்முயங்கிக் கூடினும் இகழ்ச்சியன்றாம் என்றற்றொடக்கமாய் வரும்.

பெருந்திணை-தலைவி கூற்று.

வரி 5-2: இவள் தன்னொடு கூடிய தோழியர் ஓரிடத்துக் கூடி மகிழினும் உள்ளே பல் நுனி தோன்றா முறுவலைக் கொண்டு தன்குறிப்பையடக்கி அதைத் தன் கண்ணாலும் முகத்தாலும் சிரித்துக் காட்டுபவள் இப்போது

1. (''புரிவுண்ட புணர்ச்சியுள்'' (கலி. 142) நச் உரை)

பெண்குணம் இல்லாமல் யாவரும் தன்குரலை நன்கு கேட்கும்படியாக வெண்பல் மேலே தெரியும்படியாகச் சிரித்து உடனே பூவெடித்தாற்போன்ற மையுண்ட கண்கள் நீர்மல்க அழுவாளானாள்.

1-5 ஒருவரை யொருவர் விரும்பிக் கூடிய புணர்ச்சியில் புல்லுதல் அடங்காத முன்னர் விதியானது அருமைப் படுத்தி ஒருவரைப் பிரித்தலின் அப்பொழுதைய-காம நிலையைத் தெரிவார்க்கு மீட்டிய பண்ணிசையின் சுவையைச் செவி கேளாதபடிப் பொருள் கெடுமாறு யாழ்நரம்பு அறுதலின் பயனில்லாததுபோலப் பயன் இல்லையாயிற்று.

13-18 ''ஓஒ! மேகம்போலும் கூந்தலுடையாளின் மேற்கண்ட வருத்தத்தை நமக்கு அழிவுவரும் என்று கருதாமல் சென்று குறுகிப் பார்ப்போம்'' என்று வந்தவர்களே! கேளுங்கள் என்ன செயல் செய்தீர்கள்! என்னை நகு கின்றீர்களோ? நன்றாக நகுங்கள். யான் அடைந்த துன்பத்தை உறுத்தியவனின் மாயமான மார்பையான் தழுவப் பெறுவேனாயின்; அதுபோதும்.

19-23 ஏடீ! நீ யுற்ற துயர் என்னை என்று கேட்பீரேல் எனக்கு இந்நோய் செய்தான் இவன் என்றோ எனக் குற்ற நோய் இது என்றோ உரைக்கும் ஆற்றல் எனக்கு உண்டானால் என் நெய்தல் மலர்போலும் கண்கள் துன்புற்றனவாய்ப் பசக்குமோ?

24-28 சான்றோரைப் பார்த்துச் சான்றீர்! என் வருத்தம் கூறுவன்; தலைவன் வருவானோ மாட்டானோ எனக் கூடலிழைக்கும்போது கோடுகூடாத பாதிக்கோட் டைப் பிறை என்று கண்டு சிற்றிலிலேயே என் ஆடை யால் மூடுவேன்; ஆனால் கொன்றையுடைய சிவ பிரான் தலையிற் சூடப் பிறையைக் காணாது திரிவன் கொல்லே என்று விடுத்தேன்.

29-36 பின்நெஞ்சை தெளிவுடையேன்; இப்பிறையை அச் சிவனுக்கு வள்ளலாகிக் கொடுத்துவிடு என்று வலியுறுத் தினேன். பின்னரும் அவன் என்னை நினைந்து வரு வானோ வரின்யான் எள்ளி விடுவேனோ என்றுநினைந் து காவலர் காவல் கொண்ட நள்ளிருளில் கனவில் வந்தானாக அப்படியே வளைத்துப் பிடித்தேன், பின்

மெல்ல விழித்துப் பார்க்க யான்பற்றிப் பிடித்த என் கையிலேயே மறைந்துவிட்டான்.

37-44 நின் கதிரைப்பிறர்க்குப் பகிர்ந்து கொடாத ஞாயிறே! மேற்கு மலையைச் சேர்வையானால் அவனைப் பார்க்கின் அங்கேயே நிறுத்திவைத்து என்கையில் நீட்டித் தருவாயாயின் என்நெஞ்சத்தில் உயிர் திரியாகக் கொளுத்திய காமத்தீ தவிரும்.

45-50 குற்றமற்ற ஞாயிறே! மறைமலையைச் சேர்வையாயின் நீ கடலில் தோன்றிப் பகலை மீளவும் உண்டாக்கும் காலம் வரை நின் கதிர்கள் சிலவற்றை எனக்குக் கைவிளக்காகத் தருவாயாக; அதனைக் கொண்டு என் தொய்யிலைச் சிதைத்தவனை இரவில் தேடுவேன். எம்மை விரும்பி எம் அழகு சிதைத்தான். அப்படிச் சிதைத்தவனை நாம் செய்வது என்னை?

ஊர்மன்றத்துப் பனைக்குமேல் மலையில் உள்ள மாந்தளிர்போலும் வெயிலே! என்மென்தோளை நெகிழ்த்தவனின் அழகைக் காண்பதன்றி வேறு நன்று தீது என்று யான் காணேன். நீ அப்படித் தோள் நெகிழ்த்தவர் வரின்அவர் மகளிர் கூடுவதன்றி ஊடுவர் என்றுஉரைத்தும் கேட்டும் அறிவையோ?

51-54 காமநோய் எரியாகச் சுழற்றிச் சுட்டாலும் என் மனத்திலேயே மறைப்பன். மறைத்தபோது நோய்செய்யும் கண்ணின் வெய்ய நீரைத் தெளித்தால் இந்த உலகமே வேம்; அது இரங்கத் தக்கது.

55-58 சான்றீர்! துயர் மெலியச் செய்யத் தாங்கினேன். அத்துயரைக் களைமின். என்னைவருத்து துன்பங்கள் காமமும் அலரும் என்று சொல்லப்படும் இரண்டு துன்பங்களும் என் உயிரே காவடியாக இருபக்கமும் தொங்கி என்னை வருத்தும்.

59-66 என்று இப்படியெல்லாம் சொல்லி, வருந்தி அழுதாள்; நினைந்து பெருமூச்சு விட்டாள்; பகலும் இரவு புணர்ச்சியின்றிக் கழிந்தன என நினைந்து விளக்கத்தையுடைய இராக்காலத்தே வந்து மணந்த கணவன் இவன்; மணியும் அதனுள் உள்ள நீரும் போன்றார் இவர் என்று நாம் துணிவோம். கலங்கிய நீர் தேற்றாங்காய்

கொண்டுதேற்றத் தேறியது போல நல்ல அழகுடை மார்பனைச் சேர்ந்து இவளும் தெளிவடைந்து அழகு பெற்றாள்-இப்படியாகக் கண்டவர் கூறினர்.

**சிவ**

இச்சூத்திரம் தலைவி பருவங்கண்டு ஆற்றாமையாற் கூறுங் கிளவியாமாறு கூறுகின்றது.

(இ-ள்) தலைவன்தான் வினை முடித்துத் திரும்பி வருவதாகக் கூறிச்சென்ற பருவம் தொடங்கியதாக அப்போதே அப்பருவம் கடந்துவிட்டது போன்ற உணர்வால் தலைவன் வாராமையை யெண்ணிச் செயலற்ற நிலையெய்திய காலத்துத் தலைவி கூறும் கூற்றுகள் அவளின் மடன் வருத்தம் மயக்கம் காணத் துடிக்கும் விருப்ப மிகுதி என்னும் நான்கு பொருள்களின் அடிப்படையில் நிகழும் என்று கூறுவர் புலவர் என்றவாறு.

தலைவன் கார்ப்பருவம் குறித்துச் சென்றானாக அப்பருவ காலம் ஆவணியும் புரட்டாசியுமாதலின் ஆவணி முதல் நாள் வந்த அளவில் தலைவி கார்ப்பருவம் கடந்தது போலக் கருதுதல் மடம் காரணமாம். அதாவது கார்ப்பருவம் ஆவணியும் புரட்டாசியும் முடியும் வரையுள்ள காலம் என்பதை முன்னர் அறிந்து வைத்தும் கார்ப்பருவத் தொடக்கத்தையே முடிந்ததாகக் கருதுவது மடன் ஆயிற்று. இதுகாறும் ஆற்றியிருந்த நிலையில் பருவம் தோன்றியவுடன் ஆற்றாமை மீதூர்தல் வருத்தமாம். மேகத்தைக் கண்ட மாத்திரத்தில் அது கார்கால மேகமாவது சித்திரை வைகாசி மாதங்களில் வம்பாகத் தோன்றிய மேகமாயினும் கார்கால மேகம் எனக் கொள்வது மயக்கமாகும். மிகுதி என்பது தலைவனைக் காணத் துடிக்கும் விருப்ப மிகுதி. அது கார்காலத்துத் தோன்றும் பொருள்கள் தலைவனை நினைப்பிக்க அதனால் வருவதாம். இப்படியே பிற பருவங்களுக்கும் கொள்க.

நச்சினார்க்கினியர் உரை வழிந்து கூறும் உரையாகும்.

### தோழி கூற்று

**233.** **இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி**
**நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்**
**வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்**
**நல்வகை யுடைய நயத்திற் கூறியும்**
**பல்வகை யானும் படைக்கவும் பெறுமே.** (41)

ஆ. மொ.

The maid-friend will stop the lover completely when he entrea's her to help him in his attempt to have the union with his lady-love, by speaking the truth, uttering the lie, advising him in a tactful manner and making such expressions of various modes.

பி. இ. நா.

இறை. 12

குறையுறும் கிழவனை யுணர்ந்த தோழி
சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலும்
என்னை மறைத்தல் எவனா கியர்என
முன்னுறு புணர்ச்சி முறைமுறை செப்பலும்
மாயப் புணர்ச்சி அவனொடு நகாஅ
நீயே சென்று கூறென விடுத்தலும்
அறியாள் போறலும் குறியாள் கூறலும்
படைத்துமொழி கிளவியும் குறிப்புவேறு கொளலும்
அன்ன பிறவும் தலைப்பெயல் வேட்கை
முன்னுறு புணர்ச்சிக்கு உரிய என்ப.

நம்பி. 144

தலைவன் உட்கோள் சாற்றலும் பாங்கி
குலமுறை கிளத்தலும் தலைவன் தலைவி
தன்னை யுயர்த்தலும் நன்னுதற் பாங்கி
அறியாள் போன்று வினாதலும் இறையோன்
இறைவி தன்மை யியம்பலும் பாங்கி
தலைவி யருமை சாற்றலும் தலைவன்
இன்றியமை யாமை யியம்பலும் பாங்கி
நின்குறை நீயே சென்றுரை யென்றலும்
பாங்கியைத் தலைவன் பழித்தலும் பாங்கி
பேதமை யூட்டலும் காதலன் தலைவி
மூதறி வுடைமை மொழிதலும் பாங்கி
முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறலும்
தன்னிலை தலைவன் சாற்றலும் பாங்கி
உலகியல் உரைத்தலும் தலைமகன் மறுத்தலும்
பாங்கி யஞ்சியச் சுறுத்தலும் ஆங்கவன்

கையுறை புகழ்தலும் தையல் மறுத்தலும்
ஆற்றா நெஞ்சினோ டவன்புலத் தலுமவள்
ஆற்றுவித் தகற்றலும் ஆகுநா லைந்தும்
இரந்துபின் நிற்றற்கும் சேட்படுத் தற்கும்
பொருந்துவ என்மனார் தெரிந்திசி னோரே.

**இளம்**

என்-எனின் களவுக் காலத்துத் தோழிக்குரியதோர் திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இரந்து குறையுற்ற தலைமகனைத் தோழி நிரம்ப நீக்கி நிறுத்தலன்றி மெய்மை கூறுதலும் பொய்ம்மை கூறுதலும் நல்வகையுடைய நயத்தினாற் கூறியும் பல்வகையானும் படைத்து மொழிந்து சொல்லவும் பெறும் என்றவாறு.

உதாரணம் களவியலுட் காட்டப்பட்டனவுள்ளுங் காண்க. நல்வகையுடைய நயத்திற்குச் செய்யுள்:

''வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
அவையினும் பலவே சிறுகருங் காக்கை
அவையினும் அவையினும் பலவே குவிமடல்
ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூங்கணங் குரீஇக் கூட்டுவாழ் சினையே''[1]

இது மடலேறுவல் என்ற தலைவனைப் பழித்து அருளுடையீ ராதலான் மடலேறுவது அரிது என நயத்திற் கூறியது.

இதுவுமோர் மரபுவழுவமைத்தவாறு.

**நச்**

இது தோழி தலைவனைக் கூறுவனவற்றுள் வழுவமைவன கூறுகின்றது.

---

1. பொருள்: தோழி தலைவனை மடல் விலக்கு முகத்தால் கூறியது. ''தலைவ! நீ ஊர்தற்கு உரிய மடலைத் தரும் பனை மரமானது வெள்ளாங் குருகுக் குஞ்சுகள் வாழ்வதாகும்; அவற்றினும் சிறுகருங் காக்கைகள் பல வாழும்; அவைகளைக் காட்டிலும் பனை மடலில் தொங்கும் தூக்கணாங் குருவிக் கூடுகள் பல தொங்கும். இப்படிப்பட்ட பறவைகளுக்குத் தீங்கு வரும்படியாக நீ அம்மரத்து மடலைக் கொள்ள மாட்டாய்; நீ இரக்கம் உடையன் ஆதலின்.''

(இ-ள்) இரந்து குறையுற்ற கிழவனை-இரந்து கொண்டு தன் காரியத்தினைக் கூறுதலுற்ற தலைவனை, தோழி நிரம்ப நீக்கி நிறுத்தலன்றியும்-தோழி அகற்றுற ஏத்து முறைமையில் தாழ்வின்றாக அகற்றி நிறுத்தலேயன்றியும், வாய்மை கூறலும் - நமது கூட்டத்தினை யான் முன்னே அறிவலெனமெய்யாகக் கூறலையும் பொய்தலைப் பெய்தலும்-அப்புணர்ச்சியில்லையென்று பொய்த்த துணைத் தலைவன்மேற் பொய்யுரை பெய்துரைத்தலையும் அவன் வரைந்து கோடற் பொருட்டுச் சில பொய்களைக் கூற வேண்டுமிடங்களிலே பெய்துரைத்தலையும், நல்வகையுடைய நலத்திற் கூறீயும்-நல்ல கூறுபாடுடைய சொற்களை அசதியாடிக் கூறியும், பல்வகையானும் படைக்கவும் பெறுமே-இக்கூறியவாறன்றி வேறுபடப் புனைந்துரைக்கவும் பெறும், என்றவாறு.

தோழி நீக்கலன்றியுங் கூறலையுந் தலைப்பெய்தலையும் படைக்கவும் பெறும், பல்வகையானும் படைக்கவும் பெறுமென வினை முடிக்க. தோழி தலைவனோடு நயங்கருதுமாற்றால் அவனை நீக்குதல் ஏனையவற்றோடெண்ணாது அன்றியுமெனப் பகுத்துரைத்தார். ஏனைக்குறை முடித்தற்கு இடையூறின்மை கூறியனவும் வரைவு கடாய்க் கூறியனவுமாம்.

''நெருநலு முன்னா ளெல்லையு......
......மகளே.''

இது சேட்படுத்தது.

''எமக்கிவை யுரையன் மாதோ நுமக்கியான்
யாரா கியரோ பெரும வாருயி
ரொருவி ரொருவிர்க் காகி முன்னாள்
இருவர் மன்னு மிசைந்தனி ரதனால்
அயலே னாகிய யாஅன்
முயலேன் போல்வன்நீ மொழிபொருட் டிறத்தே''[1]

இது, வாய்மை கூறியது. யாந்தன்னை மறைத்தலிற் போலும் இவள் குறைமுடியாளாயதென அவன் கருதக் கூறினாள்.

---

1. பொருள்: பெரும! எனக்கு இவை போலும் பொய்ம் மொழிகளை உரையாதே. யான் நினக்கு யார்? நீயும் நின் பரத்தையுமாகிய இருவீரும் ஒருவர் ஒருவர்க்காக ஆகி முன்னாளில் இருவரும் உறுதியாக இயைந்தீர்கள். அதனால் அயலவளாகிய யான் மொழியின் பொருள் வகைக்கு ஏற்ப நின்னையேற்க முயலமாட்டேன்.

''அறியே மல்லே மறிந்தன மாதோ
பொறிவரிச் சிறைய வண்டினை மொய்ப்பச்
சாந்த நாறு நறியோள்
கூந்த் னாறுநின் மார்பே தெய்யோ''1

(ஐங்குறு. 240)

இதுவும் அது.

''நீயே பொய்வன் மையிற் செய்பொருண் மறைத்து
வந்துழிப் படுகுவை யதனா
லெம்மை யெமக்கே வில்வலனே (?)
தகாது சொல்லப் பலவும் பற்றி (?)
யொருநீ வருத னாடொறு முள்ளுடைந்
தீர்மா மழைக்கண் கலுழ்க மதனால்
நல்லோர் கண்ணு மஃதல்ல
தில்லை போலுமிவ் வுலகத் தானே''2

இது பொய்தலைப் பெய்தது.

'திருந்திழை கேளாய்' என்னுங் குறிஞ்சிக்கலி (65) யுள் வரைந்து கோடற்குப் பொய்யுரை படைத்தது.

''அன்னையு மறிந்தன ளலரு மாயின்று
நன்மனை நெடுநகர் புலம்புகொள வுறுதரு
மின்னா வாடையு மலையு
நும்மூர்ச் செல்க மெழுமோ தெய்யோ''3

(ஐங்குறு. 236)

---

1. பொருள்: தலைவ! நின்களவொழுக்கத்தை அறியாதேம் அல்லேம்; அறிந்தேம். எப்படி எனின், நின் மார்பானது இப்போது புள்ளியும் கோடும் உடைய சிறகுடைய வண்டினம் மொய்க்கும் சந்தனம் நாறு நல்லவளின் கூந்தல் மணம் நாறும்; அதனால்.

2. பொருள்: தலைவ! நீ பொய் கூறுதலில் வல்லன். ஆதலின் நீ செய்யும் செயலை மறைத்து வந்த இடத்து எம்மிடம் சார்வை; அதனால் எம்மைப்பற்றி எமக்கு வல்லமையால் கூறத்தகாதவற்றைக் கூறி நீயொருவனாக இங்கு வருதலால் யாங்கள் நாளும் மனம் உடைந்து கண் கலுழ்வேம்; நீ இவ்வாறு ஒழுகுதலால் இவ்வுலகில் நல்லவரிடத்தும் பொய் அல்லது வேறு இல்லைபோலும்.

3. பொருள்: தலைவ! களவினைத் தாயும் அறிந்தனள்; ஊரில் அலரும் ஆயிற்று; மிக்க வாடைக்காற்றும் எம்மை வருத்தும்; அதனால் எங்கள் நல்ல வீடு யாங்

இது நல்வகையுடைய நயத்திற் கூறியது.

"வீகமழ் சிலம்பின் வேட்டம் போந்து
நீயே கூறினு மமையுநின் குறையே"[1]

இதுவுமது.

அஃதன்றியும் நீயே சென்று கூறென்றலும் அறியாள் போற லுங் குறியாள் கூறலுங் குறிப்பு வேறு கூறலும் பிறவும் நயத்திற் கூறும் பகுதியாற் படைத்தது பலவகையாற் படைத்துத் துறை வகையாம். இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதனா னமைக்க. இவை நாடக வழக்காகவும் உலகியல் வழக்காகவும் புனைந்துரைத்தமையானுந் தோழி தலைவற்குக் கூறத்தகாதன கூறலானும் வழுவமைந்தது.

## ஆடவனின் கிளவி

**234. உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி**
**ஐயக்கிளவி ஆடுஉவிற் குரித்தே. (42)**

**ஆ.மொ.**

The expressions of contradictory nature are intended to serve as expressions of exaltation. The expressions depicting doubts belong to the male.

**இளம்**

என்-எனின் தலைமகற்குந் தலைமகட்கும் உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உயர்த்துச் சொல்லுதற்குரிய கிளவி தலைமகற்குந் தலைமகட்கும் ஒத்தகிளவி; ஐயக்கிளவி, தலைமகற்கே உரித் தென்றவாறு.

தலைவிமாட்டு ஐயக்கிளவி யின்றென்றவாறாம். அதனாற் குற்றமென்னை யெனின், தெய்வமென்று ஐயுறுங்கால் அதனை

---

கள் இன்றிப் பொலிவற்றுக் கிடக்குமாறு நம்மூர்க்குச் செல்வோம் எழுக.

1. பொருள்: மலர் மணம் கமழும் மலையில் வேட்டை மேல் வந்து எம் தலைவியிடம் நின்குறையை நீயே கூறினும் நன்றாகும்.

முன்பு கண்டறிவாளாதல் வேண்டும். காணாமையின் ஐயமிலள் என்க. இனி உயர்த்துச் சொல்லுதல் உளவாம்.

''அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றனள்'' (அகம். 48)

என்பது உயர்த்துச் சொல்லியவாறு.

தலைவன் உயர்த்துச் சொல்லியதற்குச் செய்யுள்:-

''மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி''[1] (குறள். 1118)

பிறவு மன்ன. ஐயக்கிளவி களவியலுட் கூறப்பட்டது.

நச்

இது தோழிக்குந் தலைவிக்குமுரியதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) உயர்மொழிக்கு உறழுங் கிளவியும் உரிய-இன்பம் உயர்தற்குக் காரணமான கூற்று நிகழுமிடத்திற்கு எதிர் மொழி யாக மாறுபடக்கூறுங் கிளவி நிகழ்தலுமுரிய, ஐயக்கிளவி ஆடூஉ விற்கு உரித்தே-கூறுவோமோ கூறேமோ என்று ஐயமுற்றுக் கூறுஞ்சொல் தலைவற்குரித்து, என்றவாறு.

உறழுங் கிளவியைப் பொதுபடக் கூறினார், தோழி உயர் மொழி கூறியவழித் தலைவி உறழ்ந்து கூறலும், தலைவன் உயர் மொழி கூறியவழித் தோழி உறழ்ந்து கூறலும், தலைவன் உயர் மொழி கூறியவழித் தலைவி உறழ்ந்து கூறலும், தலைவி உயர் மொழி கூறியவழித் தோழி உறழ்ந்து கூறலுங் கோடற்கு.

'சுணங்கணி வனமுலை' என்னுங் குறிஞ்சிக் கலி[2] (60)யுள்

---

1. பொருள்: தலைவன் கூற்று-மதியே! இம்மாதின்முகம் போல ஒளிவிட ஆற்றல் உடையையாயின் நீயும் எம் மால் விரும்பப்படுதற்குரியையாவாய்.

2. தோழியும் தலைவியும் உறழ்ந்து கூறுவன.
தோழி: இவன் ஒருவன் தன்னிடத்துக் களிறன்ன தன்மை கெட்டு உள்ளுக்குள்ளே மனம் உடைந்து உருகு வான் போல இருந்தான்; இங்கு வந்து என்ன காரியம் செய்தான்!

தலைவி: தெருவில் காரணம் இல்லாமல் கலங்குவா ரைப் பார்த்து நீ நின்மேற் கொள்வது ஏன்? வாரண வாசியில் உள்ளார் பிறர் துயரைத் தம் துயர் எனக் கொள்வர் என்பர். அதுபோல் உள்ளது நின் செயல்.

''என்செய்தான் கொல்லோ விஃதொத்தன் றன்கட்
பொருகளி றன்ன தகைசாம்பி யுள்ளு
ளுருகுவான் போலு முடைந்து''

எனத் தோழி கூறியவழித்

''தெருவின்கட், காரணமின்றிக் கலங்குவார்க் கண்டு......

''அலர்முலை யாயிழை நல்லாய் கதுமெனப்
பேரம ருண்கணின் றோழி யுறீஇய
வாரஞ ரெவ்வ முயிர்வாங்கு
மற்றிந்நோய் தீரு மருந்தருளா யொண்டொடீ;
நின்முகங் காணு மருந்தினே னென்னுமா
னின்முகந் தான்பெறி னல்லது கொன்னே
மருந்து பிறிதியாது மில்லேற் றிருந்திழாய்
என்செய்வாங் கொல்லினி நாம்; பொன்செய்வாம்''

எனத் தலைவி உறழ்ந்து கூறியவாறு காண்க.

இது, தலைவன் வருந்தங் கூற அதனை ஏற்றுக் கொள்ளாது உறழ்தலின் வழுவாய் நாணமிகுதியாற் கடிதின் உடம்படாமையின் அமைந்தது.

'எல்லாவிஃதொத்தன்' என்னுங் குறிஞ்சிக் கலி (61) யுள்
''ஈத லிரந்தார்க்கொன் றாற்றது வாழ்தலிற்
சாதலுங் கூடுமா மற்று.''

எனத் தலைவன் கூறிய வழி,

---

தோழி: அடிபரந்த முலையும் அணியும் உடைய தோழீ! அவன் என்னைத் திடீரெனப் பார்த்து ஒண்டொடியுடையவளே பெரிய மதர்த்த மையுண்ட கண்ணுடைய நின்தோழி (தலைவி) உறுத்திய பிழைத்தற்கரிய துன்பம் என் உயிரை வாங்கும்; இந்நோய் தீரும் மருந்து அருள்வாயாக என்றான். யான் வாளா இருக்கவே பின்னும் நின் (தலைவி) முகத்தைக் காண்பதையே மருந்தாக வுடையேன் என்றான். அதனால் நின் முகத்தை அவன் பெறுமாறு செய்தாலன்றி வீணேவேறு மருந்து உடையேன் அல்லேன். இனிமேல் நாம் என் செய்வாம்? சொல்.

தலைவி: பொன்செய்வோமே (பொன்செய்வாம் என்ற பதில் உலகில் அவன் என்ன சொன்னான் என்ற கேள்விக்கு நகையாகச் 'சுரைக்காய்க்கு உப்பில்லை என்றான்' என்று சொல்வது போன்றது).

''இவடந்தை, காதலின் யார்க்குங் கொடுக்கும் விழுப்
பொருள் யாதுநீ வேண்டி யது.

''மண்டமரட்ட களிறன்னான் றன்னையொரு
பெண்டி, ரருளக் கிடந்த தெவன்கொலோ''

எனத்தோழி யுறழ்ந்து கூறியவாறு காண்க.

இதுவும் அவன் வருத்தத்திற்கு எதிர் கூறத்தகாதன கூறலின் வழுவாய்த் தலைவி கருத்தறிந்து உடம்பட வேண்டுமென்று கருதுதலின் அமைந்தது.

''அணிமுக மதியேய்ப்ப வம்மதியை நனியேய்க்கு
மணிமுக மாமழைநின் பின்னொப்பப் பின்னின்கண்
விரிநுண்ணூல் சுற்றிய வீரித ழலரி
யரவுக்கண் ணணியுற ழாரன்மீன் றகையொப்ப
வரும்படர் கண்டாரைச் செய்தாங் கியலும்
விரிந்தொலி கூந்தலாய் கண்டை யெமக்குப்
பெரும்பொன் படுகுவை பண்டு:

ஏஎ!எல்லா மொழிவது கண்டையிஃதொத்தன் றொய்யி
லெழுதி யிறுத்த பெரும்பொன் படுக
முழுவ துடையமோ யாம்;
உழுதாய்.
சுரும்பிமிர் பூங்கோதை யந்நல்லா யானின்
றிருந்திழை மென்றோ ளிழைத்தமற் றிஃதோ
கரும்பெல்லா நின்னுழ வன்றோ வொருங்கே
துகளறு வாண்முக மொப்ப மலர்ந்த
குவ்ளையு நின்னுழ வன்றோ விகலி
முகைமாறு கொள்ளு மெயிற்றா யிவையல்ல
வென்னுழுவாய் நீமற் றினி;

எல்லா, நற்றோ ளிழைத்த கரும்புக்கு நீகூறு
முற்றெழி னீல மலரென வுற்ற
விரும்பீர் வடியன்ன வுண்கட்கு மெல்லாம்
பெரும்பொன்னுண் டென்பா யினி;

நல்லா யிகுளை கேள்.
ஈங்கே தலைப்படுவ னுண்டான் றலைப்பெயின்
வேந்துகொண் டன்ன பல;

ஆங்காக வத்திற மல்லாக்கால் வேங்கைவீ
முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணாகம்
பொய்த்தொருகா லெம்மை முயங்கினை சென்றீமோ
முத்தேர் முறுவலாய் நீபடும் பொன்னெல்லா
முத்தி யெறிந்து விடற்கு'' (கலி.64)

இது தலைவன் உயர்மொழிக்குத் தலைவி உறழ்ந்துகூறியது; இது நகையாடிக் கூட்டத்தை விரும்பிக் கூறிய மொழிக்கு உறழ்ந்து கூறலின் வழுவாய் அவளும் நகையாடிக் கூறலின் அமைந்தது.

'மறங்கொளிரும் புலி' என்னுங் குறிஞ்சிக் கலி (42)யுள்

''ஆர்வுற்றார் நெஞ்ச மழிய விடுவானோ
வோர்வுற் றொருதிற மொல்காத நேர்கோ
லறம்புரி நெஞ்சத் தவன்''[1]

எனத் தலைவி கூறலுந்

''தண்ணறுங் கோங்க மலர்ந்த வரையெல்லாம்
பொன்னணி யானைபோற் றோன்றுமே நம்மருளாக்
கொன்னான னாட்டு மலை''[2]

எனத்தோழி உறழ்ந்து கூறியவாறு காண்க. இதுவுந் தலைவி கூற்றிற்கு மாறாதலின் வழுவாய்ச் சிறைப்புறமாகக் கேட்டு வரைதல் பயனாதலின் அமைந்தது.

''சொல்லின், மறாதீவாண் மன்னோ விவள்'' (கலி.61)

''கூறுவங் கொல்லோ கூறலங் கொல்லெனக்
கரந்த காமங் கைந்நிறுக் கல்லாது'' (அகம். 198)

---

1,2 பொருள்: ஒரு பக்கமாகச்சாயாத துலாக்கோல் நாக்குப் போல ஆராய்ந்து அறமே செய்யும் நெஞ்சத்துத் தலைவன் தன்னால் துய்க்கப்பட்டவர் நெஞ்சம் வருந்தும் படி விடுவானோ? விடான் எனத் தலைவி தலைவனை இயற்படக் கூறினாள்.

அதற்குத் தோழி, நமக்கு அருள் செய்யாது வீணான காரியத்தைச் செய்யும் அவனின் நாட்டு மலையானது தண்ணிய நறுமணம் கமழும் கோங்கம் மலர்ந்துள்ள பக்கமலைகள் எல்லாம் பொன்னணிந்த யானை காட்சிக் கினிமையாகத் தோன்றும். நமக்கருளாதான் நாட்டுமலை அப்படித் தோன்றக் காரணம் என்னை? எனத் தலைவனை இயற்பழித்தாள்,

என ஐயக்கிளவி தலைவற்குரியவாய் வந்தன.

இனி ஐயப்பாடு தலைவிக்குமுரித் தென்றாற் 'சிறந்துழி யையம்' (94) என்பதற்கு மாறாம்.

"அவன்மறை தேஎ நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றனள்" (அகம்-48)

என்பதனை ஐயத்துக்கண் தெய்வமென்று துணிந்தாளெனின் அதனைப் பேராசிரியர் தாமே மறுத்தவாறு காண்க.

---

("அணிமுகமதி" (கலி.64)-உரை)

வரி 1-7: தலைவன் தலைவியை நோக்கி நின் முகம் மதியை ஒப்பவும் அம்மதியைப் பொருந்தும் மேகத்தை நின்சடையொப்பவும் தலையிலுள்ள பொன்மலர்கள் பாம்பின் அருகே மாறுபட்டு ஒளிவிடும் கார்த்திகை மீன்களை ஒப்பவும் கண்டவரைத் துயருறுத்தும் கூந்தலையுடையவளே! யான்நின்னோடு கூடிய முன்எல்லாம் நின் உடம்பெங்கும் பொலிவு பெற்றிருந்தாய்.

8-10 அதுகேட்ட தலைவி தன் நெஞ்சுக்குள் நெஞ்சே!இவன் ஒருவன்! ஏ ஏ! என இகழ்ந்து பின் தலைவனைப் பார்த்து, நீ என்தோளில் தொய்யில் எழுதிய போது பொலிவு பெற்றேம் எப்போதும் எம் முலையால்நின் மார்பை உழுதேமோ? என்றாள்.

11-18 அதுகேட்ட தலைவன், உழுதாய் நல்லாய்! நின் தோளில் யான் எழுதிய தொய்யில் மட்டுமா? என் மார்பில் நீ உழுததாலல்லவா நின்தோளில் கரும்பெல்லாம் பொலிவு பெற்றன? நின்முகத்துக் குவளை போலும் கண்களும் நீ என்னை உழுததாலல்லவோ பொலிவு பெற்றன?முல்லையெயிற்றாய்! இவையெல்லாம் நிற்க. மேலும் பொலிவு பெற நீ இப்போது என்னை உழுவாயாக என்றான்.

19-22 அதுகேட்ட தலைவி ஏடா! நீ என் தோளில் எழுதிய கரும்புக்கும் நீலமலர்போலும் இரும்பை யீர்த்து வடித்தாலன்ன கண்ணுக்கும் பொலிவுண்டு என்பாயாக; என் உறுப்புகளுக்கு உண்டு என்று கூறாதே என்றாள்.

23-25 அதுகேட்ட தலைவன், அரசனைச் சார்ந்து உண்டவன் தலைமைப் பதவி பெறின் அவனால் அவ்வரசன்

**சிவ**

இச்சூத்திரம் களவிலும் கற்பிலும் தலைவனுக்குரிய கிளவி கள் மூன்று கூறுகின்றது.

(இ-ள்) தலைவியை உயர்த்திக் கூறும் கூற்றும் ஒன்றுடன் ஒப் பிட்டுக் கூறும் கூற்றும் ஐயமுற்றுக் கூறும் கூற்றும் களவிலும் கற் பிலும் தலைவனுக்கு உரிய கூற்றுகளாம் என்றவாறு.

களவில் முதற் காட்சியிலும் பின்னரும் நிகழும்.

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ
அற்புதமோ சிவனருளோ.. அதிசயித்தார்

எனப் பரவையாரைக் கண்ட சுந்தரர் முதற்காட்சியில் உயர்த்திக் கூறியது உயர்மொழிக் கிளவியாம்.

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு (குறள் 1031)

இது ஐயப்பட்டது. ஐயத்திலேயே உறழ்ச்சியுண்மையும் காண்க.

களவில் தோழியிடம் தலைவியை முதுக்குறைந்தனள் என் பது போலக் கூறுவன முதற்காட்சிப் பின்னர் நிகழும் உயர் மொழிக் கிளவி.

கடல்புக் குயிர்கொன்று வாழ்வர் நின் ஐயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் நீயும்

என்பது களவில் முதற்காட்சிப் பின் நிகழ்ந்த உறழ்கிளவியாம்.

---

நன்மைகள் பெறுவது போல யானும் நின்னிடத்துப் பல இன்பம் பெறுவேன் என்றான்.

26- உடனே தலைவி அப்படியே ஆகட்டும் என்றாள்.

27-31 அதுகேட்ட தலைவன், முத்துப் போலும் முறுவலாய்! நீ முன்பு உற்ற பசப்பு எல்லாம் இனி ஒரு காலமும் உறாதபடிக் கழித்து விடுவதற்கு வேங்கைப் பூவின் அழகுடைய சுணங்கு அணிந்த பூண் உடைய உடம் பாலே ஒரு தடவை என்னை முயங்கிச் செல்வாயாக என்றான்.

கூறுவங் கொல்லோ கூறலங் கொல்எனக்
கரந்த காமம் கைந்நிறுக் கல்லாது (அகம். 198)

இது ஐயம்.

இனிக்கற்பில் அம்மூன்றும் வருமாறு.

கோவலன் கண்ணகியை நோக்கிப் ''பொன்னே மணியே புனைபூங்கோதாய்'' (சிலப்) எனப் பாராட்டியது உயர்மொழிக் கிளவியாம். ''மலையிடைப் பிறவாமணியே யென்கோ அலை யிடைப் பிறவா அமுதே என்கோ'' (சிலப்) எனப் பாராட்டியது உறழ்ச்சியும் ஐயமுமாம்.

கிளவி உரித்து எனத்தனித்தனிக் கூட்டுக.

ஐயப்படும் கூற்று ஆடூஉவிற் குண்டு என்பதால் தலைவி ஐயப்படுதல் இல்லை எனக் கொள்வது பொருந்தாது என்பதை ''சிறந்துழி ஐயம்'' என்னும் (3) களவியற் சூத்திரத்திற்கு யான் எழுதிய உரையால் அறிக.

## தோழியின் உரன்

**235. உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்**
**உரிய தாகும் தோழிகண் உரனே. (43)**

**ஆ. மொ.**

As it is the duty of the maid-friend to prevent the affliction of the lady-love courage is invitable on her part.

**பி. இ. நூ.**

**நம்பி. 110**

தோழி செவிலி மகளாய்ச் சூழ்தலோடு
உசாத்துணை யாகி அசாத்தணி வித்தற்கு
உரிய காதல் மருவிய துணையே

**இளம்**

என்-எனின் இது தோழிக்குரியதோர் மரபுவழுக் காத்தலை நுதலிற்று.

(இ-ள்) தலைமகற் குற்றதுன்பம் பரிகரித்தல் தோழி இயல் பாகலின் அவட்குரியதாகும் அறிவு என்றவாறு.

அதனானே யன்றே:

''பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி''

என்னும் பாலைக்கலியுள்,

''கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையும்''[1] (கலி. 21)

எனக் கூறினாள் என்று கொள்க.

நச்

இது, தோழி அறிவுடையளாகக் கூறலும் அமைகவென்கின்றது.

(இ-ள்) உறுகண் ஓம்பல் தன் இயல்பு ஆகலின்-தலைவிக்கு வந்த வருத்தத்தைப் பரிகரித்தல் தனக்குக் கடனாதலின், தோழி கண் உரன் உரியதாகும்-தோழி மாட்டு அறிவுளதாகக் கூறல் உரித்தாகும் என்றவாறு.

(உ-ம்) ''பான்மருண் மருப்பின்'' என்னும் பாலைக் கலி (21) யுள்

''பொருடான்
பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையு
மன்ன பொருள்வயிற் பிரிவோய்''

எனத் தோழி அறிவுடையாளாகக் கூறியவாறு காண்க.

''பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவென்
னொண்டொடி நெகிழினு நெகிழ்க
சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ''[2]

(அகம். 46)

---

1. பொருள்: பொருளானது நம்மை யுரிமையாக வுடையவர் இவர்தான் என ஒருவரிடத்தில் தங்காது அவரவர் செய்த பழவினை காரணமாக அவரவரிடத்திலிருந்து பெயர்ந்து பெயர்ந்து செல்லும் நிலையாமையுடையதாம்-தோழி பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவனிடம் கூறியது.

2. பொருள்: குவிந்த நெல்லுடைய அள்ளூர்போலும் என்னுடைய ஒள்ளிய தொடிகள் தோள் மெலிவால் நெகிழ்ந்து வீழினும் வீழ்க பெரும! நீ நின் விருப்பப்படி செல்க; நின்னைத் தடுப்பார் யார்?

என்பது உறுகண் காத்தற் பொருட்டாகத் தலைவி வருந்தினும் நீ செல்லென்றாள் தலைவன் செல்லாமை அறிதலின்.

ஒன்றென முடித்தலான் தலைவி உரனுடையளெனக் கூறலுங் கொள்க.

**சிவ**

இச்சூத்திரம் தோழி அறிவுடையள் என்பது வெளிப்படுமாறு செய்யுள் செய்தல் உண்டு என்கின்றது.

(இ-ள்) தலைவிக்கு வரும் துன்பத்தை முன்னதாக அறிந்து தடுத்தல் தனக்குக் குழந்தைப் பருவத்திருந்து வரும் இயற்கைக் குணம் ஆதலின் தோழியிடமாக அறிவோடு கூடிய சொல்லும் செயலும் அமைத்துப் புலனெறி வழக்கம் செய்தல் புலவர்க்கு உரியதாகும் என்றவாறு.

பாலுடன் உண்டு சொல் உடன்பயின்று உடன் ஆடிவரும் குழந்தைப் பருவத்திலும் தலைவிக்கு வரும் துன்பங்களைக் களைந்துவந்தவள் தோழியாதலின் அவட்கு உறுகண் ஓம்பல்இயல் பாயிற்று. அவ்வியல்பு காரணமாகக் களவொழுக்கத்தும் தலைவியின் துன்பம் களைதல் அறிவொடுபட்ட எளிய செயலாகும். ஆதலின் அவ்வறிவை வைத்துப் புலனெறி வழக்கம் செய்தல் புலவர்க்கு உரியதாயிற்று.

உறுகண் ஓம்பல் என்பதற்கு வெள்ளைவாரணனார் தலைவி தலைவன் இருவர் துன்பமும் காத்தல் என்பர். தலைவி துன்பம் காத்தல் என்பதிலேயே தலைவன் துன்பம் காத்தலும் அடங்குமாதலின் அவ்வுரை சிறவாது.

## உயர்மொழி

**236. உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே. (44)**

**ஆ. மொ.**

The expression of exaltation also belongs to her.

**இளம்**

என்-எனின் இதுவு மது.

(இ-ள்) உயர்த்துச் சொல்லுங் கூற்றும் உரித்து தோழிக்கு என்றவாறு.

''தாமரைக் கண்ணியைத் தண்நறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கென அஞ்சுவர் சிறுகுடி யோரே''[1] (கலி.52)

என்பது உயர்த்துச் சொல்லியவாறு.

நச்

இதுவுந் தோழிக்குரியதோர் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்) அவட்கு-தோழிக்கு, உயர்மொழிக் கிளவியும் உரிய-தலைவியையுந் தலைவனையும் உயர்த்துக் கூறுங் கூற்று முரிய வாம் ஒரோவோரிடத்து, என்றவாறு.

''மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ
யாண ரூரநின் மாணிழை யரிவை
காவிரி மலர்நிறை யன்னநின்
மார்புநனி விலக்க றொடங்கி யோளே''[2]
(ஐங்குறு.42)

இதனுட் காவிரிப் பெருக்குப் போலத் தலைவியை நோக்கி வருகின்ற மார்பினைத் தான் விலக்குமா றென்னையெனத் தலைவியை உயர்த்துக் கூறியவாறு காண்க.

'காலை யெழுந்து' (குறுந். 45) என்பதும் அது.

''உலகம், புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்''
(கலி. 47)

---

1. பொருள்: நேர்ந்த இதழ்களால் கட்டிய மாலையுடைய தலைவி குறித்த குறியிடத்துத் தலைவ நீ தாமரை மாலை யுடையையாயும் சந்தனம் உடையையாயும் வருவாயானால் எம்சிறுகுடியோர் நின்னைக் கண்ட மாத்திரத்தில் மணம்நாறும் மலைமீது நின்று பலிபெறும் தெய்வம் என்று நினைந்து நினக்கு அஞ்சுவர்.

2. பொருள்: காவிரியின் மிக்கநீர் கடல்நோக்கி விரையுமாறு போலத் தலைவியை நோக்கி விரையும் நின் மார்பினை அவள் விலக்கத் தொடங்கினாள்; அதற்குக் காரணம் மகிழ்ச்சி மிகவும் மிக மயங்கினாளோ?-தோழி கூற்று.

''தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉ
மணங்கென வஞ்சுவர் சிறுகுடி யோரே'' (கலி. 52)

எனத் தலைவனை உயர்த்துக் கூறியவாறு காண்க.

**சிவ**

இச்சூத்திரம் தோழி உயர்மொழிக்கிளவி கூறுமாறு கூறுகின்றது.

(இ-ள்) தோழிக்கு தலைவியை உயர்த்தித் தலைவனிடமும் தலைவனை உயர்த்தித் தலைவியிடமும் கூறும் உயர்மொழிக் கிளவியும் உரியதாம் என்றவாறு.

''எமக்கோர், கட்காண் கடவுள் அல்லளோ பெரும''

எனத்தலைவனிடம் தலைவியைப் பற்றியும், ''உலகம் புரப்பான் போல்வதோர் மதுகையும் உடையன்'' (கலித். 47) எனத்தலைவியிடம் தலைவனைப் பற்றியும் தோழி உயர்மொழிக்கிளவி கூறியவாறு காண்க.

தாமரைக் கண்ணியை (கலி.52) என்பது தலைவனைத் தெய்வம் என அஞ்சுவர் எனக் கூறவந்தவிடத்துச் செய்யுள் வழக்காகப் புனைந்ததேயன்றி உயர்மொழிக் கிளவியாகக் கூறிய தன்று. பிறவும் இவ்வாறேயாம்.

உரித்து என்னாது உரிய என்ற பன்மையால் தோழி இருவரிடையும் வெவ்வேறு காரணங்களால் தன் கருத்து நிறைவேற வேண்டும் என்னும் எண்ணத்துடன் உயர்மொழிக் கிளவிகளைக் கூறுவள் என்பதாம். உயர்மொழி என்பதால் இயல்புக்கு மிக்க மொழி என்று கொள்க.

உரியவாம் என ஆக்கச் சொல் கொடாமையின் உயர்மொழிக் கிளவியும் அவட்கு இயல்பு என்றவாறு.ஆல் அசைநிலை.

## வெளிப்படைக் கிளவி

**237. வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்**
**தாவின் றுரிய தத்தங் கூற்றே. (45)**

**ஆ. மொ.**

The expressions spoken in plain language to the messengers belong to them (the lady and the maid) without having mental pain each in their turn.

**இளம்**

என்-எனின் வாயில்கட்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தத்தங் கூறுபாட்டினான் வாயில்கள் கூறுங் கிளவி வெளிப்படக் கிளத்தல் கேடின்றி யுரிய வென்றவாறு.

தத்தங் கூறாவது அவரவர் சொல்லத்தகுங் கூறுபாடு. ஆனுருபு தொக்கு நின்றது[1] எனவே வாயில்களல்லாத தலைமகளும் நற்றாயும் மறைத்துச் சொல்லப் பெறுவர் என்றவாறு.

வருகின்ற சூத்திரம் மறைத்துச் சொல்லும் உள்ளுறை சொல்லுகின்றா ராதலின், அவ்வுள்ளுறை வாயில்களை விலக்கியவாறு. இவர் மறைத்ததனாற் குற்ற மென்னை? இவர் குற்றேவல் முறைமையராதலானும் கேட்போர் பெரியோர் ஆதலானும் வெளிப்படக் கூறாக்காற் பொருள் விளங்காமையானும் அவ்வாறு கூறினால் இவர் கூற்றிற்குப் பயனின்மையானும் வெளிப்படவே கூறும் என்க.

**நச்**

இது தலைவியுந் தோழியும் வாயிலாகச் சென்றாருடன் கூறுவனவற்றுட் படுவதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) தத்தங் கூற்றே-தோழிக்குந் தலைவிக்குமுரிய கூற்றின் கண், வாயிற் கிளவி-வாயிலாய் வந்தார்க்கு மறுத்துத் தலைவனது பழிகளைக் கூறுங் கிளவிகளை, வெளிப்படக் கிளத்தல்-மறையாது வெளியாம்படி கூறுதல், தாவின்று உரிய-இங்ஙனங் கூறுகின்றோமே என்னும் வருத்தம் மனத்து நிகழ்தலன்றியே உரியவாம், என்றவாறு.

---

1. மூன்றாம் வேற்றுமையுருபு செய்யுள் இறுதியில் தொகுதல் இல்லை. அதனால் கண் உருபு தொக்கதாகக் கொண்டு நச்சினார்க்கினியர் கூறியதே பொருந்தும்.

அவை தலைவிக்குந் தோழிக்குமுரியனவும் தோழிக்கேயுரியனவுந் தலைவிக்கே யுரியனவுமாம். வாயில்களாவார் ஆற்றாமையுந் தோழி முதலியோருமாம்.

> "நெஞ்சத்த பிறவாக நிறையில ளிவளென
> வஞ்சத்தான் வந்தீங்கு வலியலைத் தீவாயோ"[1]
>
> (கலி. 69)

இஃது ஆற்றாமை வாயிலாகத் தலைவன் வந்துழித் தலைவி வெளிப்படக் கூறியது, இது தோழிக்கும் உரித்து.

> "எரியகைந் தன்ன தாமரை யிடையிடை
> ......யார்பினும் பெரிதே" (அகம். 116)

இதனுள் 'நாணிலைமன்ற' எனத் தோழி கூறி அலராகின்றாளென வெளிப்படக் கிளத்தலின் வழுவாயமைந்தது.

> "அகலநீ துறத்தலி னழுதோவா வுண்கணெம்
> புதல்வனை மெய்தீண்டப் பொருந்துத லியைபவால்
> நினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
> தமர்பாடுந் துணங்கையு ளரவம்வந் தெடுப்புமே"[2]
>
> (கலி. 70)

இது தலைவி கூற்று.

'உரிய' என்றதனால் தோழி வாயிலாகச் சென்றுழித் தலைவி வெளிப்படக் கூறுதலுங் கொள்க. அஃது 'இம்மையுலகு' என்னும் (66) அகப்பாட்டினுட் காண்க.

இவை இங்ஙனம் வெளிப்படக் கிளத்தலின் வழுவாய் அமைந்தன.

---

1. பொருள்: தலைவ! நின் நெஞ்சில் பிற எண்ணங்கள் இருக்க இத்தலைவி மனத்தில் வைக்கும் குணம் இல்லாதவள் என்று கருதி வஞ்சனையாக வந்து இங்கே இவளை உன் ஊராண்மை (உதவி) யால் அலைக்க வந்தாயோ?

2. பொருள்: தலைவ! நீ எம்மை விட்டுப்பிரிதலினால் அழுது நீங்காத மையுண்ட கண்கள் எம் புதல்வனின் மெய் தீண்டவே துயிலுதலைப் பொருந்தும்; ஆனால், நீ நினக்கு ஒத்த பரத்தையை நீ அவர்க்கென்று சமைத்த மனையில் கொண்டு வந்து நின் சுற்றமாகிய பரத்தையர் பாடும் துணங்கைப் பாட்டில் உள்ள ஓசை வந்து அத் துயிலை எழுப்பி விடும்.

**சிவ**

இச்சூத்திரம் வாயிற்கிளவி வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்கின்றது.

(இ-ள்) தோழி பாணன் முதலிய வாயிலோரும் தோழியும் தலைவியுமாகிய வாயில் மறுப்போரும் தத்தம் தகுதிக் கூற்றின் கண் தாம் கூறும் வாயில் கிளவிகளும் வாயில் மறுக்கும் கிளவி களும் குறிப்பாற் கூறாது வெளிப்படையாகவே கூறப்படுதல் குற்றமின்று உடையனவாம் என்றவாறு.

வாயில்கிளவி என்பதற்கும் வாயில் நேர்விக்கும் கிளவி என்றும் வாயில் மறுக்கும் கிளவி என்றும் கொள்க.

## உள்ளுறை

**238. உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்**
**கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே. (46)**

**ஆ.மொ.**

'Ullurai is of five kinds i.e 'udanurai' 'uvamam', 'suttu', 'nakai' and 'sirappu'.

**இளம்**

என்-எனின் உள்ளுறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உடனுறையும் உவமமும் சுட்டும் நகையுஞ் சிறப்பும் எனக் கெடலரு மரபினை உடைய உள்ளுறை ஐந்து வகைப்படும் என்றவாறு.

உள்ளுறையாவது பிறிதொரு பொருள் புலப்படுமாறு நிற்பதொன்று. அது கருப்பொருள் பற்றி வருமென்பது அகத் திணையியலுள் (அகத்திணை 50) கூறப்பட்டது.

உடனுறையாவது உடனுறைவ தொன்றைச் சொல்ல அத னானே பிறிதொரு பொருள் விளங்குவது.

''விளையா டாயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்று

''அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடு நீழற் பிறவுமா ருளவே''[1]

(நற். 172)

இதனுள் புன்னைக்கு நாணுதும்' எனவே, அவ்வழித்தான் வளர்த்த புன்னையென்றும், 'பல்காலும் அன்னை வருவள்' என்றுடனுறை கூறி விளக்கியவாறு. பிறவுமன்ன.

உவமம் என்பது உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது.

''வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுந்தேன் வேட்டுக் குறுகும்-நிறைமதுச்சேர்ந்து
உண்டாடும் தன்முகத்தே செவ்வி உடையதோர்
வண்டா மரைப்பிரிந்த வண்டு''[2]

(தண்டி. 53 உரை)

இது வண்டைக் கூறுவாள் போலத் தலைமகன் பரத்தையிற் பிரிவு கூறுதலின் உள்ளுறையுவமம் ஆயிற்று.

சுட்டு என்பது ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதோர் பொருட் படுதல்.

---

1. பொருள்: தலைவ! எம் அன்னையானவள், எம்மிடம் ''விளையாட்டில் தோழியருடன் வெண்மணலில் அழுத்தி மறந்து விட்டுப் போன புன்னைக்காய் சில நாள் சென்று முளைக்க அதைப் பால் வார்த்து வளர்க்க வளர்ந்ததால் இப்புன்னை மரமானது உங்களைப் போல எனக்குச் சிறந்ததாகும். அன்றியும் உங்களுக்கு அக்கா முறையுடையதாகும்'' என்றிவ்வாறு புன்னை மரத்தின் சிறப்பைக் கூறினாள். அதனால் இம்மர நிழலில் நின்னொடு கூடுதற்கு நாணுவோம். நீ விரும்பினால் பிற மரநிழலும் உண்டு.-தோழி தலைவனிடம் கூறியது.

2. தன்னிடத்து அழகுடையது ஓர் வளவிய தாமரையில் நிறைந்த தேனைப் படிந்து உண்டு மகிழ்ந்தாடும் வண்டானது அத்தாமரையைப் பிரிந்து பின்னர், பல வண்டுகள் மொய்த்து உண்டு குறைந்ததான நீல மலரின் தேனை விரும்பியும் சேர்வதாயிற்று.

''தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது''[1] (குறள். 1279)

இதனுள் இப் பூப்பறிப்பேமாயின் வளைகழன்று தோள் மெலிய நடத்தல் வல்லையாக வேண்டும் என ஒரு பொருள் சுட்டித் தந்தமை காண்க.

நகையாவது நகையினாற் பிறிதொரு பொருளுணர நிற்றல்.

''அசையியற் குண்டாண்டோ ரேஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்''[2] (குறள். 1098)

இதனுள் நகையினாற் பிறிதோர் குறிப்புத் தோன்றியவாறு காண்க

சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இஃது எனக் கூறுவதனானே பிறிதோர் பொருள் கொளக் கிடப்பது.

**நச்**

இது, மேல் வெளிப்படக் கிளப்பன கூறிப் பின் வெளிப்படாமற் கிளக்கும் உள்ளுறை இனைத்தென்கின்றது.

(இ-ள்) உடனுறை-நான்கு நிலத்தும் உளவாய் அந்நிலத்துடனுறையுங் கருப்பொருளாற் பிறிதொன்று பயப்ப மறைத்துக் கூறும் இறைச்சியும், உவமம்-அக்கருவாற்கொள்ளும் உள்ளுறையுவமமும் ஏனையுவமமும், சுட்டு-உடனுறையுவமமும் அன்றிநகையுஞ் சிறப்பும் பற்றாது வாளாது ஒன்று நினைந்து ஒன்று சொல்வனவும் அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டி வருவனவும், நகை-நகையாடி ஒன்று நினைத்து ஒன்று கூறுதலும், சிறப்பென-ஏனையுவமம் நின்று உள்ளுறையுவமத்தைத் தத்ருதங் கருப்பொருட்குச் (50) சிறப்புக் கொடுத்து நிற்றலும் என்று, கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே-கெடுதலரிதாகிய முறைமையினையுடைய உள்ளுறை ஐந்து வகைப்படும், என்றவாறு.

---

1. பொருள்: தன் தொடிகளைப் பார்த்து தனது மெலிந்த தோள்களைப் பார்த்துப் பின் தன் அடிகளையும் பார்த்து அவ்விடத்து அவள் செய்தது தானும் உடன் வருவேன் என்னும் குறிப்பினதாகும்.

2. பொருள்: யான் பார்க்கும்போது பற்றுடையவளாய் மெல்ல நகுவாள்; அசைந்து நடக்கும் இயல்புடைய அவளுக்கு அப்போது ஒரு சிறந்த அழகு உண்டாகிறது.

ஒன்றனை உள்ளுறுத்து அதனை வெளிப்படாமற் கூறலின் அவற்றை உள்ளுறையாமென்றார்.

'இறைச்சிதானே' (229) 'இறைச்சியிற் பிறக்கும்' (230) என்பவனவற்றுள் இறைச்சிக்குக் காரணங் காட்டினாம்.[1] உவமம் உவமவியலுட் காட்டுதும்.

''பெருங்கடன் முகந்த பல்கிளைக் கொண்மூ
விருண்டுயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்
போர்ப்புறு முரசி னிரங்கி முறைபுரிந்
தறநெறி பிழையாத் திறனறி மன்ன
ரருஞ்சமத் தெதிர்ந்த பெருஞ்சே யாடவர்
கழித்தெறி வாளி னழிப்பன விளங்கு
மின்னுடைக் கருவியை யாகி நாளுங்
கொன்னே செய்தியோ வரவம் பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதொட ரடைச்சிப்
பொலிந்த வாயமொடு காண்டக வியலித்
தழலை வாங்கியுந் தட்டை யோப்பியு
மழலேர் செயலை யந்தளிர் தழையுங்
குறமகள் காக்கு மேனற்
புறமுந் தருதியோ வாழிய மழையே''[2] (அகம்.188)

இதனுட் கொன்னே செய்தியோ அரவ மென்பதனாற் பயன் இன்றி அலர் விளைத்தியோ வெனவுங் கூறி ஏனற்புறமுந் தருதி யோ என்பதனால் வரைந்து கொள்வையோ வெனவுங் கூறித் தலைவனை மழைமேல் வைத்துக் கூறலிற் சுட்டாயிற்று. கொன்னே செய்தியோ என்றதனால் வழுவாயினும் வரைதல் வேட்கை யாற் கூறினமையின் அமைந்தது.

---

1. உதாரணம் காட்டினாம் என்றிருத்தல் வேண்டும்.
2. பொருள்: மழையே! பெரிய கடலில் நீர் முகந்த பல பிரிவான மேகம் இருண்ட உயர்ந்த வானில் வலமாக எழுந்து திக்குகளை வளைத்து போர் முரசு போல இடித்து, அறநெறி பிழையாத நீதியறியும் மன்னரது போரில் எதிர்ந்த வீரர் கழித்து எறிந்த வாளினைப் போல மின்னலையுடைய தொகுதியையுடையையாய் நாளும் வீணே ஆரவாரம் செய்வையோ? அல்லதுபொன் போலக் கொண்டு வேங்கை மலரைக் கூந்தலிற் செருகி விளங்கிய தோழியர் கூட்டத்தோடு மெல்ல நடந்து தழலை வாங்கியும் தட்டைபுடைத்தும் அசோகந்தளிரை உடுத்தியும் உள்ள குறமகள் காக்கும் தினைப்புனப் பக்கமாக வந்து பொழியவும் செய்வாயோ? கூறுக.

'அன்புறுதகுந' (231)என்பதனுள் ஏனையதற்குக்காரணங்[1] காட்டினாம்.

''விளையா டாயமொடு...பிறவுமா ருளவே'' (நற்.172)

இதனுட் புன்னையை அன்னை நுவ்வையாகு மென்றதனான் இவளெதிர் நும்மை நகையாடுத லஞ்சுதுமென நகையாடிப் பகற்குறி யெதிரே கொள்ளாமைக் குறிப்பினான் மறைத்துக் கூறி மறுத்தவாறு காண்க. இதனைச் செவ்வனங் கூறாமையின் அமைத்தார்.

'உள்ளுறை யுவம மேனையுவமம்' (46) என்னுஞ் சூத்திரத்து 'விரிகதிர் மண்டிலம்' என்னும் மருதக்கலி (71)யுட்சிறப்புக் கொடுத்து நின்றது காட்டினாம்.

அறத்தொடு நிலையும் பொழுதும் ஆறும் முதலியனவுஞ் செவ்வனங் கூறப்படுதலின் இவை கரந்தே கூறப்படுதலிற் 'கெடலரு மரபின்' என்றார். இவை தோழிக்குந் தலைவிக்கும் உரியவாறு செய்யுட்களை நோக்கி யுணர்க.

**சிவ**

இச்சூத்திரம் உள்ளுறை வகை கூறுகின்றது.

(இ-ள்) உடனுறை யுள்ளுறை உவமவுள்ளுறை, சுட்டு உள்ளுறை, நகையுள்ளுறை சிறப்புவுள்ளுறை என்று கெடுதல் இல்லாத மரபினையுடைய உள்ளுறைகள் ஐந்தாகும் என்றவாறு.

உடன் உறைவதொரு கருப்பொருள் பற்றிக் கூறி அதனால் வேறொரு பொருள் பெற வைப்பது உடனுறையுள்ளுறையாகும்.

உதாரணம் ''விளையாட்டாயமொடு'' (நற்.172) என்பது.

கருப்பொருள் நிகழ்ச்சி கூறி அதுபோலப் பிறிதொரு கருத்துப் பெறவைப்பது உவமவுள்ளுறையாகும்.

உதாரணம் ''வீங்குநீர் அவிழ்நீலம்'' (கலி. 66).

ஒரு பொருளைச் சுட்டிக் கூற அதன் மூலம் வேறோர் கருத்துப் பெற வைப்பது சுட்டு உள்ளுறை. அது இரண்டு வகை.

1. சுட்டுச் சொல்லால் கூறுவது. உதாரணம் ''வேரல் வேலி'' (குறுந். 18) என்பதில் அஃது என்பது.

---

1. உதாரணம் என்றிருத்தல் வேண்டும்.

2. ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல அதன் மூலம் வேறோர் கருத்துப் பெறவைப்பது. உதாரணம் 'யாருமில்லைத்தானே கள்வன்' (குறுந். 25) என்பது.

நகையுள்ளுறையும் இரண்டு வகை. (1) ஒருவர் நகைப்பதன் மூலம் ஒரு பொருளைக் குறிப்பாக உணருமாறு வைப்பது. உதாரணம் ''விட்டென விடுக்குநாள்'' (குறுந். 236) என்பதில் 'உண்ட என் நலன் தந்தனை சென்மோ' எனத்தோழி நகையாடிக் கூறியது.

(2) நகைப்புக்குரிய நிகழ்ச்சி மூலம் ஒரு கருத்துப் பெறவைப்பது. உதாரணம் மேற்பாட்டில் நாரையின் செயல்.

ஒன்றைச் சிறப்பிப்பதன் மூலம் வேறோர் கருத்துப் பெற வைப்பது சிறப்பு உள்ளுறையாம். உதாரணம் 'ஆம்பற்பூவின்சாம்பர் அன்ன' (குறுந். 46) என்பது.

இனி இவைபற்றி உரையாளர் கருத்துகளைக் காணலாம்.

### உடனுறை

உடனுறை என்பது இறைச்சிப் பொருள் என்று நச்சினார்க்கினியர் கொண்டது பொருந்தாது.

கருப்பொருளை உடனுறை என்று ஆசிரியர் தொல்காப்பியர் யாண்டும் ஆளவில்லை, உடனுறை என்பதற்கு 'நான்கு நிலத்தும் உளவாய் அந்நிலத்துடன் உறையும் கருப்பொருள்கள்' என அவர் வலிந்து பொருள் கூறியுள்ளார். உள்ளுறை ஐந்துமே கருப்பொருளை நிலைக்களனாகக் கொண்டு வருவதாலும் அக் கருப்பொருள் நான்கு நிலத்தும் உறைவதாலும் இறைச்சி மட்டில் உடனுறை என்றல் பொருந்தாமையாலும் அவர் கருத்துப் பொருந்தாது.

அதனால், 'உடனுறையாவது உடனுறைவது ஒன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள் விளங்குவது' என்ற இளம்பூரணர் கருத்தே ஏற்புடையதாகும்.

### உவமம்

'வெறிகொள் இனச்சுரும்பு' என்னும் பாடல் பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனிடம் தோழி அல்லது தலைவி கூறியதாகக் கொள்ளல் வேண்டும். அப்போதுதான் அது உள்ளுறை உவமம் எனப்படும். அப்போது அது அகப்பாடல் எனப்படும்.

பொதுவாக ஆடவர் இயல்பு பற்றிக் கூறியதாக அப்பாடல் கொள்ளப்படுமானால், அதன் உள்ளுறைப் பொருள் உவமவுள்ளுறைப் பொருளாகாது. அணியிலக்கணத்தில் கூறப்படும் ஒட்டணியின்பாற் சாரும். ஒட்டணியின் இலக்கணத்தைத் தண்டியலங்காரம்,

கருதிய பொருள் தொகுத்து அது புலப்படுதற்குப்
பிறிதொன் றுரைப்பின் அஃது ஒட்டெனமொழிப
(தண்டி. 52)

என்று கூறும். அதில் கூறப்பட்ட உதாரணமே 'வெறி கொள் இனச் சுரும்பு' என்னும் பாடல். அதையே இளம்பூரணர் ஆண்டார். ஒட்டணி புறப்பொருளுக் குரியது; புறப்பாடலுக்குரியது. அதுவேஅகப்பாடலில் வருமாயின் உள்ளுறையுவமம் எனப்படும். அதனால் இளம்பூரணர் அப்பாடலை அகப்பாடலாகவே கொண்டு உதாரணமாகக் காட்டினார் எனலாம்.

உவமமும் குறிப்புப்பொருளும் நேர்க்குநேர் ஒத்து முடிந்திருப்பதை மேற்காட்டிய உதாரணங்களிற் காண்க. ஒவ்வாமல் வருமானால் அது இறைச்சி எனப்படும்.

**சுட்டு**

இளம்பூரணர் சுட்டு உள்ளுறைக்குத் 'தொடி நோக்கி' என்ற குறளைக் காட்டியது பொருந்தாது. ஏன் எனின் உள்ளுறையானது கருப்பொருளை நிலைக்களனாகக் கொள்ள வேண்டும். குறளில் கருப்பொருளே இல்லை.

உள்ளுறை யுவமத்துக்கு இளம்பூரணர் காட்டிய 'வெறி கொள் இனச் சுரும்பு' என்னும் பாடலும், நச்சினார்க்கினியர் சுட்டு உள்ளுறைக்குக் காட்டிய 'பெருங்கடல் முகந்த' என்னும் பாடலும் ஒன்று சொல்ல ஒன்று பெறப்படுமாறு அமைந்தனவாதலின் அவ்விரண்டையும் சுட்டு உள்ளுறைக்கும் உவம உள்ளுறைக்கும் காட்டலாம். ஆனால் 'பெருங்கடல் முகந்த' என்பதில் கருப்பொருள் நிகழ்ச்சியில்லை; மேகம் கருப்பொருளன்று. அதனால் அது இரண்டுள்ளுறைக்கும் பொருந்தாது. எனினும் தழை, தட்டை, தளிர், ஏனல் என்ற கருப்பொருள் காணப்படும் அளவில் மேகம் கருப்பொருள் இல்லை என்றாலும் அதன் செயலாக ஏனலைச் சார்த்தி 'ஏனற்புறமும் தருதியோ மழை' என்றதால் சுட்டு உள்ளுறையின்பாற் சார்த்தலாம், அவ்வளவே.

சுட்டு உள்ளுறை என்பதை இரு வகையில் கொள்ளலாம்,

1. சுட்டுச் சொல்லால் பெறப்படும் உள்ளுறை; அதாவது சுட்டப்படும் பொருளாற் பெறப்படும் பிறிதொரு பொருள்.

''வேரல் வேலி வேர்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யார்அஃது அறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிதே காமமோ பெரிதே'' (குறுந். 18)

இப்பாடலின் திணைப் பொருள், 'தோழி தலைவனை வரைவு கடாவுதல்' என்பது. இப்பாடலில் அஃது என்பது சுட்டு.

''சிறிய கிளையில் பெரும்பழம் தொங்குவது போலச்
சிறிய உயிரில் பெரிய காமம் நிறைந்துள்ளது.''

என்பது சுட்டப்படும் பொருள். அஃது என்ற சுட்டு அந்த அள வில் அமைந்து விடவில்லை.

''பாதுகாப்பு இலதாகித் தன்னைத் தாங்குதற்குரிய
கொம்பும் சிறியதாகித் தானும் பெரியதாகி இருக்கும்
பழம், கனிந்து கொம்பினின்றும் உகும்; அன்றிப்
பிறராற் கொள்ளவும் படும். அதுபோலத் தன்னை
வேற்று வரைவினின்றும் கார்பார் இலராகி உயி
ரும் சிறியளாய இவளிடத்துக் காமம் பின்னும்
கனியின் உயிர் விடுதலும் நேரும்; அன்றிப்
பிறர் வரைந்து கொள்ளவும் முயல்வர்'' (உ.வே.சா.)

என்ற பொருளையும் சுட்டுகிறது. அதனால், ''யாரஃதறிந் திசினோரே---பெரிதே'' என்பது சுட்டு உள்ளுறைக்குரிய தாயிற்று.

2. ஒன்றைக் குறிப்பிட்டு (சுட்டி) ச் சொல்ல அதன் மூலம் பெறப்படுவது.

''யாரும் இல்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யான்எவன் செய்கோ
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு தாமணந்த ஞான்றே'' (குறுந். 25)

இப்பாடலின் திணைப்பொருள், ''தலைவன் களவுப் புணர்ச்சிப் பின்னர் வரைந்து கோடல் இன்றிக் காலம் நீட்டித்த விடத்துத் தலைவி தன் தோழியிடம், 'தன்னைத் தலைவன் அருள் கூர்ந்து

வரைந்து கொண்டாலன்றி அவன் என்னைக் கூடியதற்கு வேறு சான்றில்லை; என் செய்வேன்' என வருந்திக் கூறியது'' என்பது.

இதில் தலைவியால் குருகின் செயல் சுட்டிக் கூறப்பட்டுள்ளது. ''அக்குருகு தான் ஓடும் நீரில் தனக்கு உணவான ஆரலையே பார்த்திருந்தது. அதன் எண்ணம் வேறு எதிலும் இல்லை; அதுபோலத் தலைவனும் என்னிடம் இன்பம் நுகர்தலையே குறிக்கோளாகக் கொண்டிருந்தான்; ஆரல் கிடைப்பின் அக்குருகு பறந்துவிடும். அதுபோலத் தலைவன் இன்பம் நுகர்ந்து பின் மறந்து நினையானாயினான்'' என்பது குருகின் செயல் மூலம் பெறப்படும் உள்ளுறைப் பொருள். குருகு ஆரலையே பார்த்திருந்ததாதலின் அது சான்று கூறாது என்பது ஓர் (இறைச்சிப்) பொருள் உண்மையும் காணத் தக்கது.

குருகின் செயல் இயற்கை வருணனை என்பதில்லாமல் சுட்டிச் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாதலின் இப்பாடல் சுட்டு உள்ளுறைப் பாடல் என்னலாம்.

**நகை**

ஒருவர் நகைப்பது கண்டு ஒரு பொருளைக் குறிப்பாக உணருமாறு வைப்பதும், நகைத்துப் பேசுவதன் மூலம் ஒரு பொருளைக் குறிப்பாக உணருமாறு வைப்பதும் ஆகிய இரண்டையுமே நகை உள்ளுறைக்குக் கொள்ளலாம். ஆயினும், இளம்பூரணர் காட்டிய உதாரணத்தில் உள்ளுறையாதற்கு நிலைக்களனாகிய கருப்பொருள் இல்லாமையால் அதை ஏற்பதற்கில்லை.

நச்சினார்க்கினியருக்கும், 'கருப்பொருளடியாகத்தான்-அதாவது கருப்பொருளின் நிகழ்ச்சி வாயிலாகத்தான் நகையுள்ளுறை தோன்றும் என்பதே கொள்கை' என்பதை, அவர் உரைகளிலிருந்தும் அறியலாம்.

''அணிமுகமதியேய்ப்ப'' என்னும் குறிஞ்சிக் கலிப்பாவில் (28)

'முகைமாறு கொள்ளும் எயிற்றாய் இவையல்ல
என் உழுவாய் நீமற்றினி'

என்ற வரிகட்கு,

''முல்லை முகையோடு மாறுபாடு கொள்ளும் எயிற்றினை
யுடையாய் இத்தோற்றப் பொலிவுகளன்றி வேறே
தோற்றப் பொலிவுண்டாக நீ புணர்வாய் என்றான்''

என உரையெழுதி

''என்றதனால் நின்கருத்து இடைவிடாது முயங்குதலே யாயின் இனி நீ இடைவிடாது முயங்கினைகாண். ---கரும்பும் குவளையுமன்றி வேறு என் உழுவாய் என ஒரு நகைக் குறிப்புத் தோன்றிற்று''

எனக் குறிப்புப்பொருளும் எழுதினார். இங்கு அவர் நகையுள்ளுறை என எழுதாமல் நகைக் குறிப்பு என்றே எழுதியது காணலாம். இதில் கரும்பு, குவளை என்னும் கருப்பொருள்கள் உள்ளனவே என வினவலாம். உளவாயினும் அவற்றின் செயலாக ஒன்றும் இல்லை. மேலும் இதையடுத்து வரும்,

'ஈங்கே தலைப்படுவன் உண்டான தலைப்பெயின்
வேந்துகொண் டன்ன பல' (24-25)

என்னும் வரிகளுக்கு,

''அரசனைச் சேர்ந்து அவன் செல்வத்தை நுகர்ந்தான் ஒருவன், அவன் வயத்தனாய் நின்று காரியத்தாற் றலைமைப்பாடு எய்துவனாயின், அவ்வேந்தன் அவனாலுள்ள பயனைக் கொண்டாற் போன்ற பல பயனையும் இவ்விடத்தே எய்துவேன் என்றான்''

என உரையெழுதி,

''இனி அரசனுடைய பொருளை நுகர்ந்தவன் எதிர்ப்படில் அவ்வரசன் அவனிடத்து வருத்த முறுத்திக் கொண்டாற் போன்ற பல பயன்களையும் யானும் இங்கே கொள்வேன் என ஒரு நகைக் குறிப்புத் தோன்றி நின்றது''

என எழுதியதிலும் நகையுள்ளுறை என்னாது நகைக் குறிப்பு என்றே எழுதியதும் காணலாம். இப்பகுதியில் கருப்பொருளில்லை.

எனவே நகையுள்ளுறைக்கும் கருப்பொருள் நிகழ்ச்சி நிலைக்களன் என்பதே நச்சினார்க்கினியர் கருத்து என அறியலாம்.

''விட்டென விடுக்குநாள் வருக அதுநீ
தேர்ந்தனை யாயின் தந்தனை சென்மோ
குன்றத் தன்ன குவவுமணல் அடைகரை
நின்ற புன்னை நிலந்தோய் படுசினை
வம்ப நாரை சேக்கும்
தண்கடற் சேர்ப்பநீ யுண்டஎன் நலனே'' (குறுந். 236)

''வரைவிடை வைத்துப் பிரியக் கருதிய தலைவன், தோழியிடம் தலைவியை ஆற்றுவிப்பாயாக எனக் கூறியபோது. தோழியான வள் நகையாடி உரைத்துச் செலவழுங்குவித்தது'' என்பது திணைப் பொருள்.

இதில் தோழி நகையாடியதாவது,

> ''தலைவனே! நீ பிரிந்து போவது பற்றி எனக்கு வருத்த மில்லை; ஆனால் இவளை நீ கைவிட்டாய் என்று சொல்லும்படியான நாள் வருவதாகுக; நீயும் அதற்கு உடன்பட்டாய் என்றால் ஒன்று நீ செய்ய வேண்டும். அதாவது தலைவியின் நலனையுண்டாயல்லவா? அதைத் தந்து விட்டுச் செல்''

என்று கூறியதில் உண்டது மீளத் தருதற்கியலாததாகவும் 'தந்து செல்' என்றது நகையாடியதாம். இதற்கேற்பக் கருப்பொருள் நிகழ்ச்சியும் நகையாகவே அமைந்தது.

> ''புன்னை மரத்தின் மணலைத் தொடுமாறு தாழ்ந்த கிளைகளில் இதுகாறும் அங்கு வந்தறியாத புதிய நாரையானது வந்து தங்கும்''

என்ற செய்தி நகைப்புக் குரியதாக அமைந்தது. ''எங்கேயோ இரையுண்ட நாரை. தான் தங்குதற்கு உயர்கிளையை இட மாகக் கொள்ளாமல் மணலில் தாழ்ந்த கிளையை இடமாகக் கொண்டு தங்குவது நகைப்புக்குரியதாயிற்று. அதுபோலத் தலைவியின் நலனையுண்ட நீ, பிரிந்து சென்றக்கால் இவள் நினைவாகவே இருந்து எவ்விடம் செல்வது என்பது அறியாது எங்கேனும் செல்லினும் செல்வாய். ஆதலின் செலவழுங்குக'' என்னும் பொருளைத் தருதலின் இப்பாடல் நகையுள்ளுறைக் குரியதாயிற்று.

**சிறப்பு**

''சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இது எனக் கூறுதலானே பிறிதோர் பொருள் கொள்ள வைப்பது'' என்று கூறிய இளம் பூரணர் உதாரணம் காட்டாமற் போயினர். ஆனால் அடுத்து வரும்

> ''அந்தமில் சிறப்பின ஆகிய இன்பம்
> தன்வயின் வருதலும் வகுத்த பண்பே''
> (தொல். பொ. பொருளி. 47)

என்னும் சூத்திரத்துக்கு

> ''அந்தமில்லாத சிறப்பினாகிய இன்பத்திடத்து உள்ளுறைப் பொருண்மை வருதலும் வகுத்த இயல்பு என்றவாறு''

என உரையெழுதி,

'அந்தமில் சிறப்பு என்பது மேன்மேலும் சிறப்புச் செய்தல்' என அந்தமில் சிறப்பு என்பதற்கு விளக்கமும் தந்து,

> ''நுண்ணெழில் மாமைச் சுணங்கணி யாகம்தங்
> கண்ணினும் மகிழ்செய்யும் எனவுரைத்தும்
> அமையார் என்
>
> ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
> எண்ணுவ தெவன்கொல் அறியேன் என்னும் (கலி. 4)

என வரும் பாலைக் கலிப்பாடலின் வரிகளை யுதாரணமாகத் தந்து,

> ''என்ற வழி இன்பத்தின் கண்ணும் பிறிதோர் பொருள் உண்டென்பது தோற்றுகின்றது''

என்றும் எழுதியுள்ளார்.

தொல்காப்பியர் 'அந்தமில் சிறப்பின்' எனச் சிறப்புப் பற்றிக் கூறியதால் அச்சூத்திரம் சிறப்பு உள்ளுறை பற்றியதாகவே அமையும். ஆனால் உடனுறை உவமம் என்னும் சூத்திரத்துக் கூறிய சிறப்பு பொதுவில் கூறப்பட்டது என்றும், அந்தமில் சிறப்பு எனக் கூறப்பட்டது சிறப்பாகக் கூறப்பட்டது என்றும் கொள்ளலாம்.

இளம்பூரணர் 'அந்தமில் சிறப்பின்' என்னும் சூத்திரம் பற்றி 'என்னுதலிற்றோவெனின் இதுவும் உள்ளுறைப்பாற் படுவதோர் பொருள் உணர்த்துதல் நுதலிற்று' என்று பொதுவில் எழுதினாரேயன்றிச் சிறப்பு உள்ளுறை பற்றியது என்று எழுதவில்லை. என்றாலும் சிறப்புள்ளுறைக்கே இச்சூத்திரம் என்ற கருத்தினர் அவர் எனக் கொள்வதில் தவறில்லை.

அவர் காட்டிய 'நுண்ணெழில்' என்னும் கலிப்பாடல் வரிகளில் கருப்பொருளில்லாமையால் உள்ளுறையாகக் கொள்வதற்கில்லை; சிறப்புக் குறிப்பு என்று வேண்டுமானால் கொள்ளலாம்.

நச்சினார்க்கினியர் உள்ளுறையைத் தரும் உவமத்துக்குச் சிறப்பாக வரும் உவமையினைச் சிறப்பு உள்ளுறை என்பதும் பொருந்துவதில்லை.

உடனுறை முதலிய நான்கற்கும் உள்ளே உறையும் பொருள் இருத்தல் போல, உள்ளுறை யுவமத்துக்குச் சிறப்புக் கொடுக்கும் உவமைக்கும் உள்ளே உறையும் பொருள் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாமையாலும், உள்ளுறைக்கு நிலைக்களனாக வரும் கருப்பொருளாற் பெறப்படும் பொருளே, அவற்றின் உவமையாக வரும் சிறப்பாலும் பெறப்படும் என்றால் ஒரே பொருளே இரண்டிற்கும் உள்ளுறை என்றல் பொருந்தாமை யாலும் நச்சினார்க்கினியர் சிறப்பு உள்ளுறைக்குக் கொண்ட பொருள் பொருத்தம் இல்லை.

'விளையாட்டாயமொடு' என்ற பாடலில்,

'நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே'

எனவருதலின்-அதாவது புன்னையைச் சிறப்பித்து வருதலின் அப்பகுதி சிறப்பு என்பதற்கு உரியதாகவும், அதன் மூலம் பெறப் பட்ட ''அன்னை பலகாலும் வருவள்; ஆதலின் புன்னையின் நீழல் குறியிடமாக அமைதல் வேண்டா'' என்பது உள்ளுறைப் பொருளாகவும் கொள்ளலாம். இளம்பூரணர் சிறப்பு என்பதற்கு ஏற்ப அமைந்தது இப்பாடல்

ஒன்றைச் சிறப்பிப்பதன் மூலம் வேறும் ஒரு பொருள் புலப் படுமாயின் அது சிறப்பு உள்ளுறை என்பதே நன்று. அவ்வாறு சிறப்பிக்கவில்லை யென்றாலும் திணைப்பொருள் கெடாது.

''ஆம்பற் பூவின் சாம்பர் அன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து
எருவின் நுண்தாது குடைவன ஆடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழியவர் சென்ற நாட்டே''(குறுந்.46)

''பிரிவிடை யாற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது'' என்பது திணைப்பொருள்.

''தலைவன் பிரிந்து சென்றமையால் மாலைக் காலமும் தனிமையும் என்னை வருத்துகின்றன. அதே நிலையில் அவர்க்கும் அவை துயர்தரும்; அதனால் அவர் விரைந்து வருவர்; ஆதலின் ஆற்றுவேன்'' என்பது பாடலின் கருத்து.

இதில் மாலைக்காலம் சிறப்பிக்கப்படுகிறது. ''மனையில் உறையும் குருவிகள் வீட்டு முற்றத்தில் உலரும் பயிர்களை மாந்திப் பின் ஊர்மன்றத்தில் புழுதிகளைக் குடைந்து ஆடிக் காலம் கழித்துப் பின் வீட்டின் இறப்பில் உள்ள தம் இடத்தில் தங்கும் மாலை'' என்பது சிறப்பிக்கப்பட்டவாறு. இச்சிறப்பினாற் பெறப்படும் பொருளாவது,

''நம் வீட்டிலிருந்து நல்லறம் செய்த தலைவன்
மேலும் செய்தற்குப் பிரிந்து பொருளீட்டி நம் வீடு
வந்து மகனுடன் மகிழ்வான்''

என்பது.இது உள்ளுறை யுவமம் போலக் காணப்படினும் மாலைக் காலத்தைச் சிறப்பிப்பதே நோக்கமாதலின் சிறப்பு உள்ளுறை யாகும்.

''புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழியவர் சென்ற நாட்டே''

என்று மட்டில் இருந்தாலும் திணைப்பொருள் அமையும். அதனால் 'பிள்ளையொடுவதியும்' என்பது வரையுள்ள பகுதி மாலையைச் சிறப்பிக்கவே வந்தன என்க.

## இன்பம்

**239. அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்**
**தன்வயின் வருதலும் வகுத்த பண்பே. (47)**

**ஆ.மொ.**

The pleasure which is made by means of five 'uḷḷuṛais' without having end in its excellence goes to him also in accordance with the culture.

**இளம்**

என்-எனின் இதுவும் உள்ளுறைப்பாற்படுவதோர் பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அந்தமில்லாத சிறப்பினாகிய வின்பத்திடத்து உள்ளுறைப் பொருண்மை வருதலும் வகுத்த இயல்பு என்றவாறு.

''அந்தமில் சிறப்பு' என்பது மேன்மேலுஞ் சிறப்புச் செய்தல்.

"நுண்ணெழில் மாமைச் சுணங்கணி ஆகம்தம்
கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையார் என்
ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவ தெவன்கொ லறியேன் என்னும்"[1]

(கலி. 4)

என்றவழி, இன்பத்தின் கண்ணும் பிறிதோர் பொருள் உண்டென்பது தோன்றுகின்றது.

**நச்**

இது, முற்கூறிய உள்ளுறை பற்றித் தலைவற்கு வருவதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) ஆக்கிய அந்தமில் சிறப்பின் இன்பமும் முற்கூறிய உள்ளுறை ஐந்தானும் அவர்களுண்டாக்கிய முடிவிலாத சிறப்பினையுடைய இன்பம், தன்வயின் வருதலும் வகுத்த பண்பு-தலைவன் கண்ணும் நிகழ்ந்து இன்பஞ் செய்தலுங் காமத்துக்கு முதலாசிரியன் வகுத்த இலக்கணம், என்றவாறு.

தலைவன் தன்மை என்ப தொன்றின்றி நந்தன்மை யெனக் கருதுதலின் யாம் ஒன்றை நினைந்து ஒன்று கூறினும் அவன் முனியாது இன்பமெனக் கொள்வனெனக் கூறியவற்றை அவன் இவை இன்பந் தருமென்றே கோடலின் வழுவமையப்பட்டன. உதாரணம் முற்காட்டியவற்றுட் காண்க.

**சிவ**

இச்சூத்திரம் உள்ளுறைப் பொருளைத் தலைவன் ஏற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) அழிவில்லாத உள்ளுறையால் தோன்றிய பொருள் இன்பமானது தலைவனிடத்துவந்து இன்பம் செய்தலும் ஆம் எனப் புலவோர் வகுத்த புலனெறி வழக்காம் என்றவாறு.

---

1. பொருள்: நுண்ணிய அழகுடைய மாமை எனப்படும் சுணங்கு உள்ள என் முலையைத் தமது கண்ணொடு சேர்த்தாற்போலப் பார்த்துங் கூட அமையாராய் என் அழகிய நுதலையும் தடவிக் கொடுப்பர் காதலர்; இப்படி மிக்க அன்பு காட்டுதலால் அவர் எண்ணும் எண்ணம் யாது என்று அறியேன் என்பாள் தலைவி-தோழி பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவனிடம் கூறியது.

தலைவியும் தோழியும் கூறிய உள்ளுறைப் பொருள்களை அவர்கள் கூறி மகிழ்ந்த நிலையில் அவை கேட்ட தலைவன் தனக்கு மாறாகத் தோன்றினாலும் மாறாகக் கருதாமல் தனக்கும் இன்பம் செய்வதாகவே கருதுவன் ஆதலின் அவ்வுள்ளுறைகளைப் புலவர் புலனெறி வழக்கில் வகுத்தனர் என்பதாம்.

இளம்பூரணர் உரையும் உதாரணமும் கருப்பொருளடியாக வுள்ளுறைபிறக்கும் என்பதற்கு மாறாக இருத்தலின் பொருந்தா என்க.

## மங்கலமொழி முதலியன

**240. மங்கல மொழியும் அவையல் மொழியும்**
**மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியுங்**
**கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப. (48)**

**ஆ. மொ.**

The word of praise, the word of reviling and the word which despises his valour are to be taken as anomalies in usage.

**இளம்**

என்-எனின் இதுவும் உள்ளுறைப்பாற்படுவதோர் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மங்கலமொழி முதலாகச் சொல்லப்பட்டனவும் உள்ளுறைப்பாற்படும் என்றவாறு.

மங்கலமொழியாவது-மங்கலத்தாற் கூறுஞ்சொல். அது செத்தாரைத் துஞ்சினார் என்றல்.

அவையல் மொழியாவது இடக்கரடக்கிக் கூறுதல். அது கண் கழீஇ வருதும் என்றல்.

மாறிலாண்மையிற் சொல்லிய மொழியாவது ஒருவனைச் சிங்கம் வந்த தென்றாற் போறற் கூறுவது.

அவையெல்லாஞ் சொல்லாற் பொருள்படாமையின் உள்ளுறைப்பாற்படும். இன்னும் இவ்வாற்றாம் பொருள் கொள்ளுமாறு 'ஒல்லுவதொல்லும்' என்னும் புறப்பாட்டினுள் (புறம். 196) 'நோயில ராகநின் புதல்வர்' எனவும் 'சிறக்கநின் னாளே' எனவும் வரும் மங்கலச் சொல் கெடுக என்னும் பொருள்பட்டவாறு காண்க.

''இதுவுமோர் ஊராண்மைக் கொத்த படிறுடைத்து''
(கலி. 89)

என்றது தீயொழுக்கம் ஒழுகினாய் என இடக்கரடக்கி அவையல் மொழியால் ஒழுக்கம் குறைபாடு கூறியவாறு.

**நச்**

இது, மேன் மூன்று பொருளும் வழுவாயமைக என்றலின் எய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) மங்கலமொழியும்-தலைவற்குத் தீங்கு வருமென் றுட்கொண்டு தோழியுந் தலைவியும் அதற்கஞ்சி அவனை வழுத்து தலும், வைஇயமொழியும்-தலைவன் தம்மை வஞ்சித்தானாகத் தலைவியுந் தோழியுங் கூறலும், வைஇயமொழி, தீங்கைவைத்த மொழியுமாம்; மாறில் ஆண்மையிற் சொல்லிய மொழியும்-மாறுபாடில்லாத ஆளுந் தன்மையிடத்தே பழிப்படக் கூறிய மொழியும், கூறியன் மருங்கிற் கொள்ளும் என்ப-வழுவமைதி யாகக் கூறிய இலக்கணத்திடத்தே கொள்ளுமொழியென்று கூறு வர் ஆசிரியர், என்றவாறு.

'நோயில ராகநங் காதலர்' (அகம். 115, 227) எனவும்
'காந்தளுஞ் செய்வினை முடிக்கத் தோழி'

எனவுங் கூறுவன நம்மை அறனன்றித் துறத்தலின் தீங்கு வருமென்றஞ்சி வாழ்த்தியது. நம் பொருட்டுத் தீங்கு வருமென நினைத்தலின் வழுவா யமைந்தது.

''வையினர் நலனுண்டார் வாராமை நினைத்தலின்''
(கலி. 134)

என்பது வஞ்சித்தமை கூறிற்று.

''இதுவுமோ, ரூராண்மைக் கொத்த படிறுடைத்து''
(கலி. 89)

என்பது ஆண்மையிலே பழியுங் [illegible] என்றது. இதுவும் வழீஇ அமைந்தன.

**சிவ**

இச்சூத்திரம் உள்ளுறைப் பொருளை இன்பம் எனக் கொண் டதுபோல மங்கலமொழி முதலியவற்றையும் இன்பமாகக் கருது வன் தலைவன் என்கின்றது.

(இ-ள்) மங்கலமல்லாததை உட்கொண்டு கூறும் மங்கல மொழியும் மங்கலங்களல்லாத வழிமொழியும் மாறில்லாத ஆண் மையிற் குற்றங்காட்டிச் சொல்லும் மொழியும் முன்னர் உள்ளு றையின்பம் கூறிய பக்கமாகவே இவற்றையும் கேட்டு இன்ப மாகக் கொள்வன் தலைவன் என்று கூறுவர் புலவர் என்றவாறு.

''மங்கலமொழி என்றது வாழ்த்து மொழியை. நோயில ராக நங்காதலர்'' (அகம் 114) என வாழ்த்தியது மங்கல மொழி. இதில் வாழ்த்தியோர்க்கு வாழ்த்துதல் நோக்கம் இன்று. நோயுடையராக என்னும் நோக்கமும்இன்று. ஒரு வெறுப்பில் கூறிய மங்கலமொழி இது.

'நகைக் கூட்டம் செய்தான் அக்கள்வன் மகன்' (கலி). இதில் 'கள்வன்மகன்' என்றது அவையல் மொழி அல்லது வைஇய மொழி.

''இதுவும் ஓர் ஊராண்மைக் கொத்த படிறுடைத்து''
(கலி. 89)

என்பது ஆண்மையிற் சொல்லிய பழிமொழி.

இவை மூன்றும் இகழ்ச்சிக் குறிப்புடையன வாயினும் கேட்ட தலைவன் இகழ்ச்சியாகவே கருதாமல் மகிழ்ந்து நினைந்து இன் புறுவன் என்க.

## சிறப்பொடு வருவன

**241. சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு**
**அனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே. (49)**

**ஆ. மொ.**

Anger, ignorance, jealousy and poverty-all these four will appear as basis for praising (on the part of lady-love and maid).

**இளம்**

என்-எனின் மெய்ப்பாட்டியலுள் நடுவண் ஐந்திணைக் குரிய தலைமக்கட்காகாதன எடுத்தோதுகின்றாராகலின், அவற் றுள் ஒரு சாரன ஓரோவிடத்து வருமென்பது உணர்த்திற்று.

இச்சூத்திரம் எதிரது நோக்கிற்று.

(இ-ள்) சினமும் பேதைமையும் நிம்பிரியும் நல்குரவும் என்று சொல்லப்பட்ட அந்நான்கு வகையும் யாதானும் ஒரு பொருளைச் சிறப்பித்தல் காரணமாக வரும் என்றவாறு.

''கொடியியல் நல்லார் குரல்நாற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பினை வாகத்
தொடிய வெமக்குநீ யாரை பெரியார்க்கு
அடியரோ ஆற்றா தவர்'' (கலி)

இதனுள் 'தொடிய எமக்கு நீயாரை' என்பது சினம் பற்றி வரினும் காமக் குறிப்பினாற் புணர்ந்த தலைமகள் கூறுதலின் அவள் காதலைச் சிறப்பிக்க வந்தது.

''செவ்விய தீவிய சொல்லி அவற்றொடு
பைய முயங்கிய் அஞ்ஞான்று அவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய''[1]
(கலி. 19)

என்பதனுள் 'யான்யாங் கறிகோ' என ஏதம்பற்றி வந்த பிரிவாற்றாமையைச் சிறப்பிக்க வந்தது.

''அகனகர் கொள்ளா அலர்தலைத் தந்து
பகல்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்
மகனல்லை மன்ற இனி''[2] (கலி. 19)

என்பதனுள் தலைவி 'மகனல்லை' எனல் நிம்பிரியாகிய வெறுப்புப்பற்றி வந்தது.

இதுவும் பிரிவாற்றாமையைச் சிறப்பிக்க வந்தது.

''உடுத்தும் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழைவொடு வருதி நீயே இஃதோ

---

1. பொருள்: ஐய! நல்லனவும் இனியனவும் ஆனசொற்களைச் சொல்லிப் பாராட்டி அச்சொற்களோ மெல்லத் தழுவிய அப்போது அப்பாராட்டெல்லாம் பொய்யாதலை யான் எப்படி அறிவேன்.

2. பொருள்: நின் களவொழுக்கத்தாற் ஊள்ளூரில் தாங்காத அலரை எமக்குத் தந்து இப்போது ஞாயிறுகாயும் வெய்யசுரவழிச் செல்ல நினைப்பதை யறிந்தேன்; நீ ஒரு மகன் இல்லை உறுதியாக.

ஓரான் வல்சிச் சீறில் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னும் இவ் வூரே''[1]

(குறுந். 295)

இதனுள் 'ஓரான் வல்சிச் சீறில் வாழ்க்கை' எனத் தலைமகன் செல்வக் குறைபாடு கூறிப் 'பெருநலக் குறுமகள் வந்தென விழ வாயிற்றென்னுமிவ் வூர்' என்றமையான் நல்குரவு பற்றித் தலைமகனைச் சிறப்பிக்க வந்தது. இச்சூத்திரத்துள் வரைந்து கூறாமையின் தலைவியுந் தலைவனுந் தோழியுஞ் செவிலியுங் கூறப்பெறுவர் என்று கொள்க.

நச்

இது, மெய்ப்பாட்டியலுள் ஆகாதென்பவற்றுட் சில அமைக வென வழுவமைக்கின்றது. இது பொதுவாகக் கூறலின் தலைவிக்குந் தோழிக்குங் கொள்க.

(இ-ள்) சினனே-கோபம் நீடித்தாலும், பேதைமை - ஏழைமையும், நிம்பிரி-பொறாமை தோன்றுங் குறிப்பும், நல்குரவு-செல்வமின்மையும், அனை நால்வகையும்-என்ற அத்தன்மையனவாகிய நாற்கூறும், சிறப்பொடு வருமே-ஒருபொருளைச் சிறப்பித்துக் கூறுதல் காரணத்தான் வரும், என்றவாறு.

சினத்தை ஆண்டுக் கொடுமையினடக்கினார்.

''நாணு நிறையு நயப்பில் பிறப்பிலி'' (கலி.60)

''தொடிய வெமக்குநீ யாரை'' (கலி.88)

என சினம் பற்றிவரினும் அவை தன்காதலைச் சிறப்பித்தலின் அமைந்தன.

''செவ்விய தீவிய சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய வஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய
வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சுர முள்ள லறிந்தேன்
மகனல்லை மன்ற வினி''[2] (கலி.19)

1. பொருள்: பக்கம் 109-ல் காண்க.
2. பொருள்: பக்கம் 178-ல் காண்க.

எனக் கழிபெருங் காதலான் நின்னை உள்ளவாறறிந்திலே னெனத் தன் பேதைமையைக் காதலாற் சிறப்பித்தலின் அமைந் தது.

''உறலியா மொளிவாட வுயர்ந்தவண் விழவினுள்
விறலிழை யவரோடு விளையாடு வான்மன்னோ
பெறலரும் பொழுதொடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
தறல்வாரும் வையையென் றறையுந ருளராயின்''[1]
(கலி.30)

இது, நிம்பிரி. அவரோடும் விளையாடுவானெனப்பொறாமை கூறியும் அவன் ஈண்டையானாக வேண்டுமெனக் காதலைச் சிறப்பித்தலின் அமைந்தது.

''பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகை யேந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோ
லுண்ணென் றோக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்
றரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்த ரோடி
யேவன் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி
யறிவு மொழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவற னுற்றெனக்
கொடுத்த தாதை கொழுஞ்சோ றுள்ளா

1. பொருள்: பெறுதற் கரிய இளவேனிற் காலத்தில் விளங்கும் பூங்கொத்துகள் பரந்த ஆற்றிடைக் குறையைச் சூழ்ந்து நீர் ஒழுகும்படி வையையாறு உள்ளது என்று காலச் சிறப்பை அவரிடம் கூறுவார் உண்டு என்றால் அவர் தம்மை அடைதலை விரும்பும் யான் இங்கே அழகு வாட உயர்ந்த காமனது விழாக் காலத்தில் விளங்கு அணியுடைய பரத்தையரொடு விளையாடு வாரா? மாட்டார் அன்றே. கூறுவார் இல்லையாதலின் அவர் அவ்வாறு விளையாடுவார்,

ளொழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத் துண்ணுஞ் சிறுமது கையளே''[1]

(நற். 110)

இது, குடி வறனுற்றென நல்குரவு கூறியுங் காதலைச் சிறப் பித்தலின் அமைந்தது.

இது, மெய்ப்பாட்டியலுள் விலக்காமையின் அதனைச் சார ஈற்றிலே வைத்தார்.

## சொல்-எழுத்து மரபு

**242. அன்னை என்னை என்றலும் உளவே**
**தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினுந்**
**தோன்றா மரபின என்மனார் புலவர். (50)**

**ஆ. மொ.**

There are usages as "Annai" and "Ennai" ("oh mother" "my lord") in the conversations between the lady love and maid and between the lover and the ladies. Such usages are in accordance with the ancient tradition which may be found in the grammar dealing with the word and letter-so say the poets.

**இளம்**

என்-எனின் இதுவு மொருசார் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அன்னை என்னை என்று சொல்லுதலும் உள. அவை முன்புள்ளார் சொல்லிப் போந்த முறைமை அவை தாம்சொல்லி

---

1. பொருள்: நரைத்த கூந்தலுடையசெய்ய முதிய செவிலித் தாயர் தேன் கலந்த பாலைப் பொற்கலத்திற்கொண்டு ஒருகையில் ஏந்திவந்து ஊட்ட உண்ணாமையால் சிறு கோல் கொண்டு உண்ணெனப் புடைக்க அதனாற் சுற் றிச் சுற்றிவந்து செவிலியர் ஓடும் வேகம் குறைந்து நிற்கு மாறு பந்தர்ப் பக்கம் ஓட ஓடி அவர் ஏவலை மறுக்கும் சிறிய விளையாட்டுக் குழந்தையாகிய இத்தலைவி, இன்று கணவன் குடி வறுமையுற்றதாகத் தனக்குத்தன் தந்தை கொடுத்த சீதனமான சோற்றையும் உண்ணாத வளாய் ஒரு வேளை விட்டு ஒரு வேளையுண்ணும் சிறிய ஆற்றலுடையவளானாள். இப்படியாக அறிவும் ஒழுக்க மும் எங்கே அறிந்தனளோ?

னானும் சொல்லிற் கங்கமாகிய எழுத்தினானும் பொருள்தோன்றாத மரபினையுடைய என்றவாறு.

எழுத்தென்பது எழுத்தாகப் பிரித்தாற்படும் பொருள்வேறுபாடு. இவை அகத்தினும் புறத்தினும் வரும்.

> ''ஓரீஇ ஒழுகு மென்னைக்குப்
> பரியலென் மன்யான் பண்டொரு காலே''[1]
> (குறுந். 203)

என்பது தலைமகள் தலைமகனைக் கூறியது.

> ''அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்.''
> (குறுந். 33)

என்பது தோழிக்குக் கூறியது.

> ''என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
> முன்னின்று கன்னின் றவர்''[2] (குறள். 771)

> ''என்னை, புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே.''[3]
> (புறம்.84)

இவையும், 'என்றலும்' என்ற வும்மையால் நிகர்னவுங்[4] கொள்க.

> ''எந்தைதன் உள்ளங் குறைபடா வாறு''

என வரும்.

---

1. பொருள்: முன் ஒரு காலத்தில் என்னைப் பிரிந்து ஒழுகிய தலைவனுக்காக யான் வருந்திலேன் அல்லேன்.
2. பொருள்: பகைவர்களே! முன்னர் என் தலைவன் முன் நிற்றலாற்றாது தோற்றுக் கல்லெடுக்கப்பட்டார் பலர்: அதனால் என் தலைவன் முன்னர் நில்லாதீர்.
3. பொருள்: என் தலைவன் கஞ்சியுணவுண்டும் பெரிய தோளினன் ஆவான்.
4. என்னை முன், என்னை புற்கை என்பனவற்றில் அகப் பொருள் தலைவனையன்றிப் புறப்பொருள் தலைவனை என்னை எனக் கூறப்பட்டது. இப்படி வந்த இவையும், என்றாலும் என்றவும்மையால் இவை போல்வன பிறவும் கொள்க என்பது கருத்து. 'எந்தை தன் உள்ளம்' என்பதில் எந்தை என்பது தந்தையை உணர்த்தாது தலைவன் என்ற பொருளில் வந்தது. என்னை என்பது போல்வது இது.

நச்

இது, முறைப்பெயர் பற்றி வருவதோர் வழுவமைக்கின்றது.

(இ-ள்) சொல்லினும் எழுத்தினுந் தோன்றா மரபின-சொல் லோத்தினும் ஏழுத்தோத்தினுஞ் சொல்லப்படாத இலக்கணத் தனவாய, தொல் நெறி முறைமை - புலனெறி வழக்கிற்குப் பொருந்திய பழைய நெறி முறைமை யானே, அன்னை என்னை என்றலும் உள என்மனார் புலவர்-தோழி தலைவியை அன்னை யென்றலும் தலைவி தோழியை அன்னை யென்றலும் இரு வருந் தலைவனை என்னை யென்றலும் உளவென்று கூறுவர் புலவர் என்றவாறு.

''அன்னா யிவனோ ரிளமா ணாக்கன்'' (குறுந். 33)

''புல்லின் மாய்வ தெவன்கொ லன்னாய்''
(குறுந்.150)

இவை, தோழியைத் தலைவி அன்னாயென்றன.

''அன்னாய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமுங்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாட னூர்ந்த மாவே''[1]
(ஐங்குறு. 202)

''அன்னாய் வாழிவேண் டன்னை யுவக்காண்
மாரிக் குன்றத்துக் காப்பா ளன்னன்
றூவலி னனைந்த தொடலை யொள்வாட்
பாசி சூழ்ந்த பெருங்கழற்
றண்பனி வைகிய வரிக்கச் சினனே''
(ஐங்குறு. 206)

இவை, தோழி தலைவியை அன்னை யென்றன.

''எனக்கு மாகா தென்னைக்கு முதவாது.'' (குறுந். 27)

''ஓரீஇயின னொழுகு மென்னைக்குப்
பரியலென் மன்யான் பண்டொரு காலே.''
(குறுந். 203)

இவை, தலைவி தலைவனை என்னை யென்றன.

---

1. பொருள்: தலைவியே! நம்மூர்ப் பார்ப்பனச் சிறு குழந் தைக்கு உச்சியில் குடுமியிருத்தற் போல நெடிய மலை நாடானாகிய தலைவன் ஊர்ந்து வந்த குதிரைக்கும் உச்சியில் தலையாட்டம் உடையதாகும்.

தோழி கூறியது வந்துழிக் காண்க. தலைவன் தலைவியை அன்னையெனக் கூறலும் உளதென்பாருமுளர். எழுத்தினுஞ் சொல்லினு மென்னாத் முறையின்றிக் கூற்றானே புறத்திற்கும் இவை கொள்க.

''என்னை மார்பிற் புண்ணுக்கு''

''என்னைக் கூரிஃதன்மை யானு
மென்னைக்கு நாடிஃதன்மை யானும்'' (புறம். 85)

''என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்'' (குறள். 771)

''என்னை மார்பிற் புண்ணும் வெய்ய'' (புறம்.280)

என்பன கொள்க. ஏனைய வந்துழிக் காண்க. இனி, உம்மையாற் பிறவுமுள வென்பது பெறுதலின்,

''எந்தைதன், னுள்ளங் குறைபடா வாறு'' (கலி. 61)

என்றாற்போல் வருவன பிறவுங் கொள்க.

**சிவ**

இச்சூத்திரம் அன்னை என்னை என்னும் சொல்லாட்சி பற்றிக் கூறுகின்றது.

அன்னை என்பது தாய் என்ற பொருளிலும், என்னை என்பது என் அண்ணன் என்ற பொருளிலும் ஆளப்படுவன. இவை அகப்பாடல்களில் அம்முறைப் பெயர்களில் ஆளப்படாமல் பொதுவில் தலைவி தோழி ஆகிய இருவரையும் தலைவனையும் குறிக்க ஆளப்படுவனவாம். அதனால் அவை உரிய பொருளை விட்டு வேறு பொருளில் ஆளப்படுதலும் அச்சொற்கள் பகுதி விகுதிகளாகப் பிரிக்கப்படாமையின் விகுதி தரக்கூடிய பால் புலப்படாமையின் எழுத்துப் பிரிப்பினால் பொருள் விளங்க வில்லை. எனவே எழுத்தாலும் சொல்லாலும் பொருள் புலப் படாத நிலையில் அன்னை என்பது தலைவியையும் தோழியையும் என்னை என்பது தலைவனையும் குறிக்க வருதல் செய்யுளுள் தவிர்க்கப்படாததாயிற்று. இவ்வழக்கு வழி வழி மரபாயிற்று.

## காட்டலாகாப் பொருள்

234. ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
கற்பும் ஏரும் எழிலும் என்றா
சாயலும் நாணும் மடனும் என்றா
நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு
ஆவயின் வரூஉங் கிளவி எல்லாம்
நாட்டியல் மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப. (51)

**ஆ.மொ.**

Likeness, fear, abundance, chastity, growth, beauty, delicacy. shyness, feigned ignorance, suffering, attachment and enjoyment-These are all abstract ideas to be understood by the mind and not to be shown physically to the eyes-so say the scholars.

**இளம்**

என்-எனின், மேற் பொருட் பாகுபாடு முதல் கருவுரிப் பொருளென உணர்த்தி அவற்றின் பாகுபாடு இத்துணையும் ஓதினார். அவற்றுட் பாகுபடுத்திக் காட்டலாகாதன சில பொருள் கண்டு அவற்றைத் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒப்பு முதலாக நுகர்ச்சி யீறாக அவ்வழி வருஞ் சொல்லெல்லாம் நாட்டின் வழங்குகின்ற மரபினானே பொருளை மனத்தினான் உணரினல்லது மாணாக்கர்க்கு இது பொருள் என வேறுபடுத்தி யாசிரியன் காட்டலாகாத பொருளையுடைய என்றவாறு.

ஒப்பாவது தந்தையையொக்கும் மகன் என்பது. அவ்விருவர்க்கும் பிறப்பு வேறாயினவழி ஒப்பாகிய பொருள் யாதென்றார்க்கு இதுவெனக் காட்டலாகாமையின், அவ்விருவரையுங் கண்டான் அவ்வொருவ ரொருவரை ஒக்குமது பிறனொருவன் மாட்டுக் காணாமையிற் றானே யப்பொருண்மையை உணரும் என்பது.

உரு என்பது உட்கு. அது பயிலாத பொருளைக் கண்டுழி வருவதோர் மன நிகழ்ச்சி. இவருட்கினார் என்றவழி மனத்தினான் உணரக் கிடந்தது.

வெறுப்பு என்பது-செறிவு. அது அடக்கங்குறித்து நின்றது. அவரடக்கமுடையர் என்றவழி அதுவும் மனத்தினான் உணரக் கிடந்தது.

கற்பு என்பது-மகளிர்க்கு மாந்தர் மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி. அதுவும் மனத்தான் உணரக் கிடந்தது.

ஏர் என்பது-தளிரின்கண் தோன்றுவதோர் பொலிவுபோல எல்லா வுறுப்பினும் ஒப்பக்கிடந்து கண்டார்க் கின்பத்தைத் தருவதோர் நிறவேறுபாடு. அது எல்லா வண்ணத்திற்கும் பொதுவாகலின் வண்ணம் அன்றாயிற்று. இது வண்ணம் பற்றி வரும். 'இவன் ஏருடையன்' என்றால் அதுவும் மனங்கொளக் கிடந்தது.

எழில் என்பது-அழகு. அது மிக்குங் குறைந்தும் நீடியும் குறுகியும் நேர்தி உயர்ந்தும் மெலிதாகியும் வலிதாகியும் உள்ள உறுப்புக்கள் அவ்வளவிற் குறையாமல் அமைந்தவழி வருவதோர் அழகு. இதுவும் அழகியன் என்றவழி அழகினைப் பிரித்துக் காட்டல் ஆகாமையின் ஈண்டோதப் பட்டது.

சாயல் என்பது-மென்மை. அது நாயும் பன்றியும் போலாது மயிலுங் குயிலும் போல்வதோர் தன்மை. அதுவும் காட்டலாகா மையின் ஈண்டோதப்பட்டது.

நாண் என்றது-பெரியோர் ஒழுக்கத்து மாறாயின செய்யா மைக்கு நிகழ்வதோர் நிகழ்ச்சி. அதுவும் காட்டலாகாது.

மடன் என்பது-பெண்டிர்க் குள்ளதோர் இயல்பு. அது உய்த் துணர்ந்து நோக்காது கேட்டவாற்றாலுணரும் உணர்ச்சி. அதுவும் காட்டலாகாது.

நோய் என்பது-துன்பம். இவன் துன்பமுற்றான் என்றவழி அஃதெத்தன்மையது என்றார்க்குக் காட்டலாகாமையின் அதுவும் ஈண்டோதப்பட்டது.

வேட்கை என்பது-யாதானும் ஒன்றைப் பெறல் வேண்டு மெனச் செல்லும் மன நிகழ்ச்சி. இவன் வேட்கையுடையான் என்ற வழி அஃது எத்தன்மை என்றார்க்குக் காட்டலாகாமை யின் ஈண்டோதப்பட்டது.

ஆவயின் வரூஉங் கிளவியெல்லாம் என்றதனான் அன்பு அழுக்காறு பொறை அறிவு என்பனவும் இவை போல்வனவுங்

கொள்க. இவையெல்லாம் அகத்திணை புறத்திணை இரண்டிற்கும் பொது. இவை காட்டலாகாப் பொருளவாயின் இல்பொருண் மேற் சொன்னிகழ்ந்த வென்றாலோ எனின் இது மேற் கூறப்பட்ட பொருள் பொருளென்பது அறிவித்தல். அவை உள் பொருள் என்பது வருகின்ற சூத்திரத்தான் உரைப்ப.

**நச்**

இது, கட்புலனாகக் காணப்படாத பொருண் மேலும் கட்புலனாகக் காணப்பட்டாற் போலப் பொருள் கோடல் வழுவமைக்கின்றது.

(இ-ள்) ஒப்பாவது: ஒத்த கிழவனுங் கிழத்தியுமென்ற வழி அவரொப்புமை மனனுணர்வா னுணர்வதன்றி மெய்வேறுபாடு பற்றிப் பொறியானுணரலாகா தென்றது. தந்தைய ரொப்பர் மக்களென்பதும் அது.

உருவாவது: உட்கு. அதுவும் பொறி நுதல் வியர்த்தல் போல்வனவற்றா னன்றிப் பிழம்பு பற்றி உணரலாகாது.

வெறுப்பாவது: செறிவு. அதுவும் மக்கட் குணமாய் இசையாத தோர் மன நிகழ்ச்சியாதலிற் பொறியான் உணரலாகாது.

செறிவு: மிகுதியாற்றோன்றுவது. ''வெறுத்த கேள்வி'' அடக்கங் குறித்தது என்பர் இளம்.

கற்பாவது: தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதொரு மேற்கோள்.

ஏராவது: எழுச்சி. அஃது எழுகின்ற நிலைமையென நிகழ் காலமே குறித்து நிற்கும்.

எழிலாவது: அங்ஙனம் வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறிய தன்றி இன்னும் வளருமென்பது போன்று காட்டுதல்.

சாயலாவது: ஐம்பொறியால் நுகரும் மென்மை.

நாணாவது: செய்யத்தகாதனவற்றின்கண் உள்ளமொடுங்குதல்.

மடனாவது: கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை.

நோயாவது: நோதல்.

வேட்கையாவது: பொருள்கண்மேல் தோன்றும் பற்றுள்ளம்; 'செய்யுண் மருங்கின் வேட்கை' (86) என்புழி அவாவிற்கு வேறுபாடு கூறினாம்.

நுகர்வாவது: இன்பத்துன்பங்களை நுகரும் நுகர்ச்சி. 'என்றா' என்பன எண்ணிடைச்சொல்.

என்று வருங்கிளவி-ஒப்பு முதல் நுகர்வு ஈறாகப் பன்னிரண்டென்று அகப்பொருட்கண் வருங் கிளவிகளும்.

ஆவயின் வருங்கிளவி-அப்பன்னிரண்டின்கண்ணே புறப் பொருட்குரியவாய் அவ்வாசகத்தான் வருங்கிளவிகளும்.

ஆங்கு: ஈண்டு, உவமையுருபு: அவை போல்வன கிளவி என்பதாம்.

எல்லாம் நாட்டிய மரபின் நெஞ்சு கொளின் அல்லது-ஏனையவும் நாடக வழக்கத்தாற் புலனெறி வழக்கஞ் செய்து முறைமையானே நெஞ்சு உணர்ந்து கொள்ளினன்றி.

காட்டலாகாப் பொருள என்ப-உலகியல் வழக்கான் ஒருவர்க்கொருவர் கட்புலனாகக் காட்டப்படாத பொருளைப் பொருளாக்வுடைய என்று கூறுவர் புலவர் என்றவாறு.

இவை மேல்வரும் மெய்ப்பாடு பற்றி உணர்தலிற் கட்புலனாகாவோ வென்னின், மெய்ப்பாடாவது: மனக்குறிப்பாதலின் அதன் குறிப்பிற்குப் பற்றுக்கோடாகிய பொருளினவையென்றுணர்க.

இனி, இவை புறப்பொருட்கண் வருமாறு:

''வரைபுரையு மழகளிற் றின்மிசை'' (புறம். 38) எ-ம்

''உருக்கெழு முரசம்'' (புறம்.50) எனவும்

''வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்'' (புறம்.53) எனவும்,

''நிலைகிளர் கூட னீளெரி யூட்டிய
பலர்புகழ் பத்தினி''

எனவும் வரும். இவ்வாறே ஏனையவற்றிற்கும் ஒட்டிக் கொள்க.

இனி, எல்லாமவன: ஒளியும் அளியுங் காய்தலும் அன்பும் அழுக்காறும் பொறையும் நிறையும் அறிவும் முதலியனவும் பிறவுமாம்.

ஒளியாவது வெள்ளைமையின்மை.

அளியாவது அன்பு காரணத்தால் தோன்றும் அருள்.

காய்தலாவது வெகுளி.

அன்பாவது மனைவியர் கண்ணுந் தாய்தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின் கண்ணும் மனமகிழ்ச்சி நிகழ்த்திப் பிணிப்பித்து நிற்கும் நேயம்.

அழுக்காறாவது பிறர் செல்வ முதலியவற்றைப் பொறாமை.

பொறையாவது பிறர் செய்த தீங்கைப் பொறுத்தல்.

நிறையாவது மறை பிறரறியாமல் ஒழுகுதல்.

அறிவாவது நல்லதனலனுந் தீயதன்றீமையும் உள்ளவாறுணர்தல். இவை கண்டிலமென்று கடியப்படா கொள்ளும் பொருளென்றார். இவை ஆசிரியனாணை யன்றென்பது மேற் சூத்திரத்தாற் கூறுகின்றான்.

### காட்டலாகாப் பொருள்

**244. இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்**
**அவையில் காலம் இன்மை யான. (52)**

**ஆ. மொ.**

There is no time these virtues are not found in the celestial world and in the world surrounded by the roaring sea.

**இளம்**

என்-எனின் இதுவும் மேற்கூறப்பட்ட பொருள் பொருள் என்பது அறிவித்தலை நுதலிற்று.[1]

(இ-ள்) தேவருலகத்தினும் கடல் சூழ்ந்த வுலகத்தினும் மேற்சொல்லப்பட்ட பொருள் இல்லாத காலம் இன்மையான் உள் பொருளாம் என்றே கொள்ளப்படும் என்றவாறு.

ஐந்தாவது பொருளியல் முற்றிற்று.

---

1. மேற்சொல்லப்பட்ட ஒப்பு முதலிய பொருள்கள் கண்ணுக்குப் புலப்படாவாயினும் உணர்வுக்குப் புலப்படுதலின் உள்பொருள்களேயாம்.

**நச்**

இஃது, இவையுங் காட்டலாகாப் பொருள்கள் ஆசிரியனாணையாற் கொண்டன வல்லவற்றைப் பொருளெனக் கொள்க என்கின்றது.

(இ-ள்). இமையோர் தேஎத்தும் எறி கடல் வரைப்பினும்- தேவருலகத்தின் கண்ணுந் திரையெறியுங் கடல்சூழ்ந்த நிலத்தின் கண்ணும், அவை இல்காலம் இன்மையான-அறம் பொருளின்பங் களின் நுகர்வு இல்லாதோர் காலம் இன்றாகையால் அவற்றைப் பொருளென்றே கொள்க என்றவாறு.

தமிழ் நடக்கும் எல்லை கூறாது தேவருலகத்தையும் மண்ணுலகையுங் கூறினமையின் இவை யாண்டும் ஒப்ப முடிந்தன வெனவும் அவை உள்ள அளவும் இவை நிகழ்வனவெனவுங் கூறலின் வழுவமைதியாயிற்று. இமையாக் கண்ணராகலின் இமையோர் என்றார். இடையூறில்லா இன்பச் சிறப்பான் இமையோரை முற்கூறினார்.

**சிவ**

இச்சூத்திரமும் முன்னர் உள்ள ஒப்பும் உருவும் என்னும் சூத்திரமும் ஒரு சூத்திரமாக இருத்தல் நன்று.

''ஒப்பு முதலாக நுகர்வு ஈறாக உள்ளவற்றைப் பற்றி வரும் சொற்கள் எல்லாம் ஆகிய அவைகள் இல்லாக் காலம் என்பது இமையோர் உலகத்தும் இம்மண்ணுலகத்தும் இல்லாமையால் அவைகள் உள்ள பொருள்களேயாம்; என்றாலும் அவை புலனெறி வழக்கில் நாட்டப்பட்ட முறைமையானே நெஞ்சில் உணரப்படுதல் அன்றி இந்தகையன என்று எடுத்துக் காட்டவியலாத பொருள்கள் என்று கூறுவர் என்பதாம்'' இப்படிப் பொருள் கொள்ள அமைதல் அறிக. இரண்டு சூத்திரமாகக் கொள்ளின் 'இமையோர்...இன்மையான' என்பதில் தொடர் முடிபு இன்மையறிக.

பொருளியல் முற்றிற்று.

## சூத்திர முதற்குறிப்பகராதி

(எண். பக்க எண்)


| | |
|---|---|
| அந்தமில் சிறப்பின் | 173 |
| அறக்கழி வுடையன | 85 |
| அறத்தொடு நிற்கும் | 48 |
| அன்புறு தகுவன | 124 |
| அன்னை என்னை | 181 |
| இசைதிரிந் திசைப்பினும் | 1 |
| இமையோர் தேஎத்தும் | 189 |
| இரந்து குறையுற்ற | 141 |
| இறைச்சி தானே | 116 |
| இறைச்சியிற் பிறக்கும் | 119 |
| உடம்பும் உயிரும் | 39 |
| உடனுறை உவமம் | 160 |
| உண்டற் குரிய | 75 |
| உயர்ந்தோர் கிளவி | 83 |
| உயர்மொழிக் கிளவி | 146 |
| உயர்மொழிக் கிளவியும் | 155 |
| உயிரும் நாணும் | 34 |
| உற்றுழி யல்லது | 59 |
| உறுகண் ஓம்பல் | 153 |
| எல்லா உயிர்க்கும் | 100 |
| எளித்தல் ஏத்தல் | 52 |
| ஒப்பும் உருவும் | 185 |
| ஒரு சிறை நெஞ்சோ | 42 |
| ஒரு தலை உரிமை | 104 |
| ஒருபாற் கிளவி | 97 |
| கற்புவழிப்பட்டவள் | 128 |
| கனவும் உரித்தால் | 26 |
| கிழவோள் பிறள்குணம் | 129 |
| சினனே பேதைமை | 177 |
| சுரமென மொழிதலும் | 81 |
| செய்பொரு ளச்சமும் | 125 |
| செறிவும் நிறைவும் | 61 |
| தம்முறு விழுமம் | 131 |
| தன்வயிற் கரத்தலும் | 45 |
| தாய்க்கும் உரித்தாற் | 29 |
| தாயத்தின் அடையா | 94 |
| தேரும் யானையும் | 72 |
| நிகழ்தகை மருங்கின் | 113 |
| நோயும் இன்பமும் | 9 |
| பரத்தை வாயில் | 102 |
| பால்கெழு கிளவி | 30 |
| பொருளென மொழிதலும் | 78 |
| பொழுது தலைவைத்த | 134 |
| பொழுதும் ஆறும் | 62 |
| மங்கல மொழியும் | 175 |
| மனைவி உயர்வும் | 111 |
| மிக்க பொருளினுள் | 116 |
| முன்னப்பெயர் | 91 |
| வண்ணந் திரிந்து | 36 |
| வருத்த மிகுதி | 107 |
| வாயிற் கிளவி | 157 |
| வேட்கை மறுத்து | 68 |

## பயன்பெற்ற நூல்கள்

**இலக்கண விளக்கம்**, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1973.

**இறையனார் அகப்பொருள்** (களவியல்) தெய்வப் புலமை நக்கீர னார் அருளிய உரையுடன், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969.

**குறுந்தொகை** (பதி), உ.வே. சாமிநாதையர், உ.வே.சா. நூலகம், சென்னை

**தண்டியலங்காரம்**, சுப்பிரமணிய தேசிகர் உரை, இராமலிங்கத் தம்பிரான், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1971 பத்தாம் பதிப்பு.

**தமிழ் நெறி விளக்கம்** (பதி), உ.வே. சாமிநாதையர், உ.வே.சா நூலகம், சென்னை, 1947.

**தொல்காப்பிய பொருளதிகாரம் இளம்பூரணம்**, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.

**தொல்காப்பியம் பொருளதிகாரம் முதற்பாகம் - நச்சினார்க்கினியம்**, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1935.

**தொன்னூல் விளக்கம்** (பதி) ச.வே சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப் பகம், சென்னை, 1978.

**நம்பி அகப்பொருள்**, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1966.

**Tolkappiam** (in English) with critical studies, S. Ilakkuvanar, Kural Neri Publishing House, Madurai, 1963.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவன
# தொல்காப்பிய உரைவள வெளியீடுகள்

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | தொல்காப்பியம்-பொருளதிகாரம்— கற்பியல் | 50—00 |
| 2. | தொல்காப்பியம்-பொருளதிகாரம்— அகத்திணையியல் | 60—00 |
| 3. | தொல்காப்பியம்-சொல்லதிகாரம் எச்சவியல் | 45—00 |
| 4. | ,, ,, உரியியல் | 20—00 |
| 5. | ,, ,, இடையியல் | 22—00 |
| 6. | ,, ,, வினையியல் | 20—00 |
| 7. | ,, ,, பெயரியல் | 12—00 |
| 8. | ,, ,, விளிமரபு | 6—00 |
| 9. | ,, ,, வேற்றுமை மயங்கியல் | 12—00 |
| 10. | Tolkappiam - Phonology & Morphology (An English Translation) | 25—00 |